732

லூயி நேஹார்ட்

OFFICE OF ...
7 - DEC 1956



# மோட்டார் மன்னன் ஹென்றி போர்ட்

...தேனு பப்ளிகேஷன்ஸ்

D5133wM63
N56
100495

# மோட்டார் மன்னன்
# ஹென்றி போர்ட்

லூயி நேஹார்ட்
எழுதிய

732
4-56

# மோட்டார் மன்னன்
# ஹென்றி போர்ட்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - DEC 1956
MADRAS

பிரசுரம்
காமதேனு பப்ளிகேஷன்ஸ்
சென்னை-20

முதற் பதிப்பு, அக்டோபர் 1956

D5133 wM63
31 N56

விலை ரூபாய் நான்கு

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 100495
EGMORE MADRAS-600 008

Printed by the Vasanta Press, Adyar, Madras 20

# பணத்தைச் செலவழியுங்கள்

"பணத்தைச் செலவழியுங்கள், தாராளமாகச் செலவழியுங்கள், சேமித்து வைக்காமல் செலவழியுங்கள்."

"இது என்னடா, பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது! எல்லாரும் பணத்தைச் சேமித்து வை என்று புத்திமதி சொல்லுவார்கள், இவர்கள் என்னடா வென்றால், "பணத்தைச் செலவழி" என்று புத்திமதி சொல்லுகிறார்களே என்று நீங்கள் ஆச்சரியப் படலாம்.

ஆனால் இந்தப் புத்திமதி நாங்கள் சொல்லவில்லை!

இதைச் சொன்ன பைத்தியக்காரர் அமெரிக்காவில் பிறந்தார். தாம் கண்ட கனவை நனவாக்குவதற்காக, தாம் பார்த்துக்கொண்டிருந்த உத்தியோகத்தை உதறித் தள்ளினார். எத்தனையோ இடையூறுகள், கஷ்டங்களுக்கு உள்ளானார். இருந்தும் விடா முயற்சியுடன் உழைத்து, தாம் கண்ட கனவைச் சாதித்து, பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வாழ வழி செய்து, மோட்டார் மன்னன் என்ற பெரும் பெயர் பெற்றார்.

அப்படிப் புகழ்பெற்ற மோட்டார் மன்னன் ஹென்றி போர்ட் தான் ஒரு சமயம் ஒரு பையனைப் பார்த்துச் சொன்னார்:

**"பணத்தைச் செலவழி. உன்னை முன்னுக்குக் கொண்டுவரும் காரியங்களுக்காகப் பணத்தைச் செலவழி."**

தமிழாக்கம்

சரஸ்வதி

# HENRY FORD, ENGINEER

BY

LOUISE ALBRIGHT NEYHART

TRANSLATION BY

SARASWATHY

Originally published by

**Houghton, Mifflin Company, Boston 1950**

இப்படிப்பட்ட மேதையின் வாழ்க்கைச் சரித்திரத்தைப் படித்து நம் மக்களும், மாணவர்களும், அதே விடாமுயற்சியுடன் உழைத்துத் தங்கள் காரியங்களைச் சாதிக்கக் கற்றுக்கொண்டு நாட்டை வளம் படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தைப் புத்தகமாகக் கொண்டு வந்திருக்கிறோம்.

லூயி நேஹார்ட் என்னும் அமெரிக்க மாது சிறந்த ஆராய்ச்சிக்குப் பிறகு வெகு எளிய நடையில் எல்லாரும் புரிந்துகொள்ள வேண்டும் என்று எழுதியுள்ள புத்தகத்தைத் தான் நம் மக்களும் மாணவர்களும் படித்துப் பயன் அடையவேண்டுமென்று ஒரு சிறந்த எழுத்தாளரைக் கொண்டு தமிழாக்கி யிருக்கிறோம்.

இந்தப் புத்தகத்திற்குத் தங்கள் மேலான ஆதரவை எதிர்பார்க்கிறோம்.

தங்கள்

**காமதேனு பதிப்பகத்தார்**

எங்களிடம் கிடைக்கும் நூல்கள்

நாடோடி

எழுதிய

1. வாழ்க்கைச் சக்கரம்
2. புருஷர்களுக்கு மட்டும்
3. பரந்த அனுபவம்
4. தமிழா, தூங்காதே!
5. என்னைக் கேளுங்கோன்னு!
6. அட பரமசிவா!
7. குடும்ப ரகசியம்
8. படித்த பெண் வேண்டாம்
9. முடியாத யுத்தம்
10. நாடகமே உலகம்
11. இதுவும் ஒரு பிரகிருதி
12. ஒரு நாள் கூத்து
13. ஹே, அனுராதா
14. பிழைக்கும் வழி
15. எங்கள் குடும்பம் பெரிது
16. ஸ்திரீகள், ஜாக்கிரதை
17. கிழவியும் குமரியும்
18. பேசும் பதுமை
19. மாயப் பிரபஞ்சம்
20. பயப்படாதீர்கள்!

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - DEC 1956
MADRAS

# முகவுரை

மற்ற எதையும் விட யந்திரங்கள் மீது வெகு பைத்தியமாக இருந்த ஒரு பையனின் கதை இது. இதன் காரணமாக அவன் பெரியவனானதும் மக்களுக்குச் செய்த தொண்டு மிகப் பெரியதாகும்.

வீட்டு வேலையைச் சுலபமாக்கும் யந்திரக் கருவிகளோ, சௌகரியங்களோ இல்லாத காலத்தில் ஹென்றி போர்ட் அமெரிக்காவில் பிறந்தார். அந்த சமயம் பெரும்பான்மையான மக்கள் நாட்டுப் புறங்களிலும், சிறு கிராமங்களிலும் வசித்தனர். ஆரம்பத்தில் குடியேறிய மக்களைப் போலவே இவர்களும் கடும் உழைப்பாளிகள். தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொண்டார்கள். தாங்களே அடித்து, சுத்தம் செய்த பஞ்சிலிருந்தும், பஞ்சும், கம்பளியும் கலந்த கலப்பிலிருந்தும், ஸ்திரீகள் நூல் நூற்று துணிமணிகள் தயாரித்தார்கள். வாத்தின் இறகுகளைக் கொண்டு தலையணைகளும், மெத்தைகளும் செய்தார்கள். கைத்தறியில் ஜமக்காளங்கள் நெய்தார்கள்.

வீடுகளில் அவர்களே தயாரித்த சாதாரண நாற்காலி, மேஜைகள் இருந்தன. சமையல் எல்லாம் திறந்த வெளி அடுப்பில் பானைகளை வைத்துத் தான்.

இரா வேளைகளில் வெளிச்சத்திற்கு இத்தனை நாளும் உபயோகத்தில் இருந்த மெழுகு வத்தி மறைந்து, இப்பொழுது தான் உருண்டைக் கண்ணுடி சிம்னி கொண்ட திரி விளக்கு வந்திருந்தது. பண்ணை வேலையோ, தேக பலத்தைக் கொண்டும், வேர்க்க, விறுவிறுக்க வேலை செய்த குதிரை பலத்தைக் கொண்டும் தான் நடந்தது.

ஹென்றியின் தகப்பனுரான வில்லியம் போர்ட் அயர்லாந்தில் பிறந்தவர். 1847-ல் அவருடைய இருபதாவது வயதில், தம்முடைய சகோதரன் ஹென்றியுடன் கூட அமெரிக்காவுக்கு வந்தார். வளைந்து, வளைந்து செல்லும் ரூஜ் நதிக்கரையில் உள்ள, மிச்சிகனைச் சேர்ந்த 'டியர்பார்ன்' என்னும் ஊரில் குடியேறினர். அங்கு ஒரு பண்ணையில் கூலிக்கு வேலை செய்து, பணம் சேர்ந்ததும், சொந்தத்திற்கு நாற்பது ஏக்கர் நிலம் வாங்கி, கூலி வேலையை விட்டார். இது ஆனதும் தம்முடைய பழைய பண்ணைக்காரரின் அழகிய வளர்ப்புப் பெண்ணுகிய மேரி லிட்டிகாட் என்பவளைக் கலியாணம் செய்து கொண்டு, தம்முடைய புதுப் பண்ணையில் இரண்டு அடுக்கும், நான்கு அறைகளும் கொண்ட ஒரு வீடு கட்டினர். இந்த வீட்டின் மேல் தளத்தின் கூரை வெகு கீழே சாய்ந்து வந்திருந்ததால் மாடியில் பக்க வாட்டில் தான் ஜன்னல்கள் இருந்தன. கூடிய சீக்கிரம் ஒரு சாப்பாட்டு அறையும், இன்னும் ஒரு நல்ல அறையும் சேர்க்க வேண்டுமென்று அவர் திட்டம் போட்டிருந்தார்.

டச்சு, ஸ்காண்டிநேவிய பெற்றோர்களுக்குப்

பிறந்த இவருடைய மனைவியான மேரி போர்ட் மிகவும் சுறுசுறுப்பான பெண். எதையும் ஒழுங்காகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை உடையவள். ஒரு நிமிஷம் கூட சும்மா இருக்க மாட்டாள். நல்ல உணவு தயாரிப்பதிலோ, அல்லது வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வதிலோ ஈடுபட்டிருப்பாள். தயிர் கடைவது, வெண்ணெய் எடுப்பது, பாலேட்டுக் கட்டி தயாரிப்பது, குடும்பத்திற்கு வேண்டிய துணிமணிகள் தைப்பது, இத்தனை போதா தென்று, அக்கம் பக்கத்தாருக்கு உதவி புரிவது, இப்படி ஏதாவது செய்து கொண்டிருப்பாள். அவள் எல்லாரிடமும் அன்பாகவும் நல்லபடியாகவும் பழகியதால், அக்கம் பக்கத்தாரும் அவளுடன் அன்பாகப் பழகினார்கள்.

இந்த வில்லியம் போர்ட்டுக்கும் மேரி போர்ட்டுக்கும் தான் ஜூலை 30, 1863 அன்று ஹென்றி போர்ட் பிறந்தார். செக்கச் செவேரென்று இருந்த குழந்தையைப் பார்த்து மேரி தன் புருஷனிடம், ''குழந்தை அழகாக இருக்கிறது. இதற்கு உங்கள் ச்கோதரன் பெயர் ஹென்றியை வைப்போம்'' என்றாள். ஆகவே குழந்தைக்கு ஹென்றி போர்ட் என்று பெயர் வைக்கப் பட்டது.

அமெரிக்கச் சரித்திரத்தில் ஹென்றி பிறந்த மாதம் மிக முக்கியமானதாகும். ஏனெனில் அந்த மாதம் தான் ஜெனரல் ராபர்ட் லீயின் சேனை கெட்டிஸ்பர்க்கில் முறியடிக்கப்பட, கான்பெடரேட் படை விக்ஸ்பர்க்கில் சரண் அடைந்தது. உள்

நாட்டு யுத்தம் முடிந்து, தேசம் ஒன்று பட்டு, வேக மாக முன்னேறத் தொடங்கியது. இதுவரை அமெரிக்காவில் விவசாயம் தான் முக்கிய தொழி லாக இருந்தது. ஆனால் இப்பொழுது வியாபாரமும், உற்பத்தியும் செழிக்க ஆரம்பிக்கவே, பிரம்மாண்ட மான தொழிற்சாலைகள் தோன்றி அமெரிக்காவின் தொழில் சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தன.

ஹென்றி போர்டுக்கு இரண்டு வயது இருக்கும் போது தான் ஆபிரகாம் லிங்கன் கொலை செய்யப் பட்டார். ஆபிரகாம் லிங்கன் டைப்ரைட்டர் பார்த்த தில்லை, டெலிபோனில் பேசியதில்லை, மின்சார விளக்கில் வாசித்ததில்லை. அவர் சிமெண்டு நடை பாதையில் நடந்ததில்லை, சிமெண்டு ரஸ்தாவையும் பார்த்ததில்லை, கிராமபோன் கூடக் கேட்டதில்லை, மோட்டார் வண்டியையும் பார்த்ததில்லை.

இருந்தாலும், லிங்கன் வாழ்நாளின் போது தான், அமெரிக்காவில், அதிலும் குறிப்பாகக் கிழக்குப் பகுதியில், மிகப் பெரிய தொழில் அபி விருத்திக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாயின. சக்தி யுகத்தை ஆரம்பித்து வைக்கும் பெரும் சக்திகள் இயங்க ஆரம்பித்தன. ஜேம்ஸ் வாட் கண்டு பிடித்த நீராவி யந்திரத்துடன் நமது சக்தி யுகம் ஆரம் பித்தது என்று சொல்லலாம். அப்பொழுது தான் நம்முடைய கருவிகள், யந்திரங்கள், கைத்தறிகள், ரம்பங்கள், படகுகள், வண்டிகள் இவற்றை 'கிராங்க் ஷாப்ட்' என்னும் சுழலும் சக்கரங்களில் இணைக்கும் தண்டுகளில் இணைத்து இலகுவாக இயக்கக் கற்றுக் கொண்டிருந்தோம். நீராவி, கரி,

இரும்பு, மின்சாரம், எண்ணெய் முதலியன சக்தி யுகத்திற்கு மிகவும் இன்றியமையாதன வாயின.

எஃகுத் தொழிலும் அப்பொழுது தான் ஆரம்ப மாகியிருந்தது. எஃகை அதிக அளவில் துரிதமாக உற்பத்தி செய்து குறைந்த விலையில் கொடுப்ப தற்கு ஒரு முறை கண்டு பிடித்துக் கொண்டிருந்தார் கள். இதே சமயம் எண்ணெய்த் தொழிலும் ஆரம்பமாயிற்று. அலெகெனி நதிப் பள்ளத்தாக் கில் உள்ள மேற்கு பென்சில்வேனியாவில் சிறிது தூரத்திற்கு எண்ணெய்க் குழாய் போடப்பட்டது. 1869-ல் இரண்டு நீராவி என்ஜின்கள் குப், குப் என்று புகை விட்டுக் கொண்டு எதிரும் புதிருமாக வந்து, ஊட்டா என்ற இடத்தில் சந்தித்தன. அமெரிக்காவில் ரயில் தண்டவாளங்கள் போடப் பட்டு விட்டதால் ஜனங்களும் தபாலும் ஊர் விட்டு ஊர் போக முடிந்தது.

பெரிய தொழில் நாடாக அமெரிக்கா உருவாகிக் கொண்டிருந்த இந்த சமயத்தில், சிறு பையனுக இருந்த ஹென்றி போர்ட் உலோகங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள தனக்கு இருந்த இயற்கையான ஆவலினுல், ஏதாவது ஓட்டை உடைசலைப் பழுது பார்த்துக் கொண்டிருப்பான். பள்ளிக்கூடப் புத்த கங்களில் இருந்து தெரிந்து கொள்ளக் கூடியதை விட, எத்தனேயோ விஷயங்கள் தானுகத் தெரிந்து கொள்ள வேண்டியது இருந்தது என்று அவன் கண்டு கொண்டான். அவனுடைய அறிவுப் பசி யந்திரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள அவனைத் தூண்டிற்று.

# முதல் பாகம்

## 1863-1879.

# அத்தியாயம் 1.

வெகு சுத்தமாக வைக்கப்பட்டிருந்த மேரி போர்டின் சமையலறை அதன் கணப்பு அடுப்பின் வெளிச்சத்தில் பள, பள வென்று மின்னிற்று. ஒரு நீளக் கம்பியிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த பானைகளில் ராச் சமையல் ஆகிக் கொண்டிருந்தது. சமையல் வாசனை கம, கம வென்று அடித்துக் கொண்டிருந்தது. ஒரு பக்கம் ஸ்ரீமதி போர்ட் தயிர் கடையும் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. வீட்டுக்குப் பெரிய பெண்ணான மார்கரெட் குழந்தை வில்லியம் படுத்துக் கொண்டிருந்த தொட்டிலை தன் காலால் ஆட்டிக் கொண்டு ஒரு பாட்டை முண முணத்துக் கொண்டே பழைய மேஜோடுகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தாள். ஜானும், ஜெனும் ஒரு சணல் பந்தைத் தரையில் மேலும் கீழும் உருட்டி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஹென்றி தன் ஐந்தாவது வகுப்புப் பாட புத்த கத்தைப் படித்துக் கொண்டிருந்தான். "எல்லா கெட்ட வழக்கங்களுக்கும் சூதாட்டம் தான் தாயும் தந்தையும்" என்று அவன் படித்தான். அவனுடைய பார்வை புத்தகத்திலிருந்து அடுப்பில் காய்ந்து கொண்டிருந்த தேநீர் கெண்டிக்குச் சென்

றது. பத்து வயதுப் பையன் தெரிந்து கொள்ள ஆசைப்படும் எத்தனையோ விஷயங்கள், உதாரண மாக, உபயோகமான கருவிகள் பண்ணுவது, கொல்லன் பட்டறை, ரயில் வண்டி இவற்றைப் பற்றிய விவரங்கள், ஆகிய இது போன்ற விஷயங்கள் புத்தகத்தில் இருக்கக் கூடாதா என்று ஏங்கினான்.

கெண்டியின் வாயிலிருந்து நீராவி குபு, குபு என்று வந்து கொண்டிருந்தது. ஹென்றி தன் பாடத்தை மறந்து, அதையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். நீராவியினால் தான் என்ஜின் சக்கரங்கள் சுற்றுகின்றன என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் எப்படி என்று தெரியாது. நூறு வருஷங்களுக்கு முன்னர் நீராவி யந்திரத்தின் அடிப்படையைக் கண்டு பிடித்த ஜேம்ஸ் வாட்டைப் போல் ஹென்றிக்கும் தேநீர் கெண்டியின் மூடியைத் திறப்பதிலும் திரும்ப மூடுவதிலும் ஒரு தனி ஆசை உண்டு. சில சமயங்களில் ஒரு கோப்பையை எடுத்து, நீராவி வரும் வழியில் வைத்து, அது சிறு நீர்த் துளிகளாக மாறுவதை வேடிக்கை பார்ப்பான்.

"ஐயா, நீராவியாரே! நீராவியாரே! எதற்காக இப்படி ஓட்டம் பிடித்துக் கொண்டே இருக்கிறீர்? உம்மைச் சிறையில் அடைத்தால் என்ன செய்வீர்?" என்று ஹென்றி நீராவியைப் பார்த்து முணமுணத்தான்.

ஆனால் நீராவியாரோ, பாடிக் கொண்டே வெளி வந்து கொண்டிருந்தார். ஹென்றி தன் தாயாரைப் பார்த்து, "அம்மா! தேநீர் கெண்டிக்கு மூக்கு

இல்லாவிட்டால் என்ன ஆகும்?'' என்று கேட்டான்.

'' அப்பொழுது வெந்நீர் கொதித்து விட்டதா, இல்லையா என்று நான் எப்படிக் கண்டு பிடிப்பது?'' என்று கேட்டாள் தாயார்.

''மூக்கு இல்லை என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது?'' என்று ஹென்றி வற்புறுத்திக் கேட்டான்.

''இதைப் பற்றி யெல்லாம் உன் மூளையைக் குழப்பிக் கொள்ளாதே! முதலில் உன் பாடத்தைக் கவனித்துப் படி. போர்ட் வீட்டு மூத்த பிள்ளை மக்கு என்று அக்கம் பக்கத்தார் சொல்லாமல் பார்த்துக் கொள்'' என்ருள் தாயார்.

அந்த சமயம் கதவைத் திறந்து கொண்டு தகப்பனுர் உள்ளே நுழைந்தார். கம, கம வென்று வந்து கொண்டிருந்த சமையல் வாசனையை முகர்ந்து விட்டு, ''ஐரிஷ் கறியா? இந்த நாட்டில் என் மனைவியைப் போல் இவ்வளவு நன்ருக வேறு யாரால் சமைக்க முடியும், கேட்கிறேன்?'' என்ருர். இதைக் கேட்டு ஸ்ரீமதி போர்ட் முக மலர்ந்தாள். தன் சமையலைத் தன் புருஷன் புகழ்வதைக் கேட்க அவளுக்கு எப்பொழுதுமே ஆனந்தம்!

ஜேனும், ஜானும் ஓடிப் போய் அப்பாவின் கால்களைக் கட்டிக் கொண்டார்கள். '' இன்றைக்கு நான் தான் அப்பாவின் ஜோடுகளைக் கழற்றுவேன் '' என்ருன் ஜான்.

'' முடியாது, நான் தான் கழற்றுவேன் அப்பா ''

என்று சொல்லிவிட்டு ஜேன், "இன்றைக்கு ஒரு கதை சொல்லணும் அப்பா" என்று கேட்டாள்.

"சரி, அயர்லாந்தைப் பற்றியும், அந்த நாட்டுக் குட்டிப் போக்கிரிகளைப் பற்றியும் சொல்லுகிறேன்" என்று சொல்லிவிட்டு, போர்ட் தம் பெரிய நாற்காலியில் உட்கார்ந்து தம் இரண்டு கால்களையும் நீட்டினார். "இந்தாருங்கள், ஆளுக்கு ஒரு ஜோடு கழற்றுங்கள். சாப்பிட்டானதும் கதை சொல்லுகிறேன்" என்றார்.

ஹென்றி அப்பா பக்கத்தில் நகர்ந்து உட்கார்ந்தான். "அப்பா! நீராவியினால் கெட்டிலிலிருந்து வெளியே வர முடியவில்லை யென்றால், என்ன ஆகும்?" என்று கேட்டான்.

"உன்னுடைய புத்தகத்தில் அது பற்றி என்ன சொல்லி யிருக்கிறது?"

"நீராவியைப் பற்றி புத்தகத்தில் ஒன்றுமே கிடையாது."

"அப்படியானால் பாடத்தைப் படிக்காமல் இதைப் பற்றி யெல்லாம் எதற்காக யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறாய்? புத்தகத்தில் என்ன இருக்கிறதோ, அதைத் தெரிந்து கொள், போதும். அதற்கு மேல் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், அடுத்த வருஷம் ஒரு ஏக்கரிலிருந்து எத்தனை கலம் ஓட்ஸ் கிடைக்கும் என்று கணக்குப் போடலாம் வா" என்றார்.

ஹென்றி புத்தகத்தினால் முகத்தை மறைத்துக்

கொண்டு சாப்பாட்டுக்கு நாழியாகிறதே என்று தவித்தான்.

அடுத்த நாள் மாலே ஹென்றி சமையல் அறையில் தனியாக இருந்தான். மாடத்தில் வைத்திருந்த கடிகாரம், "டிக்டாக், டிக்டாக்" என்று ஓடிக் கொண்டிருந்தது. "கண்டு பிடி, கண்டு பிடி" என்று கடிகாரம் அவனைப் பார்த்துச் சொன்னது போல் அவனுக்குப் பட்டது.

அவன் அலமாரியின் மேல் ஏறி, ஒரு பழைய டீ கெட்டிலே எடுத்தான். அதில் கொஞ்சம் ஜலம் ஊற்றி, மூடியைக் கம்பியால் கட்டி, மூக்கை குழந்தை வில்லியத்தின் கம்பளி ஜோட்டைக் கொண்டு அடைத்தான்.

பிறகு கெட்டிலே அடுப்புக்கு மேலே மாட்டி, "எங்கே, இப்பொழுது தப்பித்துக் கொள், பார்க்கலாம்?" என்று சொல்லிவிட்டு, என்ன நடக்கிறது என்று வேடிக்கை பார்க்க ஹென்றி, தரையில் உட்கார்ந்தான்.

முதலில் களகளவென்ற சப்தம் கேட்டது. பிறகு அது உறுமும் சப்தமாக மாறிற்று. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் படீர், படீர், படீர் என்று சப்தம் கேட்க, டீ கெட்டில் சுக்கு நூருக உடைந்து, அறை முழுவதும் துண்டுகள் சிதறி விழுந்தன. ஒரு துண்டு கண்ணுடி ஜன்னலே உடைத்தது. இன்ெனாரு துண்டு மேஜை மீது இருந்த பழத் தட்டை உடைத்தது. இன்ெனான்று ஹென்றியின் நெற்றியில் பட அவனுக்குக் காயம் ஏற்பட்டது.

சப்தத்தைக் கேட்டு, தோட்டத்திலிருந்த தாயார் ஓடோடியும் வந்தாள். "ஹென்றி! உன் நெற்றியில் காயம் ஏற்பட்டிருக்கிறதே? என்ன நடந்தது?" என்று கேட்டாள்.

"நீராவியினுல் டீ கெட்டிலிலிருந்து வெளி வர முடியாவிட்டால், என்ன நடக்கும் என்று கண்டு பிடித்தேன்" என்ருன் ஹென்றி வெகு திருப்தியாக.

"நீ இந்த மாதிரி ஏதாவது செய்வாய் என்று முன்பே எனக்குத் தெரியும். அப்பா வருவதற்குள் கண்ணுடி ஜன்னலைப் பழுது பார். அவர் கோபித்துக் கொள்ளப் போகிருர்" என்ருள்.

ஆனல் ஹென்றி அதைக் கவனிக்காமல், "அம்மா! ஸ்ரீமான் நீராவியாருக்கு நான் எதிர்பார்த்ததற்கு மேல் பலம் இருக்கிறது" என்ருன்.

ஸ்ரீமதி போர்ட் அவன் காயத்திற்குக் கட்டுக் கட்டிக் கொண்டே, "இனி அது உனக்கு ஞாபகம் இருக்கட்டும்" என்ருள்.

ஹென்றியும், தாயாரும் தரையில் இருந்த உடைந்த கண்ணுடித் துண்டுகளையும், பீங்கான் துண்டுகளையும் பொறுக்கிக் கொண்டிருக்கையில், மார்கரெட் குதித்துக் கொண்டே ஓடி வந்து, "அம்மா! அப்பா இப்பொழுதுதான் வந்தார். உனக்கு என்று ஏதோ ஒரு வஸ்து வாங்கிக் கொண்டு வந்திருக்கிருர். ஓடி வா, ஹென்றி! அதைத் தூக்குவதற்காக அப்பா உன்னைக் கூப்பிடுகிருர்" என்று சொன்னவள் நிமிர்ந்து, ஹென்றி

யின் தலையில் இருந்த கட்டைப் பார்த்தாள். ''ஹென்றி! ஏண்டா நெற்றியில் காயம்!'' என்று கேட்டாள்.

ஆனால் இந்தக் காயத்தைப் பற்றி பிரமாதப் படுத்திப் பேச ஸ்ரீமதி போர்டுக்கு இஷ்டமில்லை. ஆகவே, ''ஏதோ ஒரு சின்ன அடி. அதைப் பற்றி இப்பொழுது பேச வேண்டாம். உங்கப்பா என்ன கொண்டு வந்திருக்கிறார் என்று பார்க்கலாம், வா'' என்றாள்.

அதற்குள்ளே ஜானும், ஜேனும் அப்பாவைச் சுற்றி நின்று கொண்டு, அவர் கொண்டு வந்த மரப் பெட்டியிலே என்ன இருக்கும் என்று தெரிந்து கொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

''என்ன வென்று தெரியவில்லையே!'' என்றாள் ஸ்ரீமதி போர்ட்.

''என்ன சிரமப் பட்டாலும் உன்னால் கண்டு பிடிக்க முடியாது. உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றுக்கும் இது. இந்தா ஹென்றி! ஒரு கை பிடி'' என்றார் போர்ட்.

''உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்று'' என்று மார்கரெட், ஹென்றி, ஜேன், ஜான் எல்லோரும் ஆச்சரியத்தோடு திருப்பிச் சொன்னார்கள்.

அதற்குள் போர்ட் ஹென்றியின் நெற்றியில் இருந்த கட்டைப் பார்த்து விட்டார். ''என்னடா ஹென்றி!'' என்று அவர் ஆரம்பிப்பதற்குள் ஸ்ரீமதி போர்ட் இடை மறித்து, ''ஒன்று மில்லை, டீ கெட்டில் தான் பட்டு விட்டது. ஆனால் நீங்கள் கொண்டு

வந்திருக்கும் வெகுமதிதான் என்ன வென்று புரிய வில்லை'' என்று பேச்சை மாற்றினுள்.

ஹென்றி ஒரு பெருமூச்சு விட்டான். தகப்பனுர் கோபத்தை நாசுக்காக மாற்றும் தன் தாயாரின் சாமர்த்தியத்தை வியந்தான். தகப்பனுரோ மீண்டும் பெட்டியைக் கவனிக்க ஆரம்பித்து விட்டார்.

ஹென்றி பெட்டியை ஒரு பக்கம் தூக்கிப் பார்த்தான். ''அப்பாடா! ஈயத்தைவிட கனமாக இருக்கிறதே'' என்ருன்.

''கீழே போட்டு விடாதே. ஏக விலை கொடுத்தாக்கும் வாங்கி யிருக்கிறேன்'' என்ருர் தகப்பனுர்.

பெட்டியைத் தூக்கி ஜாக்கிரதையாக சமையல் அறையில் வைத்து, ஒவ்வொரு பலகையாகப் பிரித்து எடுத்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் கறுப்பு வர்ணம் பூசிய இரும்பும், வார்னிஷ் பூசிய பலகையும் தெரிந்தது. கடைசியில் ஒரு பெரிய சக்கரம் தெரிந்தது.

''இது என்ன வென்று எனக்குத் தெரிய வில்லை. நீ சொல்லு ஹென்றி! உனக்குத் தான் இதெல்லாம் புரிகிறது'' என்ருள் ஸ்ரீமதி போர்ட்.

''இது ஒரு யந்திரம் அம்மா. தையல் யந்திரம்'' என்ருன் ஹென்றி, வெகு உற்சாகத்துடன்.

தான் கொண்டு வந்த வெகுமதியைப் பற்றி மிஸ்டர் போர்ட் பேச ஆரம்பித்தார். சக்கரத்தைக் கையினுல் சுற்றுவதற்குப் பதில் இதைக் காலால் சுற்றலாம் என்றும், குடும்பத்திற்கு வேண்டிய துணிமணிகளைத் தைக்க இனி ஸ்ரீமதி போர்ட்

அதிகக் கஷ்டப் பட வேண்டிய தில்லை யென்றும் சொன்னார்.

"ஆனால் இதை உபயோகிப்பதற்கு அதிக சாமர்த்தியம் வேண்டுமோ?" என்று கேட்டாள் ஸ்ரீமதி போர்ட்.

மிஸ்டர் போர்ட் தலையைச் சொறிந்தார். "ஏப்ரீஸர் இதை ஓட்டிக் காட்டிய போது வெகு சுலபமாகப் பட்டது. கையினால் மணிக்கணக்காகும் காரியத்தை இது வெகு சீக்கிரம் செய்து முடித்து விடுகிறது என்பது தெரியும். ஆனால் இதை எப்படி இயக்குகிறது என்பது தான் மறந்து விட்டது."

இந்த சமயம் ஹென்றி வெகு ஆசையாக "இதை நான் சுற்றிப் பார்க்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே பாபினும், ஊசியும் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்தான். ஒரு நூல் கட்டையை எடுத்து பாபினில் வைத்தான். இன்னும் கொஞ்சம் நூலை தையல் யந்திரத்திலுள்ள வளையங்களில் சுற்றினான். ஒரு துணியை யந்திரத்தில் வைத்து சக்கரத்தைக் கையினால் சுற்றி, கால் மிதியடியை இயக்க ஆரம்பித்தான். யந்திரம் துணியைத் தைக்க ஆரம்பித்தது.

"அழகாகத் தைக்கிறது! ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றாள் ஸ்ரீமதி போர்ட்.

"யந்திரம் தைக்கிறது, தைக்கிறது" என்று மார்கரெட், ஜான், ஜேன் மூன்று பேரும் ஆச்சரியமாகச் சொன்னார்கள்.

"நான் என்ன சொன்னேன்?" என்று வெகு பெருமையாகக் கேட்டார் மிஸ்டர் போர்ட்.

பிறகு ஸ்ரீமதி போர்ட் அதை உபயோகித்துப் பார்த்தாள். ஆனால் அவ்வளவு நேர்த்தியாக அவளுக்குத் தைக்க வரவில்லை "எனக்கு இன்னும் பழக்கமாக வேண்டும்" என்று சொல்லி விட்டு அவள் மார்கரெட்டைப் பார்த்து, "உனக்கு வயதாகி விட்டது. ஆகவே நீ இந்தப் புது யந்திரத்தில் தைக்கக் கற்றுக் கொள். ஹென்றி அதற்குச் சரியாக எண்ணெய் ஊற்றி பழுது வராமல் பார்த்துக் கொள்ளுவான். உங்கள் இருவரையும் தவிர வேறு யாரும் யந்திரத்தைத் தொடக் கூடாது" என்று சொல்லி விட்டு. பள, பள வென்று மின்னின மர மூடியைக் கொண்டு யந்திரத்தை மூடினாள்.

யந்திரத்தை மூடியானதும் ஹென்றி அதிலிருந்த சக்கரத்தைப் பற்றியும், கப்பியைப் பற்றியும், இரண்டையும் இணைத்த கச்சையைப் பற்றியுமே எண்ணிக் கொண்டிருந்தான். அவன் பிராயம் உள்ள பையன்கள் மனத்தில் தோன்றாத எத்தனையோ விஷயங்கள் அவன் மனத்தில் தோன்றிக் கொண்டிருந்தன. சக்கரத்தின் குறுக்களவும், கப்பியின் குறுக்களவும் தெரிந்தால் சக்கரத்தின் ஒரு சுற்றுக்கு கப்பி எத்தனை முறை சுற்றுகிறது என்று கண்டு பிடித்து விடலாம் என்று கணக்கிட்டான். அந்த ஒரு சுற்றில் எத்தனை தையல் விழுகிறது என்றும் கணக்கிட்டால், சக்கரத்தின் ஒரு சுற்றுக்கு எத்தனை வேலை நடக்கும் என்று கணக்கிடலாம் என்றும் தீர்மானித்தான்.

# அத்தியாயம் 2.

பள்ளிக்கூடத்தில் தன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சிநேகிதன் எட்ஸெல் ரட்டிமேனை ஹென்றி ஒரு இடி இடித்து, "எல்லாப் பயல்களையும் பள்ளிக்கூடம் முடிந்ததும் சந்திக்கச் சொல்லு. ஒரு தமாஷ் வைத்திருக்கிறேன்" என்று ரகசியமாகச் சொன்னான். உபாத்தியாயர் வேறு பக்கமாகத் திரும்பினது தான் தாமதம், எட்ஸெல் இந்த விஷயத்தை வில் பென்னெட், ஜான் ஹாகர்ட்டி, ரென்னி பீல்ட், ஜான் ரட்டிமேன் எல்லோருக்கும் தெரிவித்து விட்டான்.

போர்ட் பண்ணைக்குப் பக்கத்தில் இரண்டு பள்ளிக்கூடங்கள் இருந்தன. ஒன்று ஒரு பக்கமாக இரண்டரை மைல் தூரம் என்றால், இன்னொன்று எதிர் பக்கமாக இரண்டரை மைல் தூரம். ஸ்காட்ச் ஸெட்டில்மென்ட் பள்ளிக்கூடத்தில் முதலில் படிக்க ஆரம்பித்த ஹென்றி சில வருடங்களுக்குப் பிறகு மிஸ்டர் பிரஷ் வாத்தியாராக இருந்த ஸ்பிரிங் வெல் பள்ளிக்கூடத்திற்கு மாறினான்.

பள்ளிக்கூடத்தில் ஒரே ஒரு அறை தான் இருந்தது. அதில் சில மர பெஞ்சுகளும், டெஸ்குகளும்

போடப்பட்டு, ஒரு மூலையில் துஷ்டப் பையன்களை உட்கார வைப்பதற்கான இடம் இருந்தது.

ஹென்றி பக்கத்துப் பையனோடு பேசிக்கொண்டிருந்த சமயம், கொலம்பஸ் அமெரிக்காவுக்கு வந்த வழியைப் பற்றி, மிஸ்டர் பிரஷ் படம் போட்டு விவரித்துக் கொண்டிருந்தார். பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தவர் சடாரென்று பாடத்தை நிறுத்தி, ஹெனறியைப் பார்த்து, "உன் ஜேபி ஏன் குலுங்கிக் கொண்டே யிருக்கிறது? உன் ஜேபியிலுள்ள சாமான்களை ஒன்று என் மேஜை மீது வை, அல்லது வீட்டில் வைத்து விட்டு வா என்று தினம் சொல்ல வேண்டுமோ?" என்று கேட்டார்.

ஹென்றி எழுந்திருந்து தன் பையிலிருந்த சாமான்களை யெல்லாம் வாத்தியார் மேஜை மீது வைத்தான். பையிலிருந்து, அவன் பொக்கிஷமான, போல்ட்டுகளும், நட்டுகளும், வாஷர்களும், ஆணிகளுமாக வெளி வந்தன. பேனாக் கத்தியை மாத்திரம் தன் பையில் வைத்துக் கொண்டு தன் இடத்திற்குத் திரும்பினான். ஆனால் அவன் மனம் பாடத்தில் பதிய வில்லை. பள்ளிக்கூட கடியாரத்தின் முட்களைப் பார்த்துக் கொண்டே தன் பெயரை டெஸ்கில் செதுக்க ஆரம்பித்தான்.

பள்ளிக்கூடம் முடிந்ததும் பையன்கள் ஒரு பெரிய மரத்தடியில் சந்தித்தார்கள்.

"என்ன ஹென்றி, என்னமோ வேடிக்கை என்றாயே?" என்று கேட்டான் ரென்னி.

"ரோலோ சிற்ருேடைக்குப் போனுல் தெரியும்" என்ருன் ஹென்றி.

"ஏதாவது செத்த தவளையாக இருக்கும்" என்ருன் வில் பென்னெட்.

"வாங்கடா, ஏதாவது விளையாடலாம்" என்ருன் ஜான் ரட்டிமேன்.

ஆனுல் எட்ஸெல், "நாம் நினைக்காத சாமான் ஏதாவது ஹென்றி பண்ணியிருப்பான். தானுக இயங்கும் வஸ்து ஏதாவது செய்திருப்பான். வேடிக்கை பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருந்தால் நீயும் வா" என்ருன். எல்லோரும் அந்த சிற்ருேடையை நோக்கிப் போனுர்கள்.

சிற்ருேடைக்குக் குறுக்கே ஒரு அணை கட்டும்படி ஹென்றி தன் நண்பர்களிடம் சொன்னுன். "இந்த அணைக்கட்டினுல் ஏற்படும் பலத்தினுல் ஒரு சக்கரத்தைச் சுற்ற வைத்து ஒரு மில்லையே ஓட்டலாம்" என்ருன்.

பக்கத்திலிருந்த புதரிலிருந்து ஹென்றி ஒரு பழைய காப்பிப் பொடி அரைக்கும் கருவியையும், தானே பண்ணின ஒரு மரத் தடுக்கையும், ஒரு மண் வெட்டியின் கைப் பிடியையும் கொண்டு வந்தான். "இந்த காப்பி மிஷின் தான் நம்முடைய மில். அணைக்கட்டினுல் உற்பத்தியாகும் சக்தியைக் கொண்டு அது இயங்கப் போகிறது பார்" என்ருன்.

"நாம் கையால் சுற்ருமலேயே காப்பி யந்திரம்

சுற்றும் என்று சொல்லுகிருயா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான் எட்ஸெல்.

''ஆமாம்'' என்ருன் ஹென்றி மிகுந்த நம்பிக்கையுடன். ''இதோ பார் எட்ஸெல்! நீயும், ரென்னியும், வில்லியமும் கிடைக்கிற பெரிய கற்களை எடுத்துக் கொண்டு வாருங்கள். மற்ற இரண்டு பேரும், மண்ணையும் மணலையும் தயாராக வைத்துக் கொள்ளுங்கள்'' என்ருன் ஹென்றி.

மற்ற பையன்கள் தண்ணீர் புகாத, உறுதியான அணைக்கட்டை, மண்ணையும், மணலையும் கொண்டு கட்டிக் கொண்டிருக்கையில், மரத்தடுக்கையும் காப்பி யந்திரத்தையும் ஹென்றி நடுவில் வைத்துப் பொருத்திக் கொண்டிருந்தான்.

தண்ணீர் மட்டம் சட, சட வென்று உயர்ந்தது. தண்ணீருக்குக் குறுக்கே வைக்கப் பட்டிருந்த தடுக்கையே பையன்கள் கவனித்துக் கொண்டு நின்ருர்கள். மண் வெட்டியின் கைப் பிடி ஒரு ஷாப்டு போல் தடுக்கையும், காப்பி யந்திரத்தையும் பிணைத்து நின்றது. காப்பி யந்திரம் வேலை செய்ய வேண்டுமானுல் சக்கரம் சுற்றியாக வேண்டும். ஆனுல் சக்கரமோ அசைந்து கொடுக்க வில்லை. பையன்கள் சந்தேகத்தோடு ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். ஒரு வேளை சக்கரத்தைச் சுற்ற வைப்பதற்கு ஹென்றிக்குத் தெரியாதோ என்னமோ? ஹென்றி பதிலே சொல்ல வில்லை.

''எல்லாம் சரியாகத் தானே பண்ணி யிருக்கிருேம்? ஏன் சக்கரம் சுற்றவில்லை?'' என்று

நினைத்துப் பார்த்தான். திடீரென்று மந்திரத்தால் இயக்கப் பட்டது போல் தடுக்கு சுற்ற ஆரம்பித்தது. பன்னிரண்டு கண்கள் இமை கொட்டாமல் சக்கரத்தையே கூர்ந்து கவனித்தன. தண்ணீரின் சலசலப்பு சப்தம் கேட்டது. தடுக்கு கொஞ்சம் கொஞ்சமாக சுற்ற ஆரம்பித்தது. கொஞ்ச நேரத்தில் வேகம் அதிகரிக்க, தடுக்கு விர் என்று சுற்றிற்று. காப்பி யந்திரத்தில் ஹென்றி சில களிமண் கட்டிகளைப் போட்டான். அது அறைக்கப் பட்டு பொடி மண்ணாக வெளியே வந்தது. ஒவ்வொரு பையனும் மாறி மாறி யந்திரத்தில் களிமண் கட்டிகளைப் போட்டுப் பார்த்தான். "இது மிகவும் நல்ல விளையாட்டு" என்று ஜான் ரட்டி மேனே ஒப்புக் கொண்டான்.

ஆனால் ஹென்றியோ தன்னுடைய மில்லை இன்னும் சீராக்கி பெரிது பண்ணுவதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். "இன்னும் பெரிய சக்கரத்தைப் பொருத்தி பெரிய மில் பண்ணினால் அதைக் கொண்டு நிறைய வேலைகள் செய்யலாம்" என்று சொன்னான்.

"அதைச் செய்ய எத்தனை காலம் பிடிக்கும்?" என்று கேட்டான் வில்.

"இன்று ராத்திரியே செய்து விட முடியும். ஆனால் அது எங்கப்பா எனக்கு வீட்டில் வைத்திருக்கும் வேலையைப் பொறுத்தது" என்றான் ஹென்றி. பையன்கள் சந்தோஷத்தோடு தங்கள் சக்தி யந்திரத்தைப் பற்றிய பல திட்டங்கள் போட்டவாறு வீடு திரும்பினார்கள்.

ஆனால், அடுத்த நாள் அந்த ஓடைக்குப் பக்கத்தில் வசித்த ஜான் மில்லர் வெகு கோபத்தோடு பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்தார். வாத்தியாரின் மேஜைக்கு கோபமாக ஒரு குத்து விட்டார். "உம்முடைய் மாணவர்கள் ரோலோ சிற்றோடையைத் தேக்கி விட்டார்கள். அதன் பலனாக என்னுடைய கிடங்கில் தண்ணீர் புகுந்து, என்னுடைய் உருளைக்கிழங்கெல்லாம் வீணாகி விட்டன" என்று கத்தினார்.

இதை யார் செய்திருப்பார்கள் என்று வாத்தியாருக்குத் தெரியாதா? ஆகவே ஹென்றியைப் பார்த்து, "என்ன ஹென்றி! என்ன சமாசாரம்?" என்று கேட்டார்.

ஹென்றியின் சாதனையும் சரி, அவன் தான் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டதும் சரி, மில்லருக்குத் திருப்தி அளிக்க வில்லை. ஆகவே கோபங் கொண்ட குடியானவரை சமாதானப் படுத்துவதற்காக மிஸ்டர் பிரஷ் பிறர் உரிமையைப் பற்றி ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார். மதகை உடனே பெயர்த்து எறியும்படி பையன்களுக்குக் கட்டளையிட்டார்.

ஹென்றி வாத்தியாரைப் பார்த்துக் கெஞ்சினான். "நாங்கள் அமைத்த சக்கரம் நிஜமாகவே சுற்றிற்று. இன்னும் பெரிய மில்லை இயக்கும் அளவிற்கு தண்ணீருக்கு சக்தி இருக்கிறதா என்று பார்க்கப் போகிறோம். இன்று உடல் பலத்தினால் நாம் செய்யும் எத்தனையோ காரியங்களைத் தண்ணீர் பலத்தினால் செய்யலாம். ஜலம் வழியாமல் இருப்ப

தற்கு வேண்டுமானுல் ஒரு வாய்க்கால் வெட்டி விடுகிறேம்'' என்ருன்.

மில்லர் அதற்கு இணங்க வில்லை. அவர் ஹென்றியை நோக்கித் தன் விரலைச் சுட்டிக் காட்டி, ''இந்தப் பையன் நல்லவனுகவே திருந்த மாட்டான். அவனிடம் அதிகக் குறும்புத்தனம் இருக்கிறது'' என்று கோபத்துடன் கூறினர்.

மில்லர் பள்ளிக்கூட அதிகாரிகளுடன் மிக்க செல்வாக்கு உடையவராக இருந்ததால், அவருக்கு எதிராக மிஸ்டர் பிரஷ் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஹென்றியைப் பார்த்து, ''இனி மேல் ஒரு அணையும் கட்டக் கூடாது'' என்று கண்டித்தார்.

பாவம், ஹென்றியின் முகம் தொங்கிப் போயிற்று. ''நான் பெரியவனுனல், இந்த மில்லர்கள் சொல்வதை யெல்லாம் கேட்க மாட்டேன்'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். மில்லரின் உருளைக் கிழங்குகள் வீணுனதைப் பற்றி ஹென்றிக்கு வருத்தமாகத் தான் இருந்தது. இருந்தாலும் தண்ணீரின் சக்தியைக் கண்டு பிடிப்பதற்கு மில்லர் தன்னை அனுமதித்திருக்க வேண்டும் என்று அவன் கருதினன். மில்லர் தான் இப்படி இருந்தார் என்ருல், தண்ணீருக்குச் சக்தி இருக்கிறது என்று மிஸ்டர் பிரஷ்ஷுக்குத் தெரியாதா? அதை உபயோகப்படுத்த நாம் கற்றுக் கொள்ள வேண்டாமா? இப்படி எல்லாம் ஹென்றி நினைத்தான்.

# அத்தியாயம் 3.

டியர்பார்னிலும் சரி, மற்ற எந்த இடத்திலும் சரி, வசந்த காலம் வந்தாலே குடியானவர்களுக்கு வேலை நெட்டி வாங்கும். அப்பொழுது தான் அவர்கள் நிலத்தை உழுது, சீர் திருத்தி பயிர் செய்தாக வேண்டும். ஹென்றியின் தகப்பனுரான மிஸ்டர் போர்ட் முதலில் இருந்த நாற்பது ஏக்கர் நிலத்தோடு நிறைய நிலம் வாங்கிச் சேர்த்திருந்தார். இரண்டு கூலியாட்கள் அவரிடம் வேலை செய்தார்கள். இருந்தும் குடும்பத்தின் பெரிய பையன்களான ஹென்றியும், ஜானும், இவர்களுடன் கூடச் சேர்ந்து உதவி செய்ய வேண்டி யிருந்தது. பயிர் முளை விட்டதும் களை பிடுங்கியாக வேண்டும். இந்த வேலை ஹென்றிக்குப் பிடிப்ப தில்லை. களஞ்சிய சம்பந்தமான எந்த வேலையும் ஹென்றிக்குப் பிடிக்காது. ஆகவே பால் கறக்கும் வேலையை ஜானுக்கு விட்டு விட்டு, தான் குதிரைகளைக் கவனிப்பதாக ஒப்புக் கொண்டான். பசுக்களை விட குதிரைகள் புத்திசாலியான மிருகங்கள் என்பது ஹென்றியின் எண்ணம். கோடையில் ஈ உபத்திரவம் பொறுக்காமல், வாலால் அடித்துக் கொள்ளும் போது, பசுக்கள் நம்மையும் சேர்த்து அடிக்கும்.

வைக்கோலுக்காக புல் அறுப்ப தென்ருல் ஹென்றிக்கு மிகவும் பிடித்த வேலை. இதற்காக வேலையாட்கள் பெரிய அறிவாள் வைத்திருந்தார் கள். ஆனல் அவனுடைய தகப்பனர் இதற்கு என்று குதிரைகளால் இழுக்கப்பட்ட ஒரு புதிய யந்திரம் வைத்திருந்தார். புல் வெட்டும் போதெல் லாம் புல்லின் மெல்லிய வாசனையை நுகர்ந்து ஹென்றி சந்தோஷப்படுவான்.

புல் வெட்டும் பொழுது நடுவில் பறவைகளின் கூடுகள் தென்பட்டால் ஹென்றி அவற்றை எடுத்து வேறு நல்ல இடமாகப் பார்த்து வைப் பான். பறவைகள் என்ருலே அவனுக்கு மிகுந்த ஆசை. எல்லா பட்சிகளைப் பற்றியும், அவை ஒவ் வொன்றும் எப்படிப் பாடும் என்பது பற்றியும் அவனுக்குத் தெரியும். அவை பறப்பதையும், பாடு வதையும் பார்க்க அவனுக்கு ஆனந்தமாக இருக் கும். பயிர் பச்சைகளை யழிக்கும் பூச்சிகளுக்கு யமனுக விளங்கிய பறவைகளை தன் நண்பர்க ளாகவே ஹென்றி பாவித்தான்.

ஹென்றியின் தகப்பனருக்கு பயிர் தொழில் என் ருலே பைத்தியம். நிலத்திலிருந்து முழு பலனையும் அடைய முயல வேண்டும் என்ற உறுதியுடையவர் அவர். அவருக்கு யந்திரங்களில் அதிக பற்று இல்லா விட்டாலும் யந்திரங்களைக் கொண்டு காலம், சிர மம், பணம் மூன்றையும் மீதப் படுத்தலாம் என்பது அவர் கருத்து. அந்தப் பக்கத்திலேயே முதல் முத லாக ஒரு புல் வெட்டும் யந்திரமும், ஒரு அறுப்பு அறுக்கும் யந்திரமும் வாங்கியவர் அவர் தான்.

இந்த யந்திரங்களைக் கண்டு ஹென்றிக்கும் அதிக உற்சாகம் ஏற்பட்டது. அவை எப்படி இயங்கு கின்றன என்று ஆதியோடு அந்தமாகத் தெரிந்து கொண்டான். அவை மாத்திரம் அல்ல, அந்த பிராந்தியத்தில் வேறு எங்கு யந்திரங்களைப் பார்த் தாலும், அவை எப்படி வேலை செய்கின்றன என்று கண்டு கொள்ள முயல்வான்.

டீ கெட்டில் உடைந்து இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. நீராவி எப்படி வேலை செய்கிறது, அதை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று தெரிந்து கொள்ள ஹென்றி விரும்பினான். போர்ட் பண்ணைக் குச் சற்று தூரத்தில் ஒரு பாழடைந்த ரம்ப மில் இருந்தது. அதன் பக்கமாகப் போகும் போதெல் லாம், அது எப்படி வேலை செய்கிறது என்று தெரிந்து கொள்ள ஹென்றி துடித்தான். ஒரு நாள் மாலை, ஹென்றி தன்னிடமிருந்த சில கருவிகளை எடுத்து கைக்கு இடுக்கில் வைத்துக் கொண்டு, எப்படி மனிதர்கள் செய்யும் ரம்ப வேலையை நீராவி செய்கிறது என்று கண்டு பிடிக்கப் புறப்பட்டு விட் டான்!

யந்திரம் தரையில் மரத்தூள் குப்பைக்குள் புதைந்து கிடந்தது. யாரோ சிலிண்டரிலிருந்து தலைப் பக்கத்தைப் பிரித்து எடுத்துப் போயிருந் தார்கள்.

ஹென்றி தன் சட்டைக் கையைத் தூக்கி விட் டுக் கொண்டு, கையை உள்ளே விட்டு, உள்ளே என்னென்ன பாகங்கள் இருக்கின்றன என்றும்,

நீராவியின் சக்தி எப்படி கட்டுப் படுத்தப் படுகிறது என்றும் பார்க்க ஆரம்பித்தான்.

அப்படி செய்து கொண்டிருக்கையில் மரத்தூள் திடீரென்று அசைந்து கொடுக்க, சிலிண்டர் அவன் மேல் விழுந்தது. ஹென்றி அதற்கடியில் அகப்பட்டுக் கொண்டு விட்டான்! சிலிண்டரைத் தள்ளினுல் தான், கையை அடியிலிருந்து எடுக்க முடியும். ஆனுல் பிறர் உதவி யின்றி இதைத் தள்ளுவதற்கு வேண்டிய பலம் அவனுக்கு இல்லே. ஆகவே அசையாமல், இருந்த நிலேயிலேயே இருந்து, என்ன செய்யலாம் என்று நிதானமாக யோசனே பண்ண ஆரம்பித்தான். சிலிண்டரைத் தூக்கித் தள்ளுவதோ முடியாத காரியம். ஆனுல் அதை உருட்டி விட முடியும். ஆகவே, அதை உருட்டித் தள்ளுவதற்காக தன் இடது கையினுல் பக்கத்தில் ஒரு பள்ளம் தோண்ட ஆரம்பித்தான். வெகு நேரம் கஷ்டப்பட்டுத் தோண்டினுன். கடைசியில் சிலிண்டரை உருட்டித் தள்ளி அதற்கடியில் அகப்பட்டுக் கொண்டிருந்த தன் கையை வெளியே எடுத்தான். நல்ல வேளேயாக கை உடையவில்லே.

உடனேயே அந்தயந்திரத்தைத் துருவிப் பார்க்க ஆரம்பித்தான். அதன் உள்ளே யிருந்த வால்வ் மேலும் கீழும் போவதால் தான் நீராவி மாறி, மாறி, உள்ளே போவதும், வெளியே வருவதுமாக இருக்கிறது என்றும், அதனுல் அது பிஸ்டனே மேலும் கீழும் தள்ளுகிறது எனறும் கண்டு பிடித்தான். இதைப் பார்த்ததும் ஹென்றிக்கு அது

எப்படி எப்படி வேலை செய்கிறது என்பது பற்றி ஒரு தெளிவு ஏற்பட்டது.

வீட்டிற்குப் போய், தன் சாமான்களை யெல்லாம் ஒன்று சேர்த்தான். டியர்பார்ன் கொல்லன் பட்டறையில் உள்ளது போல் அவன் தானே செய்த ஒரு துருத்தியும், அடுப்பும் அவனிடம் இருந்தது. காய்ச்சிய இரும்பை அடித்து, அதற்கு இஷ்டப்பட்ட உருவைக் கொடுக்க ஒரு பட்டறைக் கல்லும் இருந்தது. இன்னும் ஓட்டை, உடைசல் சாமான்கள், போல்ட்டுகள், நட்டுகள், மரத் துண்டுகள் என்று நிறைய வைத்திருந்தான். தன்னுடைய சிறிய தொட்டியில் பண்ணையின் ஆயுதங்களை அவன் பழுது பார்த்து வந்தான். ஏதாவது பிரயோஜனமான பொருள் செய்வதும், கெட்டுப் போனவற்றைச் சரி செய்து மீண்டும் வேலை செய்ய வைப்பதும் அவனுக்கு மிகவும் பிடித்த விஷயம்.

வண்டியை விட்டு இறங்காமலேயே களஞ்சியக் கட்டிடத்தின் வாசல் கதவைத் திறக்கவும் மூடவும் அவன் அன்று காலை தான் ஒரு வழி செய்திருந்தான். ஆனால் அவன் அதில் அசையாத கப்பி போட்டிருந்ததால் அது வேலை செய்ய வில்லை. அவ்விதம் திறந்து மூடும் தன்மை உண்டாக்க, தான் சறுக்கும் வாலில் கண்ட கருத்துப்படி, அசையும் கப்பியைப் போட வேண்டி யிருக்குமோ என்று யோசனை செய்தான். நிலையான கப்பி சக்தியின் திசையை மாற்றும் என்றும், அசையும் கப்பி சக்தியை அதிகரிக்கப் பயன் படும் என்றும், அதோடு எவ்வளவுக் கெவ்வளவு நிறைய அசையும் கப்பிகள் உபயோகப்

படுத்துகிறேமோ, அவ்வளவுக் கவ்வளவு பளுவைச் சுலபமாகத் தூக்கலாம் என்பதும் அவனுக்குத் தெரிந்தது தான்.

பட்டறையிலிருந்து சில பலகைகள் கொண்டு வந்து கேட்டுக்குச் செங்குத்தாக ஒரு பலகையைப் பொருத்தினன். இதோடு வண்டியின் உயரத்திற்குச் சரியாக நேரான பலகைகளைப் பொருத்தினன். கதவின் தாழ்ப்பாளோடு, கப்பிகளும் கயிறுகளும் பொருத்தப் பட்டிருந்ததால், வண்டியில் உட்கார்ந்தபடியே இழுத்தால் கதவுகள் திறக்கும்.

ஹென்றி இதைச் செய்து கொண்டிருக்கையில் அவனுடைய தகப்பனர் குதிரை வண்டியில் அங்கு வந்து சேர்ந்தார். "ஹென்றி. கதவைத் திற!" என்ருர்.

"கதவு வரையிலும் வந்து கயிற்றைப் பிடித்து இழுத்து என்ன நடக்கிறது என்று பாருங்கள்" என்ருன் ஹென்றி.

"என்னடா! ஏதாவது விஷமம் பண்ணிக் கொண்டிருக்கிருயா?" என்று சொல்லிக் கொண்டே அவர் கயிற்றைப் பிடித்து இழுத்தார். கதவு தானகவே திறந்து கொள்ள, மிஸ்டர் போர்ட் புன்முறுவல் பூத்தார்.

"தேவலையே! வெகு கெட்டிக்காரத்தனமாகக் காரியம் செய்திருக்கிருப் போல் தோன்றுகிறதே!" என்ருர்.

"உள்ளே போனதும், திரும்பவும் கயிற்றைப்

பிடித்து இழுங்கள். கதவு தானுகவே மூடிக் கொள்ளும்'' என்ருன் ஹென்றி.

போர்ட் இதைக் கண்டு சந்தோஷப் பட்டார். ''ஏனப்பா, இந்த விஷயங்களில் இவ்வளவு கெட்டிக்காரனுக இருக்கும் நீ, பள்ளிக்கூடப் புத்தகங்களைச் சரியாகப் படிக்க மாட்டேன் என்கிருயே? சரி, வண்டியில் ஏறிக் கொள். டவுனுக்குப் போய் வரலாம்'' என்ருர்.

ஹென்றி துள்ளிக் குதித்துக் கொண்டு வண்டியில் ஏறினன். டவுனுக்குப் போனல் கருமான் பட்டறையைப் பார்க்கலாம் என்பது அவன் எண்ணம். பழுக்கக் காய்ச்சிய இரும்புக்குக் கருமான் புது உருவம் கொடுப்பதைப் பார்க்க ஹென்றிக்கு வெகு ஆசையாக இருக்கும்.

அப்பாவும், பிள்ளையும் ஒரு திருப்பத்தின் வழியாகப் போய்க் கொண்டிருக்கையில் எதிரே ஒரு பெருத்த கரிய இரும்பு வண்டி தன்னுடைய சுய சக்தியால் நகர்ந்து வந்தது. குபு, குபு வென்று புகை அதிலிருந்து கிளம்பிக் கொண்டிருந்தது. பின் பக்கச் சக்கரங்கள் சங்கிலியால் இணைக்கப்பட்டு சைக்கிளைப் போல் இயங்கின.

''அப்பா! வண்டியை நிறுத்துங்கள். குதிரை இழுக்காமல் தானுகவே ஓடும் நீராவி எஞ்சினை நான் பார்த்ததே யில்லை'' என்று ஹென்றி வண்டியிலிருந்து கீழே குதித்தான்.

என்ஜின் டிரைவரைப் பார்த்து, ''ஐயா! உங்கள் என்ஜினை நான் பார்க்கலாமா?'' என்ருன்.

அந்த மனிதன் வண்டியை நிறுத்தினன். அது எப்படி ஓடுகிறது, எப்படி வேலே செய்கிறது என்றெல்லாம் ஹென்றி சரமாரியாக அவனைக் கேள்விகள் கேட்டான்.

டிரைவர் சிரித்தான். "ஒவ்வொரு கேள்வியாகக் கேள் தம்பி" என்ருன். "எதற்காக இந்த என்ஜினே இங்கு கொண்டு வந்தீர்கள்?" என்று ஹென்றி கேட்டான். அதற்கு டிரைவர், "இதை டியர்பார்னுக்குக் கொண்டு வருவதற்கே காரணம் கதிர் அடிக்கும் யந்திரம், ரம்ப மில் முதலியவற்றை ஓட்டுவதற்காகத் தான்" என்று சொல்லி விட்டு, எப்படி பாய்லருக்குப் பின்னல் உள்ள பிளாட்பாரத்தில் நின்று கொண்டு, நிலக்கரியைப் பாய்லரில் போட்டால், அது தானகவே ஓடும் என்று விளக்கினன்.

பின் சக்கரங்களுக்கு இணைக்கப் பட்டிருந்த சங்கிலியை எடுத்து விட்டு அதற்குப் பதில் ஒரு பெல்டைப் போட்டால் மற்ற யந்திரங்களே எப்படி இயக்க முடியும் என்றும் விவரித்தான். சங்கிலியை எடுத்தால் எப்படி வண்டி ஓடாது, ஆனல் எஞ்ஜின் ஓடிக் கொண்டிருக்கும் என்று காண்பித்தான்.

இதற்குள், "வா, ஹென்றி! நாழியாகிறது" என்று கூப்பிட்டார் அவன் தகப்பனர்.

"இன்னும் ஒரு நிமிஷம் இரு அப்பா. நீராவி எப்படி உற்பத்தியாகிறது என்று இன்னும் இந்த ஆள் காட்ட வில்லேயே?" என்ருன் ஹென்றி.

இதைக் கேட்டு டிரைவர் சந்தோஷப் பட்டான்.

"நீ கெட்டிக்கார பையனப்பா. மற்றப் பையன்களெல்லாம் சக்கரம் சுற்றுவதை வேடிக்கைப் பார்க்கிறார்களே யொழிய, வேறு யாரும் இந்தக் கேள்வி கேட்டதில்லை" என்று சொல்லி அவன் அதையும் விவரிக்க ஆரம்பித்தான்.

"இதோ பார். இதில் என்ஜின், பாய்லர் என்று இரண்டு பாகங்கள் உள்ளன. எஞ்ஜினில் ஒரு சிலிண்டர் இருக்கிறது. அந்த சிலிண்டரில் உள்ள பிஸ்டன் பாய்லரிலிருந்து வரும் நீராவியினால் தள்ளப் பட்டு மேலும் கீழும் போகிறது. சிலிண்டர்களுக்கு இந்தக் குழாய் வழியாக நீராவி வருகிறது. இதைப் பார்த்தாயா, இதற்குத் தான் த்ராட்டில் என்று பெயர். இதைக் கொண்டு நீராவியின் அளவை அதிகப் படுத்தவோ குறைக்கவோ முடியும்."

"போர்ட்டுகளும், ஸ்லைடு வால்வுகளும் வேலை செய்வதையும் பார்க்க வேண்டுமே" என்றான் ஹென்றி.

"தேவலையே! இவற்றைப் பற்றிக் கூட நீ தெரிந்து வைத்திருக்கிறாயா? ஸிலிண்டரின் முடிவில் அவை இருக்கின்றன" என்றான் ட்ரைவர்.

"என்ஜின் எத்தனை வேகமாகப் போகும்?"

"நிமிஷத்துக்கு 200 சுற்றுகள் போகும். ஆமாம் உனக்கு இந்த வண்டியை ஓட்டிப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறதல்லவா?"

இந்தக் கேள்விக்கு ஹென்றி பதில் அளிக்கவில்லை. ஏனெனில் அதற்குள் அவன் தகப்பனார்

புறப்பட்டு விட்டதால், இவன் ஓடிப் போய் அவர் வண்டியைப் பிடிக்க வேண்டியதாயிற்று.

"என்ன ஹென்றி, இப்படி நேரங் கடத்தி விட்டாயே? பொழுது எவ்வளவு போய் விட்டது பார்" என்ருர் தகப்பஞர்.

"அப்படியாளுல் இன்று கொல்லன் பட்டறைக்குப் போக முடியாதா?"

"இன்று முடியாது. சாப்பாட்டிற்கு நாழியாகி விடும்."

அன்று இரவே ரோடு என்ஜினைப் போலவே ஒரு மாதிரியை ஹென்றி பண்ணிப் பார்த்தான். ஆனல் அதற்கு எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு தான் நன்ருக ஓடும் ரோட் என்ஜின் ஒனறு அவனல் செய்ய முடிந்தது. தண்ணீர் நீராவியாக மாறும் பொழுது அதிக இடம் தேவையாக இருப்பதால், அதற்குச் சக்தி உண்டாகிறது என்று ஹென்றி தெரிந்து கொண்டான. பண்ணையிலிருந்த காற்று மில்லை பழுது பார்த்ததின் விளைவாக காற்று இயங்கும் போது அதற்கு சக்தி உண்டாகிறது என்று தெரிந்து கொண்டான். அணை கட்டியதின் விளைவாக ஓடும் தண்ணீருக்கு சக்தி இருக்கிறது என்று தெரிந்து கொண்டான். மனிதனின் தேக பலத்தைக் கொண்டு செய்ய முடியாத காரியங்களை இந்த சக்திகளைக் கொண்டு செய்ய முடியும் என்றும் ஹென்றி தெரிந்து கொண்டான்.

# அத்தியாயம் 4.

அன்று ஞாயிற்றுக்கிழமை காலை. ஹென்றியின் குடும்பத்தினர் காலை ஆகாரம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பழைய கணப்பு அடுப்பிற்குப் பதில் ஒரு புதிய ஸ்டவ் இப்பொழுது இருந்ததால், ஸ்ரீமதி போர்டால் குடும்பத்தினர் சாப்பிட, சாப்பிட, சுடச்சுட கேக்குகள் சுட முடிந்தது. பதிமூன்று வயதாகிவிட்ட மார்கரெட் இப்பொழுது நன்கு உயர்ந்து வளர்ந்து இருந்தாள். அவள் இப்பொழுது கேக்குகளை எடுத்து, அப்பா, ஹென்றி ஜான், ஜேன், இரண்டு வேலையாட்கள் எல்லாருக்கும் பரிமாறிக் கொண்டிருந்தாள். உயர்ந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த வில்லியம் ஓட்ஸ் கஞ்சியை மூஞ்சி முழுவதும் அப்பிக் கொண்டிருந்தான். புதிதாகப் பிறந்த குழந்தை ராபர்ட் தொட்டிலில் கிடந்தான்.

ஹென்றி கவலை தோய்ந்த முகத்தோடு காணப்பட்டான். துப்புரவாகத் தன்னைச் சுத்தம் செய்து கொண்டு, கோவிலுக்குப் போகவேண்டிய நாள் அன்று.

தன் வேலைகளைச் செய்து முடித்தானதும்,

நல்ல தடி பூட்ஸுகளைக் காலில் மாட்டிக் கொண்டு, கழுத்தைச் சுற்றி ஒரு கெட்டியான காலரைக் கட்டிக் கொண்டான். அவனால் கழுத்தையும் திருப்ப முடியவில்லை, கால் விரல்களையும் அசைக்க முடியவில்லை.

ஸ்ரீமதி போர்ட் மஹாகனி சட்டம் போட்ட கண்ணாடியின் முன் நின்று கொண்டு தன் தலை மயிரையும், நீலக் கௌனுக்கு மேல் அணிந்திருந்த வெள்ளைக் கழுத்துப் பட்டையையும் சரிப்படுத்திக் கொண்டு, "எல்லோரும் தயாரா?" என்று கேட்டாள்.

வண்டியின் முன் பக்கம் அப்பாவும் அம்மாவும் உட்கார்ந்து கொள்ள, பின் பக்கம் ஹென்றி, ஜான், மார்கரெட், ஜேன் நான்கு பேரும் உட்கார்ந்து கொண்டார்கள். வண்டி கோவிலை நோக்கிப் புறப்பட்டது. வேலையாள் 'டாக்' எல்லோரும் கோவிலுக்குப் போய் இருக்கும் போது வில்லியத்தையும் குழந்தையையும் பார்த்துக் கொள்வான்.

"ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கோவிலுக்குப் போய்த்தான் ஆகவேண்டுமா?" என்று சலிப்புடன் கேட்டான் ஹென்றி. "அப்படியெல்லாம் சொல்லாதேடா! பாதிரியின் பிரசங்கத்தைக் கேட்பது ஆத்மாவுக்கு நல்லது" என்றாள் ஸ்ரீமதி போர்ட்.

கோவில் போய்ச் சேர்ந்ததும், ஹென்றி குதிரைகளைக் கம்பத்தோடு கட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவனுடைய நண்பன் வில்

தன் பெற்றோர்களோடு வண்டியில் வந்து சேர்ந் தான்.

"டேய்! ஹென்றி! நான் உன்னிடம் காட்டு வதற்கு ஒரு சாமான் வைத்திருக்கிறேன்" என் ருன் வில்.

ஹென்றியும் வில்லும் பேசிக்கொண்டே ஒரு பக்கமாகச் சென்ருர்கள். "இது எனக்குச் சொந்த மாக என் தாத்தா கொடுத்தது" என்று வில் ஒரு பாக்கெட் கடியாரத்தை எடுத்துக் காண்பித்தான். இந்தக் காலத்து பாக்கெட் கடியாரங்களைப் போல் அந்தக் காலத்து பாக்கெட் கடியாரங்கள் சின்ன தாக இருக்கவில்லை. ஒரு தனி சாவி கொண்டு முடுக்க வேண்டிய அளவு பெரிதாக இருந்தது.

"அடே! என்ன அழகாக இருக்கிறது! கொஞ் சம் கொடுடா பார்க்கிறேன்" என்று சொல்லி ஹென்றி கடியாரத்தை வாங்கிக் கொண்டான்.

ஹென்றி அதைக் காதில் வைத்துப் பார்த்து விட்டு, "இது ஓடக் காணுமே" என்ருன்.

"ஓடாவிட்டால் என்ன? எப்படியும் இது கடியாரம் தானே! கடியாரமே இல்லாமல் இருப்ப தற்கு இது ஒன்றும் குறைந்து போகவில்லை" என்று வெகு பெருமையாகச் சொன்னுன் வில்.

ஒரு கடியாரத்தைத் திறந்து உள்ளே என்ன இருக்கிறது என்று பார்க்க வேண்டும் என்று ஹென்றிக்கு வெகு நாளாக ஆசை. ஆகவே இது தான் நல்ல சமயம் என்று தீர்மானித்து வில்லைப் பார்த்து, "இதை உனக்கு நான் பழுது பார்த்துத்

தருகிறேன், என்ன சொல்லுகிருய்?'' என்று கேட்டான்.

''வேண்டாம். எல்லாம் இப்படியே இருக்கட்டும்'' என்ருன் வில்.

''ஆனல் அதைப் பார்த்து நீ மணி சொல்ல முடியுமாஞல், எல்லாரும் உன்னைப் பற்றி எவ்வளவு பிரமாதமாக நினைப்பார்கள், தெரியுமா?''

பிரமாதமாக நினைப்பார்கள் என்று சொன்னதும், ஏற்கனவே ஹென்றி நீர் ஓடையில் சக்கரத்தைச் சுற்றியதையும், பண்ணை இயந்திரம் அமைத்ததையும் நினைவு கூர்ந்து வில் சரியென்று ஒப்புக்கொண்டான்.

அவ்வளவுதான், கோவில் ஞாபகம் மறைந்தது. பையன்கள் இருவரும் பென்னட் தானிய களஞ்சியத்திற்குச் சென்ருர்கள். ஹென்றி தன்னுடைய காலரையும், ஜோடுகளையும் கழற்றிஞன். கடியாரத்தைப் பழுது பார்ப்பதற்கு வேண்டிய நுண்ணிய ஆயுதங்கள் அங்கு இல்லை. என்ருலும் ஒரு சிறு ஆணியை சரியான அளவுக்கு ராவி, ஒரு சின்ன ஸ்குரு ட்ரைவரைப் போல் பண்ணிஞன். வில், பக்கத்திலேயே உட்கார்ந்து, தன் கடியாரத்தை ஹென்றி என்ன பண்ணுகிருன் என்று கவனித்துக் கொண்டேயிருந்தான்.

உள்ளே யிருந்த பாகங்களை ஹென்றி ஜாக்கிரதையாக மேஜை மீது வைத்தான். அவற்றைப் பார்த்த போது, துணிகளைப் பிழிவதற்கு அவன் தாயார் வைத்திருந்த யந்திரத்தின் ஞாபகம் அவ

னுக்கு வந்தது. அதில் இதைப் போல ஒரு சக்கரம் இன்னொரு சக்கரத்தை உருட்டுவதைப் பார்த்திருக்கிறான். கைப் பிடியைப் பிடித்துச் சுற்றுவதால் துணி பிழியும் யந்திரம் இயங்கிற்று. கடியாரமோ மெயின் ஸ்பிரிங் உதவியினால் இயங்கிற்று. அதை ஒரே நிதானத்தோடு இயக்கும் காரியத்தை 'பாலன்ஸ் வீல்' செய்தது. மெயின் ஸ்பிரிங்கிலிருந்து வந்த விசையினால் 'பாலன்ஸ் வீல்' நில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது. இந்த விவரங்கள் ஹென்றிக்கு ஆச்சரியத்தை அளித்தன.

இதற்குள் ஹென்றியைக் காணோமே யென்று ஸ்ரீமதி போர்ட் திகைத்தாள். வில்லின் பெற்றோர்களும், ஹென்றியின் பெற்றோர்களும், பையன்களைத் தேட ஆரம்பித்தார்கள். கடைசியில் அவர்களைக் களஞ்சியத்தில் கண்டு பிடித்தார்கள். மிஸ்டர் போர்டுக்கு ஏகக் கோபம் வந்தது. ஆனால் தனக்கு இருந்த உற்சாகத்தில் தகப்பனார் அடிப்பாரே என்று கூட ஹென்றி கவலைப் படவில்லை.

"இதோ பார் அப்பா! இந்த கடியாரத்தை நான் பழுது பார்த்து ஓட வைத்து விட்டேன். அதைக் கொஞ்சம் சுத்தம் பண்ண வேண்டியிருந்தது, அவ்வளவுதான். அதைப் பிரிப்பது எத்தனை சுலபமோ, அத்தனை சுலபம்தான் அதைத் திரும்ப மாட்டுவதும்" என்றான்.

பதினைந்து வயது நிரம்பாத ஹென்றி கடியாரங்களைப் பழுது பார்ப்பதில் கெட்டிக்காரன் என்ற தகவல் எங்கும் பரவிற்று. ஹென்றியும் வெகு

ஆசையோடும், சாமர்த்தியத்தோடும் கடியாரங் களைப் பழுது பார்த்தான்.

ஹென்றி இதற்காக முதல் முதலில் வைத் திருந்த ஆயுதங்கள் ஒரு ஆணி, ஒரு சாமணம், இரண்டு பின்னல் ஊசி இவை தான். சீக்கிரமே கடைசல் பிடிக்கும் இயந்திரம் ஒன்றைத் தன் அறையில் பொருத்தி அங்கு கடியாரம் பழுது பார்க்க ஆரம்பித்தான். குளிரினுல் கால் விறைத் துப் போகாமல் இருப்பதற்காக, காலடியில் ஒரு மண்ணெண்ணெய் விளக்கு வைத்துக் கொண்டு, ஹென்றி கடியாரங்களைப் பழுது பார்ப்பான். இது அவனுக்கு ஒரு வேடிக்கையாகப் பட்டதேயொழிய வேலையாகப் படவில்லை.

பழுது பார்க்க வேண்டிய கடியாரங்கள் ஒரு பலகையில் தொங்கின. அவனுக்குப் பழுது பார்க்க நிறையக் கடியாரங்கள் வந்து கொண்டிருந்தன. ஏனெனில் அவன் அதற்காகப் பணம் ஒன்றும் கேட்பதில்லை.

ஹென்றி தன் முழுக் கவனத்தையும் கடியார ரிப்பேரில் செலவழித்தது நல்லதாகப் போயிற்று. ஏனெனில் இந்த சமயம் தான் அவனுடைய தாயார் இறந்து விட்டாள். ஹென்றி தன் தாயார் மீது ஏக அன்பு வைத்திருந்தான். அவளும் இவன் கடி யார வேலைகளை வெகு அனுதாபத்தோடு கவனிப் பாள். அவள் போனது, வீடே மெயின் ஸ்பிரிங் இல்லாத கடியாரம் போல் ஆகிவிட்டதாக ஹென் றிக்குத் தோன்றிற்று.

இவர்களுடைய சொந்தக்காரியான ஸ்ரீமதி பிளாஹார்ட்டி, குழந்தைகளைக் கவனிப்பதற்காக இவர்கள் வீட்டில் இவர்களோடு வசிக்க ஆரம்பித்தாள். வீட்டுப் பொறுப்பை ஏற்கும் அளவுக்கு மார்கரெட் பெரியவளாகும் வரை இந்த ஏற்பாடு நடந்து வந்தது.

தன்னுடைய தாயார் இல்லாமல், மற்றக் குடும்பத்தினரோடு சேர்ந்து பேசிக் கொண்டு இருக்கப் பிடிக்காமல், ராத்திரி ஆனதும், ஹென்றி தன் அறைக்குப் போய் விடுவான். சாயந்திரம் ஆனல் தாயார் 'ஆர்கன்' என்னும் இசைக் கருவியை வாசிப்பதும், மற்றவர்கள் அவளைச் சுற்றி நின்று கொண்டு பாடுவதுமான பழைய காட்சிகளை அவனுல் மறக்க முடியவில்லை.

பள்ளிக்கூட வேலையும், பண்ணை வேலையும் முடிந்த பிறகு, ஹென்றிக்குக் கடியார வேலை எப்பொழுதும் காத்துக் கிடக்கும்.

சில சமயங்களில் குதிரை மேலேறி பல மைல்கள் பிரயாணம் செய்து, ஏதாவது கடியாரம் பழுது பார்த்து விட்டுத் திரும்புவான்.

ஒரு நாள் ராத்திரி, இந்த மாதிரி அவன் வெளியே போயிருந்த சமயம் மழை கொட்டு, கொட்டு என்று கொட்ட ஆரம்பித்து விட்டது. நதிகளில் ஏகப் பிரவாகம் ஓட, ஒரு பாலம் இடிந்து விழுந்து விட்டது. இந்த வழியாக, குதிரை சவாரி செய்து கொண்டு திரும்பி வந்த ஹென்றி, பாலம் போய் விட்டது தெரியாமல் குதிரையோடு பிரவா

கத்தில் விழுந்து விட்டான். கொஞ்ச நேரம் ஹென்றியும் குதிரையும் வெள்ளத்தில் தத்தளித்தார்கள். கடைசியில், நல்ல வேளை, ஹென்றி எப்படியோ தப்பிப் பிழைத்து குதிரையோடு கரை ஏறினன்.

மிஸ்டர் போர்ட் வெகு கோபத்தோடு வாசலில் நின்று கொண்டிருந்தார். "இது என்னடா விளையாட்டு? உன் உயிருக்கு ஆபத்தோடு, என்னுடைய நல்ல குதிரையின் உயிருக்கும் அல்லவா ஆபத்து ஏற்பட இருந்தது? அது காலை ஒடித்துக் கொண்டிருந்தால், அதைச் சுட்டு அல்லவா கொல்ல வேண்டி யிருந்திருக்கும்?" என்று கோபித்துக் கொண்டார்.

"குதிரைக்கு ஒரு ஆபத்தும் இல்லை" என்ருன் ஹென்றி.

"நல்ல வேளை, அதற்கு ஆபத்து ஏற்பட வில்லையோ, நீ அடி வாங்காமல் பிழைத்தாயோ! இதோ பார் ஹென்றி! இனிமேல் நீ இந்த மாதிரி பணம் இல்லாமல் வேலை செய்வதற்கு நான் அனுமதி கொடுக்க மாட்டேன். அதோடு கூட, நீ வளர்கிற பருவத்தில் இருக்கிருய். அதனல் அதிகம் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். அதோடு என் குதிரைகளையும் நீ தொடக் கூடாது" என்ருர்.

தகப்பனர் சொன்னது ஹென்றிக்குப் பிடித்தமாயில்லை. "பண்ணை வேலையைச் செய்து முடித்த பிறகு, தன்னுடைய ஒழிவு நேரத்தைத் தான்

எப்படிச் செலவழித்தால் இவருக்கு என்ன?" என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

ஹென்றி தன்னுடைய அறைக்குச் சென்று யோசனை செய்ய ஆரம்பித்தான். தான் பண்ணுகிற காரியங்களெல்லாம் பித்துக்குளித்தனம் என்று அவர் நினைக்கிற வரையில் தனக்கும் தன் தகப்பனுருக்கும் தகராறு இருந்து கொண்டு தான் இருக்கும். தன்னுல் என்னமோ தகப்பனுர் சொன்னபடி கேட்டுக் கொண்டு, பண்ணை வேலை செய்து கொண்டே இருக்க முடியாது. தனக்கோ என்ஜின்களையும், யந்திரங்களையும் கண்டால் தான் பிடிக்கிறது. ஆகவே நாளையிலிருந்து தனக்கு இஷ்டப்பட்ட வாழ்க்கையை வாழ ஆரம்பிக்க வேண்டியது தான் என்று ஹென்றி தீர்மானித்தான்.

# இரண்டாவது பாகம்

## 1879-1896.

# அத்தியாயம் 5.

இன்னும் பொழுது விடிய வில்லை. அதற்குள் ஹென்றி எழுந்து தன் துணிமணிகளைச் சுருட்டி எடுத்துக்கொண்டான். வீடு நிசப்தமாக இருந்தது. மெள்ள அடிமேல் அடி எடுத்து வைத்தான். தகப்பனாரின் அறைப் பக்கமாக வந்த போது, அவர் குறட்டை விட்டுக் கொண்டிருந்த சப்தம் கேட்டது. எங்கெந்த படிகள் கிறீச் என்று கத்துமோ, அந்தப் படிகளில் கால் வைக்காமல் மெள்ள இறங்கினான்.

உக்கிராண அறையிலிருந்து ஒரு பெரிய கேக்கை பிட்டு எடுத்துக்கொண்டு, வீட்டை விட்டு வெளியே வந்தான். அப்பொழுது பொழுது விடிந்து கொண்டிருந்தது. வீட்டின் பக்கத்தில் உள்ள மரத்திலிருந்து பறவைகள் சப்தம் போட்டுக் கொண்டும், சுற்றி வந்து கொண்டும் இருந்தன.

நல்ல உயரமாகவும், ஒடிசலாகவும் வளர்ந்திருந்த ஹென்றி, சுதந்திரத் துடிப்பால் துள்ளிக் குதித்தான். என்ஜின்களைப் பற்றி எல்லாம் தெரிந்து கொண்டு விட வேண்டுமென்று அவனுக்கு எத்தனையோ வருஷங்களாக ஆசை! "ஹென்றி! நீ ஒரு பிறவி மெக்கானிக்" என்று அவனுடைய தாயார் அவனை அடிக்கடி தட்டிக்

கொடுத்து மெச்சி யிருக்கிருள். தனது பண்ணை யில் கிடைத்திருந்த இயந்திரங்களைப் பற்றிய அறிவு அவனை மேலும் ஊக்க மூட்டியது.

இவ்வளவு பெரிய டெட்ராய்ட் நகரில் உழைக்க மாத்திரம் தயாராக இருந்தால், பதினறு வயதுப் பையனுல் வாழ்க்கையை நடத்த முடியும் என்று ஹென்றி எண்ணினன். சாமான்களைப் பண்ண வேண்டும், அவற்றை ஓட வைக்க வேண்டும், அவற்றுக்கு வேண்டிய யந்திரக் கருவிகள் பண்ண வேண்டும் என்றெல்லாம் தனக்கு இருந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள நகரம் தான் சிறந்தது என்று கருதினன்.

ஹென்றி வேகமாக நடந்தான். வழியிலே அவன் கண்ட மரங்களும், செடிகளும், கொடிகளும் பனி படர்ந்து காணப்பட்டன.

ரூஜ் நதிக்கரையில் செய்த பழைய காரியங்களைப் பற்றியும், புது யந்திரங்களோடு தனக்கு ஏற்படப் போகும் அனுபவங்களைப் பற்றியும் நினைத்துக் கொண்டே ஹென்றி நடந்து சென்று கொண்டிருந்தான். தாம் ஒரு சிறு பையனுக அயர்லாந்திலிருந்து வந்து சேர்ந்ததற்குப் பிறகு நாடு எவ்வளவோ மாறி விட்டது என்பதை ஏன் தன் தகப்பனுர் உணரமாட்டேன என்கிருர் என்று நினைத்தான். விவசாயம் எத்தனை முக்கியமோ அத்தனை முக்கியமாகத்தான் மாறிக் கொண்டிருந்தது சாமான்கள் பண்ணுவதும். ஒரு நல்ல விவசாயி எப்படி தேசத்துக்கு அவசியமோ, அதே அவசியம் தான் ஒரு நல்ல மெக்கானிக்கும். ஜனங்

கள் இப்பொழுது கிராமங்களை விட்டு நகரங்களை நோக்கித் தான் போய்க் கொண்டிருந்தார்கள். 1810ல் டெட்ராயிட்டின் ஜனத்தொகை 1650 என்று வாத்தியார் சொல்லி யிருந்தார். இப் பொழுது டெட்ராயிட்டின் ஜனத்தொகை 110,000 ஆக உயர்ந்து விட்டது.

தூரத்திலே புகைப் போக்கிகளும், கோவில் உச்சிகளும் தெரிந்தன. எத்தனையோ விஷயங்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு வந்ததில், ஒன்பது மைல் தூரம் போனது தெரிய வில்லை. ஹென்றி தன் முகத்தில் அரும்பி யிருந்த வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டான். மேலே ஆடை யில் படிந்திருந்த தூசியைக் கைக்குட்டையினுல் தட்டி விட்டு விட்டு, ஜோடுகளைப் பள, பள வென்று துடைத்து விட்டுக் கொண்டான். புதிய வாழ்க் கைக்கு ஹென்றி தயாராகி விட்டான்.

டெட்ராய்ட் நதிக்கரையில் நின்று வேடிக்கை பார்க்க வேண்டும் என்று ஹென்றிக்கு ஆசையாக இருந்தது. தானிய மூட்டைகள், மரப் பலகைகள், மீன், மாவு, தோல் முதலிய பல பொருள்களைக் கப்பல்களில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். அழுக் குப் படிந்த சிறுவர்கள், பல மொழிகளில் பேசிக் கொண்டு ஓடி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

டெட்ராய்ட் நகரமே ஒரு பெரிய கருமான் பட் டறை போல் ஹென்றிக்குத் தோன்றிற்று. அடுப்பு கள், இசைக் கருவிகள், மெழுகு வத்திகள் முதலியன பண்ணுவதற்கென்று அநேக தொழிற்சாலைகள் இருந்தன. முக்கியமான தெருக்கள் மரப் பலகை

களைக் கொண்டு பரப்பப் பட்டிருந்தன. மற்ற தெருக்களோ பருவ நிலையைப் பொறுத்து, புழுதி யாகவோ, சேருகவோ இருக்கும். பாதசாரிகள் நடப்பதற்கென்று பலகையாலான மேடைகள் இரண்டு பக்கமும் இருந்தன.

தெருக்களில் குதிரை வண்டிகளும், சைக்கிள் களும், ஒன்றுக்கு மேற்பட்ட குதிரைகள் இழுத்துச் செல்லும் பார வண்டிகளும் போய்க் கொண்டிருந் தன. குதிரை வண்டிகளின் மணி சப்தம் காதைத் துளைத்தது. அங்கு இருந்த நான்கு மாடிக் கட்ட டங்கள் ஆகாயத்தை இடித்துக் கொண்டு நிற்பது போல் ஹென்றிக்குப் பட்டது.

ஒரு கட்டடத்தின் முன்னுல், ''ஜேம்ஸ் ப்ளவர் அண்டு கம்பெனி, யந்திரத் தயாரிப்பாளர்கள்'' என்று விளம்பரப் பலகை போட்டிருந்தது. இது மிகவும் நல்ல கம்பெனி யென்றும், இவர்கள் நீராவி என்ஜின்கள் தயாரித்ததோடு, யந்திர வேலைகளும் செய்தார்கள் என்றும் ஹென்றி கேள்விப் பட்டிருந் தான். யந்திர வேலை கற்றுக் கொள்வதற்கு இது மிகவும் நல்ல இடம் என்றும் அவனுக்குத் தெரியும்.

மிகவும் நம்பிக்கையோடு அவன் இந்தக் கம்பெனியின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். தன்னைப் போன்ற அனுபவம் இல் லாத பையன்கள் தங்களுக்குத் தேவையில்லை யென்று அவர்கள் சொல்லுவார்கள் என்று அவன் நினைத்துப் பார்க்க வில்லை. வேலை கற்றுக் கொள்ள தனக்கு எத்தனை ஆசை, கிடைத்த வேலையை தான்

எத்தனை நன்ருகச் செய்வோம் என்பதைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தான். அவன் விரும்பிய அத்தனை பொருள்களும் உள்ளே இருந்தன. அவை யாவன, சப்தம், கொழுப்பு, யந்திர பாகங்கள் முதலியன.

அறையின் ஒரு மூலையில் ஒரு மேஜையின் முன் ஒரு ஆள் உட்கார்ந்திருந்தார். அவர் தலையை நிமிர்த்திப் பார்க்கும் வரை, ஹென்றி எதிரே நின்று கொண்டிருந்தான். அவர் தலையை நிமிர்த்தியதும், "நான் வேலை செய்ய வந்திருக்கிறேன்" என்ருன் ஹென்றி.

"உனக்கு என்ன வேலை தெரியும்?" என்று அந்த ஆள் கேட்டார்.

"யந்திர சம்பந்தமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய எல்லா விஷயங்களும் கற்றுக் கொள்வ தற்காக வந்திருக்கிறேன்" என்ருன்.

"இதுவரையில் என்ன செய்திருக்கிருய்?"

"பண்ணை யந்திரங்களைப் பழுது பார்த்திருக் கிறேன். யந்திரக் கருவிகளைக் கையாளத். தெரியும். கடியாரம் பழுது பார்த்திருக்கிறேன். நீராவி யந்திரம் எப்படி இயங்குகிறது என்று தெரியும்."

"ஆக உனக்கு வேலை வேண்டும்?"

"எனக்கு வேலை வேண்டும் என்பது மட்டு மல்ல, நான் வேலை செய்ய ஆசைப்படுகிறேன்."

பையனின் தைரியத்தையும், தன்னம்பிக்கை யையும், கண்டு அந்த ஆள் சந்தோஷப்பட்டு,

"நாளைக் காலை ஏழு மணிக்கு வந்து விடு. உனக்கு வாரம் இரண்டரை டாலர் சம்பளம்" என்ருர்.

ஹென்றிக்கு ஏக உற்சாகம்! இருந்தாலும், "இன்றைக்கே வேலைக்கு வா" என்று சொல்லாமல், "நாளைக்கு வா" என்று சொல்லி விட்டாரே என்று சற்று வருத்தம்.

குடியிருக்க ஒரு இடம் கண்டு பிடித்தாக வேண்டுமே? ஏதாவது பத்திரிகையை வாங்கிப் பார்த்தால் அதில் குடியிருக்கும் இடங்களைப் பற்றி விளம்பரங்கள் ஏதாவது இருக்கும் என்று நினைத்தான். "ப்ரீ பிரஸ், ப்ரீ பிரஸ், பிரஸிடென்ட் ஹே யின் பிரசங்கத்தைப் படியுங்கள்" என்று கத்திக் கொண்டு தெருவில் ஒரு பையன் ஓடிக் கொண்டிருந்தான். ஹென்றி அவனிடமிருந்து ஒரு பத்திரிகையை வாங்கிப் படித்தான். நாட்டின் நன்மைக்காக என்னென்ன சீர்திருத்தங்கள் கொண்டு வரவேண்டும் என்று 'ஹே' தம் பிரசங்கத்தில் சொல்லியிருந்தார். பத்திரிகையைத் திருப்பிக் கடைசி பக்கத்தைப் பார்த்ததில் வாடகைக்கு விடப் படும் இடங்கள் போடப்பட்டிருந்தன. வாரம் இரண்டரை டாலருக்குள் தனக்குச் சாப்பாடும், இருக்க இடமும் எந்த இடத்தில் கிடைக்கும் என்று ஒவ்வொரு வீடாக விசாரித்தான். ஆனால் அந்த இடங்கள் இருட்டாயும், அசுத்தமாகவும் இருந்தன. குடி இருக்கும் இடம் எவ்வளவு சுத்தமாக இருக்க வேண்டும் என்று அவன் தாயார் அவனுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தாளோ, அவ்வளவு சுத்தம் அந்த இடங்களில் காணப்படவில்லை.

ஆகவே அதிக வாடகை கொடுத்து, நல்ல இடத்தில் இருந்து கொண்டு, அந்த அதிக வாடகையைச் சம்பாதிப்பதற்காக, இன்னொரு இரண்டாவது வேலை சம்பாதிக்க வேண்டியது தான் என்று தீர்மானித்தான். வீட்டை விட்டுப் புறப்பட்ட போது, அவனிடம் ஐந்து டாலருக்கும் குறைவாகவே இருந்தது. அதில் மூன்றரை டாலரை ஒரு நல்ல இடத்திற்கு வாடகையாகக் கொடுத்து விட்டான். ஆகவே வாரம் ஒரு டாலர் அதிகப்படி சம்பாதித்தாக வேண்டும்!

வழியில் ஒரு கடியாரக் கடையைப் பார்த்ததாக ஞாபகம் வரவே, உடனே அதைத் தேடிக் கொண்டு போனான். தினம் சாயந்திரம் ஏழு மணியிலிருந்து, ராத்திரி பதினொரு மணி வரை வேலை செய்தால் வாரம் இரண்டு டாலர் கொடுப்பதாக அந்தக் கடைக்காரன் சொன்னான். கடியார வேலையில் நான்கு மணி நேர வேலைக்கு இரண்டு டாலர் சம்பளம் கிடைக்கையில், யந்திரக் கம்பெனியில், பதினொரு மணி நேர வேலைக்கு இரண்டரை டாலர் தானே கொடுக்கிறார்கள் என்பதைப் பற்றி ஹென்றி கவலைப் படவில்லை. எப்படியாவது யந்திரங்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆசை அவனுக்கு அதிகம் இருந்தது.

இதற்கிடையில், வீட்டில், ராத்திரி சாப்பாட்டுக்கும் ஹென்றி வராததைக் கண்டு மார்கரெட் திகிலடைந்தாள். தன் தம்பிக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டு விட்டதோ என்று கவலைப் பட்டாள்.

கூலியாட்களும், மிஸ்டர் போர்டும் வண்டியைப் பூட்டிக் கொண்டு ஆளுக்கு ஒரு பக்கம் அவனைத் தேடிக்கொண்டு புறப்பட்டார்கள்.

அன்று அவன் பள்ளிக்கூடத்திற்குப் போகவில்லையென்று தெரிந்து கொண்டார்கள். அவன் டெட்ராய்ட்டை நோக்கி நடந்து போனதாக யாரோ சொல்லவே, மிஸ்டர் போர்ட், ''எல்லாம் எங்கேயாவது ஜாக்கிரதையாகத்தான் இருப்பான். தன் புத்தியீனத்தை அறிந்ததும் திரும்பி வருவான்'' என்று சொல்லிக் கொண்டே வீடு திரும்பி விட்டார்.

இரண்டு நாளாகியும் ஹென்றியைப் பற்றித் தகவல் இல்லாமல் போகவே, மிஸ்டர் போர்டுக்குக் கவலையாகப் போய் விட்டது. ஆகவே, தம் குதிரையின் மேல் ஏறிக் கொண்டு டெட்ராய்ட்டை நோக்கிப் போனார்.

ஹென்றியைத் தேடிக் கண்டு பிடிப்பது கஷ்டமாக இருக்கவில்லை. யந்திரத் தொழிற்சாலைகளில் விசாரிக்க வேண்டியது தானே? பிளவர் கம்பெனியில் ஹென்றியைப் பார்த்ததும், போர்மேனிடம் உத்தரவு பெற்று, ஹென்றியை வெளியே அழைத்தார்.

''ஹென்றி! பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் இது என்ன காரியம்?''

''என்னால் பள்ளிக்கூடத்திற்குப் போக முடியாது அப்பா! பள்ளிக்கூடத்தினால் என்ன அப்பா பிரயோஜனம்? படிக்கிறது, எழுதுகிறது, கணக்

குப் போடுகிறது, இதைத் தவிர வேறு என்ன இருக்கிறது? எனக்கு என்ஜின்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. இது விஷயமாக எனக்கு என்ன பைத்தியம் தெரியுமா, அப்பா?''

''இதோ பார், ஹென்றி! இந்தப் பித்துக்குளி தனத்தை விட்டு விடு. இன்னும் கொஞ்ச நாள் போனால் ஜனங்கள் என்ஜின்களை மறந்து விடுவார்கள். என்றைக்கும் நிலைத்து நிற்கப் போவது விவசாயம் தான்.''

''காலம் மாறிக் கொண்டிருக்கிறது அப்பா. இப்பொழுது அதிகப்படியான சாமான்கள் யந்திரங்களால் தான் செய்யப்படுகின்றன; நன்ருகவும் செய்யப்படுகின்றன'' என்ருன் ஹென்றி.

''இந்தப் பேத்தலை எல்லாம் நம்பாதே, ஹென்றி! ஸி ஹென்ரிக்ஸ் நாற்பது வருஷங்களாகச் செய்து கொண்டிருக்கிருரே, அதை விட நல்ல சேணம், யந்திரத்தால் எப்படிச் செய்ய முடியும்? ஜெட் மார்ட்டினை எடுத்துக் கொள். அவர் பண்ணுகிருப் போல் அத்தனை நல்ல ஜோடுகள் எந்த யந்திரத்தால் பண்ண முடியும்? எல்லாம் இந்த யந்திரங்களைக் கொஞ்ச நாளைக்கு வேண்டுமானல் உபயோகப்படுத்தலாம். அதற்குப் பிறகு அவை உடைந்து போய்விடும். அவற்றை நம்ப முடியாது''

ஹென்றி தலையை ஆட்டிச் சிரித்தான். ''இவற்றைப் பழுது பார்க்கவும், இவற்றை விடச் சிறந்த

யந்திரங்கள் செய்யவும் ஜனங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்ருன்,

இந்தப் பிடிவாதக்காரப் பையனை என்ன பண்ணுவது என்று தெரியாமல் மிஸ்டர் போர்ட் தம் ஜேபியிலிருந்த நாணயங்களைக் குலுக்கினுர். அவனுக்கு நாலு அறை கொடுத்து, காதைப் பிடித்து வீட்டுக்கு இழுத்துக் கொண்டு போக வேண்டும் என்றுதான் அவருக்குப் பட்டது. ஆனல் பிடிவாதப் படுத்தி அழைத்துக் கொண்டு வந்தால் மீண்டும் ஓடிப் போய்விடுவான். ஆகவே, ஹென்றியைப் பார்த்து, ''சரி, இந்தப் பைத்தியம் தீரும் வரை இங்கிருந்து விட்டு, பின்னல் பண்ணைக்கு வந்து சேர்'' என்று சொல்லி விட்டு, பிள்ளையின் கைகளைப் பிடித்துக் குலுக்கி விட்டு வீடு திரும்பினுர்.

ஒவ்வொரு நாள் காலையிலும் ஹென்றி தொழிற்சாலைக்குப் போய் விடுவான். வேலைக்காக ஆட்கள் வருவது, யந்திரத்தை இயக்குவது, வேலை விஷயமாக அவர்கள் தெரிந்து கொண்டிருந்த விஷயங்கள் எல்லாமே ஹென்றிக்கு ஆச்சரியத்தை அளித்தன.

உல்லாசமாகப் பறக்கும் பறவையைப் போல் வெகு ஆனந்தமாக இருந்தான். இருபத்து நான்கு மணி நேரமும் அவனுக்குச் சரியாக வேலை இருந்தது. காலையில் ஆறு மணிக்கு எழுந்தானுனல், ஏழிலிருந்து மாலை ஆறு மணி வரையில் யந்திரசாலையில் வேலை செய்வான். பிறகு ராத்திரி ஏழு மணியிலிருந்து, பதினெரு மணி வரை, கண்ணில்

ஒரு பூதக் கண்ணுடியை மாட்டிக் கொண்டு, கடியார ரிப்பேர் செய்வான். பிறகு தன் கையில் இருக்கும் மிச்சப் பணத்தைக் கொண்டு வாங்கிய தொழில் பத்திரிகைகளைப் படித்துப் பார்த்து விட்டுக் கொஞ்ச நேரத்திற்குத் தூங்கப் போவான். இவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்தும், களைப் படையாமல், காலையில் வெகு சுறுசுறுப்பாக எழுந்திருப்பான்.

யந்திரத்தைக் கண்டால் ஒரு ஆத்ம சிநேகிதனைக் கண்டது போலிருக்கும் அவனுக்கு. அதை அன்பாகக் கவனித்து, சுத்தப் படுத்தி, பள பளவென்று தேய்ப்பான். அது இயங்க ஆரம்பித்ததும் வெகு ஆசையோடு பார்ப்பான். சாயந்திரம் யந்திரசாலையை விடும்போது வெகு திருப்தியுடன் விடுவான். ஒரு நாள் சம்பளம் சம்பாதித்து விட்டோம் என்ற காரணத்தினுல் அல்ல, எத்தனையோ விஷயங்களைக் கற்றுக் கொண்டு விட்டோம் என்பதற்காகத்தான்.

எந்தப் புதிய வேலையைக் கண்டாலும், அது இவனுக்கு ஒரு சவால் போல் தோன்றும். அதைப் பூரணமாகத் தெரிந்து கொண்ட பிறகு தான் மறு காரியங்களைப் பார்ப்பான். பண்ணையில் இருந்த போது, வேலையைச் சுலபமாகச் செய்வது எப்படி என்று யோசனை பண்ணி யிருக்கிருன். அதைப் போலவே, இங்கும் சிந்தனை செய்ய ஆரம்பித்தான்.

சீக்கிரமே அந்த யந்திரச்சாலையில் என்னென்ன தவறுகள் செய்கிருர்கள் என்று ஹென்றி

கண்டு பிடித்தான். எந்த ஒரு வேலையையும் ஒரு தடவை செய்ததைப் போல், அவர்கள் இரண்டாம் தடவை செய்வதில்லை. இதனுல் காலமும், பொருளும் வீணுகின. சிலிண்டருக்குப் பொருத்தமாயில்லை என்று ஒரு பிஸ்டனைத் திரும்பவும் இரண்டாம் தடவையாகச் செய்வார்கள். ஒரு பாகத்தை இன்னொரு பாகத்தோடு பொருத்துவதற்காக, அதை ஒரு தடவை வார்ப்படம் பண்ணி, பிறகு இரண்டாம் தடவை வார்ப்படம் பண்ணி, பிறகு அரம் கொண்டு ராவுவார்கள். சரியான நிர்வாகம் இல்லாததால், ஆர்டர்களை முடிப்பது தவக்கமடைந்தது. ஆர்டர்களை முடித்தாக வேண்டுமே என்று ஹென்றியை அடிக்கடி ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலைக்கு மாற்றுவார்கள். இந்தக் கச்சா, பிச்சா வேலை ஹென்றிக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும், வேலை கற்றுக் கொள்ள வந்திருக்கிறேமே யொழிய, நிர்வாகத்தை மாற்றுவதற்காக அல்ல என்று நினைத்துக் கொண்டு பேசாமல் இருந்தான்.

ஹென்றியின் வேலை கம்பெனிக்காரர்களுக்குத் திருப்தியாக இருந்ததால் அவன் சம்பளத்தை மூன்று டாலராக உயர்த்திஞர்கள். இருந்தும் அங்கு கற்றுக் கொள்ள வேண்டியதை யெல்லாம் கற்றுக் கொண்டானதும், ஹென்றிக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. ஆகவே, ஒன்பது மாதத்திற்குப் பிறகு அந்த வேலையை விட்டு விட்டு, 'ட்ரைடாக் என்ஜின் கம்பெனியில்' அரை டாலர் குறைந்த சம்பளத்தில் அமர்ந்தான்.

டெட்ராய்ட்டிலேயே மிகப் பெரிதான இந்தக் கம்பெனி, கப்பலுக்கு வேண்டிய என்ஜின்கள் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தது. இத்தகைய என்ஜின்கள்தான் 1860-ல் இருந்து 1890 வரை மிகப் பிரசித்தமாக இருந்தன. இன்றும் சாதாரண வேகத்தில் செல்லும் கப்பல்களுக்குப் பொருத்தப் படுகின்றன.

இதில் ஒரு நீள ஷாப்டின் ஒரு பக்கம் கொடுக் கப்படும் விசை இன்னொரு பக்கமாக வெளி வரு கிறது. சிலிண்டரில் ஒரு பிஸ்டன் வால்வ் இருப்ப தால், அதிக நீராவி அழுக்கத்தில்கூட இது நன்கு வேலை செய்கிறது.

எரி பொருளும், தண்ணீரும் மிதமாகச் செல வழிய வேண்டும் என்பதை உத்தேசித்து, கப்பல் என்ஜின்களில், பெரும்பாலும், நீராவியை வீண் படுத்தாமல், அதைக் குளிரச் செய்து மீண்டும் பாய்லருக்கு அனுப்புவது வழக்கம். இதனால் காற் றடிக்கும் பம்புகளும் சரி, குளிர் சாதனங்களும் சரி, மிகத் திறமை வாய்ந்தனவாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தானே, நீராவியின் முழு சக்தி யையும் என்ஜின் பயன் படுத்த முடியும்?

புது யந்திரசாலையில் துடுக்குள்ள வாலிபரின் கோஷ்டி ஒன்று இருந்தது. அவர்கள் ஹென்றி யையும் தங்களோடு சேர்த்துக் கொண்டார்கள். அவர்களோடு ஹென்றி வெகு ஆனந்தமாகக் காலம் கழித்தான். எல்லாரும் சேர்ந்து விளையாடுவார் கள், குறும்புச் சேஷ்டைகள் செய்வார்கள், குஸ்தி பழகுவார்கள், குத்துச் சண்டை போடுவார்கள்,

தெருவில் உலாவிக்கொண்டே குதிரை வண்டிகள் விரைந்து செல்வதை வேடிக்கை பார்ப்பார்கள். சில பையன்கள் குடிபானங்களும், சூதாட்டமும் உள்ள சலூனுக்குள் நுழைவார்கள். ஆனால் இத்தகைய காரியங்களில் பணத்தைச் செலவழிப்பது தவறு என்று ஹென்றி இந்த இடங்களுக்கு அவர்களோடு போகமாட்டான்.

இந்தப் பையன்களும் ஹென்றியைப் போல் கடுமையாக உழைப்பவர்கள்தான். இருந்தாலும் அவர்கள் உழைத்ததெல்லாம், நன்கு சம்பாதித்து நன்கு செலவழிப்பதற்காகத்தான். அவர்களுடைய பயிற்சி காலம் முடிந்ததும், அவர்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கும், பிறகு கலியாணம் பண்ணிக் கொண்டு குடித்தனம் பண்ணுவார்கள். இப்பொழுது உள்ளதை விட இன்னும் நல்ல யந்திரங்கள் செய்ய முடியும் என்று அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை. இருக்கிறதைக் கொண்டே அவர்கள் திருப்தி அடைந்தார்கள்.

டெட்ராயட் வாழ்க்கை ஹென்றிக்கு வெகு உற்சாகமாக இருந்தது. ஒரு நாள் வேல்ஸ் இளவரசர் அந்த ஊருக்கு வந்து ரஸ்ஸல் ஹௌஸில் தங்கினார். ஒரு நாள் ஜெனரல் கிரான்ட் வந்து, போட்டோ மாக் சேனையின் விழாவில் கலந்து கொண்டார். மூன்று வருஷங்களுக்கு முன்னர் அலெக்ஸாண்டர் பெல் அந்த நகரத்துக்கு வந்துள்ளார். இப்பொழுது சில ஜனங்கள் டெலிபோன் என்று சொல்லப்படும் ஒரு புதுவிதக் கருவி மூலம் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள். முந்

நூறு பேர் போன் வைத்துக் கொண்டிருந்த இந்த இடத்தில் ஒரு டெலிபோன் காரியாலயம் இருந்தது.

ஹென்றியின் சம்பளம் ஐந்து டாலராக உயர்ந்து விட்டதால், முன்னைப் போல் அவ்வளவு கடினமாக வேலை செய்ய் வேண்டியது அவசிய மில்லை யென்று தீர்மானித்து, கடிகார வேலையை விட்டு விட்டான். அப்படி விடுவதற்கு முன்னர் மூன்று டாலர் கொடுத்து ஒரு கடியாரம் வாங்கி னான்.

தன் அறைக்குத் திரும்பியதும் கடியாரத்தை பாகம், பாகமாகப் பிரித்து, அவற்றை மேஜையில் பரப்பினான். மிகவும் மலிவான உலோகத்தைக் கொண்டு அந்த பாகங்கள் செய்யப்பட்டிருந்தன. இதற்கு இத்தனை விலை எதற்காக என்பது அவனுக் குப் புரியவில்லை. ஒன்று, கடிய்ாரம் தயாரிப்பவன் கொள்ளை லாபம் அடித்துக் கொண்டிருக்க வேண் டும், அல்லது தயாரிப்பில் ஏதாவது வீண் விரயம் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

ஒரு நாள் அவன் கம்பெனி நண்பர்கள் அவனது அறையில் கூடி யிருந்தபோது, ஹென்றி தன் கடி யாரத்தை அவர்களிடம் காண்பித்து, மீண்டும் பாகம், பாகமாக அதைப் பிரித்து மேஜையில் வைத்தான்.

''ஏண்டா! நல்ல கடிய்ாரத்தை நாசமாக்கு கிறாய்? இனி அதைக் குப்பைத் தொட்டியில் எறிய வேண்டியதுதான்'' என்றான் ஒரு நண்பன்.

"அதைத் திரும்பவும் முன் போல் போடுவது கஷ்டமான வேலையல்ல" என்று ஹென்றி சொல்லி விட்டு "ஏன் நாம் எல்லாரும் சேர்ந்து ஒரு கடியார தொழிற்சாலை ஆரம்பித்தால் என்ன?" என்று கேட்டான்.

"கடியாரத் தொழிற்சாலையா? திடீரென்று உனக்கு இந்த யோசனை எப்படி வந்தது?" என்று பையன்கள் கேட்டார்கள்.

"இந்த கடியாரத்திற்கு நான் மூன்று டாலர் கொடுத்தேன். ஒன்றைப் போல் ஒன்று இருக்கும் படி நாம் ஆயிரக்கணக்கில் பாகங்களை ஒரே அச்சில் செய்தால், பணத்தையும், தொழிலாளிகளின் சக்தியையும் விரயம் செய்யாமல் கடியாரங்கள் செய்யலாம். அப்பொழுது ஒரு கடியாரம் அரை டாலர் தான் ஆகும். எல்லாருமே கடியாரம் வைத்துக் கொள்ளலாம். எல்லாருக்குமே கடியாரங்கள் வேண்டியது தானே?" என்றான் ஹென்றி.

எல்லாப் பையன்களும் பார்க்கும்படியாக ஹென்றி மலிவான உலோகத்தினால் சுலபமாக செய்யப்பட்டிருந்த கடியாரத்தின் பாகங்களை மேஜை மீது பரப்பி வைத்தான்.

"தொழிலாளிகளின் சக்தியை விரயப் படுத்தாமல் இருக்கலாம் என்று சொன்னாயே, அதற்கு என்ன அர்த்தம்?" என்று ஒரு செந்தலைப் பையன் கேட்டான்.

"தொழிலாளிகளுக்கு நல்ல யந்திரங்களாகக் கொடுத்து, அவர்கள் அதிகப்படி சிரமப்படாமல்

பார்த்துக் கொள்ளுவதுதான். ஏன் நம் தொழிற் சாலையையே எடுத்துக் கொள்ளேன்! ஒருவரை யொருவர் மோதிக் கொண்டு யந்திரக் கருவிகளைத் தேடுவதில் தானே நமக்குப் பாதி நேரம் போகிறது?''

''நீ சொல்வது சரிதான். இன்னும் சிறந்த முறையில் வேலை செய்ய முடியும் என்பதை அவர்கள் எண்ணியே பார்க்கவில்லை'' என்றார்கள் பையன்கள்.

ஹென்றி ஒரு காகிதத்தை எடுத்து ஏதோ கணக்குப் போட ஆரம்பித்தான். பையன்கள் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

''ஒரு நல்ல கடியாரம் நாம் முப்பத்தேழு சென்டுக்குச் செய்து, ஐம்பது சென்டுக்கு விற்கலாம். ஒரு நாளைக்கு, இரண்டாயிரம் கடியாரங்கள் செய்ய முடியும். அதாவது ஒரு நாளைக்கு இரு நூற்று அறுபது டாலர்கள் லாபம் கிடைக்கும்'' என்றான் ஹென்றி.

எல்லாரும் சரி யென்றார்கள். ஆனால் செந்தலையன், ''கடியாரத்தை அரை டாலருக்கு விற்பது பைத்தியக்காரத்தனம். ஏன் இரண்டு டாலர் வீதம் விற்று நிறைய லாபம் அடித்தால் என்ன?'' என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் ஹென்றியின் முகம் சிவந்தது. அவன் கோபத்தோடு பதில் சொன்னான். ''நம் நாட்டிற்கு வேண்டியது இத்தகைய வியா

பாரம் அல்ல. நாம் பிறருக்குக் கொடுக்கும் சேவை என்ன என்பதைக் கவனிக்காமல், கிடைக்கப் போகும் லாபம் என்ன என்று மட்டும் யோசிக்கும் எந்த தொழிலோடும் நான் சேர மாட்டேன். நான் தொழில் ஆரம்பித்தால் ஜனங்களுக்குத் தேவையான பொருள்களையே உற்பத்தி செய்வேன். நல்ல பொருள்களாக உபயோகப் படுத்தி, எவ்வளவு சிக்கனமாகத் தயாரிக்க முடியுமோ, எவ்வளவு அதிக அளவில் தயாரிக்க முடியுமோ, அப்படித் தயாரித்து, எவ்வளவு மலிவாக விற்க முடியுமோ, அத்தனை மலிவாக விற்பேன். அப்பொழுது நேர் முறையில் பணம் வந்து சேரும்'' என்றான்.

அதிகப் பணம் சம்பாதிக்க சந்தர்ப்பம் ஏற்படும் என்று எண்ணி எல்லோரும் செந்தலையின் சார்பில் சேர்ந்து கொண்டனர். ஹென்றி விலை குறைவாக இருந்தால் விற்பனை அதிகமாகும் என்றும், உயர்ந்த விலை விற்பனையைக் குறைக்கும் என்றும் வாதித்தான்.

''நம்முடைய வேலையை முட்டாள்தனமாக செய்து கொண்டிருப்பதை விட, உன்னுடைய யோசனையை செந்தலையன் கருத்துப்படி பார்த்தால் நல்ல அதிர்ஷ்டம் நமக்குக் காத்துக் கொண்டிருக்கிறது'' என்று ஜான் அழுத்தமாகச் சொன்னான்.

''உங்கள் உயிர் மீது ஆணையாகச் சொல்லுகிறேன், அது மட்டும் முடியாது. பணத்தை விட சேவையே முக்கியம்'' என்று திட்டமாக ஹென்றி கூறினான். ''பணத்தின் மீதுள்ள பேராசை காரண

மாக நீங்கள் வெகு காலம் வியாபாரம் நடத்த முடியாது''

''நீ ஒரு பைத்தியம்டா'' என்ருன் ஜான். ''நமக்கு பணம் வந்து கொண்டிருக்கும் வரையில், தொண்டு செய்வதைப் பற்றி நாம் கவலைப் படுவானேன்? கடியாரத்துக்கு இரண்டு டாலர் என்பதும் மலிவான விலை தானே?''

கடியாரத்தின் பாகங்களை ஒன்ருகச் சேர்த்து விட்டு, முடியாது என்னும் பாவனையில் ஹென்றி தலையை அசைத்தான். ''சாமான் வாங்குகிறவனிடம் நாம் நியாயமாக நடந்து கொள்ளாவிட்டால் எனக்குத் தூக்கமே வராது'' என்ருன்.

''போடா! உன்னைப் போன்ற அசடை நான் பார்த்ததில்லை யடா! இந்த ரீதியில் நீ ஒரு பணமும் சேர்க்க முடியாது'' என்ருன் ஜான்.

ஹென்றி சிரித்தான். தன்னை அவர்கள் பழித்ததைப் பற்றி அவன் கவலைப்பட வில்லை. அதற்காகத் தன் அபிப்பிராயங்களையும் அவன் மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. ''நீங்கள் என்ன வேண்டுமானுலும் சிரியுங்கள். ஆனுல் ஒரு நாள் ஆயிரக் கணக்கில் சாமான்கள் தயாரிக்கும் தொழிற் சாலை ஒன்றை நான் ஆரம்பிக்கத் தான் போகிறேன். சொல்ப சம்பள முடையவர்கள், நிறைய சாமான்கள் வாங்க வேண்டுமானுல், அதிகப்படியான அளவில் உற்பத்தி செய்தால் தான் முடியும்'' என்ருன் ஹென்றி.

இப்படிப் பேசிக் கொண்டே கடியாரத்தைச் சீர் பண்ணினன்.

ஜான் கடியாரத்தைக் காதில் வைத்து, அது டிக், டிக் என்று அடிப்பதைப் பார்த்து விட்டு, "ஹென்றி! உனக்கு இத்தனை மூளை இருக்கிறது. ஆனல் பித்துக்குளியாக இருக்கிருயே" என்ருன்.

நண்பர்கள் போன பிறகு ஹென்றி தன்னுடைய கடியாரத் தொழிற்சாலையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருந்தான். அதை ஆரம்பித்து வைப்பதற்குத் தன்னிடம் பணம் இருந்தால், எத்தனை நன்ருக இருக்கும் என்று எண்ணினன். அதிகப்படியான கடியாரங்கள் தயாரித்து, மலிவாக விற்று, லாபமும் பண்ண முடியும் என்று எல்லாருக்கும் காட்ட வேண்டும் என்று நினைத்தான்.

# அத்தியாயம் 7.

ஒரு நாள் ராத்திரி ஹென்றி வெகு நேரம் கழித்துத் தன் அறைக்குத் திரும்பிய போது மேஜைமேல் ஒரு கடிதத்தைப் பார்த்தான். அது ஒரு நீளமான கடிதம். அதைத் திரும்பத் திரும்பப் படித்தான். பிறகு கட்டிலில் உட்கார்ந்து வெகு நேரம் யோசனையில் ஆழ்ந்தான்.

ஹென்றி யந்திரங்கள் சம்பந்தமான விஷயங்களை வெகு சீக்கிரமே கற்றுக் கொண்டு விட்டான். மூன்று வருஷம் ஆகும் பயிற்சி காலத்தை அதற்கு முன்னமேயே துரிதமாக முடித்து விட்டான். இப்பொழுது அவன் வெஸ்டிங் ஹவுஸ் போர்ட்டபிள் நீராவி என்ஜின்களுக்கு "ரஸ்தா நிபுணர்." தான் படித்ததை யெல்லாம் செய்து பார்ப்பதற்கு இந்த வேலை வசதி யளித்தது. என்ஜின்களை நிறுவுவது, பழுது பார்ப்பது, அவற்றை ஓட்ட மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது, ஆகிய எல்லாக் காரியங்களையும் செய்தான். கெட்டுப்போன என்ஜின்களைக் கண்டால் ஹென்றிக்கு மிகவும் ஆசை. அவற்றை ஒரு நொடியில் பழுது பார்த்து ஓட வைத்து விடுவான். ஒவ்வொரு என்ஜினையும்

பழுது பார்க்கும் போதும் ஒரு புது விஷயம் அறிந்து கொள்வான்.

கடிதம் அவனுடைய தமக்கை மார்கரெட்டிடமிருந்து வந்திருந்தது. பண்ணையில் வேலை சரியாக நடக்க வில்லை யென்றும், ஆகவே, அவனைத் திரும்பி வரும்படியும் எழுதி யிருந்தாள். அவனுடைய தம்பிக்கு உடம்பு சரியில்லை யென்றும், தகப்பனருக்கு ஏதோ விபத்து என்றும், மேல் பார்வைக்கு ஆள் இல்லாமல் கூலியாட்கள் வேலை செய்வதில்லை யென்றும் எழுதி யிருந்தாள்.

இந்த சமயம், தான் பண்ணைக்குத் திரும்ப வேண்டியது எத்தனை அவசியம் என்பது ஹென்றிக்குத் தெரிந்ததே. ஆனல் டெட்ராய்ட்டை விட்டுப் போக அவனுக்கு மனதே இல்லை. அவனுடைய தாயார் எப்படி பிறருக்குத் தொண்டு செய்வதிலேயே காலங் கழித்தாள் என்பது அவனுக்கு ஞாபகம் வந்தது. பண்ணைக்குத் திரும்புவதில் ஒரே ஒரு நன்மை இருந்தது. அங்குள்ள பட்டறையில் உட்கார்ந்து என்ஜின் தயார் செய்து பார்க்கலாம்.

ஹென்றி பண்ணைக்குத் திரும்பினன். இவன் திரும்பி வந்ததைப் பார்த்து, இவனுடைய தகப்பனரும், மற்றவர்களும் இவனுக்கிருந்த என்ஜின் பைத்தியம் நீங்கி விட்டது என்று நினைத்தார்கள். ஆனல் பண்ணையிலேயே நிரந்தரமாகத் தங்கும் எண்ணம் ஹென்றிக்கு இல்லை.

வசந்த காலத்தில் டியர்பார்ன் பார்ப்பதற்கு வெகு அழகாக இருந்தது. எங்கு பார்த்தாலும் அழகிய பறவைகளும், பசும் வயல்களும், பூக்களும், மரங்களுமாக, அவன் டெட்ராய்ட்டில் பார்க்காத காட்சிகளாக இருந்தது.

தன்னுடைய பழைய பட்டறையில் நுழைந்து பார்த்து, ஹென்றி புன்முறுவல் பூத்தான். அங்கிருந்த யந்திரக் கருவிகள் குழந்தைகளின் விளையாட்டுச் சாமான்களைப் போல் அவனுக்குப் பட்டது. இப்பொழுது அவற்றிற்குப் பதில் நல்ல நிஜ யந்திரங்கள் செய்ய வேண்டும் என்று அவனுக்குத் தோன்றிற்று.

பழைய கடைசல் யந்திரம், பிடிச்சி ராவி, அடுப்பு, பட்டறைக் கல் இவற்றிற்குப் பதில், புது அடுப்பு, காலினால் இயங்கும் கடைசல் யந்திரம், துளை யந்திரம், நல்ல யந்திரக் கருவிகள் முதலியன பண்ணினான். நல்ல விஷயம் தெரிந்த இருபது வயது யந்திரக்காரன் அல்லவோ, இப்பொழுது பட்டறையின் அதிபராக விளங்கினான்?

நடவு காலங்களிலும், அறுவடை காலங்களிலும் மட்டும் உபயோகப்படுத்துவதற்கு, பண்ணைக் கென்று ஒரு என்ஜினை செய்து விட்டால், குதிரைகளைக் கட்டி வருஷம் முழுவதும் தீனி போட வேண்டியதில்லையென்று ஹென்றி நினைத்தான். நிலத்தை நன்கு உழுவதற்கு ஏரும், குதிரைகளும், இயந்திரக் கலப்பையைப் போல் அத்தனை நல்ல சாதனங்கள் அல்ல என்று ஒரு விவ

சாயியும் ஹென்றியிடம் சொன்னதில்லை. ஆனால் குறைந்த பிரயாசையிலும், காலத்திலும் செய்யக் கூடிய ஒரு காரியத்துக்கு, அதிக காலமும், பிரயாசையும் செலவழிப்பது அசட்டுத்தனம் என்று ஹென்றிக்குப் பட்டது.

தினம் மாலையில் பண்ணை வேலை முடிந்ததும், ஹென்றி தன் பட்டறைக்குப் போய், வேலை செய்யும் நேரங்களில் மட்டும் சாப்பிடும், பண்ணை என்ஜின் ஒன்று செய்வதில் முனைய ஆரம்பித்தான். பழைய அறுவடை யந்திரத்தின் சக்கரங்களை எடுத்துக்கொண்டான். பிளான் வரைந்து, நீராவி என்ஜினுக்காக ஒரு சிலிண்டர் வார்ப்படம் செய்தான். இந்த என்ஜினுக்கு ஒரே ஒரு சிலிண்டர் தான். இதன் குறுக்களவு மூன்று அங்குலம். சிலிண்டருக்குள் ஒரு பிஸ்டனை வைத்து, நீராவி பலத்தினால் அது மேலும் கீழும் இயங்கும்படி செய்தான். தண்ணீரைக் கொதிக்க வைப்பதற்கு விறகு கட்டைகளை உபயோகப்படுத்தினான்.

இந்த என்ஜினை பரீட்சை பண்ணும் தினம் எல்லாருக்கும் ஏக உற்சாகம்! வேலையாட்களும் மார்கரெட்டும், ஹென்றியின் தகப்பனும் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றார்கள். தன்னுடைய என்ஜின் ஒரு முழு வயலையும் குறைந்த நேரத்தில் உழுது விடும் என்று ஹென்றி நிச்சயமாக நம்பினான். பாய்லரை நன்கு கொதிக்கக் கொதிக்கக் காய வைத்தான். தண்ணீர் பொங்க ஆரம்பித்ததும், சிக், சிக், சிக், சிக் என்று பிஸ்டன் மேலும் கீழும் போக ஆரம்பித்தது.

பிறகு பெரிய சக்கரங்கள் மெள்ள உருள ஆரம்பித்தன.

எல்லாரும் கூர்ந்து கவனித்தார்கள். அது நகர ஆரம்பித்தது. எல்லாருக்கும் உற்சாகம் தாங்கவில்லை. அது நாற்பதடி ஓடி நின்று விட்டது. "என்ஜினை தொடர்ந்து ஓட்டப் போதுமான நீராவி உற்பத்தியாகவில்லை" என்று ஹென்றி இதற்குச் சமாதானம் சொன்னான்.

"பிரயோஜனமில்லை. இது உதவாது. நாற்பது அடி தானே ஓடிற்று?" என்றார் மிஸ்டர் போர்ட்.

"ஆனால் அது நாற்பது அடி ஓடிற்றே அப்பா! இது முன்னேற்றம் இல்லையா?" என்று கேட்டான் ஹென்றி. தன் கனவு பொய்த்து விட்டது என்று ஹென்றி ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. இது நாற்பதடி ஓடினதால், எவ்வளவு தூரம் இஷ்டமோ அவ்வளவு தூரம் ஓடக் கூடிய யந்திரம் பண்ண முடியும் என்று ஹென்றி நம்பினான்.

என்ஜின்கள் தயாரிப்பது பற்றி இன்னும் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது என்று தீர்மானித்தான் ஹென்றி. சிறு பையனாக இருந்த பொழுது, தேநீர் கெட்டிலோடு விளையாடினது அவனுக்கு ஞாபகம் வந்தது. நீராவிக்கு உறுதியில்லாத பாய்லர் உபயோகிப்பது ஆபத்து என்பது அவனுக்குத் தெரியும். அதோடு ஒரு சின்ன யந்திரத்தில் என்னமோ ஒரு பெரிய பாய்லரை வைக்க முடியாது. இன்னும் நீராவியிலும் சில

இடைஞ்சல்கள் இருந்தன. பிளவர் கம்பெனி யில் வேலை செய்த போது அவன் ஒரு பத்திரிகை யில் படித்த ஒரு கட்டுரை ஞாபகத்துக்கு வந் தது. இங்கிலாந்திலிருந்து வரவழைத்த இந்தப் பத்திரிகையை, ஒரு தொழிலாளி அவனுக்குக் கடன் கொடுத்திருந்தான். பெட்ரோலினுல் இயங்கிய ஒரு என்ஜினை எப்படி ஆட்டோ என் கிற ஜெர்மானியர் கண்டு பிடித்தார் என்று அதில் எழுதி யிருந்தது. இதில் ஒரே ஒரு பிஸ்டன் தான். பெட்ரோல் புகையை முதலில் அழுத்தி வைத்து பிறகு அதை வெடிக்க வேண்டும். ஒவ் வொரு வெடிக்கும் பிஸ்டன் இரண்டு தடவை மேலே போய், இரண்டு தடவை கீழே வரும். அதா வது சக்தியின் ஒவ்வொரு விசைக்கும் நான்கு சுற்று ஆகும். ''ஒரு ஆட்டோ என்ஜின் பழுது பார்க்கக் கிடைத்தால் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள லாமே'' என்று ஆசைப்பட்டான் ஹென்றி.

# அத்தியாயம் 8.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலே. கோவிலிலிருந்து வீடு திரும்பியதும் மார்கரெட் ஹென்றியைப் பார்த்து, ''ஹென்றி போர்ட்! உன்மேல் எனக்கு ஏகக் கோபம்'' என்ருள்,

''நான் என்ன பண்ணினேன்?''

''நீ நகரத்திலிருந்து திரும்பியதும், ஒரு ஞாயிற்றுக்கிழமை எங்களோடு கோவிலுக்கு வந்தாயா, அன்றிலிருந்து, என் சிநேகிதிகள், அழகாக இருக்கும் என் தம்பியாகிய உன்னைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிருர்கள். நீ என்னடா வென்ருல், அவர்களைக் கவனிக்கவே மாட்டேன் என்கிருயே?''

''அப்பா! இதற்குத்தாஞ இத்தனை கோபம்?'' என்ருன் ஹென்றி. ''பெண்களைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை, கீச்சு, மூச்சு, கீச்சு, மூச் சென்று பேசிக் கொண்டு நிற்கிருர்கள். அவர்கள் பேச்சைவிட பறவைகளின் சப்தம் தான் எனக்குப் பிடித்திருக்கிறது.''

''ஒரு நாள் உனக்குப் பிடித்த பெண்ணைக் பார்க்கப் போகிருய். அன்றைக்குச் சடாரென்று

உன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளப் போகிறாய்! உன்னைப் போன்ற பையன்கள் திடுதிப்பென்று தான் காதல் வலையில் விழுவார்கள்.''

''நீ எத்தனை காதலர்கள் வேண்டுமென்றாலும் வைத்துக் கொள். எனக்குப் பெண்களைக் கண்டால் பிடிப்பதில்லை.''

இவர்கள் பேசுவதைத் தம்முடைய ஆடுகிற நாற்காலியில் உட்கார்ந்து ஆடிக் கொண்டே மிஸ்டர் போர்ட் கேட்டுக் கொண்டிருந்தார்.

மார்கரெட் தன் இடுப்பில் கைகளை ஊன்றிக் கொண்டு, ஹென்றியைப் பார்த்துச் சொன்னாள்.

''இதோ பார்! நான் உபதேசம் செய்ய வில்லை. பண்ணையே அல்லோல கல்லோலமாக இருந்து, அப்பா அதிகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த சமயம் நீ திரும்பி வந்தாய். இப்பொழுது பசுக்கள் நிறைய பால் கொடுக்கின்றன. சோளம் விதைத்தாய் விட்டது. நிலங்கள் அறுவடைக்குத் தயாராக யிருக்கின்றன. பண்ணை யந்திரங்களைப் பழுது பார்த்தாய் விட்டது. கூலியாட்களும் உற்சாகமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி யிருக்க, எங்களைப்போல் நீயும் சந்தோஷமாகக் காலத்தைக் கழிக்காமல், எதற்காகத் தினம் ராத்திரி பட்டறையில் போய் புகுந்து கொள்ளுகிறாய்?''

மூச்சு வாங்குவதற்காக மார்கரெட் தன் நீண்ட பிரசங்கத்தை நிறுத்தின போது, ஹென்றி சிரித்துக் கொண்டே, ''இன்னும் சொல்ல வேண்டி

யது ஏதாவது பாக்கி யிருக்கிறதா ? " என்று கேட்டான்.

" இருக்கிறது. இன்னும் சில வாரங்களில் நான் பெரிய அறுவடை விருந்து ஒன்று கொடுக்கப் போகிறேன். அப்பொழுது எல்லாப் பெண்களிடமும் நீ அன்பாகப் பழக வேண்டும் " என்ருள்.

ஹென்றி பதில் சொல்லாமல் தன் தகப்பனுரைப் பார்த்து விழித்தான்.

அக்டோபர் கடைசியில், நிலத்தில் பயிர் முதிர்ந்திருந்த சமயம், அறுவடை விருந்து நாள் வந்தது. அன்றைய இராச் சாப்பாட்டுக்கு வேண்டியவற்றைச் செய்வதற்கு பல மணி நேரம் செலவிடப் பட்டது. பாலடைக் கட்டி, பீன்ஸ் அவியல், வீட்டு ரொட்டி, சாக்லெட் கேக், இது போன்ற பல தினுசுகளில் சமைத்திருந்தனர்.

சாப்பிடுவதற்காக எல்லோரும் மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்த பொழுது, ஹென்றியின் கவனம், பழுப்பு நிறத் தலைமயிரும், குளிர்ந்த பார்வையும் உள்ள கிளாரா பிரயன்ட் என்ற மங்கை மீது சென்றது. எட்டு மைல்களுக்கு அப்பால் வசித்த ஒரு பணக்கார விவசாயியின் மகள் அவள்.

மற்ற எல்லாரும் பெரிய களஞ்சியத்தில் கதிருக்காகப் போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள். யார் கதிரைப் பிடுங்கிக் கொள்ளுகிருர்களோ, அவர்கள் தங்கள் இஷ்டப் பட்ட பெண்ணை முத்தமிடலாம் என்பது வழக்கம். ஆனல் ஹென்றி கிளாராவையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

அவள் நடந்து கொண்ட விதமும், அவளுடைய சிரிப்பும் இவன் மனத்தை மிகவும் கவர்ந்தன.

பிறகு பிடில்காரன், "எல்லாரும் அவரவர்களுடைய பெண்களைப் பிடித்துக் கொண்டு நாட்டிய மாடுங்கள்" என்று சொல்லவே எல்லாரும் நாட்டிய மாடத் தொடங்கினர்கள். அன்று முழுவதும் ஒருவர் மாற்றி ஒருவர் கிளாராவோடு நாட்டியம் ஆடக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

"சீ! இந்த நாட்டியத்தை ஆடக் கற்றுக் கொள்ளாதது தப்பு. மார்கரெட்டை நாளையே கற்றுக் கொடுக்கச் சொல்ல வேண்டும். ஆட்டத்தில் எல்லாரையும் விட கெட்டிக்காரனுக ஆக வேண்டும்" என்று தீர்மானித்தான்.

விருந்து முடிந்ததும், ஹென்றி தன் தைரியத்தையெல்லாம் வரவழைத்துக் கொண்டு, கிளாராவைப் பார்த்து, அவளை அடுத்த புதன்கிழமை மாலை சந்திக்கலாமா என்று கேட்டான்.

"மன்னிக்க வேண்டும். அன்று என்னைப் பார்க்க வேறு யாரோ வருகிறுர்கள்" என்றுள் கிளாரா.

ஆனல் எடுத்த காரியத்தை எளிதில் விட்டுக் கொடுப்பவனு ஹென்றி? ஆகவே, "மிஸ் பிரயன்ட்! நான் உன்னை என்று வந்து பார்க்கலாம்?" என்று கேட்டான்.

கிளாரா மெல்லச் சிரித்தாள். சங்கோசமும், அதே சமயத்தில் பிடிவாதமும் உள்ள இந்த வாலிபனை வராதே என்று சொல்ல அவளுக்கு மனதில்லை.

ஆகவே, "வேண்டுமானல் அடுத்த ஞாயிற்றுக் கிழமை வா" என்ருள்.

கிளாராவைத் திரும்ப சந்திக்கு முன் அவளைப் பற்றி நினைத்துப் பார்க்க ஹென்றிக்கு ஆறு நாள் அவகாசம் இருந்தது.

கிளாராவைச் சந்திப்பது என்னவோ ஹென்றிக்கு அத்தனை எளிதாக இல்லை. அவன் போன அநேக சமயங்களில் அவள் வீட்டு வாசலில் யார் யாருடையதோ குதிரைகள் கட்டியிருப்பதையும், அந்தக் குதிரைக்குச் சொந்தக்காரர்களான வாலிபர்கள் அவளை வந்து பார்த்து விட்டுப் போவதையும் ஹென்றி கவனித்தான். இந்த சமயங்களில் ஹென்றி சமயலறைக்குப் போய், கிளாராவின் பெற்ருேர்களோடு, பழைய ஜனதிபதி கார்பீல்டைப் பற்றியும், புதிய ஜனதிபதி ஆலன் ஆர்தரைப் பற்றியும் பேசிக் கொண்டிருப்பான்.

பனிக்காலம் வந்தது. கிளாராவை அடைந்தே தீருவது என்று ஹென்றி முயற்சி செய்தான். ஹென்றி அழகிய பனி வண்டி ஒன்று பண்ணி, அதற்குச் சிகப்பு வர்ணம் கொடுத்து; தகப்பனுடைய குதிரையை அதற்கு மாட்டி எடுத்துக் கொண்டு போனன். அதில் மாட்டியிருந்த மணி சப்தத்தைக் கேட்க கிளாராவுக்கு மிகவும் பிடித்தது. கொஞ்சம், கொஞ்சமாக அவள் ஹென்றியோடு பழக ஆரம்பித்தாள்.

பனியில் வழுக்கி விளையாடும் ஆட்டங்கள் நடந்தன. அதில் தான் தான் கெட்டிக்காரன் என்று ஹென்றி நிரூபித்தான். எல்லோரும் போர்ட்

பண்ணையில் ஆரம்பித்து, ரூஜ் நதியின் முகத்து வாரம் வரையில் சென்று, பிறகு டெட்ராய்ட் நதி வழியாக, செயின்ட் கிளேயர் ஏரி வாயிலுள்ள பெல் தீவு வரையில் செல்வார்கள்.

தன் தம்பி தங்களோடு சேர்ந்து விளையாட ஆரம்பித்து விட்டானே என்று மார்கரெட்டுக்கு வெகு சந்தோஷம். "நீ கிளாராவைப் பார்த்ததி லிருந்து பழைய அசட்டு ஹென்றி இல்லை. நீ ஒருவன் மட்டும் கிளாராவின் காதலனாக இருக்க விரும்பு கிறாய் அல்லவா?" என்று கேட்டாள்.

"ஆமாம். அந்தப் பயல்களைச் சீக்கிரமே துரத்தி விடுகிறேன் பார்" என்றான் ஹென்றி.

ஒரு நாள் ஹென்றி, இரண்டு பக்கமும் மணி பார்க்க முடிந்த ஒரு புது விதக் கடியாரம் பண்ணி னான். அந்த சமயம் ரயில்வே மணி என்று ஒரு புது வித மணிக் கணக்கு வந்திருந்தது. ஹென்றி பண்ணின கடியாரத்தில் சாதாரண மணியும் தெரி யும், ரயில்வே மணியும் தெரியும். அதைச் செய்த விதத்தை ஹென்றி கிளாராவுக்கு விளக்கி னான்.

அன்று இரவு வீடு திரும்பியதும், தனக்கு ஹென்றியை மிகவும் பிடித்திருக்கிறது என்று கிளாரா தன் பெற்றோர்களிடம் சொன்னாள். "எனக்கு தெரிந்த வாலிபர்களை விட அவன் புத்தி சாலியாகவும் முன்னுக்கு வரவேண்டும் என்ற ஆசை உள்ளவனாகவும் இருக்கிறான். ஒரு நாள் அவன் பெரிய மனிதனாக ஆகப் போகிறான், பாருங் கள்" என்றாள்.

சோபாவில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த தகப்பனாரைப் பார்த்து ஒரு நாள் ஹென்றி, "என்ன, தூங்கிக் கொண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டான்.

"இல்லை, இப்பொழுது தான் சற்று கண்ணயர்ந்தேன். எனக்கு உடம்பு சரியாகி விட்டதால், இனி பகல் பொழுதில் தூங்க வேண்டிய அவசியம் கூட இல்லை" என்றார்.

மார்கரெட் மூலையிலிருந்த அலமாரியைச் சுத்தப் படுத்திக் கொண்டு, அங்குள்ள பீங்கான் சாமான்களையும், கண்ணாடி சாமான்களையும் துடைத்துக் கொண்டிருந்தாள்.

"நான் டெட்ராய்ட்டுக்குத் திரும்பப் போவதில்லை" என்றான் ஹென்றி திடீரென்று.

இதைக் கேட்ட அதிர்ச்சியில் மார்கரெட் ஒரு பீங்கான் கிண்ணத்தையே நழுவ விடப் போனாள். மிஸ்டர் போர்ட் தம் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார்.

"கடைசியில் நீ என் வழிக்கு வருவாய் என்று தெரியும். என்ன இருந்தாலும் இந்தப் பண்ணை வேலை பட்டணத்து வேலைகளைத் தோற்கடித்துத் தான் வருகிறது" என்றார்.

"அதற்காக இல்லை அப்பா. நான் கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன்"

"இதோ பார் ஹென்றி! கிளாரா உனக்கு வெகு நல்ல மனைவியாக அமைவாள் பார்" என்றாள் மார்கரெட்.

"அவள் மிக நல்ல பெண் என்று தோன்று கிறது" என்றூர் மிஸ்டர் போர்ட். "உனக்குத் தெற்குப் பக்கத்தில் இருக்கும் நிலத்தைக் கொடுக்கி றேன். அதில் கிடைக்கும் மரத்தைக் கொண்டு நீ ஒரு நல்ல வீடு கட்டிக் கொள்ளலாம்" என்றூர்.

அன்றே ஹென்றி மரம் வெட்ட ஆரம்பித் தான். பனிக்காலம் முழுவதும் மரம் வெட்டு வதிலும், பலகைகள் இழைப்பதிலும் சென்றது. பிறகு ஒரு வட்ட ரம்பமும், அதை இயக்க ஒரு பன் னிரண்டு குதிரை பலமுள்ள என்ஜின் ஒன்றும் வாங்கிஞன். அவனுடைய கோடாலி பலத்திற்கு முன்ஞல் மரங்கள் எல்லாம் சாய்ந்தன. அவற்றை வட்ட ரம்பம் பலகைகளாக மாற்றிற்று. வசந்த காலம் வந்ததும் ஒரு கூலி ஆளை உதவிக்கு வைத் துக் கொண்டு, கிளாராவுக்காக ஒரு வீடு கட்டி முடித்தான். கிளாரா போன்ற அருமையான பெண், தான் கட்டினதைப் போன்ற அருமையான வீட்டில் வசிக்க வேண்டும் என்று ஹென்றிக்கு ஆசை.

# அத்தியாயம் 9.

கலியாணமாகி, டெட்ராய்ட்டில் தங்கள் தேன் மதியைக் கழித்து விட்டுப் புது வீட்டிற்குள் நுழைந்ததும், "இந்த வீடு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்ருள் கிளாரா. தங்களுக் கென்று தான் தயாரித்து வைத்திருந்த மெத்தை முதலியவற்றை கிளாரா காட்டினுள். வீட்டில் விரிக்கப் பட்டிருந்த பூப் போட்ட விரிப்பு, புது வார்னிஷ் பூசப்பட்ட நாற்காலி மேஜைகள், லேஸ் படுதாக்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கிளாரா சந்தோஷப்பட்டாள். சமையலறையில் விறகு கொண்டு எரியும் ஒரு அடுப்பும், கிணற்றுக்குப் போய் ஜலம் கொண்டு வர வேண்டிய. அவசியமில்லாதபடி பக்கத்திலேயே ஒரு குழாயும் ஹென்றி அமைத்திருந்தான்.

தகப்பனுருடைய பண்ணையைக் கவனித்துக் கொண்டதை விடத் தன் பண்ணையை இன்னும் நன்ருக ஹென்றி கவனித்துக் கொண்டான். எதையும் ஒழுங்காகச் செய்யும் பழக்க முள்ளவனுதலால், தன் கூலியாளுக்கு அதிக வேலை கொடுக்காமலும், வீண் பிரயாசையும், கால விரயமும்

இல்லாமலும், தன் பண்ணைக் காரியங்களைக் கவனித்துக் கொண்டான்.

குடித்தனக் காரியங்களை கிளாரா வெகு நன்கு கவனித்துக் கொண்டாள். கண்ணாடி போல் வெகு சுத்தமாக வைக்கப் பட்டிருந்த அவள் வீட்டில் உக்கிராண அறையில், ஊறுகாய்கள், வற்றல்கள், பதப்படுத்தப்பட்ட பழங்கள் எல்லாம் வரிசை வரிசையாக வைக்கப்பட்டிருக்கும். தின்பண்டங்களெல்லாம் நிறைய சேமித்து வைப்பாள். புதிதாகக் குடித்தனம் ஆரம்பித்த இந்தப் புது தம்பதிக்கு எல்லாம் நல்லபடியாக நடந்தது. அந்த வருஷம் நல்ல விளைச்சல் இருந்ததால், நல்ல லாபமும் கிடைத்தது.

ஒவ்வொரு ராத்திரியும், சாப்பாட்டுத் தட்டுகள் மேஜையிலிருந்து நீக்கப் பட்டதும், ஹென்றி, யந்திர சம்பந்தமான பத்திரிகைகளை எடுத்து வைத்துக் கொண்டு ஒரு வார்த்தை விடாமல் படிக்க ஆரம்பிப்பான். தட்டு முட்டுச் சாமான்களைக் கழுவியானதும், மேஜைக்குப் பக்கத்தில் உள்ள ஆடும் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு கிளாரா மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த பெரிய மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் தையல் வேலை செய்து கொண்டிருப்பாள்.

இத்தகைய இரவு ஒன்றில், தான் படித்துக் கொண்டிருந்த பத்திரிகையை முழங்காலில் ஒரு அடி ஓங்கி அடித்து ஹென்றி நிமிர்ந்து உட்கார்ந்தான். ''கிளாரா! அவர்கள் சரியான வழியில் சென்று கொண்டிருக்கிறார்கள்'' என்றான்.

''எந்தப் பாதையில்'' என்று நிதானமாகக் கேட்டாள் கிளாரா.

''குதிரையில்லாத வண்டி கண்டு பிடிக்கும் விஷயமாகத்தான் சொல்லுகிறேன். யாரோ ஒரு பிரஞ்சுக்காரர் ஒரு குதிரையில்லாத வண்டி கண்டு பிடித்திருக்கிறாராம்! நானும் ஒரு வண்டி கண்டு பிடிக்க முடியுமானால்?'' உற்சாகத்தினால் ஹென்றி யின் நீலக் கண்கள் மின்னின.

தான் செய்து கொண்டிருந்த தையலைக் கிளாரா கீழே வைத்தாள். ஒரு காரணத்தோடேயே அவன் அப்படிச் சொல்லுகிறான் என்பது அவளுக் குத் தெரியும். ''நீங்கள் மனது வைத்தால் உங்க ளால் செய்ய முடியாதா? இருந்தாலும் அதைப் பற்றி யோசிப்பானேன்? நமக்கு வேண்டியதெல் லாம் இருப்பதால் இங்கு சௌகரியமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறோமே!'' என்றாள்.

''நான் நமக்காகச் சொல்லவில்லை கிளாரா! ஜனங்களின் வாழ்க்கை முறையையே இது மாற்றி அமைக்கும். ஆனால் இதற்காக நாம் டெட்ராய்ட் டுக்கு மாறவேண்டி யிருக்கும்'' என்று சொல்லி விட்டு அவள் பதிலுக்காக அவள் முகத்தையே பார்த்தான்.

டெட்ராய்ட்டுக்கு மாறுவதா? இதை அவள் எண்ணியே பார்க்க முடியவில்லை. புதிதாகக் கட்டப் பட்ட நல்ல வீட்டையும், நிலத்திலிருந்து வந்து கொண்டிருந்த லாபத்தையும் விட்டு விட்டு நகரத் திற்குப் போவதா? புருஷன் அவன் பாட்டில் ஏதா

வது பரிசோதனை செய்து கொண்டிருப்பான்; தான் குடித்தனம் பண்ண முடியாமல் தவிக்க வேண்டும். துணி வாங்கப் பணம் இருக்காது, ஹென்றியும் வழுக்கல் விளையாட்டுகளுக்கோ, அல்லது நாட்டியங்களுக்கோ தன்னை அழைத்துக் கொண்டு போக மாட்டான்! இதுபோல் பல எண்ணங்கள் அவள் மனத்தில் தோன்றின.

ஆனல் ஹென்றிக்கு இது தற்காலிகப் பைத்தியம் இல்லையென்பது அவளுக்குத் தெரியும். ஆகவே அவள் அவனைப் பார்த்து, "ஹென்றி! நீங்கள் ஏதாவது தீர்மானம் பண்ணிஞல் அதை மாற்றுவது என்பது முடியாத காரியம். உங்கள் இஷ்டப்படி உங்களை நடக்க விடா விட்டால் உங்களுக்குச் சந்தோஷம் இருக்காது என்பதும் எனக்குத் தெரியும். ஆகவே டெட்ராய்ட்டுக்குத் தான் போக வேண்டும் என்ருல் போவோம். நீங்கள் குதிரை யில்லாத வண்டி செய்யத் தான் போகிறீர்கள். அதில் எனக்குச் சந்தேகமே யில்லை" என்ருள்.

தன் மீது இத்தனை நம்பிக்கை கொண்டுள்ளவள் தனக்கு மனைவியாக வாய்த்திருக்கிருளே என்று ஹென்றிக்கு ஏக சந்தோஷம்.

அந்தக் கோடை முழுவதும் பெட்ரோல் என்ஜின் ஞாபகமாகவே ஹென்றி பண்ணை வேலைகளைக் கவனித்தான். இலையுதிர் காலம் வந்ததும் தன் நிலத்தைத் தன் தம்பியிடம் குத்தகையாக ஒப்புவித்தான்.

டெட்ராய்ட்டுக்குப் போவதற்காகச் சாமான் களையெல்லாம் வண்டியில் ஏற்றியானதும், கிளாரா, "பெட்ரோல் என்ஜின் செய்தானதும், மீண்டும் இந்த வீட்டுக்கே திரும்பி விடலாம், இல்லையா?" என்று கேட்டாள்.

ஹென்றி, அவள் முதுகில் தட்டிக் கொடுத்துக் கொண்டே, "நிச்சயமாகத் திரும்பி விடலாம்" என்றான்.

அக்கம் பக்கத்தில் உள்ள எல்லாரும் ஹென்றி யை வழியனுப்ப வந்திருந்தார்கள். நல்ல லாபகர மான பண்ணை வேலையை ஹென்றி விட்டு விட்டுப் போவது பைத்தியக்காரத்தனம் என்று தான் அவர் கள் மனத்திற்குள் நினைத்தார்கள். ஓடக்கூடிய பெட்ரோல் என்ஜினைத் தான் அவன் செய்தால் என்ன? அதை வைத்துக் கொண்டு என்ன செய் வது? நல்ல குதிரைகள் மலிவாகக் கிடைக்கும் சமயத்தில் அது யாருக்கு வேண்டும்? இப்படி யெல்லாம் அவர்கள் எண்ணினார்கள்.

ஹென்றி திரும்பிச் சென்ற டெட்ராய்ட் நகரம் ஏகப் பெரிய நகரமாக வளர்ந்திருந்தது. டெட் ராய்ட் நதிக்கரை ஓரமாக சுமார் முப்பது சதுர மைல் பரப்பு அது பரவி யிருந்தது. இயந்தி ரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுவதற்காக பத்து வருஷங்களுக்கு முன்னால் வந்தானே, அப் பொழுது இருந்ததைப் போல இரண்டு மடங்கு ஜனத்தொகை இப்பொழுது இருந்தது. புதுத் தொழிற்சாலைகள் எத்தனையோ தோன்றி யிருந்தன. எல்லாரும் மின்சாரம் உபயோகிக்க ஆரம்பித்

திருந்தார்கள். எடிசன் மின்சாரக் கம்பெனிக்கு மூன்று கிளை நிலையங்கள் அங்கு இருந்தன.

மின்சாரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றவே, ஹென்றி ஒரு கிளை நிலையத்தில் வேலைக்கு அமர்ந்தான். அவனுக்கு நீராவி என்ஜின்களைப் பற்றித் தெரியுமாதலால் அவனை உடனே வேலைக்கு எடுத்துக் கொண்டு விட்டார்கள். நீராவியினுல் தான் அந்த கிளை நிலையத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டதால், நீராவி என்ஜின்களில் என்ன கோளாறுகள் ஏற்பட்டாலும் ஹென்றியினுல் சரிபார்க்க முடியும்.

பேக்லீ அவன்யூவில் ஒரு சின்ன வீடு வாடகைக்கு எடுத்துக் கொண்டார்கள். இந்த வீட்டின் பின்புறம் இருந்த ஒரு பழைய செங்கல் கட்டடத்தை ஹென்றி தன் பட்டறையாக அமைத்துக் கொண்டான். நல்ல யந்திரங்களாகத் தன் பட்டறைக்கு வாங்கிப் போட்டான். துளை போடும் யந்திரம், பெரிது ஒன்று, சின்னது ஒன்று, உலோகங்களைக் கடைசல் பிடிக்கும் யந்திரம் இரண்டு, மரத்தைக் கடைசல் பிடிக்கும் யந்திரம் ஒன்று, ஒரு அடுப்பு, ஒரு பட்டறைக் கல் எல்லாம் வாங்கிப் போட்டான். இவற்றை இயக்குவதற்காக ஒரு மின்சார என்ஜினும் வாங்கினுன். தன் கருவிகளை வைப்பதற்காக அறைகளில் தட்டுகள் அடித்து, எல்லாவற்றையும் ஒழுங்காகவும், சுத்தமாகவும் வைத்துக் கொண்டான்.

டெட்ராய்ட்டுக்குத் திரும்பி வந்ததில் ஹென்றிக்கு ஏக ஆனந்தம். என்ஜின்களோடு பழகிக்

கொண்டிருந்ததோடு, தன் வீட்டுக் கொல்லைப் புறத்தில், தனக்கு என்று இருந்த பட்டறையில் குதிரை யில்லாத வண்டி விஷயமாகப் பரிசோதனை நடத்தலாம் அல்லவா? 'எடிஸன் மின்சாரக் கம் பெனி'யில் இருந்ததால், மின்சாரப் பொறி எப்படி உற்பத்தி செய்வது என்று கண்டு பிடித்து விட லாம். என் ஜின் பெட்ரோலினால் ஓட வேண்டு மானால், அந்தப் பெட்ரோலை மின்சாரப் பொறி யினால் வெடிக்க வைப்பதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டாமா?

டைனமோ எப்படி இயங்குகிறது என்று கவ னிப்பதே ஹென்றிக்கு ஆனந்தம். அதில் ஒரு பெரிய லாட வடிவமுள்ள மின்காந்தம் இருந்தது. காந் தத்தின் இரு நுனிகளுக்கு மிடையில் கவசம் இருந்தது. அதைச் சுற்றும்போது, மின் சார சக்தி ஏற்பட, அந்த சக்தியை காமு டேட்டர், பிரஷ்கள் வழியாகக் கொண்டுபோய், வேண்டிய காரியங்களுக்கு உபயோகப் படுத்து வார்கள்.

சாயந்திர வேளைகளில், ஹென்றி மைக்கேல் பாரடே செய்த பரிசோதனைகளைப் பற்றிப் படிப் பான். ஒரு காந்தத்துக்குப் பக்கத்தில் ஒரு கம்பிச் சுருளை ஆட்டினால் மின்சாரம் உண்டாகிறது என் பதை அந்த இளம் விஞ்ஞானி எப்படிக் கண்டு பிடித்தான் என்று படிக்க ஆச்சரியமாக இருந்தது. பிறகு தாமஸ் எடிஸன் என்னென்ன செய்திருக்கி றார் என்று ஹென்றி படித்துத் தெரிந்து கொண் டான். மின்சார உற்பத்திக்கு ஒரு யந்திரம்

பண்ணினு லொழிய தம்முடைய பல்பினுல் பிரயோசன மில்லை யென்று எடிசன் தெரிந்து வைத்திருந்தார். பாரடேக்குப் பிறகு எத்தனையோ பேர் டைனமோ செய்தார்கள். ஆனுல் ஒன்ருவது பிரயோசனமானதாக இல்லை. ஏனெனில் இவற்றில் மின்சாரம் பாதிக்கு மேல் உஷ்ணமாக மாறி வீணுகப் போய் விடுவதால், இவற்றை உபயோகப் படுத்துவது கஷ்டமாக இருந்தது. ஆகவே எடிசன் தன்னுடைய டைனமோவை சீர்திருத்தி, அதில் பத்தில் ஒரு பங்கு மின்சாரத்துக்கு மேல் வீணுகாதபடி பார்த்துக் கொண்டார்.

சீக்கிரமே, எடிஸன் மின்சாரக் கம்பெனி அதிகாரிகள், ஹென்றி மிகவும் கெட்டிக்காரரர் என்று கண்டு, அவரை யந்திர இலாகாவின் மானேஜராக மாற்றினுர்கள். இந்த வேலையில் ஹென்றி தமக்கு அடியில் வேலை செய்த ஆட்களைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தார். ஆட்களைத் தொடர்ந்து பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்யச் சொல்லுவது சரிதானு என்று சிந்தித்தார். ஆட்களிடமிருந்தும், கருவிகளிட மிருந்தும் எத்தனை வேலை கறக்க முடியுமோ, அத்தனை வேலை கறப்பது தான் சரியென்று அந்தக் காலத்து முதலாளிகள் நினைத்தார்கள். அந்தக் கம்பெனியில் தினப்படி வேலைக்கென்று நாற்பது ஆட்களும், இவர்களில் யாராவது வியாதியாக விழுந்து விட்டால், அவர்களுக்குப் பதிலாக வேலை செய்வதற்கு என்று ஐந்து ஆட்களும் இருந்தார்கள். ஆனுல் இந்த நாற்பது பேர்களில் எப்பொழுதும் சிலர் வியாதியாகவோ, அசதியாகவோ இருந்த

தால், இந்த ஐந்து பேருக்கும் தினம் முழு வேலை இருந்தது.

வேலையாட்கள் விஷயமாக இன்னும் அதிக அக்கறை எடுத்துக் கொள்வது தொழிலுக்கே நல்லது என்று ஹென்றி கருதினர். அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்து, தொழிற்சாலையையும் சௌகரியமாகச் செய்து கொடுத்தால் எல்லாருக்கும் நல்லது என்று நினைத்தார்.

“இப்பொழுது நம் ஆட்கள் அடிக்கடி வியாதியாக விழுவது போல், நம் யந்திரங்களும் பழுதாகிக் கொண்டிருந்தால் நாம் சும்மா பார்த்துக் கொண்டிருப்போமா?” என்று ஹென்றி ஒரு நாள் ஒரு மேலதிகாரியைக் கேட்டார்.

“போர்ட்! நீங்கள் ஒரு நல்ல மனிதர்! ஆனால் கன்ன, பின்ன அபிப்பிராயங்கள் நிறைய வைத்திருக்கிறீர்கள். இவை கேட்பதற்கு நன்ருக இருக்கின்றன. ஆனல் காரியாம்சத்தில் நடக்காது. ஏது, உம்மை உம் இஷ்டப்படி செய்யவிட்டால், எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றி யமைத்து, நம் காரியாலயத்தையே குட்டிச் சுவராக்கி விடுவீர்கள் என்று தோன்றுகிறதே?” என்ருர் மேலதிகாரி.

குறைந்த நேரம் வேலை செய்தால், தொழிலாளிகளால் நன்கு வேலை செய்ய முடியும் என்று போர்டினல் தம் மேலதிகாரிகளை நம்ப வைக்க முடியவில்லை. ஆகவே, இந்த அபிப்பிராயங்களைத் தமக்குத் தாமே வைத்துக் கொண்டு, எடிஸன் தொழிற்சாலையில் காலை ஆறிலிருந்து மாலை ஆறு மணி வரை வேலை செய்து வந்தார்.

இங்கு வேலை முடிந்த பிறகு, ஹென்றி வீட்டுக்குத் திரும்பி, சாப்பிட்டு விட்டு, தம்முடைய ஒரு சிலிண் டர் என்ஜினைக் கட்டுவதில் முனைவார். ஒரு பழைய பாய்லரின் குழாய் ஒன்றைத் தான் அவர் சிலிண்ட ராக உபயோகித்துக் கொண்டார். இந்தப் பரீட் சையை நடத்துகையில் தான், அவர் பெட்ரோல் என்ஜினை எப்படி ஓட வைப்பது என்று கற்றுக் கொண்டார். கிளாரா பக்கத்தில் நின்று கொண்டு, கரண்டியில் உள்ள பெட்ரோலை கார்பரட்டருக் குச் செல்லும் குழாயில் ஊற்றுவாள். ஒரே நிதானத்தோடு என்ஜின் டப், டப் என்று அடித்துக் கொள்ளும். இதைக் கேட்டு ஹென்றியின் முகம் மலரும். அதுவே அவளுக்குத் திருப்தி யளிக்கும்.

# அத்தியாயம் 10.

ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை. ஹென்றியும், கிளாராவும் முன் அறையில் உட்கார்ந்து பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஜான்ஸ் டௌன் நகரத்தில் ஏற்பட்ட வெள்ளம், வாஷிங்டன், மொன்டானா, டகோடாஸ் ஆகிய மூன்று சமஸ்தானங்களும் யூனியனில் சேர்ந்தது, பெஞ்ஜமின் ஹாரிஸன் ஜனாதிபதி பதவி ஏற்றுக் கொண்டது ஆகிய பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில், குதிரையில்லாத வண்டி எப்படி இருக்க வேண்டும் என்று திடீரென்று ஹென்றிக்கு ஒரு யோசனை உதயமாயிற்று! பக்கத்திலிருந்த ஒரு காகிதத்தை எடுத்து ஒரு படம் போட்டார். "இந்தக் காகிதம் பெரிதாக இல்லை, கிளாரா! இதை விடப் பெரியக் காகிதம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

ஒரு பக்கம் பாட்டு அச்சடிக்கப்பட்டு, பின் பக்கம் காலியாக இருந்த ஒரு காகிதத்தை கிளாரா எடுத்துக் கொடுத்தாள். இதில் தன் மோட்டார் வண்டியின் பிளானை ஹென்றி வரைந்தார். தனக்கு வேண்டிய சக்தியை அதுவே உற்பத்தி செய்து

கொண்டு, இரண்டு பேரை ஏற்றிச் செல்லக் கூடிய வண்டி அது.

இதே மாதிரி வண்டி கண்டு பிடிக்க அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் அநேகர் முயற்சி செய்து கொண்டிருந்தார்கள் என்பது ஹென்றிக்குத் தெரியாது. தன்னந் தனியாகத் தான் ஹென்றி வேலை செய்ய வேண்டி யிருந்தது.

உள் நாட்டு யுத்த சமயத்தில், லெனுயர் என்னும் பிரஞ்சுக்காரர் மின்சாரப் பொறி எழுப்பும் ஒரு 'பிளக்' கண்டு பிடித்தார். ஆனால் அது ஏக சூடு ஏறினதால் பிரயோசன மில்லாமல் போய் விட்டது. பிறகு ஆட்டோ என்னும் ஜெர்மன் நிபுணர், ஒரு பொறிக்கு நாலு தடவை சுற்றும் ஒரு பெட்ரோல் என்ஜினை வெளிக் கொணர்ந்தார். ஈகிள் இரும்புத் தொழிற்சாலையில் ஹென்றி இத் தகைய என்ஜின் ஒன்றைப் பழுது பார்க்க நேர்ந்தது. இது ஹென்றியின் கவனத்தை மிகவும் கவர்ந்தது. பிஸ்டன் கீழே போகும் போது பெட்ரோல் வாயு உள்ளே இழுக்கப் பட்டது. பிஸ்டன் மேலே போகும் போது அது அழுத்தப் பட்டது. வெடித்ததும் அது பிஸ்டனைக் கீழே தள்ளிற்று. பிறகு மேலே சென்ற பிஸ்டன் எஞ்சி இருந்த பிரயோசன மற்ற வாயுக்களை வெளிப்படுத்திற்று.

மோட்டார் வண்டியை மின்சாரத்தினால் ஓட்ட முடியுமா என்று சிலர் பரீட்சை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் இதற்கு அநேக இடைஞ்சல்கள் இருந்தன. இதற்கான பாட்டரிகள் வெகு

கனமாக இருந்தன. அவற்றை அடிக்கடி 'சார்ஜூம்' செய்ய வேண்டி வந்தது.

ஒவ்வொரு நாள் ராத்திரியும் வெகு நேரம் ஹென்றி தம்முடைய மோட்டார் வாகன விஷயமாக உழைப்பார். அவர் ஒரு ஒழுங்கு முறைப்படி வேலை செய்வார். எப்பொழுதும் காகிதத்தில் ஒரு விஷயம் விடாமல் எல்லாவற்றையும் பிளான் எழுதிக் கொண்டு, பிறகு பிளான் பிரகாரம் கட்ட ஆரம்பிப்பார். பொறி வரும்படி செய்வது, பொறியை நிறுத்துவது, என்ஜின் கனத்தைக் குறைப்பது, ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சாமான்களாகப் பொறுக்கி எடுப்பது ஆகிய இவை தான் அவர் கவனத்தைக் கவர்ந்த முக்கியமான பிரசினைகள்.

தமக்குத் தேவையாக இருந்த எல்லா பாகங்களையும் அவரே செய்ய வேண்டி யிருந்தது. சில சமயங்களில் இவற்றுக்குத் தகுதியான உலோகம் கிடைப்பது தான் கஷ்டமாக இருந்தது.

கடைசியில் என்ஜினை கட்டி முடித்தார். ஆனால் ஸ்டியரிங் கியர் தான் தொந்தரவு கொடுத்தது. என்ஜின் வேகத்தை எதிர்த்து, முன் பக்கம் சக்கரங்களைத் திருப்பும் பலம் இதற்கு வேண்டும். அதே சயத்தில், வேகமாகவும், லகுவாகவும் திருப்பும் படியாகவும் இருக்க வேண்டும்.

ஒரு நாள் ராத்திரி கிளாரா விளக்கைப் பிடித்துக் கொண்டு ஹென்றிக்கு யந்திரக் கருவிகளை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கையில்,

"இன்று துணி உலர்த்திக் கொண்டிருக்கும் போது, பக்கத்து வீட்டுக்காரியான ஸ்ரீமதி பாக்ஸ்டரோடு ஏக சண்டை" என்று சொன்னாள்.

ஹென்றி தம் வண்டியின் பாகங்களைப் பொருத்துவதில் கவனமாக இருந்தார். "என்ன சமாசாரம்?" என்று அசிரத்தையாகக் கேட்டார்.

"வேறு ஒன்றும் இல்லை. ராத்திரியெல்லாம் இங்கு விளக்கு எரிவதைப் பார்த்தும், நீங்கள் டங், டங் கென்று என்ஜினை அடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தும், அக்கம் பக்கத்தில் உங்களைப் பைத்தியம் என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்."

ஹென்றி சிரித்தார். "அவர்கள் சொன்னால் சொல்லி விட்டுப் போகட்டுமே!" என்றார்.

"ரொம்ப அழகாக இருக்கிறதே! 'பிறர் சொன்னாலும் நீ அதை எப்படி நம்பலாம்' என்று ஸ்ரீமதி பாக்ஸ்டரோடு சண்டைக்குப் போனேன். இந்த வண்டியை நீங்கள் சீக்கிரம் முடித்தால், நாமும் நாலு பேரைப் போல் வாழலாம்" என்றாள் கிளாரா. இதைச் சொன்ன போது அவள் கண்களில் கண்ணீர் துளித்தது.

ஹென்றி தாம் செய்து கொண்டிருந்த வேலையை விட்டு விட்டு, அவளை அன்பாக அணைத்துக் கொண்டார். "இன்றைக்கு நீ மிகவும் களைத்துப் போயிருக்கிறாய் என்று தோன்றுகிறது. வண்டி வேலை கிட்டத் தட்ட முடிந்து விட்டது.

வழக்கமாக இப்படி இருக்க மாட்டாயே? குழந்தை பிறந்த பிறகு, இந்த ஸ்ரீமதி பாக்ஸ்டரோடு பேசவே உனக்கு ஒழிவு இருக்கப் போகிறதில்லை பார்!" என்றார்.

"நாம் மீண்டும் டியர்பார்னுக்கே திரும்பிப் போய் விட்டால் என்ன?" என்று அழுது கொண்டே கேட்டாள் கிளாரா.

ஹென்றி அவளைத் தேற்றினார். "இன்றைக்கு இங்கு செய்த வேலை போதும். வா உள்ளே. நான் உனக்குக் கொஞ்சம் சுடச் சுட டீ போட்டுத் தருகிறேன்" என்றார்.

டீ சாப்பிட்டானதும், கிளாராவின் முகத்தில் புன்சிரிப்பு தாண்டவ மாடியது. ஷெட்டைப் பூட்டி விட்டு வருவதற்காகச் சென்ற போது, ஹென்றி கிளாராவைப் பற்றி நினைக்க ஆரம்பித்தார்.

பாவம், கிளாரா எவ்வளவோ தியாகம் செய்து கொண்டிருக்கிறாள்! கிளாராவின் சந்தோஷத்தை உத்தேசித்து டியர்பார்னுக்குத் திரும்பினால் நல்லது தான். ஆனால் வண்டி கிட்டத் தட்ட முடிந்து, ஓடும் தறுவாயில் இருக்கிறதே! என்ன பண்ணுவது என்று தெரியவில்லையே!

ஹென்றி கதவைப் பூட்டினார். பிறகு திரும்பவும் கதவைத் திறந்தார். அந்த ஸ்டியரிங் சாதனத்தில் இன்னும் சில நிமிஷங்கள் வேலை செய்தால் அது பரீட்சைக்குத் தயாராகி விடலாம். அப்படி

D 5133W M63
N56



அவர் நினைத்தது தான் தாமதம், மீண்டும் ஆழ்ந்து வேலை செய்ய ஆரம்பித்து விட்டார்.

சில மணி நேரம் சென்றது. யாரோ தன்னை மெள்ளத் தட்டுவது உணர்ந்து நிமிர்ந்து பார்த்தால் கிளாரா நின்று கொண்டிருந்தாள்! "நாம் இங்கேயே இருந்து மோட்டார் வண்டியை முடிக்க வேண்டியது தான். டியர்பார்னுக்குத் திரும்பிப் போகலாம் என்று சொன்னேனே, அது மிகவும் பைத்தியக்கார எண்ணம்" என்றாள்.

அவள் சொன்னது ஹென்றியின் காதில் விழவில்லை. "நான் கண்டு பிடித்து விட்டேன், கிளாரா! என் வண்டி இப்பொழுது பரீட்சைக்குத் தயார்" என்று வெகு உற்சாகமான, ஆனால் வெகு மெல்லிய குரலில் சொன்னார்.

"இப்பொழுது விடியற் காலை மூன்று மணி. அதோடு மழை வேறு கொட்டிக் கொண்டிருக்கிறது. இதை பரீட்சிப்பதற்கு பொழுது விடியும் வரையில் காத்திருந்தால் என்ன?"

"ஊஹூம், என்னால் அது வரைக்கும் காத்திருக்க முடியாது" என்று சொல்லிக் கொண்டே ஹென்றி ஷெட்டின் கதவுகளைத் திறந்தார்.

அப்பொழுது ஒரே இருட்டாக இருந்ததுடன் மழை கொட்டிக் கொண்டிருந்ததால், பனியெல்லாம் ஒரே சேறாக மாறியிருந்தது. தம் வண்டியின் முன்னால் ஒரு லாந்தர் விளக்கைக் கட்டிவிட்டு, ஹென்றி வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார். முதலில் என்ஜின் சக், சக், சக் என்று ஒழுங்காக

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 10495
EGMORE, MADRAS-600 008

அடித்துக் கொள்ளாமல், டப், டுப், டப, டப என்று அடித்துக் கொள்ளவே கிளாரா மூச்சு விட வில்லை. அது சக், சக், சக் என்று ஓட ஆரம்பித்த பிறகு தான் அவளுக்கு மூச்சு வந்தது.

பிறகு, ஏதோ யந்திரத்தினுல் இயக்கப் பட்டது போல் மோட்டார் நகர ஆரம்பித்தது. ஹென்றி ஸ்டியரிங் வீலரை கெட்டியாகப் பிடித்துக் கொண் டார். ஸ்ரீமதி பாக்ஸ்டரின் வேலியின் மீது மோதாமல் இருக்க வேண்டுமே என்று அவருக்குப் பயம். அவருடைய வண்டி வளைந்தும், நெளிந்தும் தெருவில் ஓடிற்று. தன்னுடைய கம்பளிப் போர்வை யினுல் கிளாரா தன்னைப் போர்த்துக் கொண்டு வண்டியின் கூடவே நடை பாதையில் ஓடிச் சென்றுள். வண்டி போட்ட சப்தத்தைக் கேட்டு, மாடியில் படுத்துக் கொண்டிருந்த சிலர் விளக் கேற்றிப் பார்த்தார்கள், சிலர் தெருவுக்கே ஓடி வந்து பார்த்தார்கள்.

தெரு முனை வந்ததும், ஹென்றி வண்டியி லிருந்து கீழே குதித்து, வண்டியைத் தூக்கித் திருப்பி வைத்து, வீட்டுக்கு ஓட்டிக் கொண்டு போய் அதை ஷெட்டில் வைத்தார்.

"இது ஓடுகிறது. ஆனுல் இதில் இன்னும் சில அபிவிருத்திகள் செய்தாக வேண்டும். இது சேரிலும், பள்ளத்திலும், மலை மீதும் ஓடும்படி யாகச் செய்ய வேண்டும்; பின்னுலும் ஓடும்படி யாகச் செய்ய வேண்டும்" என்றுர்.

சைக்கிள் டயர்களைக் கொண்ட தம் வண்டி

யில், எத்தனையோ தவறுகள் உள்ளன என்று ஹென்றிக்குத் தெரியும். இருந்தும் இரண்டு சிலிண்டர் கொண்ட என்ஜின் ஒன்று அவர் கண்டு பிடித்து விட்டார். அவருடைய் என்ஜினுக்கு நாலு குதிரை பல வேகம் இருந்ததோடு, வேகமாகப் போனால் மணிக்கு இருபது மைலும், மெள்ளப் போனால் மணிக்கு பத்து மைலும் போகக் கூடிய தாக இருந்தது.

வேகத்தை அதிகரிக்கவோ, குறைக்கவோ ட்ரைவர் உட்காரும் சீட்டிற்கு முன்னால் கிளச் லீவர் இருந்தது. உட்காரும் இடத்திற்கு அடியில் மூன்று காலன் பெட்ரோலுக்கு இடம் இருந்தது. இந்தப் பெட்ரோலை மோட்டாருக்கு எடுத்துச் செல்ல ஒரு சின்ன குழாயும், வால்வும் இருந்தன.

ஹென்றி போர்ட் தம்பதிக்கு 1893 மிக முக்கிய மான வருஷமாகும். அவர்களுடைய மோட்டார் வண்டி அந்த வருஷம் தான் முதல் முதலாக பரீட்சை செய்து பார்க்கப் பட்டது. அவர்க ளுடைய முதற் பிள்ளையான எட்ஸெல் பிரயன்ட் போர்ட், அந்த வருஷம் தான் பிறந்தான். தன் பள்ளிக்கூட நண்பனின் பெயரைத் தான் ஹென்றி இந்த மூத்தப் பிள்ளைக்கு வைத்தார்.

ஒரு விநோத மனிதர், ஒரு விநோத வண்டியை டெட்ராய்ட் தெருக்கள் வழியாக ஓட்டிக் கொண்டு செல்லுகிறார் என்றும், அது பெரிய தொல்லையாகப் போய் விட்டது என்றும் செய்தி பறந்தது. அது ஏக சப்தம் பண்ணினதால் குதிரைகள் பயந்தன.

அதோடு இதன் காரணமாக, தெருவில் வண்டிகள் போக முடியாமல் அடைப்புகள் ஏற்பட்டன. அதைப் பார்க்க எப்பொழுதும் கூட்டம் கூடியது. தனியாகத் தெருவில் விட்டு வைத்தால் யாராவது ஆச்சரியம் தாங்காமல், அதை ஓட்டப் பார்ப்பார்கள். அதற்காக ஹென்றி தம் வண்டியைத் தெருவில் விட்டு வைக்க நேர்ந்தாலும், ஒரு சங்கிலியைக் கூட எடுத்துக் கொண்டு போய், அதை ஒரு லாந்தர் கம்பத்துடன் கட்டி விடுவார்.

ஒரு சாதாரண சைக்கிள் அளவு பெரிது தான் உள்ள இந்த வண்டியைக் கட்டுவதற்கு ஹென்றிக்கு நான்கு வருஷங்கள் பிடித்தது. பிறகு இரண்டாவது பெட்ரோல் வண்டியைக் கட்டுவதற்கு முன்னர், இரண்டு வருஷ காலம் அது விஷயமாக சிந்தனை பண்ணியிருப்பார்.

இதற்கிடையில் சில விலையுயர்ந்த கார்கள் தயாரிக்கப்பட்டு, அவற்றைப் பணக்காரர்கள் வாங்கிக் கொண்டிருந்தார்கள். இவற்றின் என்ஜின்கள் பெரிதாக இருந்ததால் வண்டிகளே பெரிதாக இருந்தன. வின்ஸ்டன், ஹெயின்ஸ், துரியா முதலியோரின் வண்டிகள் மார்கெட்டுக்கு விற்பனைக்கு வந்ததைப் பார்த்த போது, போர்ட் பின் தங்கிவிட்டார் என்று தான் பட்டது.

1896ல், அதாவது ஹென்றிக்கு முப்பத்து மூன்று வயதாகிக் கொண்டிருந்த போது, அவருடைய வாழ்க்கையின் முக்கிய சம்பவங்களில் ஒன்று நிகழ்ந்தது.

"ஒரு முக்கியமான சமாசாரம்" என்று சொல்லிக்கொண்டே அவர் வேலையை முடித்துக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தார்.

கிளாரா அப்பொழுது தான் எட்ஸெலைத் தூங்க வைத்துக் கொண்டிருந்தாள். படுக்கை அறையை விட்டு, மிக மெதுவாக வெளியே வந்து, கதவைப் பின்னால் சாத்திக் கொண்டு, "என்ன விசேஷம்?" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

"எடிஸன் கம்பெனிகளைச் சேர்ந்தவர்களின் வருஷாந்தரக் கூட்டம் இந்தத் தடவை நியூ யார்க்கில் மான்ஹட்டன் கடற்கரையில் நடக்கிறது. இதற்கு டெட்ராய்ட் கம்பெனியிலிருந்து செல்லும் நான்கு பிரதிநிதிகளில் என்னையும் ஒருவனாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்" என்றார்.

"இது ஒரு பெரிய கௌரவம் தான்" என்று முகமலர்ந்து சொன்னாள் கிளாரா.

"தாமஸ் எடிஸன் அங்கு வருவாராதலால், அவரைச் சந்திக்கலாம் என்று நினைக்கிறேன்" என்றார் ஹென்றி.

சில நாட்களுக்குப் பிறகு, மான்ஹட்டன் கடற்கரையில் உள்ள ஓரியண்டல் ஹோட்டலில், நாற்பத்தொன்பது வயதான எடிஸன், ஹென்றி போர்டின் கைகளைக் குலுக்கிக் கொண்டிருந்தார். மாலையில் நடந்த விருந்தில், எல்லாரும் மின்சார வண்டியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவர் எழுந்து, ஹென்றியைச் சுட்டிக்

காட்டி, "இந்த வாலிபர் ஒரு பெட்ரோல் வண்டி தயாரித்திருக்கிருர்" என்ருர்.

மிஸ்டர் எடிஸன் உடனேயே அதில் அக்கறை கொண்டு, "அது எப்படி ஓடுகிறது" என்று கேட்டார்.

ஹென்றி அதை விவரிக்க ஆரம்பித்தார்.

"பக்கத்தில் வா, அப்பா. நீ சொல்லுவது ஒன்றும் காதில் சரியாக விழவில்லை" என்ருர் எடிஸன்.

மிஸ்டர் எடிஸனுக்கு வலது பக்கத்தில் இருந்தவர் எழுந்து இடம் கொடுக்க, ஹென்றி அந்த இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டார். எடிஸன், மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்தவர்களைப் பார்த்து, "அதிக கனமில்லாமல், அதே சமயத்தில் அதிக சக்தி எழுப்பக் கூடிய என்ஜினுக்கு, நல்ல எதிர்காலம் இருக்கிறது. ஒரே வித சக்தியைக் கொண்டே நாட்டின் எல்லாக் காரியங்களையும் நடத்துவது என்பது முடியாத காரியம்" என்ருர்.

அந்த மின்சார மேதை ஹென்றியை அநேக கேள்விகள் துருவித் துருவிக் கேட்டார். ஹென்றியும் படங்கள் மூலம் தம் என்ஜினை விவரித்தார். சிலிண்டரில் உள்ள பெட்ரோல் வாயுவை வெடிக்க, ஹென்றி என்ன ஏற்பாடு செய்திருக்கிருர் என்று மிஸ்டர் எடிஸன் மிக அக்கறையுடன் கேட்டார்.

ஹென்றி சொன்னதை யெல்லாம் கேட்டு, எடி

ஸன் சந்தோஷத்தினல் மேஜையை ஒரு குத்துக் குத்தினர். "நீ செய்து கொண்டிருப்பது சரி. அதை விடாதே அப்பா" என்ருர்.

"பாட்டரியை உபயோகிக்கலாம் என்ருல் அது வெகு பளுவுள்ளது. நீராவியினல் ஓட்டலாம் என்ருல் அதற்கு நெருப்பு வேண்டும். உன் வண்டியிலோ நெருப்பு கிடையாது, புகை கிடையாது, நீராவியும் கிடையாது. நீ போய்க் கொண்டிருக்கும் வழி சரி, விடாதே" என்ருர்.

ஹென்றி அப்படியே புளகாங்கித மடைந்தார். உலகத்தின் மிகப் பெரிய விஞ்ஞான மேதாவியான எடிஸன் மேஜையைத் தட்டி, அவரைப் பாராட்டியது, அவருக்கு உற்சாகம் அளித்தது. இதுவரை கிளாராவைத் தவிர வேறு யாரும் அவருக்குத் தைரியம் கொடுத்ததில்லை. தாம் சரியான வழியில் தான் போய்க் கொண்டிருக்கிருேம் என்று சில சமயங்களில் வெகு நிச்சயமாக இருப்பார். சில சமயங்களில் சந்தேகம் வந்து விடும். ஆனல் இப்பொழுதோ தாம் போய்க் கொண்டிருப்பது சரியான வழி என்ற நிச்சயம் ஏற்பட்டு விட்டது.

தமது இரண்டாவது வண்டியில் ஒரே மூர்த்தண்யத்தோடு வேலை செய்வது என்ற திட சங்கல்பத்துடன் ஹென்றி டெட்ராயட் திரும்பினர். இந்த வண்டி, முதல் வண்டியை விட இரண்டு அடி நீளம் அதிகம். இது பின்னுலும் போகக் கூடியது. பிஸ்டன்கள், ஸ்பார்க்குகள் இவற்றை வைத்துக் கொண்டே என்னென்னவோ கணக்குகள் போட்டார். இப்பொழுது ஒரு அதிர்ச்சியில் கிராங்க்

ஷாப்ட் ஒரு முழு சுற்று சுற்றியது. இரண்டு அதிர்ச்சிகளைச் சரியானபடி கொடுத்தால், வண்டி வேகமாக ஓடுவதோடு, ஆட்டம் இல்லாமலும் ஓடும் என்று யோசித்தார். இதைத் தவிர ஒரு தொழிற் சாலை ஆரம்பிப்பதற்குப் பணம் கண்டு பிடித்தாக வேண்டும். இத்தகைய வண்டிகளில் நம்பிக்கை வைத்து, வாங்கும்படியும் ஜனங்களைத் தூண்ட வேண்டும். தன்னுடைய பணி இப்பொழுது தான் ஆரம்பமாகிக் கொண்டிருக்கிறது என்று ஹென்றி உணர்ந்தார்.

# மூன்ருவது பாகம்

# 1901-1915.

# அத்தியாயம் 11.

விஸில் ஊதிற்று. ''எல்லாரும் ஏறியாச்சா?'' என்ற கண்டக்டரின் குரல் கேட்டது. ஹென்றி தன் மனைவியையும், பிள்ளையையும் ரயிலில் வழி அனுப்பிக் கொண்டிருந்தார். டியர்பார்னிலுள்ள தாத்தாவிடம் காட்டுவதற்காக குழந்தை எட்ஸெலை கிளாரா எடுத்துச் சென்று கொண்டிருந்தாள்.

அவர்கள் இல்லாமல் ஹென்றிக்கு வீடு விரிச்சோ என்று தான் இருக்கும். இருந்தாலும் பண்ணை வாழ்க்கை எப்படி இருக்கும் என்று எட்ஸெலுக்குத் தெரிய வேண்டாமா? ஒவ்வொரு தடவையும் இந்தப் பயணத்தைப் பற்றி வாரக் கணக்காகத் திட்டம் போடுவதே இருவருக்கும் ஒரு ஆனந்தம். ஹென்றியையும் வரும்படி தான் கிளாரா அழைத்தாள். ஆனால் ஹென்றிக்கு இப்பொழுது வேலை மும்முரமாக இருந்தது.

தம்முடைய இரண்டாவது கார் விஷயமாக அவர் எட்டு வருஷம் வேலை செய்தாய் விட்டது. ஹென்றி இன்னும் எடிஸன் கம்பெனியில் தான் இருந்தார். இப்பொழுது அவர் மாதம் நூறு டாலர் சம்பாதிக்கும் சீப் என்ஜினீயர். கம்பெனியில்

வேலைக்கு அமர்ந்த போது, மாதம் 45 டாலரில் அல்லவா ஆரம்பித்தார்?

ஒழிந்த வேளைகளில், இதற்கு எப்படிப் பணம் கண்டு பிடிப்பது என்பதைப் பற்றித் தம் சகாக்களோடு பேசுவார். ஆனால் அவர்கள் அதில் அக்கறை காட்டவில்லை. "என்ன சொல்லுகிறார், இன்று நமது விஞ்ஞானி?" என்று அவரைத் தமாஷ் பண்ணுவார்கள்.

"நான் இதற்குப் பணம் கொடுக்கிறேன் என்று வைத்துக் கொண்டாலும், இதை யார் வாங்கப் போகிறார்கள்?" என்று ஒருவர் கேட்பார்.

"மிஸ்டர் போர்ட்! உம்முடைய இந்த வண்டியைக் கொண்டே நாம் பணம் குவிக்கலாம். பெரிய கம்பெனி ஒன்று ஆரம்பித்து ஷேர்கள் விற்க வேண்டியது. பெரிய வண்டியாகப் பண்ணி, மூவாயிரம், அல்லது நாலாயிரம் கொடுக்கக் கூடிய பணக்காரர்களாகப் பார்த்து விற்றால், நமக்கு முன்னூறு அல்லது நானூறு சத விகிதம் லாபம் வரும்" என்பார் இன்னொருவர். கார் ஒன்று தயாரிக்க வேண்டும் என்பது ஹென்றியின் கனவில் பாதிப் பாகம் தான். அதை மலிவாகத் தயாரிக்க வேண்டும் என்பது தான் மறு பாதியாகும். பணக்காரர்கள் பெரிய வண்டிகள் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் தம்மைப் போன்ற சாதாரண மனிதர்களும் வாங்கும்படியாக, அத்தனை மலிவாகத் தயாரிக்க வேண்டும் என்று தான் அவர் விரும்பினார்.

வின்டன், துரியா, ஒல்ட்ஸ், ஹேன்ஸ், அப்பர்

ஸன் ஆகிய கார் தயாரிப்பாளர்களின் பெயர்கள் அடி படத் தொடங்கின. இதில் பீர்லஸ், காடிலாக், ஸ்டூடிபேக்கர், மார்மான் இவர்களுடைய பெயர் களும் சேர ஆரம்பித்தது.

மனைவியை வழி அனுப்பி விட்டு, தம்முடைய வண்டி விஷயமாகப் பணம் போடச் சொல்ல யாரை யாவது கண்டு பிடிக்க வேண்டுமே என்று சிந்தித் துக் கொண்டே, ஹென்றி வீடு திரும்பினர். அவ ருடைய சின்ன மோட்டார் வண்டி சக், சக் என்று சப்தம் போட்டுக் கொண்டு ஓடிற்று. கிளாரா இருந்தால் அவளோடு இது விஷயமாக விவாதிக்க லாம். வழியில் காப்பி ஜிம்மின் ஹோட்டலில் காப்பி சாப்பிட்டு விட்டு, சிறிது நேரம் பேசி விட்டுப் போக லாம் என்று தங்கினர்.

காப்பி ஜிம் தம் ஹோட்டலில் தனியாக இருந் தார். "தங்களைப் பார்க்க வெகு சந்தோஷம், ஹென்றி! தங்கள் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ஏதாவது பணம் கிடைத்ததா?" என்று கேட்டார்.

'இல்லை' என்று தலையை ஆட்டிக் கொண்டே ஹென்றி ஒரு ஸ்டூலில் உட்கார்ந்தார். "இன்னும் கிடைக்க வில்லை. ஆனால் அதற்காக நான் முயற்சி யை விட்டுவிடப் போவதில்லை. என்னைப் போன்ற சம்பளக்காரர்களுக்கு, அதாவது செல்வாக்கு உள்ள நண்பர்கள் இல்லாதவர்களுக்கு, இத்தகைய காரியங்கள் நாள் ஆகத்தான் செய்யும்."

"புரியவில்லையே! உங்களைப் போன்ற அத்தனை கடின உழைப்பாளியும், நம்பிக்கைக்குப் பாத்திர

மான ஆளும் டெட்ராய்ட்டிலேயே வேறு யாரும் கிடையாதே?''

"நீங்கள் என்னுடைய சிநேகிதர், அதனல் அப்படிச் சொல்லுகிறீர்கள். ஆனல் பணம் உள்ளவர்கள் என்னை ஒரு பாவையாக அல்லவா உபயோகப்படுத்த விரும்புகிருர்கள்! அவர்களை மாத்திரம் என் வழியைப் புரிந்து கொள்ள வைத்து விட்டேனுனல் எல்லாம் சரியாகிவிடும்.''

"இது உங்களுக்கு நிறைய இருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டே காப்பி ஜிம் தம் மூளையைச் சுட்டிக் காட்டினர். "எப்படியாவது அவர்களை வழிக்குக் கொண்டு வந்து விடுவீர்கள். ஆமாம், என்ன வேண்டும்? காப்பியா?''

ஹென்றி தம் காப்பியைக் கலக்கிக் கொண்டே, "எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஆனல் எல்லாவற்றிற்கும் பணம்! பணம்!! பணம்!!! பணம் அல்லவா வேண்டியிருக்கிறது!''

"என்ன யோசனை?''

"இப்பொழுது நம் நாட்டில் எல்லாரும் ஓட்டப் பந்தய பைத்தியமாக இருக்கிருர்கள். சைக்கிள் ஓட்டப் பந்தயம், குதிரை ஓட்டப் பந்தயம் என்று பல வித ஓட்டப் பந்தயங்கள் இருக்கின்றன. வேகமாக ஓடக் கூடிய கார் செய்து, அதை அடுத்த வருஷப் பந்தயத்தில் விட்டால், இவர்கள் விழித்துக் கொள்ளுவார்கள். இதைச் சொல்லும் போதே தன்னுடைய கார் பந்தயத்தில் ஜயித்து விட்டது போலும், அதனல் ஏக நல்ல விளைவுகள்

ஏற்பட்டு விட்டது போலவும், ஹென்றி கனுக் கண்டார்.

"அப்படியானுல் பந்தயக் கார் தயாரிக்கப் போகிறீர்களா?"

"பந்தயக் கார் இல்லை ஜிம்! என்னுடைய சாமர்த்தியத்தில் ஜனங்கள் நம்பும்படி செய்வதற் காக, பந்தயத்தில் ஜயிக்கக் கூடிய நல்ல கார் செய்யப் போகிறேன். பிறகு எனக்குக் கார்கள் செய்வதற்கு வேண்டிய பணம் கிடைப்பது கஷ்ட மாக இராது."

"அப்படியே செய்யுங்கள்."

"ஆனுல் சாமான்களுக்கு வேண்டிய பணம் கிடைத்தாலும், ராத்திரி வேளைகளில் தான் வேலை செய்வது என்ருல், கார் பண்ணி முடிக்க வருஷக் கணக்காக ஆகுமே! வேலையை விடுவது என்னவோ முடியாத காரியம். என் மனைவி யையும் பிள்ளையையும் காப்பாற்றியாக வேண்டு மே?"

காப்பி ஜிம் தலையை அசைத்தார். "உம் மனைவி மிகவும் நல்லவள். உம்மைப் பார்க்க வரும் போதெல்லாம் எனக்கு நல்ல கேக் சாப்பிடக் கொடுப்பாள். உம் பையனும் வெகு சுட்டி" என்று சொல்லிவிட்டு, வெகு நேரம் பேசாமல் இருந்தார். பிறகு, "எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நான் சேர்த்து வைப்பதற்கென்று எனக்கு மனைவி யும் கிடையாது, குழந்தைகளும் கிடையாது. நான் பாங்கியில் போட்டிருக்கிற பணத்தை உமக்குக்

கொடுக்கிறேன். நீர் வேலையை விட்டு விட்டு, கார் தயாரித்து பந்தயம் விடும்'' என்றார்.

''நிஜமாகவா?'' என்றார் ஹென்றி. அவரால் நம்பவே முடியவில்லை. எழுந்து ஜிம்மின் கைகளைக் குலுக்கு, குலுக்கென்று குலுக்கினார். ''எல்லாரும் ஆச்சரியப் படும்படி ஒரு பந்தயக் கார் தயாரிக்கிறேன், பாரும்'' என்றார்.

அடுத்த நாளே ஹென்றி தம் உத்தியோகத்தை விட்டு விட்டுப் பந்தயக் கார் தயாரிப்பதில் முனைந்தார். இரண்டு சிலிண்டர் என்ஜின் ஒன்று பண்ணி, அதை ஒரு சேஸிஸில் வைத்து ஓட்டிப் பார்த்தார். அது காற்றைப் போல் பறக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டு விட்டது. உடனேயே அமெரிக்காவின் கார் ஓட்டும் நிபுணராக விளங்கிய அலக்ஸாண்டர் வின்டனைத் தன்னுடைய புல்லட் வண்டியில் தம்மோடு பந்தயம் விடும்படி, வாதுக்கு அழைத்தார். டெட்ராய்ட்டுக்குப் பக்கத்தில் உள்ள, கிராஸ் பாயின்ட்டில் பந்தயம் நடப்பது என்று நிச்சயம் ஆயிற்று.

காற்றின் எதிர்ப்பு சக்தி எவ்வளவு, வண்டி எவ்வளவு எடை இருந்தால் நல்லது, முதலிய பல விஷயங்களைப் பற்றி ஹென்றி மணிக் கணக்காகச் சிந்தித்துக் கணக்குப் போட்டார். எட்டு மாத ஏற்பாடுகளுக்குப் பிறகு 1902 கோடையில், ஹென்றியின் வண்டி பந்தயத்திற்குத் தயாராக இருந்தது. ஒரு நாள் விடியற்காலை நான்கு மணிக்கு, தெருக்களில் யாரும் இல்லாத சமயம், காப்பி ஜிம் ஹென்றிக்குப் பக்கத்தில் நெருக்கி

யடித்து உட்கார்ந்து கொள்ள, வண்டி புறப் பட்டது. காப்பி ஜிம் தம் தொப்பியைத் தம் இரு கைகளாலும் பிடித்துக்கொண்டார். "அப்பா! மின்னல் மாதிரி யல்லவா ஓடுகிறது?" என்றார்.

ஹென்றி சிரித்தார். "பூ! இது என்ன வேகம்? பந்தயம் விடுகிற இடம் வரட்டும், காட்டு கிறேன்" என்றார்.

கிராஸ் பாயின்ட் பந்தய தினத்தன்று ஊரில் ஏக உற்சாகம். வேடிக்கை பார்ப்பதற்கு ஏகக் கூட்டம். டெட்ராய்ட்டிலிருந்தும், க்ளீவ்லாண்டிலிருந்தும் பிரமுகர்கள் வந்திருந்தார்கள் என்று பத்திரிகைகள் வர்ணித்தன. பெரிய வல்லுநனை வின்டனைப் பார்ப்பதற்கு அவர்கள் வந்திருந்தார்கள். எல்லாரும் வின்டனை உற்சாகப் படுத்தி, ஆரவாரம் செய்தார் கள். எல்லாப் பந்தயங்களிலும் வெற்றி பெற்று விட்ட தம் காரில் வின்டன் வெகு நம்பிக்கையோடு உட்கார்ந்திருந்தார்.

பார்ப்பதற்கே அழகாக இல்லாத தம் வண்டி யை அந்த சமயம் ஹென்றி அங்கு ஓட்டிக்கொண்டு வந்தார். எல்லாரும் வண்டியைப் பார்த்து நையாண்டி பண்ணினார்கள். "டெட்ராய்ட்டி லிருந்து வந்திருக்கும் இந்த போர்ட் யார்?" என்று கேட்டார்கள். ஹென்றியைத் தட்டிக் கொடுக்க காப்பி ஜிம் அங்கிருந்தார். "அன்று ஒரு நாள் விடியற்காலை நான்கு மணிக்கு ஓட்டினீரே, அந்த மாதிரி ஓட்டும்" என்றார்.

சைக்கிள் வல்லுநனை டாம் கூப்பரும் இந்த

வேடிக்கையைப் பார்க்க அங்கு வந்திருந்தார். வின்டனிடம் ஏதோ சொல்லுவதற்காக அவர் நடந்து அவரிடம் சென்ற போது, கூட்டம் அவரைப் பார்த்து, சந்தோஷ ஆரவாரம் செய்தது.

"போர்டின் பேத்தல் கார் ஒன்று தான் போட்டிக்கு இருக்கிறுப் போல் தோன்றுகிறது. வெகு எளிதில் வென்று விடலாம்" என்ருர் டாம் கூப்பர்.

"ஆம்" என்ருர் வின்டன். "என் வண்டியைக் கூட நான் அதிகம் சிரமப் படுத்த வேண்டிய தில்லை."

கிளாராவும், எட்ஸெலும் கூட்டத்தில் உட் கார்ந்து கொண்டு, பந்தயத்தை ஆரம்பித்து வைக்கும் வேட்டு எப்பொழுது சுடப்படும் என்று ஆவலாகக் காத்துக்கொண்டிருந்தார்கள். ஹென்றி தோற்றுப் போய் விடலாம் என்ற பயத்தோடு, அவர் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது என்று கிளாரா நடுங்கிக் கொண் டிருந்தாள். மோட்டார் பந்தயம் மிகவும் ஆபத் தான விளையாட்டு என்பது அவளுக்குத் தெரியும்.

வின்டன் தம்முடைய காரில் எழுந்து நின்று, தம்முடைய தொப்பியை எல்லாருக்கும் ஆட்டி விட்டு, தம்முடைய புல்லட் வண்டியில் உட்கார்ந் தார். வேட்டுச் சப்தம் கேட்டது. பந்தயம் ஆரம் பித்தது.

புல்லட் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. ஹென்றி யின் வண்டி அதைப் பின் தொடர்ந்தது. முதல்,

இரண்டாவது, மூன்றுவது சுற்றுகளில் விண்டனின் வண்டி வெகு அனுயாசமாக முன்னுல் சென்று கொண்டிருந்தது. எல்லாரும் விண்டனை நோக்கி ஆரவாரம் செய்தார்கள். கிளாரா கை விரல்களை மடக்கிக் கொண்டு, உதட்டைக் கடித்துக் கொண்டாள். "இன்னும் கொஞ்சம் பெட்ரோலைத் திறந்து விடு அப்பா" என்று எட்ஸெல் உரக்கக் கத்தினுன். "போர்ட்! போர்ட்! முன்னுல் வா, முன்னுல் வா" என்று காப்பி ஜிம் தொண்டை கிழியக் கத்தினுர்.

ஹென்றியின் சின்ன வண்டி மெள்ள, மெள்ள விண்டன் வண்டியை நெருங்கிற்று. இன்னும் கொஞ்சம் பக்கம், இன்னும் கொஞ்சம் பக்கம் என்று சென்று, சடாரென்று அந்த வண்டியைத் தாண்டி முன்னுல் சென்று பாய்ந்தது.

ஹென்றி போர்ட் என்ற மனிதர் பந்தய ரிகார்டை மைலுக்கு ஒரு நிமிஷமும், ஐந்தில் ஒரு பங்கு செகண்டுமாகக் குறைத்து விட்டார் என்பதோடு, அமெரிக்காவின் மோட்டார் வல்லுநனுகி விட்டார் என்பது, அன்று அங்கு கூடியிருந்தவர்களுக்கும், மற்ற உலகத்தினருக்கும் அதிர்ச்சியைத் தந்தது.

சைக்கிள் சாம்பியனுன டாம் கூப்பர் ஹென்றியை நோக்கி ஓடினுர். ஹென்றி தம் காரில் உட்கார்ந்திருந்தபடி தம் முகத்தில் படிந்திருந்த வியர்வையையும், தூசியையும் துடைத்து விட்டுக் கொண்டிருந்தார்.

"சபாஷ், போர்ட்! சபாஷ்!" என்றுர் கூப்பர்.

கூப்பர் ஹென்றியின் வண்டியைக் கூர்ந்து பார்த்தார். "ஆமாம், யாருடைய என்ஜினைத் தாங்கள் உபயோகப் படுத்தினீர்கள்?" என்று கேட்டார்.

"நானே செய்தது."

"நீங்கள் செய்த என்ஜினா? அப்படியானால் நான் அதை ஒரு நாள் வந்து பார்க்க வேண்டுமே?"

"எப்பொழுது வேண்டுமானாலும் வாருங்களேன்! என் என்ஜினைக் காண்பிக்கிறேன்."

அடுத்த சில நாட்களுக்கு ஹென்றியைப் பத்திரிகைக்காரர்களும், படம் பிடிப்பவர்களும் சூழ்ந்து கொண்டார்கள். ஹென்றியின் போட்டோ, அவருடைய கார், ஷெட் முதலியவற்றின் படங்கள் பத்திரிகைகளில் பிரமாதமாகப் பிரசுரமாகின. அவர் வேலையைப் பற்றியும், அவர் ஆரம்பிக்க ஆசைப்பட்ட கம்பெனியைப் பற்றியும் தகவல்கள் கொடுக்கப்பட்டன. நான், நீ என்று பணம் போட எல்லாரும் முன் வந்தனர். ஆனால் எல்லாரும் பழைய பல்லவியைப் பாடினார்கள். எந்த மாதிரி வண்டி தயாரிக்க வேண்டும் என்பது தங்கள் இஷ்டம் தான் என்றார்கள். ஹென்றியோ, எத்தனை அதிகப் படியான பேர்கள் வாங்க முடியுமோ, அத்தகைய விலையில் தான் கொண்டு வர வேண்டும், அப்பொழுது தான் அதிகப்படியான பேர்களுக்குத் தொண்டு செய்ததாகும் என்று கருதினார்.

ஹென்றியின் ஷெட்டுக்கு அடிக்கடி டாம் கூப்பர் வருவார். இரண்டு பேரும் நெருங்கிய நண்பர்க

ளாகிக் கொண்டிருந்தார்கள். சில சமயம் வீட்டுக்கு முன்னுல் உள்ள தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டு, ஹென்றியின் நிபந்தனைக்கு உட்பட்டு பணம் சேர்ப்பது எப்படி என்று யோசனை பண்ணு வார்கள்.

"இன்னொரு பந்தயத்தில் ஜயித்தால் என்ன? கிராஸ் பாயின்ட்டில், அடுத்த வசந்த ாலத்தின் போது ஒரு பந்தயம் நடக்க இருக்கிறது" என்ருர் கூப்பர்.

"இதே வண்டியை உபயோகித்தால் ஜனங் களுக்கு ஒன்றும் வித்தியாசம் தெரியாது. ஆமாம், வேறு புது வண்டி செய்தால் என்ன?"

"ஆமாம், அதுதான் சரி. உம்மால் இதை விடச் சிறந்த கார் செய்ய முடியுமோ?" என்று கேட்டார் கூப்பர்.

"நான்கு சிலிண்டர் கார் ஒன்றுக்கு என் மனத்தில் திட்டம் வைத்திருக்கிறேன்."

கூப்பர் சந்தோஷத்தினுல் துள்ளிக் குதித்து, அவர் முதுகில் தட்டிக் கொடுத்தார். .அதையே செய்யுங்கள். இதற்காக உங்களுக்கு எத்தனை பணம் செலவாளுலும் சரி, நான் கொடுக்கிறேன்" என்ருர் கூப்பர்.

இதுவரை யாரும் இப்படி ஹென்றியிடம் பேசியது இல்லையாதலால், அவரால் நம்பவே முடிய வில்லை. "இந்த மாதிரி உற்சாகம் கொடுத்தால் என்னுல் என்ன தான் செய்ய முடியாது? இப் பொழுதே படம் போட ஆரம்பித்து விடுகிறேன்.

குறிப்புப் படம் என் மனத்தில் இருக்கிறது'' என்று சொல்லி விட்டு ஹென்றி கூப்பரின் கையைப் பிடித்துக் குலுக்கினர்.

பணத்தைப் பற்றிய கவலே இல்லாததால், வேகம் ஒன்றையே முக்கியமாகக் கொண்ட இரண்டு கார்களை ஹென்றி பண்ண ஆரம்பித்தார். ஒவ்வொரு காரிலும் நான்கு பெரிய சிலிண்டர்கள் பொருத்தப் பட்டன. இவற்றுக்கு எண்பது குதிரை பலம் இருந்தது. இது வரை இத்தனே பலம் கொண்ட என்ஜின்களை யாரும் எண்ணிப் பார்த்தது கூட இல்லே. மோட்டார் ஓடிய போது, ஷெட்டே கிடு, கிடு என்று ஆடியது.

எம்பயர் ஸ்டேட் எக்ஸ்பிரஸ் என்ஜினுக்கு இடப்பட்ட '999' என்ற பெயரை ஒரு காருக்கும், 'அம்பு' என்கிற பெயரை இன்னெரு காருக்கும் ஹென்றி கொடுத்தார். கிராஸ் பாயின்ட் பந்தயத்தில் 999தை விடுவது என்றும் தீர்மானித்தார். புகழ் பெற்ற அந்த நீராவி என்ஜினேப் போலவே இதுவும் புகழ் அடையும் என்று நம்பினர்.

பந்தயப் பாதையில் அதை ஓட்டிப் பார்த்த போது, கூப்பர் அப்படியே திகைத்துப் போய் விட்டார். அது செய்த சப்தம் காதைச் செவிடாக்கியதோடு, வெகு தூரத்திற்குக் கேட்டது. கூப்பர் அதைப் பயத்தோடேயே பார்த்தார்.

"இன்று போன வேகம் பாதி வேகம் தான். நான் முழு பெட்ரோலேயும் திறந்து விட வில்லே. 999தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று

கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கேட்டார் ஹென்றி.

"அந்த வண்டியை நான் ஓட்டுவேன் என்று நினைத்தீரா? எத்தனை கோடி பணம் கிடைத்தாலும் சரி, நான் ஓட்ட மாட்டேன்."

"நானும் தான் மாட்டேன்" என்றார் ஹென்றி. "ஆனால் ஓட்ட ஆள் இல்லாமல் இதனால் என்ன பிரயோசனம்? உயிரைத் திரணமாக மதித்து இதை ஓட்டுவதற்கு யார் இருக்கிறார்கள்?"

"சரியான பந்தயக் கார் தான் செய்திருக்கிறீர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதை ஓட்டு வதற்கு மிகத் தைரியசாலி ஒருவரைக் கண்டு பிடிக்க வேண்டுமே? ஆ! எனக்குத் தெரிந்த சைக்கிள் பந்தயக்காரரர் ஒருவர் இருக்கிறார். வேகம் என்றாலே அவருக்குப் பயித்தியம். பார்னி ஓல்ட் பீல்ட் என்னும் அவருக்கு இன்றே தந்தி யடிக் கிறேன்!" என்றார் கூப்பர்.

ஓல்ட்பீல்ட் பந்தய சைக்கிள் ஓட்டுவதையே ஒரு தொழிலாக வைத்திருந்தார். இதற்கு முன்னால் அவர் கார் ஓட்டியதில்லை. இருந்தாலும் அதி வேகமாகப் போகலாம் என்ற எண்ணம் அவருக்கு உற்சாகத்தைக் கொடுத்தது.

பந்தயம் ஆரம்பிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னால் பார்னி வந்து சேர்ந்தார். ஒரு வாரத் திற்குள் கார் சம்பந்தமாக என்னவெல்லாம் சொல்லிக் கொடுக்க முடியுமோ அத்தனையையும் அவர் மூளையில் ஹென்றியும், கூப்பரும் திணித்

தார்கள். மோட்டாரைப் பற்றியும், ஸ்டீரிங்கை எப்படி பிடித்துக் கொள்வது என்பது பற்றியும், வளைவுகளில் எப்படி ஜாக்கிரதையாக ஓட்ட வேண்டும் என்பது பற்றியும், பார்னி தெரிந்து கொண்டார். பந்தயத்திற்கு முதல் நாள் பந்தயப் பாதையில் காரைக் குறைந்த வேகத்தில் ஓட்டிப் பார்த்தார்.

தன் சைக்கிளை எத்தனை லாகவமாக ஓட்டினாரோ அத்தனை லாகவமாக பார்னி 999ஐதை ஓட்டினார். "என்னைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். நாளைக்கு எப்படி ஓட்டுகிறேன் பாருங்கள்" என்றார்.

கிராஸ் பாயின்ட் பாதை ஒரு மூன்று மைல் நீளப் பாதை. வளைவுகளில் கார் வேகத்தைக் குறைக்காமல் போவதற்குச் சௌகரியமாக பாதை சாய்ந்து அமைக்கப் படவில்லை. அன்று ஆறு கார்கள் பந்தயத்தில் கலந்து கொண்டன. பார்னி அசையாமல் காரில் உட்கார்ந்திருந்தார். ஹென்றி காரின் கைப்பிடியைச் சுற்றிக் கொண்டிருக்கையில் கூப்பரைப் பார்த்து பார்னி, "இது என்னைக் கொன்றாலும் கொன்று விடும். ஆனால் அப்படிக் கொல்லும் போது, வண்டி நகர்ந்து கொண்டிருக்காது, பறந்து கொண்டு தான் இருக்கும்" என்றார்.

கார்கள் புறப்பட்டன. பார்னி ஓல்ட்பீல்ட் வெளிப் பார்வைக்கு வெகு நிதானமாக இருப்பவர் போல் தென்பட்டார். ஆனால் உள்ளே எரிமலை போல் குமுறிக் கொண்டிருந்தார். '999' முழு வேகத்துடன் ஓட ஆரம்பிக்கவே, அதிலிருந்து

அக்னி ஜ்வாலை கிளம்பிற்று. வளைவுகளில் கூட வேகத்தைக் குறைக்காமலே ஓட்டினார். ஆபத்தைப் பற்றிய கவலை யில்லாமலே கன குஷியாக ஓட்டினார். '999' எல்லா வண்டிகளுக்கும் அரை மைல் முன்னால் ஓடி நின்றது. அமெரிக்காவில் கிழக்குக் கரையி லிருந்து, மேற்குக் கரை வரை பார்னியைப் பற்றி யும், '999' தைப் பற்றியும் பேசாதவர்கள் கிடை யாது.

சில வாரங்களுக்குப் பிறகு பார்னி ஓல்ட்பீல்ட் '999' தை நியூ யார்கில் உள்ள யாங்கர்ஸுக்கு எடுத்துக் கொண்டு போய் தமக்கும், ஹென்றிக்கும் புகழ் தேடிக் கொண்டார். இந்தப் புதிய வேலை பார்னிக்கு மிகவும் பிடித்தது. சைக்கிள் பந்தயம் இதற்கு முன்னால் ஒன்றுமே யில்லை என்று அவருக் குப் பட்டது.

ஹென்றிக்கும் இது விஷயத்தைக் குறித்து சந்தோஷம் தான். மோட்டார் பந்தய விஷய்மாக அவர் குதூகலப் படாவிட்டாலும், தம்முடைய திட்டங்களை நிறை வேற்ற இவை உதவும் என்று அவருக்குத் தெரியும். எல்லாரும் '999'தைப் பற் றிப் பேசிக் கொண்டிருக்கையிலேயே ஏதாவது வழி செய்யவேண்டும் என்று தீர்மானித் தார்.

அலெக்ஸாண்டர் மால்கம்சன் என்ற நிலக்கரி வியாபாரி குதிரை யில்லா வண்டிகளின் எதிர் காலத்தைப் பற்றி நம்பிக்கைக் கொண்டவர் என் பது ஹென்றிக்குத் தெரியும். எடிஸன் கம்பெனி யில் இருந்த போது ஹென்றி அவரிடம் நிலக்கரி

வாங்கி யிருக்கிருர். அவரும் ஹென்றியின் ஷெட்டுக்கு வந்து, ஹென்றியின் காரில் சவாரி செய்திருக்கிருர். ஆகவே காலையில் மால்கம்சனைப் போய்ப் பார்ப்பது என்று ஹென்றி தீர்மானித்தார்.

# அத்தியாயம் 12.

''வணக்கம் அலக்ஸ்'' என்று கூறிக்கொண்டே, ஹென்றி மால்கம்சன் ஆபீஸ் அறைக்குள் நுழைந்தார்.

மூலேயில் ஒரு உயர்ந்த மேஜை யண்டை உட்கார்ந்திருந்த குமாஸ்தா ஜேம்ஸ் கூஸன்ஸை ஹென்றி சுக செய்தி விசாரித்தானதும், மால்கம்சன் என்ன விஷயம் என்று ஹென்றியை விசாரித்தார்.

''அலக்ஸ்! ஜனங்கள் மோட்டார் கார் வாங்கும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று முன்னெரு தடவை சொல்லியிருக்கிறீர்களே, ஞாபகம் இருக்கிறதா? மோட்டார் கார் தயாரிப்பதில் எல்லாரையும் முந்திக் கொள்ள தங்களுக்கு விருப்பமுண்டா?'' என்று ஹென்றி கேட்டார்.

வாயில் இருந்த சுருட்டை வாயின் ஒரு பக்கத்திலிருந்து மற்ருெரு பக்கத்திற்குத் தள்ளிக் கொண்டு, மால்கம்சன் பேசினுர். அவர் முன் கூட்டியே தன் பணத்தில் கொஞ்சம் மோட்டார் ஷேர்களில் போடுவது என்று தீர்மானித்து வைத்திருந்தார். ஆனல் அதை ஹென்றியின் கம்பெனியில் போடுவதா,

அல்லது வேறு கம்பெனியில் போடுவதா என்று நிச்சயம் ஏற்படவில்லை. ஆகவே, ஹென்றியைப் பார்த்து, "உம்முடைய '999'தைக் கொண்டு எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்து விட்டீர். சரி, உம்முடைய நிபந்தனைகள் என்ன?" என்று கேட்டார்.

அவர்கள் என்ன பேசிக் கொள்ளுகிறார்கள் என்று ஜேம்ஸ் கூஸன்ஸ் காது கொடுத்துக் கவனிக்க ஆரம்பித்தார். ஹென்றி போர்ட் சொன்னார்.

"போர்ட் மோட்டார் கம்பெனியின் பெயரில் கனமில்லாத, நல்ல கார் செய்து ஆயிரம் டாலருக்குள் விற்க வேண்டும். மாக் அவன்யூவில் ஒரு தச்சர் பட்டறை இருக்கிறது. அதை மோட்டார் தொழிற் சாலையாக மாற்றி அமைத்துக் கொள்ளலாம். நான் ஜெனரல் மானேஜராகவும், முக்கிய என்ஜினீயராக வும் இருந்து, மாதம் 200 டாலர் சம்பளம் எடுத்துக் கொள்வேன்."

"நான் போடுகிற பணத்திற்கு எனக்கு என்ன லாபம்?" என்று கேட்டார் மால்கம்சன்.

"லட்சம் டாலர் போட்டு ஆரம்பிக்கும் கம் பெனியில், 51 சத விகித பங்கு நம் இருவரிடமும் ஆளுக்குப் பாதி இருக்கும்—உமக்கு இருபத்தைந் தரை சத விகிதமும், எனக்கு இருபத்தைந்தரை சத விகிதமும். மூவாயிரம் டாலர் வரை கம்பெனியின் பில்களைத் தாங்கள் கொடுக்க முன் வர வேண்டும்" என்றார் ஹென்றி. மால்கம்சன் நிச்சயமாகப்

பணம் கொடுப்பார் என்று ஹென்றிக்குத் தெரியும்.

மால்கம்சன் வெகு நேரம் பேசாமல் இருந்தார். அதிக பணம் சேர்க்க வேண்டும் என்று வெகு காலமாக அவருக்கு ஆசை. அவருடைய நிலக்கரி தொழிலில் நல்ல பணம் வந்தது. ஆனல் அதை விட நிறையப் பணம் ஈட்டும் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தார். அது இது தானே என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது.

கடைசியில் ஹென்றியைப் பார்த்து மால்கம்சன், "உம்முடைய திட்டங்களின்படியே செய்யும். நான் பணம் கொடுத்து உதவுகிறேன்" என்று சொல்லி விட்டு, தம் குமாஸ்தா ஜேம்ஸ் கூஸன்ஸைப் பார்த்து, "உன்னிடம் ஏதாவது பணம் இருந்தால் இந்தக் கம்பெனியில் போடு. எனக்கு ஹென்றியை வெகு காலமாகத் தெரியும். எடிஸன் கம்பெனியில் மிக மேல் பதவிக்கு வந்திருக்கக் கூடியவர். அதை வேண்டாம் என்று உதறித் தள்ளி விட்டார் என்ருல் காரணம் இல்லாமல் செய்திருப்பாரா?" என்ருர்.

கூஸன்ஸ் இந்த சந்தர்ப்பத்திற்காகத் தான் காத்திருந்தார். அவர் ஹென்றியிடம் அடிக்கடி மலிவுக் கார் விஷயமாகப் பேசியிருக்கிருர். அதோடு ஹென்றி யோக்கியர் என்றும், யந்திர சம்பந்தமான விஷயங்களில் கெட்டிக்காரர் என்றும் அவருக்குத் தெரியும்.

"என்னிடம் பாங்கியில் 900 டாலர் இருக்கிறது. பத்திரங்களாக 1500 டாலர் இருக்கிறது.

என் சகோதரி ஒருத்தி, பள்ளிக்கூட வாத்தியாராக இருக்கிருள். அவள் ஒரு 100 டாலர் கொடுப்பாள்'' என்ருர்.

''கூஸன்ஸ்! இது விஷயமாகத் தாங்கள் இத்தனை அக்கறையாக இருப்பதால் ஹென்றியின் பில்களுக்காக நான் கொடுக்கும் பணத்தை உங்கள் பெயரிலேயே கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்'' என்ருர் மால்கம்சன்.

''ஏன்?'' என்று சேர்ந்தாற் போல் கேட்டார்கள் ஹென்றியும், கூஸன்ஸூம்.

''மோட்டார்த் தொழில் போன்ற பைத்தியகாரத் தொழிலில் பணம் போடுகிறேன் என்று வெளியில் தெரிந்தால், பாங்கியில் என் நாணயம் கெட்டு விடும்.''

மோட்டார்த் தொழிலில் பணம் போடுவது, அத்தனை உசிதமல்ல என்று ஜனங்கள் கருதுகிருர்கள் என்று ஹென்றி தெரிந்து கொண்டார். இருந்தாலும் மால்கம்சனைப் பார்த்து, ''அதைரியப் படாதீர்கள்! என்னை விடப் பைத்தியக்காரர்கள் இருக்கிருர்கள் என்று இப்பொழுது தான் கேள்விப்பட்டேன். ஆர்வில் ரைட், வில்பர் ரைட் என்று இரண்டு பேர் ஆகாயத்தில், பறவையைப் போல் பறக்கும், ஆனல் அதே சமயம் ஆகாயத்தை விட கனமாக இருக்கும் யந்திரம் ஒன்று கண்டு பிடிக்க முயன்று கொண்டிருக்கிருர்கள்'' என்ருர்.

''இதிலும் போய்ச் சிலர் பணத்தைப் போடுகிருர்களே!'' என்ருர் மால்கம்சன்.

"நீங்கள் இதில் நஷ்டமடைய மாட்டீர்கள். மோட்டார் கார் அமெரிக்கர்களின் அத்தியாவசிய மான பொருளாக மாறப் போகிறது. அதிலும் எல்லாரும் வாங்கும் படியான கார் நான் தான் பண்ணப் போகிறேன் என்பதைப் பற்றி எனக்குச் சந்தேகமே இல்லை. குதிரை யில்லாமல் ஓடும் வண்டி பண்ணுவேன். வண்டியும், குதிரையும் வைத்துக் கொள்ளக் கட்டாதவர்கள், இதை வாங்கி வைத்துக் கொள்ளும்படி, அத்தனை மலிவாகப் பண்ணுவேன்" என்றார்.

நிலக்கரி காரியாலயத்தை விட்டு ஹென்றி துள்ளிக் குதித்துக் கொண்டே வெளியே வந்தார். அமெரிக்காவுக்கு மலிவுக் கார் செய்யும் பணியை ஆரம்பிக்கப் போகிறோம், என்ற எண்ணம் தான் அவருடைய உற்சாகத்திற்குக் காரணம். இந்த நல்ல சேதியைக் கிளாராவிடம் உடனே போய்ச் சொல்ல வேண்டும் என்று விரைந்து சென்றார்.

எல்லாவற்றையும் ஆரம்பித்து வைப்பதற்குள், இலையுதிர் காலம் வந்து விட்டது. செய்ய வேண்டிய காரியங்கள் அத்தனை இருந்தன. ஹென்றி எழுதிக் கொடுக்கும் பிளான்படி, என்ஜின், பாடி, சக்கரம், டயர் பாகங்கள் எல்லாவற்றையும், இவற்றைத் தயாரிக்கும் பல கம்பெனிகளிலிருந்து வாங்குவது என்றும், மாக் தெருவில் உள்ள தங்கள் தொழிற் சாலையில் இவற்றை இணைப்பது என்றும் தீர்மா னித்தார்கள். தங்களுக்கு வேண்டிய பாகங்களைத் தாங்களே செய்து கொண்டால் சாமான்கள் மலிவாக இருப்பதுடன் சாமான்களும் ஒரே சீராக

இருக்கும். ஆனால் அதற்கு வேண்டிய பணம் இல்லாததால் பின்னால் தான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஹென்றி இருந்தார்.

ஹென்றி ஒவ்வொரு நாளும் வெகு நேரம் வேலை செய்வார். காருக்கு இரண்டு சிலிண்டர் என்றும், அதன் பலம் எட்டு குதிரை பலம் என்றும் தீர் மானிக்கப் படடது. அது மணிக்கு முப்பது மைல் போகும். டெட்ராய்ட்டில் யந்திர ஷாப் நடத்திக் கொண்டிருந்த டாஜ் சகோதரர்களைப் பார்க்க ஹென்றி போனார். 650 கார்களுக்குப் பாகங்கள் வேண்டு மென்றும், நாளைக்குப் பத்து கார்களுக்குப் பாகங்கள் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டார். அவர்கள் சரி என்று ஒப்புக் கொண்டு, தங்களுக்குக் கிடைக்க வேண்டிய பணத்திற்குப் பதிலாக போர்ட் கம்பெனியில் 50 ஷேர்கள் எடுத்துக் கொள்ளுவ தாகச் சொன்னார்கள். இதை விட நல்ல ஸ்திரமான கம்பெனிகளிலிருந்து ஷேர்கள் வாங்கிக் கொள்ளும் படி கோரிக்கைகள் வந்திருந்தும், டாஜ் சகோதரர் கள் தைரியமாக போர்ட் கம்பெனியில் ஷேர் வாங்க ஒப்புக் கொண்டார்கள். ஓல்ட்சும், மற்றவர்களும் பண்ணின விலை யுயர்ந்த கார்களை விட, ஹென்றியின் சின்னக் காரில் லாபம் இருக்கிறது என்று அவர் களுக்குப் பட்டது.

கடைசியில் 1903, ஜூன், 16ம் தேதியன்று எல்லா சிகப்பு நாடா அமல்களும் பூர்த்தியாக, பதிமூன்று பங்குதாரர்களுடன் கம்பெனி ஆரம்ப மாயிற்று.

இணைப்பு வேலைக்காக ஒரு சிலரே வேலைக்கு

அமர்த்தப் பட்டனர். ஒரு மெக்கானிக், ஒரு ட்ராப்ட்ஸ்மேன், சில்லறை வேலைகளைக் கவனிக்க ஒரு ஆள், இவர்கள் தான் இருந்தனர். இவர்களுக்கு சம்பளமும் குறைச்சல். மணிக்கு 25 சென்ட் கூட இல்லை. இருந்தும் மணியைப் பாராமல் இவர்கள் ஹென்றியுடன் இரவில் வெகு நேரம் வரை உழைப் பார்கள். ஹென்றிக்கோ இணைக்கப் பட்ட வண்டி களைப் பற்றித் திருப்தி ஏற்படவில்லை. அதை இன்னும் எப்படிச் சீர்திருத்தலாம் என்பதிலேயே கவனமாக இருந்தார்.

ஜேம்ஸ் கூஸன்ஸ் தான் போர்ட் மோட்டார் கம்பெனியின் காரியதரிசியும், பொக்கிஷதாரும். ஆகஸ்ட் மத்திக்குள் எட்டு அல்லது பத்து கார்கள் இணைக்கப்பட்டு விட்டன. ஆனால் ஒன்றையும் வெளியில் அனுப்ப வில்லை. கார்களை வெளியில் அனுப்பிப் பணத்தைப் பெறும்படி கூஸன்ஸ் வற் புறுத்தினர். "நம்மிடம் கொஞ்சம் தான் முதல் இருக்கிறது. அதுவும் குறைந்து கொண்டு வருகிறது" என்று எச்சரித்தார்.

அரை மனதுடன் ஹென்றி, வண்டிகளை ரயிலில் ஏற்றி, அவற்றை மின்னபொலிஸ், செயின்ட்பால், இந்தியானபொலிஸ் முதலிய இடங் களுக்கு அனுப்பினர்.

சில செய்திப் பத்திரிகைகளும், வியாபாரப் பத்திரிகைகளும் போர்ட் வண்டியைப் பற்றி விவரித்துக் கட்டுரைகள் எழுதின. தினப்படி உபயோகத்திற்காக உருவாக்கப் பட்ட வண்டிகள் என்றும், எல்லாரும் வாங்கும்படியாக விலை

குறைத்து வைக்கப் பட்டிருக்கிறது என்றும், யந்திர நுட்பம் தெரியாதவர்கள் கூட ஓட்டும் படியாக எளிய முறையில் செய்யப்பட்டிருக்கிற தென்றும் இப்பத்திரிகைகள் எழுதின.

ஒரு வருஷத்திற்குள் இந்த காருக்குத் தேவை அதிகமாகி விட்டது. கூஸன்ஸ், 36,957 டாலர் லாபம் என்று கணக்குப் போட்டுச் சொன்னார். சின்ன போர்ட் வண்டி எல்லாருக்கும் பிடிக்க ஆரம்பித்தது. ஜனங்களுக்கும் மோட்டார் பைத்தியம் பிடிக்க ஆரம்பித்தது. "புது போர்ட் டைப் பார்த்தாயா?" என்ற கேள்வி அமெரிக்கா முழுவதும் அடிபட ஆரம்பித்தது. போர்ட் காரின் விலை 850 டாலர். ஆனால் விளக்கு, ஹார்ன், வின்ட் ஷீல்ட் இவற்றுக்குத் தனிப் பணம். மற்ற மோட்டார் வண்டிகளுக்கு எட்டாயிரம் டாலர் வரை விலை இருந்தது. ஆகவே, ஆயிரம் டாலருக்குள் கிடைத்த இந்தக் கார் சாதாரண ஜனங்களுக்கு நற்செய்தியாகவே பட்டது.

"இந்த சப்தம் போடும் மோட்டார் வண்டி களுக்காக ஜனங்கள், தங்கள் குதிரைகளையும், சைக் கிள்களையும் விட்டு விடுவார்கள் என்று நினைக்கிறீர் களா?" என்ற கேள்வியைத் தான் தெருச் சந்தி களிலும், ஜனங்கள் ஒன்று கூடின இடங்களிலும் ஒருவரை யொருவர் கேட்டுக் கொண்டார்கள்.

மோட்டாரில் செல்வதில் ஆனந்தம் இருக்கிறது என்று கண்டு பிடித்த ஜனங்கள் உல்லாசமாகப் பொழுது போக்கினார்கள். அப்பா, மூக்குக் கண்ணா டியை மாட்டிக் கொண்டு, அழுக்குப் படாமல்

இருக்க மேலே துணியைக் கட்டிக் கொண்டு, காரை ஸ்டார்ட் பண்ண கைப் பிடியைப் பிடித்து வேக மாகச் சுற்றுவார். அம்மா, தன் பெரிய வைக்கோல் தொப்பியைச் சுற்றி தன் நீள முகமூடியைக் கட்டிக் கொண்டு, மேலே அழுக்குப் படாமல் இருக்கத் தானும் ஒரு துணியைக் கட்டிக் கொண்டு, அப்பா பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளுவாள். அப்பா "கன வேகமான" இருபது மைல் வேகத்திற்கு வண்டியை விடும் போது, பின் சீட்டில் உட்கார்ந் திருக்கும் குழந்தைகள், பாணலியில் குதித் தெழும் சோளப் பொறிகளைப் போல் குதித் தெழுவார்கள்.

நிறைய ட்யூப்களும், டயர்களும், ஸ்பார்க் ப்ளக்குகளும், ஒரு யந்திர ஷாப்புக்கு வேண்டிய யந்திரக் கருவிகளும் கூட எடுத்துச் செல்வார்கள். என்ஜினை ஸ்டார்ட் பண்ணுவது அத்தனை சுலப மான காரியமாக இல்லை. சில சமயங்களில் சுற்றுச் சுற்று என்று கைப்பிடியைச் சுற்றிக் கொண்டே இருப்பார்கள், ஒன்றும் நிகழாது. விடா முயற்சி யோடு சுற்றினால் ஒன்று கை உடையும், அல்லது என்ஜின் ஸ்டார்ட் ஆகி புகை கிளம்பும். வழியில் குன்றுகள் இருந்தால், டியர்கள் வழுக்க, வண்டி கரகர வென்று கீழே இறங்கி விடும்; திரும்பவும் ஏற முயற்சி செய்ய வேண்டியது தான். மழை பெய்தால் அவர்கள் கீழே இறங்கி, எந்தப் படுதாவை எங்கு மாட்ட வேண்டும் என்று யோசனை பண்ணுவதற்குள், ஒரே தெப்பலாக நனைந்து விடுவார்கள். ஏனெனில் ஒவ்வொரு படு தாவும் வெவ்வேறு அளவுள்ளது.

ரஸ்தா விசாரணை காரியாலயத்திற்குப் பதில், பொது ஜன ரஸ்தா காரியாலயம் என்று ஆரம்பிக்கப் பட்டதைக் குறித்து ஹென்றி சந்தோஷப் பட்டார்.

புதுக் காரியாலயம் தேசத்தின் முக்கிய ரஸ்தாக்களைப் பற்றி ஒரு கணக்கு எடுக்க உத்தர விட்டது. நல்ல ரஸ்தாக்கள் அமைப்பதில் தேசமே அக்கறை எடுத்துக் கொண்டது. இதனுல் குதிரைகளுக்கும், சைக்கிள்களுக்கும் பதில் தன் வண்டியை உபயோகிக்க ஆரம்பிப்பார்கள் என்று ஹென்றிக்குத் தெரியும். சில இடங்களில் கான்க்ரீட் ரஸ்தாக்கள் பரீட்சார்த்தமாகப் போட்டார்கள். 1904-ல் நாலைந்து நகரங்களில் ஒரு மைல் தூரத்துக்கு கான்க்ரீட் ரஸ்தா போடப்பட்டது. ரஸ்தாக்கள் சீர்திருந்தினுல் மோட்டார் மோகம் அதிகரிக்கும் என்று ஹென்றி எதிர்பார்த்தார்.

முதல் வருஷத்தில் 1708 போர்ட் வண்டிகள் உற்பத்தியாகின. அதை வாங்கின அத்தனை பேரும் தைரியசாலிகள்! ஏதாவது தகராறு வந்தால் காருக்கு அடியில் படுத்துப் பழுது பார்க்கப் பயப் படாதவர்கள்.

# அத்தியாயம் 13.

போர்ட் மோட்டார் கம்பெனி கார் உற்பத்தி செய்ய ஆரம்பித்தபோது, ஹென்றிக்கு வயது நாற்பது. மாக் தெருவில் ஆரம்பித்த தொழிற்சாலை நன்கு நடந்து கொண்டிருப்பதைக் குறித்து அவருக்குச் சந்தோஷம். ஆனால் குளிர்காலம் ஆரம்பமானதும், வியாபாரம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்து, குளிர் காலத்தின் மத்தியில் ஒரே மந்தமாகி விட்டது. மேடு பள்ளங்கள் உள்ள ரஸ்தாக்களில், கார்களில் பனியைக் கடப்பது கஷ்டமான காரியமாக இருந்தது. பக்க வாட்டில் உள்ள படுதாக்கள் குளிருக்கு அடக்கமாக இல்லாததோடு, ரேடியேட்டர்கள் குளிரில் உறைந்து போய் விட்டன. கார் வைத்துக் கொண்டிருந்தவர்கள், அதைப் பனிக் காலம் முழுவதும் உள்ளே வைத்து விட்டு, வசந்த காலத்தில் வெளியே எடுப்பது சிறந்தது என்று தீர்மானித்தார்கள். ஆகவே வசந்த காலத்தில் கார் விற்பதற்காகக் குளிர் காலத்தில் தொழிற்சாலை நடந்தாக வேண்டும்.

வசந்த காலத்தில் விற்கப்படும் கார்களில் உள் பக்கமாக சுருட்டி மேலே கட்டக் கூடிய படுதாக்

கள் பொருத்தப் பட்டன. மேலே மடக்கக் கூடிய கூரை ஒன்றும் பொருத்தப் பட்டன. மழை இல்லாத போது அதை மடக்கி வைத்துக் கொள்ள லாம்.

ஆனல் இதற்கிடையில் போர்டின் பெயர் பொது ஜனங்களின் மனத்தில் இருக்கும்படியாக ஏதாவது செய்ய வேண்டும். கார் பந்தயம் விடுவதில் நல்ல விளம்பரம் இருந்தது. ஆகவே, 'அம்பு' என்னும் வண்டியை மாற்றி அமைத்து, செயின்ட் க்ளேர் ஏரியில் உள்ள பனியின் மீது பந்தயம் விட்டால் என்ன என்று ஹென்றி நினைத்தார்.

இதைப் பற்றி ஹென்றி கிளாராவிடம் சொன்ன போது அவள் கவலைப் பட்டாள்.

"இது மிகவும் ஆபத்தான காரியமாச்சே! பந்தயம் விட்டுத் தான் ஆகவேண்டுமென்ருல், மிஸ்டர் ஓல்ட்பீல்டுக்கு எழுதி வரவழைத்து, அவரை ஓட்டச் சொன்னல் என்ன?" என்று கேட்டாள்.

ஹென்றி சிரித்தார். "கிளாரா! பிறர் புத்தி மதியை, அது என் மனத்திற்கு ஒத்திருந்தால் தான் நான் ஏற்றுக் கொள்ளுவேன் என்பது உனக்குத் தெரியும். இது என் யோசனை. ஆகவே அதன்படி தான் நான் நடக்கப் போகிறேன்."

கிளாரா அதற்குமேல் ஒன்றும் சொல்ல வில்லை. ஆனல் பந்தய தேதியான ஜனவரி பன்னிரண்டு வரை கிளாராவுக்கு மனச் சமாதானமே இருக்காது என்பது அவருக்குத் தெரியும்.

பந்தய தினத்தன்று ஏகக் குளிர். காற்று வேறு

ஜில்லென்று அடித்துக் கொண்டிருந்ததால், குளிர் நடுக்கிற்று.

ஹென்றி தமது கறுப்புக் கோட்டின் பித்தானைப் போட்டுக் கொண்டதும், "இது குளிருக்கு அடக்கமாக இருக்குமா?" என்று கிளாரா கேட்டாள்.

"சும்மா என்னைப் பற்றி கவலைப் படாதே கிளாரா! எனக்கு இன்று வேர்த்துக் கொட்டிக் கொண்டிருக்கிறது" என்றார் ஹென்றி.

கிளாரா, எட்ஸெல், ஹென்றி மூவரும் போர்ட் வண்டியில் ஏறிக் கொண்டு, பத்து மைலுக்கு அப்பால் இருந்த ஏரிக்குச் சென்றார்கள்.

"நானும் உன்னோடு அம்பு வண்டியில் வரலாமா அப்பா?" என்று கேட்டான் எட்ஸெல்.

உடனேயே கிளாரா பதில் சொன்னாள்: "கண்டிப்பாக முடியாது. மேலே ஏதாவது பேசினாயோ இன்று ராத்திரி சாப்பாடு கிடைக்காது"

"உன்னை இன்னொரு சமயம் அழைத்துக் கொண்டு போகிறேன்" என்றார் ஹென்றி.

பத்து வயதுப் பையனான எட்ஸெலுக்கு இந்த பதில் திருப்தியை அளிக்கவில்லை. "இன்றைக்குப் போகிற வேகம் அன்று போகமாட்டே, அப்பா!" என்றான்.

பந்தயம் நடக்கும் இடத்திற்கு வந்தால், அங்கு 'அம்பை'க் காணவில்லை. ஜனங்களும் ஏதோ கலவரமாக இருப்பதை ஹென்றி கண்டார்.

தொழிற்சாலை ஆள் ஒருவன் ஹென்றியிடம் ஓடோடியும் வந்து, கடைசி நிமிஷப் பரீட்சையில் என்ஜினில் ஏதோ கோளாறு இருப்பதாகத் தெரிந்ததாகவும், அதைச் சரிபார்க்க வெகு நேரமாக மெக்கானிக்குகள் வேலை செய்து கொண்டிருப்பதாகவும் சொன்னான்.

குளிர் தாங்க முடியாமல் வேடிக்கை பார்க்கக் கூடியிருந்த ஜனங்கள் காலைத் தரையில் அடித்துக் கொண்டார்கள், கைகளைக் கொட்டினார்கள்.

தொழிற்சாலைக்குத் திரும்புவதற்காக ஹென்றி தம் போர்ட் வண்டியில் ஏறினது தான் தாமதம், தூரத்திலிருந்து ஏதோ இடி உறுமுவது போன்ற சப்தம் கேட்கவே, ஹென்றியின் முகத்தில் தோன்றிய கவலை மறைந்தது. அந்த தூரத்திலேயே அவர், அம்பின் என்ஜின் சரியாக இருக்கிற தென்பதைக் கண்டு கொண்டார்.

"அதைச் சரிப்படுத்தி விட்டோம் ஐயா" என்று சொல்லிக் கொண்டே மெக்கானிக் வண்டியை ஹென்றியின் பக்கத்தில் கொண்டு வந்து நிறுத்தினான்.

கூட்டத்தினர் ஆரவாரம் செய்தார்கள். வேட்டுச் சப்தம் கேட்டதும் ஹென்றி புறப்பட்டார்.

தன் கண்களைக் கீழே தாழ்த்திய கிளாரா, சற்று கண்களை மேலே நிமிர்த்தியதும், 'அம்பு' வழுக்கி தூக்கிப் போடப் படுவதைக் கண்டாள். பார்ப்பதற்கு வழ வழ வென்று இருந்த பனியில்

ஏக வெடிப்புகள் இருந்ததால், ஒவ்வொரு வெடிப்பும் வண்டியைத் தூக்கித் தூக்கிப் போட்டது.

கூட்டத்தினர் பயந்து கூச்சலிட்டனர். "இன்னும் வேகமாக அப்பா! ஐயோ! நான் அப்பாவோடு வண்டியில் இல்லாமல் போய்விட்டேனே!" என்று எட்ஸெல் கத்தினான்.

கிளாரா ஒன்றும் சொல்ல வில்லை. கண்களை மூடிக்கொண்டு கடவுளை வேண்டிக்கொள்ள ஆரம்பித்தாள். "இந்தத் தடவை மாத்திரம் அவர் பிழைத்து வரட்டும். இனி அவரைப் பந்தயம் விடவே அனுப்ப மாட்டேன்" என்று வேண்டிக் கொண்டாள்.

தன் முழு பலத்தையும் கொண்டு ஹென்றி ஸ்டியரிங் சக்கரத்தைப் பிடித்துக் கொண்டார். எந்த வெடிப்பு தன் வண்டியைத் தூக்கிப் போடுமோ என்று கவலைப் பட்டார்.

அன்று ஹென்றி பந்தயத்தை முடித்தது ஒரு பெரிய அதிசயம் என்று தான் சொல்ல வேண்டும். வண்டி நின்றதும், "மீண்டும் ஜெயித்து விட்டீர்கள்" என்று ஜனங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். அவர் உலக ரிக்கார்டை உடைத்து விட்டார்! மணிக்கு 92 மைல் சென்று விட்டார். திரும்பவும் ஹென்றியைப் பற்றியும், அவருடைய வண்டியைப் பற்றியும் பத்திரிகைகளில் செய்திகள் அடிபட்டன.

அன்று மாலை கிளாராவும், ஹென்றியும் பந்தய வெற்றியைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்

கள். "இருந்தாலும் இது மிகவும் ஆபத்தான காரியம். உங்கள் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு விட்டால், அதனால் என்ன லாபம்? உங்கள் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத் தானே இதைச் செய்கிறீர்கள். நீங்கள் போய் விட்டால், உங்கள் திட்டங்களை நிறைவேற்ற யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டாள் கிளாரா.

கிளாரா சொன்னது சரி என்று ஹென்றி ஒப்புக்கொண்டார். இந்தத் தடவை அவருடைய அனுபவம் அவர் எதிர்பார்த்ததற்கு மேல் ஆபத்தாகப் போய்விட்டது. இருந்தாலும் 'அம்பு' நல்ல வண்டி என்ற சந்தோஷத்தில் நிம்மதியாகத் தூங்கப் போனார். அடுத்த நாள் காலை ஒரு பெரிய பிரசினை அவருக்காகக் காத்துக் கிடந்தது என்பது அவருக்கு எப்படித் தெரியும்?

அடுத்த நாள் காலை, ஜிம் கூஸன்ஸ் ஹென்றியைத் தொழிற்சாலை வாசலில் சந்தித்தார். "போன வாரம் தாங்கள் பந்தய ஞாபகமாகவே இருந்ததால் நான் சொல்ல வில்லை. இன்று சம்பளம் கொடுக்கப் பணம் இல்லை" என்றார்.

ஹென்றியின் மனம் இடிந்தது. "தொழிலாளிகள் போய் விட்டால், நம் கம்பெனியே போச்சு!" என்றார்.

பங்குதாரர்களிடமிருந்து பணம் பெயராது என்பது ஹென்றிக்குத் தெரியும். தம் பங்கையும் விற்க அவர் இஷ்டப் படவில்லை. விற்றால் கம்பெனியின் நிர்வாகம் அவர் கையை விட்டு மால்கம்சனுக்குப் போய்விடும்,

"என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார் கூஸன்ஸ்.

"செய்வதற்கு ஒன்றே ஒன்று தான் இருக்கிறது. தொழிலாளிகளிடம் உண்மை விவரங்களைத் தெரிவிப்பது தான் நல்லது" என்ருர்.

அன்று மாலை தொழிலாளிகள் சம்பளம் வாங்க வந்த சமயத்தில், ஹென்றி அவர்களை எதிர் பார்த்து நின்று கொண்டிருந்தார். தாம் பேசுவது எல்லாருக்கும் கேட்க வேண்டும் என்பதற்காக ஒரு நாற்காலியின் மீது ஏறி நின்று கொண்டு விவரங்களைச் சொன்ஞர்.

"நீங்கள் இப்பொழுது ஒத்துழைத்தால், மாரிக் காலத்திற்குள் நமக்கு இருக்கும் ஆர்டர்களை முடித்து விடலாம். நம்முடைய நாலு சிலிண்டர் வண்டி தான் வசந்த காலத்தில் எங்கும் பேச்சாக இருக்கப் போகிறது. நமக்கு அப்பொழுது தொழில் விஸ்தரிக்கும். ஜனங்கள் இப்பொழுது தான் மோட்டார் வைத்துக் கொள்வதில் உள்ள அனுகூலங்களை அறிய ஆரம்பித்திருக்கிருர்கள். ஆனுல் இப்பொழுது நீங்கள் போய்விட்டீர்களோ, நம் எல்லாருக்கும் கஷ்டம். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார்.

அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிருர்களோ என்று அறிய ஹென்றி வெகு ஆவலோடு காத்திருந்தார். அவர்கள் போய்விட்டால், தம்முடைய திட்டங்கள் எல்லாம் பாழாக வேண்டியது தான் என்பது அவருக்குத் தெரியும்.

தொழிலாளிகள் சின்னச் சின்ன பகுதிகளாகப் பிரிந்து, ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். பிறகு, "நாங்கள் உங்களோடு ஒத்துழைக்கிறோம்" என்று அவர்கள் சொன்னபோது, ஹென்றியின் முகம் மலர்ந்தது. சில தொழிலாளிகள் முன்னுக்கு வந்து, ஹென்றியின் கையைப் பிடித்துக் குலுக்கித், தங்களுக்கு அவரிடம் நம்பிக்கை இருக்கிறது என்று தெரிவித்தார்கள். அவர்களுடைய நல்ல குணத்தைக் கண்டு ஹென்றி சந்தோஷப்பட்டார். இதற்குப் பிரதிபலனாக அவர்களுக்கு என்றாவது ஒரு நாள் ஏதாவது உபகாரம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்.

# அத்தியாயம் 14.

வசந்த காலம் வந்ததும் ஹென்றி சொன்ன எல்லாக் காரியங்களும் நிறைவேறின. வண்டிகளுக்கு ஆர்டர்கள் வந்து குவிந்தன. அந்த ஆர்டர்களை நிறைவேற்றுவதற்கு இந்தத் தொழிற்சாலை போதவில்லை. ஆகவே ஹென்றி பிக்கெட், போபீன் தெருக்களில் புது தொழிற்சாலை கட்டினர். மூன்று அடுக்குள்ள இந்தக் கட்டடத்தில் புது யந்திரங்கள் நிறுவப்பட்டன. இனி எத்தனை ஆர்டர்கள் வந்தாலும் கவலையில்லை யென்று நினைத்தார்.

பணக் கவலை இப்பொழுது தீர்ந்து விட்டதால், நிர்வாகம், கார் தயாரிப்பு முதலியவைகளின் விஷயமாகத் தமக்குள்ள சில யோசனைகளை, ஹென்றி பரீட்சித்துப் பார்க்க விரும்பினர். புதுத் தொழிற்சாலை லாபப் பணத்தைக் கொண்டு வாங்கியது. காப்பி ஜிம்மிடமிருந்தும், டாம் கூப்பரிடமிருந்தும் வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுத்தாய் விட்டது. பல வருஷங்களுக்கு முன்னர், கடியாரத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்று நினைத்த போது, ஒரே மாதிரியான எல்லா பாகங்களும் எவ்வித வித்தியாசமுமின்றி, ஒரே விதமாய்

இருக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றிற்று. இப்பொழுது மோட்டார் பாகங்கள் விஷயத்தில் அவ்விதம் செய்து பார்ப்பது என்று தீர்மானித்தார். முதல் தடவையாக, அவர்கள் கம்பெனியிலேயே சில பாகங்கள் தயாரிக்க ஆரம்பித்திருந்தார்கள். எனினும், பாகங்களை ஒன்று சேர்க்கும் வேலையே பிரதானமாக இருந்தது.

கம்பெனிக்கு நிறைய லாபம் வந்து கொண்டிருந்ததால் பங்குதாரர்கள் சந்தோஷமாக இருந்தார்கள். ஹென்றி லாப நஷ்டம் எப்படி இருக்கிறது என்று கவனித்துக் கொண்டு, மற்ற விஷயங்களையும் கவனித்துக் கொண்டிருந்தார். கம்பெனியில் நிறைய ஆட்கள் வேலை செய்து, நிறைய லாபம் வந்தும், கார்கள் குறைந்த விகிதாசாரப்படி விற்பனை யானது அவருக்கு வருத்தமாக இருந்தது. அதிகப்படி மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்ற ஹென்றியின் கருத்துக்கு இது சரிப்பட்டு வரவில்லை.

மால்கம்சன் வெகு திருப்தியாக இருந்தார். தமக்குக் கிடைத்த லாபத்தைக் கண்டு அவர் சந்தோஷப் பட்டார். ஹென்றி போட்டிருந்த அளவு மூலதனமே, அவரும் கம்பெனியில் போட்டிருந்ததால், ஹென்றிக்கு நிர்வாகத்தில் இருந்த அதிகாரம் அவருக்கும் இருந்தது.

" மால்கம்சனின் பங்கை மட்டும் நான் வாங்கி விட்டேனானால், மற்ற பங்குதாரர்கள் என் சொற்படி கேட்பார்கள். அந்த மனிதர் என் கழுத்திற்கு

ஒரு சுருக்கு போல் இருக்கிறார்'' என்று நினைத்தார் ஹென்றி.

அடுத்த வருஷம், வண்டிகள் இன்னும் சற்றுக் குறைவாக விற்ற போது, எவ்வளவு பணமானாலும் சரி, மால்கம்சனின் பங்கை வாங்கி விடுவது என்று ஹென்றி தீர்மானித்தார். கம்பெனியைத் தன் இஷ்டப்படி நடத்த வேண்டும், பங்குதாரர்கள் கூட்டத்தில் ஏற்படும் சர்ச்சைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று தீர்மானித்தார். மால்கம்சன் முதலில் போட்ட பணம் 3000 டாலர். அதற்கு அவர் இப்பொழுது 1,75,000 டாலர் மதிப்புச் சொன்னார்!

இது மிகவும் பெரிய தொகையானாலும், அந்தப் பங்கை வாங்கித் தான் ஆக வேண்டுமென்று ஹென்றி தீர்மானித்தார். ஆகவே, பணம் கடன் வாங்கி அதை வாங்கினார். இப்பொழுது ஹென்றியிடம் அவர் பங்கு 255, மால்கம்சனிடமிருந்து வாங்கின பங்கு 255, ஆக 510 பங்குகள் இருந்தன. இது மொத்தப் பங்குகளில் 51 சத விகிதம் ஆகையால் கம்பெனியின் நிர்வாகம் பூராவும் அவர் கையில் தான் இருக்கும்.

சீக்கிரமே போர்ட் கம்பெனியில் ஒரு நாளைக்கு நூறு கார்கள் உற்பத்தியாகத் தொடங்கின. இது ஒரு உலக ரிக்கார்ட் என்று பத்திரிகைகள் சொல்லின.

வேறு எந்த கார் தயாரிப்பாளரும் இதில் நாலில் ஒரு பங்கு கூடத் தயாரிக்க வில்லை. ஒரு நாளைக்கு ஆயிரம் கார்கள் உற்பத்தி செய்யப்

போகிறேன் என்று ஒரு நாள் ஹென்றி சொன்ன போது, அவருடைய சகாக்கள் கவலைப்பட்டார்கள்.

ஹென்றிக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்று மற்ற பங்குதாரர்கள் பேசிக் கொண்டார்கள். கார்களை ஒரு புது வழியில் இணைக்க ஹென்றி திட்டமிட்டிருந்தார் என்பது இவர்களுக்குத் தெரியாது.

*1908* அக்டோபர் முதல் தேதி. ஹென்றி தம்முடைய புதிய மாடலை வெளிக் கொணர்ந்தார். இந்தப் புதிய மாடல் 'டி'க்கு ஏக ஆதரவு இருந்ததால், பங்குதாரர்கள் அவரை எதிர்க்கப் பயந்தார்கள். இதுவரை யாரும் எண்ணிப் பார்த்திராத பல புதிய அம்சங்கள் இந்த வண்டியில் இருந்ததால் எல்லாரும் எனக்கு, உனக்கு என்று இந்த வண்டிக்குப் போட்டி போட்டார்கள்.

வண்டி ஓட்டுகிறவருக்கு இடம் வலது பக்கத்திற்குப் பதில் இடது பக்கத்தில் இருந்தது. இதனால் எதைக் கடந்து செல்லுகிறோம் என்று ஓட்டுகிறவர் பார்க்க முடியும். என்ஜின் பழுதானால் கார் அடியில் படுத்துக் கொண்டு வேலை செய்ய வேண்டுமென்பதில்லை. என்ஜின் மூடியைக் கழற்றிப் பார்க்கும் படியாக அமைக்கப்பட்டது.

முன்னெல்லாம் சிலிண்டர்களைத் தனித் தனியாகப் பண்ணி, ஒன்று சேர்ப்பார்கள். ஹென்றி இந்த மாடலில் சிலிண்டர்களின் மேல் பாகங்களைக் கழற்றும்படியாக ஏற்பாடு செய்திருந்தார். இதனால் எல்லா சிலிண்டர்களிலும் அழுத்தம் ஒரே மாதிரியாக இருக்கும்படி செய்ய முடிந்தது.

தம்முடைய கார்கள் உறுதியானவை, சிக்கல் இல்லாதவை, நன்ருகச் செய்யப்பட்டவை என்று பெயர் வாங்க வேண்டும் என்ற ஆசை ஹென்றிக்கு இருந்தது. ஒரு புது வகை வனேடியம் எஃகு கொண்டு போர்ட் கார்கள் கட்டப்பட்டதால் வண்டிகளின் எடை குறைந்தும் உறுதி குறைய வில்லே. இந்த முக்கியமான உலோகத்தை ஹென்றி தற்செயலாகத் தான் கண்டு பிடித்தார். இதுவரை, உறுதியாகவும், அதே சமயம் கனமில்லாமலும் செய்வது எப்படி என்று தெரியாமல் தவித்திருக்கிருர்.

1905ல் பாம் பீச்சில் நடந்த ஒரு மோட்டார் பந்தயத்திற்கு ஹென்றி போயிருந்தார். அதில் ஒரு விபத்து ஏற்பட, பிரஞ்சு வண்டிக்கு நல்ல சேதம்! வெளிநாட்டு வண்டிகளேப் பார்த்த போது, அவற்றின் பாகங்கள் அமெரிக்கக் கார்களின் பாகங்களே விட கனம் குறைந்தும், உறுதியாகவும் காணப் பட்டன. விபத்து ஏற்பட்ட இடத்திலிருந்து வால்வு பாகம் ஒன்றை எடுத்தார். அது எந்த உலோகத்திஞல் செய்யப் பட்டது என்று விசாரித்தார். ஒருவருக்காவது தெரியவில்லே. அதைத் தன் உதவியாளரிடம் கொடுத்தார்.

"இதைப் பற்றிப் பூரா விவரமும் தெரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய உலோகம் தான் நம்முடைய வண்டிகளுக்கு வேண்டும்" என்ருர்.

அது பிரஞ்சு எஃகு என்றும், அதில் மிகவும் அருமையாகவே கிடைக்கும் வனேடியம் என்ற

வெள்ளியைப் போன்ற வெள்ளையான உலோகம் கலந்திருக்கிறது என்றும் கண்டு பிடித்தார்.

அமெரிக்காவில் எஃகு உற்பத்தி செய்யும் எல்லாக் கம்பெனிகளையும் ஹென்றி போய்ப் பார்த்தார். ஒருவராவது வனேடியம் எஃகு செய்யத் தெரியும் என்று சொல்லவில்லை. பிறகு ஹென்றி இதை செய்யத் தெரிந்த ஒரு ஆளை இங்கிலாந்திலிருந்து வரவழைத்தார். ஆனால் இதற்கு என்று ஒரு தொழிற்சாலை வேண்டுமே, அதுதான் பிரசினையாக இருந்தது. வனேடியம் செய்ய 3000 பாரன் ஹீட் டிகிரி உஷ்ணம் வேண்டியிருந்தது. ஆனால் சாதாரண தொழிற்சாலை அடுப்பில் 2700 டிகிரி உஷ்ணத்திற்கு மேல் கிடைக்காது. ஒஹியோவில் உள்ள கான்டன் என்ற ஊரில் ஹென்றி ஒரு சின்னக் கம்பெனியைக் கண்டு பிடித்தார். அவர்களை 3000 டிகிரி உஷ்ணத்தைத் தயார் பண்ணும்படியும் அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால், தான் அதை ஒப்புக் கொள்ளுவதாகவும் சொன்னார். அவர்கள் சரி யென்று சொன்னார்கள். முதலில், பரீட்சை தோல்வியுற்றது. எஃகில் வனேடியம் தங்கவில்லை. திரும்பவும் இரண்டாம் தடவை பரீட்சை செய்யும்படி ஹென்றி கேட்டுக் கொண்டார். இரண்டாம் தடவை அவர் எதிர்பார்த்த எஃகுக் கிடைத்தது. புது எஃகைக் கொண்டு தம்முடைய மோட்டார் வண்டியை மூன்று மடங்கு வலிமை யுள்ளதாகக் கட்ட முடியும் என்று ஹென்றி கண்டார்.

வனேடியம் தயாரானதும், ஹென்றி தம்முடைய் போர்ட் வண்டி ஒன்றை அக்கு வேறு

ஆணி வேருகப் பிரித்து, எந்தெந்த பாகத்திற்கு எந்த எஃகு நல்லது என்று நன்கு பரிசோதித்தார்.

சில பாகங்களுக்கு உறுதியான எஃகும், சில பாகங்களுக்கு முரட்டு எஃகும், சில பாகங்களுக்கு வளைந்து கொடுக்கக் கூடிய எஃகும் தேவையாக இருந்தன. பரிசோதனைக்குப் பிறகு, ஹென்றி பல் வேறு பாகங்களுக் கென்று 20 வித எஃகுகளைத் தேர்ந்தெடுத்தார். இவற்றில் பத்து வகை வனேடியம் எஃகாகும். எங்கெல்லாம் கனமில்லாமல் இருந்தாலும், உறுதியாக இருக்க வேண்டு மென் றிருந்ததோ, அங்கு வனேடியம் உபயோகப் படுத்தினுர்.

ஒவ்வொரு 'டி' மாடல் கார் வாங்கின சொந் தக்காரருக்கும், வண்டியைப் பற்றிய விவரங்களும், வண்டியை எப்படி ஜாக்கிரதையாக வைத்துக் கொள்வது என்பது பற்றிய விளக்கங்களும் கொண்ட ஒரு புத்தகம் போயிற்று. போர்ட் காரைப் பழுது பார்ப்பதற்குப் பெரிய மேதை தேவையாக இருக்க வில்லை. புதிய பாகங்கள் மிக வும் மலிவான விலைக்கு விற்கப் பட்டதால், பழைய பாகங்களை பழுது பார்க்கும் செலவு தான் புதிய பாகங்கள் வாங்குவதற்கு ஆயிற்று. டூரிங் வண்டி 850 டாலருக்கும், ரோஸ்டர் 825 டாலருக்கும் விற்றது.

அமெரிக்கா இந்த வண்டியைத் தகர டப்பா என்று அழைக்க ஆரம்பித்தது. இந்த வண்டிகள் மிகவும் கனமில்லாமல் இருந்ததால் மோசமான ரஸ்தாக்களில் செல்லும் பொழுது உடைந்து போய்

விடும் என்று சிலர் நினைத்தார்கள் இந்த எண்ணத்தைக் கண்டு ஹென்றி சிரித்தார். இது தவறான கருத்து என்று நிரூபிக்க முடியும் என்று சொன்னார். அப்படியே நிரூபிக்கவும் செய்தார்.

அன்று 1909, ஜூன் முதல் தேதி. அன்று நடக்கப் போகும் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி, பல வாரங்களாகப் பத்திரிகைகள் எழுதி வந்துள்ளன. நியூ யார்க் நகர சபைக்கு முன்னர் ஐந்து மோட்டார் வண்டிகள். ஒரு ஆகிமி, ஒரு ஷாமட், ஒரு இட்டாலா, இரண்டு 'டி' மாடல் போர்ட் வரிசையாக நின்றன. மெக்கானிக்குகள் வண்டிகளை சரி பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு வெள்ளை மாளிகையிலிருந்து ஜனாதிபதி டாப்ட், வண்டிகளுக்கு சமிக்ஞை கொடுத்தார். அமெரிக்காவின் முதல் பெரிய மோட்டார் பந்தயம், அதாவது நாடு முழுவதையும் சுற்றி வரும் பந்தயம் ஆரம்பமாயிற்று.

ஸெயின்ட் லூயிக்கு மேற்கே ஏழு நாள் சேர்ந்தாற் போல் மழை பெய்ததால், ரோடெல்லாம் ஒரே சேராக இருந்தது. புல் தரை வெளிகளிலும், கொலராடோ பிரதேசத்திலும் மணிக்கு பத்து மைலுக்கு மேல் போக முடியாது.

செய்யேன் என்ற இடத்தில் இட்டாலா என்கிற பெரிய வண்டி பந்தயத்திலிருந்து விலகிக் கொண்டது. மற்ற வண்டிகள் திக்கு முக்காடிச் சென்றன. காஸ்கேட்ஸ் மலையின் உச்சியில், பனியை எதிர்த்து அவை செல்ல வேண்டியிருந்தன.

வெகு நாட்களுக்குப் பிறகு, போர்ட் வண்டி நெ. 2. வெற்றியுடன் சியாட்டில் நகரத்திற்குள் நுழைந்தது. அது அமெரிக்காக் கண்டத்தை 22 நாட்கள், 55 நிமிஷங்களில் கடந்து விட்டது. முன் இரண்டு டயர்களில் நியூ யார்க்கில் அடிக்கப் பட்ட காற்று அப்படியே இருந்தது.

பரிசுக் கோப்பையை அளித்த கர்னல் எம். ராபர்ட் கக்கன்ஹீம், "எடை அதிகம் இல்லாத, ஆனால் அதிக சக்தி வாய்ந்த சின்னக் கார்கள், பெரிய வண்டிகள் போகாத இடங்களுக்குப் போக முடியும், அதோடு, ஐந்தாறு மடங்கு அதிக விலையுள்ள பெரிய கார்களை, மலைப்பாங்கான பிரதேசங்களிலும், மோசமான ரஸ்தாக்களிலும் தம்முடைய கார் வெற்றி காண முடியும் என்று மிஸ்டர் போர்ட் கூறினது நிரூபிக்கப்பட்டு விட்டது. பொது ஜன வண்டி எப்படி இருக்க வேண்டும் என்ற கேள்விக்கு, மிஸ்டர் போர்ட் பதில் கண்டு பிடித்து விட்டார் என்று நினைக் கிறேன்" என்றார்.

சில ஜனங்கள் எதிர்பார்த்தபடி 'டி' மாடல் துண்டு துண்டாக நொறுங்கி விட வில்லை. மற்ற எல்லா மாடல்களையும் நிறுத்தி விட்டு, இந்த 'டி' மாடலைத் தான் நிறைய உற்பத்தி செய்யப் போவ தாக ஹென்றி அறிவித்தார். நான்கு சக்கரங் களுக்கு மேல், உயரமாகப் பொருத்தப் பட்டிருந்த இந்த மாடலில், நாலு சிலிண்டர் என்ஜினை மறைப்ப தற்கு வண்டியின் முன் பக்கத்தில் ஒரு கறுப்புப் பெட்டி இருந்தது. ஆனால் இந்தப் பெட்டியால்

அதன் சப்தத்தை அடக்க முடிய வில்லை. இருந்தும், இது ஹென்றிக்கு புகழையும், பணத்தையும் தேடிக் கொடுத்ததோடு, அமெரிக்கர்கள் அதிகப்படி மோட்டார் வண்டிகளில் போகவும் காரணமாக இருந்தது.

ஒரு குடியானவன், பின் பக்கத்துச் சக்கரத்தைத் தூக்கி வைத்து, அதில் ஒரு பெல்ட்டை மாட்டி அதைத் தன் ரம்பத்துக்கு இணைத்தானானல், குளிர் காலத்திற்கு வேண்டிய கட்டைகளை அறுத்து வைத்துக் கொள்ள முடியும். அடுத்த நாள் இந்த மாடல் 'டி'யைக் கொண்டே அவன் தன் குதிரைகளுக்கும், பசுக்களுக்கும் வேண்டிய மாவை அறைத்துக் கொள்ளலாம். இதே வண்டியில், ஞாயிற்றுக் கிழமை யன்று அவன் தன் மனைவியைக் கோவிலுக்கு அழைத்துக் கொண்டு போகலாம்.

மாடல் 'டி'யைப் பற்றி எத்தனையோ ஹாஸ்யத் துணுக்குகள் வெளியாகின. அவற்றை யெல்லாம் ஹென்றி ரஸித்தார். இவை தம் காருக்கு நல்ல விளம்பரம் என்று நினைத்தார். சிறுவர்கள் கூட, கீழ்க் கண்டது போன்ற பாடல்களை ரஸித்துப் பாடினார்கள்.

ஒரு சின்ன ஸ்பார்க், ஒரு சின்ன சுருள் கம்பி
கொஞ்சம் பெட்ரோல், கொஞ்சம் எண்ணெய்
ஒரு தகரத் துண்டு, ஒரு சின்ன பலகை
ஒன்று சேர்த்தால், கிடைப்பது போர்ட்.

கிழவன் ஒருவன் இருந்தான்

அவனுக்கு ஒரு மரத்தாலாகிய கால் இருந்தது
அவன் திருட்டுத்தனமாக சவாரி செய்ய முடிய
வில்லே
பிறர் வண்டியில் சவாரி செய்ய, கெஞ்சிக் கேட்
டும் முடியவில்லே.

ஆகவே நான்கு சக்கரங்கள் எடுத்து
அதோடு தகர டப்பாவை இணைத்து
கட்டிக் கொண்டான் ஒரு போர்ட்
அதுவும் ஓட ஆரம்பித்தது பாரு!

மாடல் 'டி'யை ஒட்டக் கற்றுக் கொள்வதற்கு பிரமாத திறமை வேண்டிய தில்லே. காரின் முன்னுல் ஒரு கைப்பிடி இருந்தது. அதைப் பிடித் துச் சுற்றினுல் ஒன்று கார் ஓட ஆரம்பிக்கும், அல்லது கை ஒடியும். காலடியில் மூன்று பெடல் கள் இருந்தன. ஸ்டியரிங் சக்கரத்திற்கு அடியில் இருந்த லீவரை வலது பக்கம் தள்ளி, மோட்டா ருக்கு அதிக பெட்ரோல் கொடுத்து, இடது பக்கம் உள்ள பெடலே அமுக்கினுல், கண்ணுக்குத் தெரி யாமல் உள்ளே மறைந்திருந்த சக்கரங்கள் சுழலும், வண்டி ஆடும், கடைசியில் நகர ஆரம்பிக்கும்.

வண்டி நகர ஆரம்பித்ததும், பெடலில் இருக் கும் காலே நீக்கி, கியர் மாற்ற வேண்டும். வண்டு கடித்த குதிரை எப்படித் துள்ளி ஓடுமோ, அதைப் போல வண்டி ஒரு துள்ளுத் துள்ளும். வண்டியை நிறுத்த, வலது பக்கம் இருந்த பெடலேப் பலமாக அழுத்த வேண்டும். நடுவில் இருக்கும் பெடல், வண்டி பின்னுல் போவதற்கு. கை பிரேக்கைப்

பிடித்திழுத்தால் வண்டி நியூட்ரலுக்கு வரும். மோட்டார் ஓடினுல் தான் விளக்கு எரியும், ஹார்ன் சப்தமிடும். இடது கைப்புறம் கதவு கிடையாது. கதவு போல் தோற்ற மளிக்கும் ஒரு சட்டம் தான் இருந்தது. ஒன்று இடது பக்கமாக ஏறிக் குதிக்க வேண்டும். அல்லது நாம் வலது பக்கமாக வண்டி யில் உட்கார்ந்திருப்பவர்கள் இறங்கின பின்னர் இறங்க வேண்டும்.

முன்பக்க ஆசனத்திற்கு அடியில் இருந்த டாங்கியில் உள்ள பெட்ரோல் ஆகர்ஷண சக்தியி னுல் கார்பரட்டருக்குச் செல்லும். பெட்ரோல் போட வேண்டுமானுல் எல்லோரும் கீழே இறங்கிக் கொண்டு மெத்தையைத் தூக்க வேண்டும்.

கரி தான் பெரிய தொல்லையாக இருந்தது. பிஸ்டனே, சிலிண்டரோ உபயோகத்தினுல் தேய்ந்து போனுல், அமுக்க அறைக்குள் எண்ணெய் புகுந்து, கரி அடை போல் படிந்து விடும். கரி அதிகமாகப் போய், கார் சம்மட்டி அடிப்பது போல் அடித்துக் கொண்டதும், கார் சொந்தக்காரர், சிலிண்டரின் மேல் பாகத்தைக் கழற்றி, தன் னுடைய பேனுக்கத்தியால் கரியைச் சுரண்டி எடுத்து விட்டுத் திரும்பவும் மேல் பாகத்தை பொருத்தி விட்டு, வண்டியை ஓட்டிக் கொண்டு போவார்.

கனக்டிங் ராடுடைய பேரிங்குகள் தேய்ந்து போய், வண்டி பெரிய தொழிற்சாலையைப் போல் சப்தமிட்டால், சொந்தக்காரர் வண்டிக்கு அடியில் படுத்துக் கொண்டு எண்ணெய்த் தட்டைக் கழற்றி,

கையிலிருக்கும் பழைய தகர டப்பாவின் பாகத்தையோ, அல்லது பழைய ஜோட்டின் தோலையோ, பேரிங்காகப் போட்டு விடுவார்.

இந்த மாடல் தயாரான ஆறு மாதத்திற்குள் இந்தத் தொழிற்சாலை போதாமல், இன்னொரு தொழிற்சாலைக்கு ஏற்பாடு செய்ய வேண்டி வந்தது.

# அத்தியாயம் 15.

ஹென்றியின் வீட்டு வாழ்க்கை ஆனந்தமாகவும், சந்தோஷமாகவும் சென்றது. தன்னுடைய புருஷனுக்கும், பிள்ளைக்காகவுமே கிளாரா வாழ்ந்தாள். ஹென்றி சாப்பாட்டுக்கு நேரங்கழித்து வந்து, சாப்பாடு ஆறிப் போனாலும், கிளாரா கோபித்துக் கொள்ள மாட்டாள். தான் செய்து கொண்டிருந்த எந்தக் காரியத்திலாவது மனத்தைப் பறி கொடுத்து விட்டாராஞல் ஹென்றி சாப்பாட்டை மறந்து விடுவார் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் எட்ஸெல் நாழி கழித்துச் சாப்பிட கிளாரா விட மாட்டாள். அவன் வேளைப்படி சாப்பிட்டுத் தான் ஆக வேண்டும்!

சில சமயங்களில் ஹென்றி வீட்டுக்குத் திரும்பினாலும், ராத்திரி பன்னிரண்டு, ஒரு மணி வரை ஏதாவது வேலை செய்து கொண்டிருப்பார். அந்தச் சமயங்களில் தான் தூங்கப் போவது கிளாராவுக்கு உசிதமாகத் தோன்றாது. ஆகவே ஹென்றி தூங்கப் போகிறவரையில் தானும் ஏதோ தைத்துக் கொண்டோ, படித்துக் கொண்டோ இருப்பாள்.

கிளாராவும், ஹென்றியும், எட்ஸெல் மீது

உயிராக இருந்தார்கள். அவன் பார்ப்பதற்கு அழகாக இருந்தான். சிறு வயதிலேயே அவன் யந்திரங்களின் மீது அக்கறை காட்டி, அப்பாவுடன் கூட என்ஜின்கள் செய்ய விரும்புவதாகச் சொன்ன போது, ஹென்றிக்கு உண்டான ஆனந்தம் சொல்லி முடியாது.

எட்ஸெலுக்கு மூன்று வயதாக இருக்கும் போது, ஹென்றி அவனைத் தம்முடைய வண்டியில் பாட்டரி பெட்டியின் மூடி மீது வைத்துக் கொண்டு டெட்ராய்ட் நகரில் ஓட்டிக் கொண்டு போவார். அப்பொழுது காற்று வேகமாக முகத்தில் அடிப்ப தால் ஏற்படும் ஆனந்தத்தில் எட்ஸெல், "இன்னும் வேகமாகப் போ அப்பா! இன்னும் வேகமாகப் போ அப்பா!" என்று கத்துவான்.

எட்ஸெல் யந்திரங்கள் மீது காண்பித்த ஆசையைக் கண்டு ஹென்றி சந்தோஷப் பட்டுக் கொண்டிருக்கையில், எட்ஸெலின் இன்னொரு ஆசையைக் கண்டு கிளாரா சந்தோஷப் பட்டாள். சித்திரங்கள் வரைவதில் அவனுக்கு இருந்த ஆசையைக் கண்டு, அவள் அவனைப் பாராட்டி அந்த ஆசையை வளர்த்தாள். கலையை ரஸிக்கத் தெரிவது ஒரு சின்னப் பையனுக்கு நல்லது என்று கிளாரா கருதினாள். அடிக்கடி அவள் அவனை டெட்ராய்ட் கலைக்கூடத்திற்கு அழைத்துக் கொண்டு போவாள். அங்குள்ள சித்திரங்களைக் கண்டு எட்ஸெல் மகிழ்வான்.

உயர்நிலைப் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்த சமயத்தில், எட்ஸெல் ஒரு நாள் ஏக புத்தகங்களைத்

தன் முன்னால் பரப்பிக் கொண்டு மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்ததை ஹென்றி பார்த்தார்.

"எப்போப்பா நீ புஸ்தகப் புழுவாக மாறினாய்?" என்று ஹென்றி சிரித்துக் கொண்டே கேட்டார்.

"இதெல்லாம் ரொம்ப நல்ல புத்தகங்கள் அப்பா. இதோ பாருங்கள், இது புல்டனைப் பற்றிய புத்தகம், இது ஸ்டீவன்ஸனைப் பற்றியும், நீராவி என்ஜின் கண்டு பிடிக்கப்பட்ட விதத்தைப் பற்றியும் உள்ளது" என்றான் எட்ஸெல்.

"நான் சிறு பையனாக இருந்த போது, இத்தகைய புத்தகங்களைத் தான் படிக்க ஆசைப் பட்டேன், கிடைக்க வில்லை" என்று ஹென்றி சற்று வருத்தத்தோடு கூறினார். சிறுவயதில் நீராவி என்ஜினைப் பற்றியும், யந்திரங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள தாம் எத்தனை ஆவலாக இருந்தார் என்று நினைத்துப் பார்த்த போது, புத்தகங்கள் கிடைக்காததன் வருத்தம் அவருக்கு ஏற்பட்டது.

"நாளைக்கு ஒரு வியாசம் எழுதிக் கொடுக்க வேண்டும். அதற்கு நான் போக்கு வரத்தைப் பற்றி எழுதலாம் என்று தீர்மானித்தேன். எழுதினதைப் படிக்கிறேன், எப்படி இருக்கிறது என்று பார்க்கிறீர்களா அப்பா?" என்றான்.

"நல்ல விஷயம் தான். எங்கே வாசி" என்று சொல்லிக் கொண்டே, ஹென்றி ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து, கால் மேல் கால் போட்டுக்

கொண்டார். எட்ஸெல் தன் வியாசத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

''போக்கு வரத்துக்குத் தன் நடையை மாத்திரம் நம்புவது முட்டாள்தனம் என்று மனிதன் உணர்ந்து, என்றைக்கு வேறு வழிகளைத் தேட ஆரம்பித்தானே, அன்றிலிருந்து நல்ல காலம் பிறந்தது. உலகம் தோன்றியது முதற் கொண்டு, கடலையும், நிலத்தையும் கடப்பது எப்படி என்பதே மனிதனின் பிரசினையாக இருந்திருக்கிறது.

''முதல் முதலில் கடலை ஒரு மரக்கட்டையால் கடந்தார்கள். பிறகு இந்தக் கட்டைகள் இணைக்கப் பட்டு கட்டுமரமாகின. பிறகு கட்டையைக் குடைந்து, அதைத் தெப்பமாக உபயோகப் படுத்தினார்கள். பிறகு புல்டனின் கிளெர்மான்ட் வந்தது. இப்பொழுது பிரம்மாண்டமான கப்பல்கள் வந்துள்ளன.

நிலத்திலோ முதலில் கால் நடைகளின் மீது ஏறி சவாரி செய்தார்கள். பிறகு மர உருளைகள் பொருத்தப்பட்ட வண்டிகள் ஏற்பட்டன.

பாரோவின் ரதத்திலிருந்து, நாம் அமெரிக்காவில் குடியேறிய காலத்தில் இருந்த வண்டிவரை எல்லாமே மிருகங்களால் இழுக்கப் பட்டவை.

அமெரிக்கா கண்டு பிடிக்கப் பட்ட காலத்திலிருந்து, போன நூற்றாண்டு ஆரம்பம் வரையில், குதிரை சவாரியிலும், கோச் வண்டி சவாரியிலும் மிக மெள்ளத் தான் செல்ல முடிந்ததோடு, வழியில் ஏக ஆபத்துக்களும் இருந்தன. 1811ல், நியூ யார்க்கி

லிருந்து, பிலடெல்பியா வரையில் செல்ல, அதாவது தொண்ணூறு மைல் தூரத்தைக் கடக்க இருபத்தாறு மணி நேரம் பிடித்தது.

பிறகு நீராவி சக்தி வந்தது. வாட், ட்ரெவிதிக், ஸ்டீவன்ஸன் இவர்களுடைய பெயர்கள், பள்ளி மாணவர்களாலும், அரசியல் வாதிகளாலும் என்றும் போற்றப்படும். நீராவியைக் கட்டுப் படுத்த ஆரம்பித்த இவர்கள், அமெரிக்கா முழுவதும் ஒரு யந்திர சாதனை கொண்ட போக்கு வரத்துத் திட்டம் வரும் என்று எதிர்பார்த்தார்கள். மணிக்கு முப்பது, ஐம்பது, ஏன் நூறு மைல் வேகத்தில் கூடப் போக சாத்தியமாகும் நாள் வரும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

"அபிவிருத்தி யடைந்து கொண்டிருக்கும் நம் தேசத்துக்கு, மோட்டார் வண்டி ஒரு அவசியமான போக்கு வரத்து சாதனமாகும். நம்முடைய பிற்கால வாழ்க்கை அமைப்பையே இது மாற்றி அமைக்கப் போகிறது. தரையில் மோட்டார் வண்டி நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கையில், புதிதாகத் தோன்றியிருக்கும் ஆகாய விமானம், வானத்தில் நமக்கு ஒரு பாதை வகுத்துக் கொடுக்கப் போகிறது."

தான் எழுதி யிருந்த வியாசத்தை எட்ஸெல் மடித்து வைத்து, தகப்பனாரின் அபிப்பிராயத்துக் காகக் காத்து நின்றான்.

"பேஷ் நன்றாகத் தான் எழுதியிருக்கிறாய்" என்றார் ஹென்றி தலையை ஆட்டிக் கொண்டே.

இன்னும் கொஞ்ச நாள் போனால் தம்முடைய பெரிய தொழிலை நிர்வகிக்க, எட்ஸெல் தகுதியுடைய வன் என்று உணர்ந்து சந்தோஷப்பட்டார். "ஆமாம், விமான வேலை எவ்வளவு தூரம் ஆகியிருக் கிறது?" என்று கேட்டார்.

முதல் போர்ட் ஆகாய விமானத்தை மூன்று பேர் கட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு எட்ஸெல் உதவி புரிந்து கொண்டிருந்தான். இதற் கென்று ஹென்றி வுட்வார்ட் அவென்யு, 1302 நம்பருக்குப் பின் உள்ள தொழுவத்தை வாடகைக் குப் பிடித்து, அதில் பட்டறை அமைத்திருந்தார். இது சம்பந்தமான யந்திர வேலைகள் போர்ட் மோட்டார் கம்பெனியில் நடந்தன.

"அது ரொம்பவும் அழகாக அமையப் போகிறது, அப்பா. அதனுடைய் மோட்டாரின் ஹுங்கார சப்தத்தைப் பார்க்கணுமே?" என்று பதில் சொன்னான் எட்ஸெல்.

எட்ஸெலுக்கு யந்திரங்களில் இருந்த அக்கறை யைக் கண்டு ஹென்றி சந்தோஷப் பட்டார். ஆகாயத்தில் பறவையைப் போல் பறக்கும் யந்திரம் ஒன்று கண்டு பிடிக்க ரைட் சகோதரர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டதிலிருந்து, ஹென்றி ஆகாய விமான முன் னேற்றத்தை வெகு அக்கறையுடன் கவனித்து வந்தார்.

எட்ஸெலின் உதவி கொண்டு கட்டப்பட்ட முதல் போர்ட் விமானம் 28 குதிரை பலம் உள்ள

ஒரு 'டி' மாடல் போர்டு என்ஜினுல் இயக்கப் பட்டது. அதில் கீழே இறங்குவதற்காக மூன்று சக்கரங்கள் பொருத்தப் பட்டிருந்தன.

# அத்தியாயம் 16.

எல்லாம் நல்லபடியாக நடந்து கொண்டிருக்கையில், திடீரென்று ஒரு நாள் ஒரு போலீஸ்காரன் வந்து ஹென்றி மீது சம்மன் சமர்ப்பித்தான். செல்டன் பேடன்ட்டை ஹென்றி மீறி விட்டதாக சில மோட்டார் வண்டி தயாரிப்பாளர்கள் ஹென்றி மீது வழக்குத் தொடுத்திருந்தார்கள்.

செல்டன் ஒரு வக்கீல். அவர் 1895ல் ஆபத்தில்லாததும், இலகுவானதும், மலிவானதும், கனமில்லாததும், எளிதில் கட்டுப்படுத்தக் கூடியதும், மேடுகளில் எளிதில் ஏறக் கூடியதுமான ஒரு வண்டி தயாரிக்க உரிமைப் பத்திரம் வாங்கியிருந்தார். ஆனல் அத்தகைய வண்டி கண்டு பிடிக்க அவர் ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ள வில்லை. ஆனல் மோட்டார் வண்டிகள் கண்டு பிடித்த மற்றவர்கள் ஒரு சங்கம் அமைத்துக் கொண்டு, செல்டன் பேடன்டை உபயோகிக்க லைசன்சு பெற்றிருந்தனர். இந்த சங்கம் தான் இப்பொழுது போர்ட் மோட்டார் கம்பெனி மீது வழக்குத் தொடுத்திருந்தது.

செல்டன் பேடன்டின் உரிமைகளை ''மின்சார வண்டிக் கம்பெனி'' பெற்றிருந்தபடியால், இவர்கள்

எல்லாரும் தாங்கள் தயாரித்த ஒவ்வொரு வண்டிக்கும் இந்தக் கம்பெனிக்குக் கட்டணம் செலுத்தி வந்தார்கள்.

"எங்கள் சங்கத்தில் சேராவிட்டால் உம் தொழிலையே நசுக்கி விடுவோம்" என்று அதன் அங்கத்தினர்கள் ஹென்றியிடம் சொன்னார்கள்.

வழக்கைப் பற்றி ஹென்றி கவலைப் பட்டார். அது ஒரு பெரிய விஷயம் என்பது அவருக்குத் தெரியும். எதிர்த்து நின்றால் மோட்டார் தொழிலையே எதிர்த்து நிற்க வேண்டிவரும். எல்லாரும் தம்மைப் பைத்தியக்காரன் என்று சொல்வார்கள். தாம் காரே உற்பத்தி செய்ய முடியாதபடி அவர்கள் செய்தாலும் செய்து விடுவார்கள். ஆனால் அதே சமயத்தில், தாம் இத்தனை வண்டிகள் தான் உற்பத்தி செய்ய வேண்டும், அதற்கு இன்ன விலை தான் வைக்க வேண்டும் என்று உத்திரவிடும் எந்த சங்கத்திலும் அவர் சேரத் தயாராக இல்லை. தாம் தயாரிக்கும் ஒவ்வொரு வண்டிக்கும் 15 டாலர் கட்டணம் சங்கத்திற்குக் கொடுக்கவும் அவருக்குச் சம்மதமில்லை. இதில் ஒரு பகுதி சங்கத்திற்கும், மீதி மின்சார வண்டிக் கம்பெனிக்கும் போய்ச் சேரும் என்பது அவருக்குத் தெரியும்.

தாம் தயாரித்த முதல் வண்டியை ஹென்றி நினைத்துப் பார்த்தார். அப்பொழுது செல்டன் பேடன்ட் என்று ஒன்று இருந்ததாகவே அவருக்குத் தெரியாது. செல்டன் தாமாக ஒன்றும் வண்டிகள் தயாரிக்க வில்லை. ஆனால் பிறர் தயாரிக்க ஆரம்பித்ததும், தம் உரிமைகளை அவர்கள் மீறி

விட்டதாகக் குற்றம் சொன்னார். செல்டன் பேடன்டில் கண்டிருந்த என்ஜினுக்கும், தம் என்ஜினுக்கும் அடிப் படையிலேயே ஏக வித்தியாசம் உண்டு. குறைந்த அமுக்கமும், குறைந்த வேகமும் உள்ளது செல்டனுடைய என்ஜின்.

"கடைசி வரையில் போராடித் தான் பார்க்கப் போகிறேன்" என்றார் ஹென்றி தம் பங்குதாரர்களிடம்.

சிறந்த வக்கீல்களை அமர்த்தி, வழக்கை நடத்தும்படி சொன்னார். அநேக வருஷ சண்டைக்குப் பிறகு, 1911ல் ஹென்றிக்கு அப்பீலில் வெற்றி கிடைத்தது. இதைக் கண்டு மற்ற மோட்டார் உற்பத்தியாளர்களுக்கும் சந்தோஷம் தான். ஏனெனில் அவர்கள் இனி கட்டணம் கட்ட வேண்டிய தில்லை யல்லவா? ஹென்றிக்கு விரோதிகளாக இருந்த சங்கத்தின் அங்கத்தினர்கள், அவரைப் பாராட்ட முந்தினார்கள். தம் தொழிலைத் தம் இஷ்டப்படி விருத்தி செய்ய ஹென்றிக்கு சுதந்திரம் கிட்டிற்று.

இப்பொழுது போர்ட் மோட்டார் கம்பெனிக்கு, இடம் போதாமல் போகவே, டெட்ராய்ட்டின் வடக்குப் பாகத்தில் உள்ள ஹைலண்ட் பார்க் ஜில்லாவில் 276 ஏக்கர் நிலம் வாங்கினார். 47 ஏக்கர் விஸ்தீர்ணம் உள்ள பெரிய தொழிற்சாலைக் கட்டடம் ஆரம்பமாயிற்று.

பிளவர் மிஷின் கம்பெனியில் மெக்கானிக்காக இருந்த காலத்திலிருந்தே, ஹென்றிக்கு தொழிற்

சாலை என்றால் சுத்தமாக இருக்க வேண்டும், அதைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும் முடியும் என்ற நம்பிக்கை உண்டு. ஆகவே தம்முடைய புதிய தொழிற்சாலையில் அவர் சுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார். கண்ணாடியினால் கட்டப்பட்ட சுவர்களிலிருந்து நிறைய வெளிச்சம் வந்தது. கட்டடங்கள் காற்றோட்டமாகக் கட்டப் பட்டு, சுத்தமாக வைத்துக் கொள்வது சுலபமாக இருந்தது. தரைகளைப் பெருக்கி, ஜன்னல்களைக் கழுவி, சுகாதார வசதிகளைக் கவனித்துக் கொள்வ தற்கென்றே ஐந்நூறு பேர் அமர்த்தப் பட்டனர். சுவர்களுக்குச் சுண்ணாம்பு அடித்து, சுத்தமாக வைத்துக் கொள்வதற் கென்றே இருபத்தைந்து பேர் அமர்த்தப் பட்டனர்.

பழைய கடியாரத் தொழிற்சாலையின் ஞாபகம் ஹென்றிக்கு வந்தது. புதுத் தொழிற்சாலையில் வேலை செய்த 1800 பேரையும், அதிகப்படி அலையா மல், ஒழுங்காகவும், துரிதமாகவும் வேலை செய்ய வைத்து, செலவைக் குறைக்க வேண்டும் என்று நினைத்தார். தொழிலாளிகளின் நடையைக் குறைத் தால், செலவைக் குறைக்கலாம், செலவைக் குறைத் தால், இன்னும் குறைந்த விலையில் வண்டிகளை விற்க முடியும்.

போர்ட் மோட்டார் வண்டியின் ஒவ்வொரு பாகமும் ஒரு தனி இலாகாவில் செய்யப் பட்டு, ஆகர்ஷண சக்தியின் உதவி கொண்டு, ஒன்று சேர்க்கப்படும் அறைக்கு அனுப்பி வைக்கப் படும். சாமான்களைத் தூக்கிக் கொண்டு இடைவிடாமல்

சுற்றிக் கொண்டிருக்கும் சங்கிலி 1911ல் அமைக்கப் பட்டது. ''வேலை இருக்கும் இடத்திற்கு வேலை யாட்களை போகச் சொல்வதை விட, வேலையாட்கள் இருக்கும் இடத்திற்கு வேலையை அனுப்பி வை''— இது தான் ஹென்றியின் புதிய முறையின் அடிப் படை. இந்தச் சங்கிலி ஒவ்வொரு பாகமாகத் தூக்கிக் கொண்டு செல்லும் போது, அந்த பாகத் தைச் சரிபடுத்த தொழிலாளிகள் கருவிகளுடன் காத்துக் கொண்டிருப்பார்கள். தொழிலாளி யோசனை பண்ணுவதற்கே ஒன்றும் இருக்காது. அவர் செய்ய வேண்டிய வேலை ஏதாவது ஒன்றே ஒன்று தான் இருக்கும்.

இந்தப் புது முறையைப் பார்ப்பதற்குப் பொது ஜனங்களும், மற்றக் கார் தயாரிப்பாளர்களும் வந்தார்கள்.

இது பார்ப்பதற்கு ஏதோ ரயில்வே லைன்கள் மாதிரி இருந்தது. ஒவ்வொரு தொழிலாளியும் தனக்கு என்று குறிப்பிட்ட இடத்தில் நின்று கொண்டு தன் பக்கம் வர வேண்டிய பாகம் வந்ததும், ஒரு சின்ன ஆணியைச் செருகுவதோ அல்லது பாடியை மாட்டுவதோ செய்வார். மாடல் 'டி', இந்த முறையில், நகரும் மேடையில் கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்து முழு வண்டி ஆகும்.

எல்லா வண்டிகளும் பழுதில்லாமல் இருக் கின்றனவா என்று பரிசோதிக்கப்பட்டன. ஏதா வது விபத்து நேர்ந்தால், அது எதனால் நிகழ்ந் தது என்று ஹென்றி கண்டு பிடித்து, அந்தத்

தவறு திரும்பவும் நிகழாமல் பார்த்துக் கொண்டார்.

ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்வது தொழிலாளிகளின் உடல் நலத்துக்குக் கெடுதல் என்று சிலர் குற்றம் சொன்னார்கள். இதற்காக வைத்தியர்கள் நியமிக்கப் பட்டு, அவர்கள் தொழிலாளிகளைப் பரிசோதனை செய்தார்கள். வேலை மாற்றம் வேண்டும் என்று தொழிலாளிகள் எப்பொழுதாவது தான் கேட்டார்கள். அப்படி அவர்கள் கேட்கும் போது, வேறு வேலைக்கு மாற்றப் பட்டார்கள்.

தம் தொழிற்சாலைக்கு ஆட்கள் சேர்த்த இலாகா அதிகாரிகளை ஹென்றி ஒரு நாள் கூப்பிட்டு அனுப்பினார். "அங்கஹீனமானவர்களை நம் தொழிற்சாலையில் சேர்த்துக் கொண்டால், நாம் தேசத்துக்கே நன்மை செய்தவர்களாவோம். இவர்கள் தங்கள் ஜீவனத்தைத் தாங்களே சம்பாதித்துக் கௌரவத்துடன் வாழ்வார்கள். நாம் வேலைக்கு அமர்த்தும்போது பிறரிட மிருந்து நற்சாட்சி பத்திரம் வைத்திருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. சிறையிலிருந்து விடுதலையானவர்களைக் கூட, அவர்கள் வேலை செய்ய இஷ்டப்பட்டால், நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் புது வாழ்வு வாழ்வதற்கு நாம் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்" என்றார்.

தம் திரண்ட சொத்து இரட்டிப்பாகப் பெருகுவதும், பிறகு இது இரட்டிப்பாகப் பெருகுவதும்

ஹென்றிக்குப் பெரிய பிரசினையாகப் போய் விட்டது. அவர் இப்பொழுது பெரிய கோடீஸ் வரராகப் போய்விட்டார். யந்திரங்கள் விஷயமாக எத்தனை கெட்டிக்காரராக இருந்தாரோ, அதே அளவு கெட்டிக்காரராக பண விஷயத்திலும் இருந்தார்.

அவர் சொல்வார்: "உலகில் இரண்டு வகை முட்டாள்கள் இருக்கிறார்கள். ஏராளமான பணம் சேர்த்துப் பதுக்கி வைப்பதால் பலம் சேரும் என்று நினைக்கும் கோடீஸ்வரர்கள் ஒரு வகை. ஒரு இனத்தாரிடமுள்ள பணத்தைப் பிடுங்கி, இன்னொரு இனத்தாருக்குக் கொடுப்பதால் உலகத்தின் கஷ்டங் களைத் தீர்த்து விடலாம் என்று நினைக்கும், கையில் காசில்லாத சீர்திருத்தவாதிகள் ஒருவகை. இரண்டு பேரும் தவருன வழியில் செல்கிருர்கள்."

தம் திரண்ட செல்வத்தை, ஒரு குடியானவன் தன் விதைக் கோட்டையை எப்படிப் பார்ப் பானே அப்படித் தான் ஹென்றி பார்த்தார். இதைக் கொண்டு இன்னும் நிறைய செல்வத்தைப் பெருக்க வேண்டும் என்று நினைத்தார். ஆயிரக் கணக்கான குடும்பங்களைக் காப்பாற்றிய ஒரு பெரிய தொழிலுக்கே ஒரு தனி புனிதத் தன்மை இருந்தது. இந்தத் தொழிலை நம்பி எத்தனை பேர் கலியாணம் பண்ணிக் கொண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுகிருர்கள், தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிருர்கள், எத்தனை ஆயிரம் பேர் மாதாந்திர தவணையில் வீடு கட்டிக் கொள்ளுகிருர்கள் என்றெல்லாம் ஹென்றி நினைத்

துப் பார்த்தார். போர்ட் மோட்டார் கம்பெனி இருப்பதால்தான் இத்தனை குடும்பங்களும் வாழ முடிகிறது என்று எண்ணிப் பார்த்த போது, இந்தக் கம்பெனி தொடர்ந்து நடந்து, வளரும்படி செய்வது தமக்கு ஒப்பிக்கப்பட்ட ஒரு புனிதமான கடமை என்று அவர் எண்ணினார்.

தம்முடைய தொழிற்சாலையையும், தொழிலாளிகளையும் நினைத்துப் பார்த்த போது, ஹென்றிக்கு பழைய நாள் ஞாபகம் வந்தது. டியர்பார்ன் பண்ணையில் கூலியாட்களோடு தோளோடு தோள் நின்று வேலை செய்திருக்கிறார். டெட்ராய்ட் யந்திர சாலைகளில், மெக்கானிக்குகளோடும் தோளோடு தோள் நின்று வேலை செய்திருக்கிறார். யந்திரங்களைப் பற்றிய ஒவ்வொரு பாகமும் அவருக்குத் தெரியும். யந்திரம் சரியாக வேலை செய்ய வேண்டுமானால், ஒவ்வொரு திருகு ஆணியும், மறையும் சரியாக இருக்க வேண்டுமென்பது தெரியும். அதைப் போலவே தொழிற்சாலையின் வெற்றிக்கு ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம். தம்முடைய தொழிலாளிகளுக்கு ஒரு சமயம் சம்பளம் கொடுக்க முடியாமல் போன போது, அவர் அவர்களுக்கு அளித்த வாக்குறுதி ஞாபகம் வந்தது.

தம் தொழிலாளர்களின் நலன்களைப் பற்றி ஹென்றிக்கு வெகு காலமாகவே கவலை உண்டு. அவர்களுடைய வீடுகள் எப்படி இருக்கின்றன, அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று அறிய ஆசைப் பட்டார். 15,000 போர்ட் தொழிலாளிகள் எப்படி வாழ்கிறார்கள் என்று ஆராய 200

பேரை நியமித்தார். இந்த வேலை இவர்களுக்கு ஒரு வருஷம் பிடித்தது. அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையைக் கண்டு ஹென்றி திடுக்கிட்டார். கால் பங்கு தொழிலாளிகள் வறுமையில் கஷ்டப்பட்டார்கள் என்றும், இன்னொரு கால் பங்கு சுமாரான ஸ்திதியில் தான் வாழ்கிறார்கள் என்றும், அத்தனை பேரில் 364 பேருக்குத் தான் சொந்த வீடுகள் இருக்கின்றன வென்றும் தெரிந்து கொண்டார்.

எல்லாக் கம்பெனிகளிலும் கொடுக்கப்பட்டு வந்த நியமனக் கூலிதான் இந்தத் தொழிலாளிகளுக்கும் கொடுக்கப் பட்டு வந்தது. இந்த சம்பளத்தில் அவர்கள் சௌக்கியமாக வாழ முடியவில்லை யானால் ஏதாவது செய்து தான் ஆகவேண்டும். சம்பள விகிதங்களை மாற்ற வேண்டும் என்று ஹென்றி தீர்மானித்தார். அடுத்த நாள் புது வருஷ தினமானதால் விடுமுறைத் தினம். இருந்தும் பங்குதாரர்களைக் கூப்பிட்டு அனுப்பினார். விடுமுறை என்பதற்காக அவர் தம் திட்டத்தை நிறுத்தி வைக்கத் தயாராக யில்லை.

# அத்தியாயம் 17.

புது வருஷ தினத்தன்று ஹென்றி தங்களைக் கூப்பிடக் காரணம் என்னவென்று ஆச்சரியப் பட்டுக் கொண்டே, பெரிய மேஜையைச் சுற்றி பங்குதாரர்கள் தங்கள் தங்கள் வழக்கமான இடங்களில் அமர்ந்திருந்தார்கள்.

ஹென்றி தம் நாற்காலியை விட்டு எழுந்து, தாம் இருந்த இரண்டாம் மாடி ஜன்னலின் வழியாக வெளியே தெரிந்த "ஆள் சேர்க்கும் இலாகாவைப்" பார்த்தார். நடுக்கும் குளிரையும் பொருட்படுத்தாமல் தங்கள் பெயர்களை வேலைக்குப் பதிவு செய்து கொள்வதற்காக, ஒரு நீள வரிசையில் ஆட்கள் காத்திருந்தார்கள்.

"நம் தொழிலாளிகளின் சௌகரியங்களை அதிகரிப்பதைப் பற்றி உங்கள் யோசனை என்ன என்று தெரிந்து கொள்வதற்காகத் தான் இன்று நான் உங்களைக் கூப்பிட்டு அனுப்பினேன்" என்றார் ஹென்றி.

ஹென்றியின் கருத்தைப் புரிந்து கொள்ளாமல் பங்குதாரர்கள் திகைத்தார்கள். மற்றத் தொழிற்

சாலைகளில் விட, இங்கு தொழிலாளிகளைச் சௌகரியமாகத்தானே வைத்திருக்கிறோம் என்று நினைத்தார்கள்.

"நம் ஆட்கள் மற்ற எல்லாத் தொழிற்சாலைகளிலும் போல, நாளுக்கு ஒன்பது மணி நேரம் வேலை செய்து, சராசரி நாளொன்றுக்கு 2.34 டாலர் சம்பாதிக்கிறார்கள். கிட்டத் தட்ட தேசம் முழுவதும் இந்த மணிக் கணக்கு தான். இந்த சம்பளம் தான்" என்றார் ஹென்றி.

மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்த எல்லாரும் ஆமாம் என்று தலையை ஆட்டினார்கள். ஹென்றி எதைச் சொல்லுவதற்காக இப்படி ஆரம்பிக்கிறார் என்று அவர்களுக்குப் புரியவில்லை. தொழிலாளிகள் ஒருவரும் அதிருப்தியைத் தெரிவிக்க வில்லையே? உத்தியோகம் இருக்கிறதே என்று அவர்கள் சந்தோஷமாகத் தானே இருந்தார்கள்?

"ஒன்பது மணிக்குப் பதில் எல்லாரும் எட்டு மணி நேரம் வேலை செய்தால் நாம் இரண்டு ஷிப்டுக்குப் பதில் மூன்று ஷிப்டு வைத்துக் கொள்ளலாம். இதனால் இன்னும் நாலாயிரம் பேருக்கு வேலை கொடுக்கலாம்" என்றார் ஹென்றி.

அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். இது ஒரு புது முறைதான். இருந்தாலும் சரிப்படுத்தி விடலாம். நல்ல வேளை புரட்சிகரமான மாறுதல் ஒன்றும் இல்லையே!

ஆனால் ஹென்றி இத்தோடு நிறுத்த வில்லை. அவருடைய திட்டம் இன்னும் பெரியது.

"சரி. மணிக் கணக்கைச் சரிப் படுத்தியாகி விட்டது. சம்பள விஷயமாக என்ன செய்யலாம்? அவர்களுடைய நாள் கூலியை எவ்வளவு அதிகரிக்கலாம்?"

"இருபத்தைந்து செண்டுகள் கொடுத்தாலே அதிகம்" என்ருர் ஒருவர்.

ஹென்றி அதை ஒரு கரும் பலகையில் எழுதினர். "வேறு யாராவது சொல்லவேண்டியது இருக்கிறதா?"

ஹென்றி திருப்தி யடையவில்லை யென்று தெரிந்து ஒருவர், "நாளைக்கு 50 சென்ட் அதிகம் கொடுக்கலாம். இதனல் கம்பெனிக்கு நாளொன்றுக்கு 7,500 டாலர் கூடுதலாகச் செலவாகும். அதாவது வருஷத்திற்கு 20 லட்சம் டாலருக்கு மேல் செலவாகும்" என்ருர்.

"இதை விட இன்னும் அதிகம் கொடுக்க முடியும் என்று யாரும் நினைக்க வில்லையா?"

ஹென்றி அவர்களுடைய முகங்களைக் கூர்ந்து கவனித்தார்.

வெகு நேரங் கழித்து ஒருவர், பயந்து கொண்டே, "ஒரு டாலர் அதிகம் கொடுக்கலாம்" என்ருர். உடனே எல்லாரும் மனக் கணக்குப் போட ஆரம்பித்தார்கள். அப்படி யென்ருல் வருஷத்திற்கு 40 லட்சம் டாலருக்கு மேல் கம்பெனிக்குச் செலவாகும் என்று கணக்குப் போட்டார்கள். இதற்கு மேல் முடியாது என்றும் கருதினர்கள்.

ஆனல் ஹென்றி திரும்பத் திரும்பச் சொல்லி,

அவர்களை இரண்டரை டாலர் உயர்வுக்கு இணங் கும்படி செய்தார். அதாவது தொழிற்சாலையில் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு ஐந்து டால ருக்குக் குறைந்து சம்பளம் கிடையாது.

கூட்டத்தில் இருந்த கிட்டத்தட்ட எல்லாரும் ஹென்றி ஏதோ பெரிய தவறு பண்ணி விட்டார் என்று தான் நினைத்தார்கள். ஆனால் இரண்டே இரண்டு பேருக்குத் தான் ஹென்றி மீது நம்பிக்கை உண்டு. ஹென்றி தெரிந்து தான், வேண்டுமென்றே இந்தக் காரியத்தைச் செய்கிறார் என்று அவர்கள் நம்பினார்கள். மற்றவர்கள், ஒரு மணி நேரக் குறைந்த வேலைக்கு இரண்டத்தனை சம்பளம் கொடுப்பது கம்பெனிக்கு நல்ல தல்ல என்று கருதி னார்கள்.

பங்குதாரர்கள் இது விஷயத்தைக் குறித்தே குழப்ப மடைந்திருக்கையில் ஹென்றி ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டார். வருஷத்தில் ஒரு கோடி டாலர் பணத்தைத் தொழிலாளிகளுக்குப் போனஸாகக் கொடுக்க வேண்டுமென்றார்.

பங்குதாரர்கள் திகைத்தார்கள்.

"தொழிலாளிகளுக்கு நாம் நல்ல சம்பளம் கொடுத்தால், ஒன்பது மணியில் செய்கிற வேலையை அவர்கள் எட்டு மணியில் செய்வார்கள்" என்றார் ஹென்றி. "அதோடு லாபத்திலும் அவர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டும். அவர்கள் உதவி கொண்டு சேர்ந்த லாபத்தில் அவர்களுக்கும் ஒரு பங்கு போவது நியாயந்தானே ?"

லாபத்தை பங்கு போடும் போர்டின் திட்டம் பத்திரிகைகளில் வெளியானதும், தேசமே ஆச்சரியத்தினல் திகைத்தது. ஹென்றியின் திட்டம் பற்றி எல்லா வீடுகளிலும், எல்லா முச்சந்திகளிலும், எல்லாக் கூட்டங்களிலும் பேசிக் கொண்டார்கள். ஹென்றி போர்ட் தேசத்தின் வெற்றி வீரஞக ஆகி விட்டார். தொழிலாளிகளின் நண்பன் ஆகிவிட்டார்!

மற்ற மோட்டார் தயாரிப்பாளர்கள், பத்திரிகையில் கண்ட இந்த செய்தியைக் கண்டு கோபமடைந்து பத்திரிகையைக் கசக்கி எறிந்தார்கள். எல்லாத் தொழில்களேயும் போர்ட் நாசமாக்கி விடப் போகிருர் என்று சொல்லிக் கொண்டார்கள். ஹென்றியின் இச் செய்கை அவர்களுக்கு ஒரு பெரிய வெடி குண்டைப் போல இருந்தது. ஒரு உற்பத்தியாளர், "இந்தத் தொழிலாளிகள் வேலே செய்ய அரண்மனே போன்ற இடம் கொடுத்தது போதாது என்று, போர்ட் பணத்தையும் அள்ளி வீசுகிருர். அவர் வழியில் நாம் தொழில் நடத்த ஆரம்பித்தால் நாம் எல்லாரும் ஓட்டாண்டிகளாக வேண்டியது தான்" என்ருர்.

ஹென்றியால் அவர்களுக்கு ஏக தலே வேதனே! ஒரு நாளேக்கு ஐந்து டாலர் என்பது அளவுக்கு மிஞ்சிய கூலி! மற்ற தொழிற்சாலேகளில் வேலே செய்வோரிடம் அதிருப்தியும் குழப்பமும் ஏற்பட்டது. ஆகவே எல்லாரும் போர்ட் தொழிற்சாலேயை நோக்கி வேலே கேட்க வந்தார்கள். எல்லாரும் போர்ட் மோட்டார் கம்பெனியில் வேலே செய்ய ஆசைப் பட்டார்கள்.

வேறு எங்காவது வேலையில் இருந்தவனுக்கு இங்கு வேலை கிடையாது. மணமாகி வேலை யில்லாமல் இருந்தவர்களுக்கு முதலில் வேலை கொடுத்து விட்டுத் தான் மற்றவர்களுக்குக் கொடுக்கப் பட்டது. இங்கு வேலை கிடைக்காமல், மற்ற இடங்களுக்கு வேலை செய்யப் போனவர் களைக் குறித்து ஹென்றி வருத்தப் பட்டார். ஆரோக்கியமாகவும், சந்தோஷமாகவும் வாழ்வ தற்கு வேண்டிய சம்பளம் இல்லாததால் அவர்க ளால் எப்படி அங்கு முழுமனதுடன் வேலை செய்ய முடியும்?

சௌக்கியமாகவும், சந்தோஷமாகவும் வாழ் வதற்கு வேண்டிய பணத்தைத் தொழிலாளி களுக்குக் கொடுத்தால் தான் எல்லாருக்கும் நல்லது என்று ஹென்றி தம் எதிராளிகளுக்கு நிரூபிக்க விரும்பினர். தொழிலாளர்களின் நல்லெண்ணத் திலும், அவர்களுக்கு லாபம் இருக்கிறது என்று அவர் தொழில் தலைவர்களுக்கு நிரூபித்தாக வேண்டும்! "எல்லாருக்கும் நன்மை பயக்கக் கூடிய காரியத்தைச் செய். அது கடைசியில் உனக்கு நன்மையாக முடியும்" என்பது தான் ஹென்றி யின் கொள்கையாக இருந்தது.

ஹென்றி ஒரு முட்டாள் என்றும், விளம்பரத் துக்காக இப்படிச் செய்கிறுர் என்றும் அவருடைய எதிரிகள் கூறினர்கள்.

இந்தத் திட்டப்படி சில மாதங்கள் சென்றதும் ஹென்றி தம்முடைய 200 விசாரணையாளர்களையும் கூப்பிட்டு, நிலைமை எப்படி இருக்கிறது என்று

விசாரித்துச் சொல்லும்படி உத்தரவிட்டார். கார்களின் உற்பத்தி இருபது சத விகிதம் உயர்ந்துவிட்டது என்று தெரிந்தது. தொழிலாளியின் வேலை நேரம் குறைந்திருந்தது. ஒவ்வொரு தொழிலாளியும் மணிக்கு எவ்வளவு வேலை செய்கிறான் என்று பார்த்தபோது, அது முன்னைவிட அதிகரித்துவிட்டது என்று தெரிந்தது. பாகங்கள் தயார் செய்த ஒரு இத்தாலியத் தொழிலாளி இப்பொழுது இரண்டத்தனை செய்துகொண்டிருந்தான். இதற்கு அவன் சொன்ன காரணம் என்னவென்றால், "மிஸ்டர் போர்ட் எனக்கு இரண்டு டாலர் 50 சென்ட் சம்பளம் தந்தார், நான் அவருக்கு 250 பாகங்கள் தந்தேன். அவர் இப்பொழுது ஐந்து டாலர் தருகிறார், நான் ஐந்நூறு பாகங்கள் தருகிறேன். அவர் கொடுத்ததை நான் திருப்பிக் கொடுக்கிறேன்" என்பது தான்.

தொழிலாளிகளின் வாழ்க்கை நிலையிலும் எத்தனையோ பிரத்தியட்ச மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. 1100 பேர் நல்ல வீடுகளுக்குக் குடிபோயிருந்தார்கள். அவர்கள் பாங்கியில் போட்டிருந்த பணம் இரண்டரை மடங்காக அதிகரித்திருந்தது. டெட்ராயிட்டில் இருபது லட்சம் டாலர் பெறுமான மனைகள் போர்ட் தொழிலாளிகளுக்கு மாற, அவர்கள் மாதத் தவணையில் சொந்த வீடுகளுக்குப் பணம் கட்டிவந்தார்கள்.

இந்த விவரங்களை அறிந்து ஹென்றி சந்தோஷப்பட்டார். தொழில் தலைவர்கள் தன்னைப் பற்றி என்ன சொன்னாலும் சொல்லட்டும், சீக்கிரமே

அவர்களும் தொழிலாளிகளின் வேலை நேரத்தைக் குறைத்து, அவர்கள் சம்பளத்தை அதிகரித்துத் தான் ஆக வேண்டும் என்பது அவருக்குத் தெரியும்.

# அத்தியாயம் 18.

காலை ஆகாரமான முட்டையும், ரொட்டியும் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் கிளாரா ஹென்றியைப் பார்த்து, "ஹென்றி! இன்று ஒரு முக்கியமான நாள். என்னவென்று சொல்ல முடியுமா?" என்று கேட்டாள்.

"இன்று ஜுலை 30. இன்று ஏதாவது விசேஷ நாளா?"

"இன்று ஒரு விசேஷ நாள் தான். இன்று உங்கள் பிறந்த நாள். இன்று உங்களுக்கு ஐம்பத்திரண்டு வயது ஆகிறது. இருந்தும் உங்களுக்கு எங்கிருந்து தான் இத்தனை சக்தி கிடைக்கிறதோ! நீங்கள் ஒரு மனித டைனமோ" என்றாள்.

ஹென்றியின் தலைமயிர் சாம்பலாக மாறியிருந்தது. அதைத் தவிர, நாற்பது வயதில் எப்படி இருந்தாரோ, அதைப் போலத் தான் உயரமாகவும், ஒல்லியாகவும் இருந்தார். அவருடைய கண்கள் துரு, துருவென்று விளங்கி, வாழ்வதிலும், காரியங்கள் செய்வதிலும் அவருக்குள்ள ஆசையைக் காட்டின.

"ஐம்பத்திரண்டா? இந்த வயதில் தான் எல்லாரும் புத்திசாலிகளாக மாறுவார்கள். ஆனால் நானோ இருபது வருஷங்களுக்கு முன்னர் எப்படி இருந்தேனோ அப்படித் தான் இருக்கிறேன்."

"இத்தனை நாளும் கஷ்டப்பட்டு உழைத்தது போதும். இனி நீங்கள் சுகமாக வாழ ஆரம்பிக்க வேண்டும்."

"சுகமாக வாழ்வதா? என் வேலையே இப்பொழுதுதானே ஆரம்பமாகியிருக்கிறது?"

ஹென்றியின் மனத்தை மாற்றுவது எளிதான காரியமல்ல என்று கிளாரா வெகு காலத்துக்கு முன்பே தெரிந்து வைத்திருந்தாள். அதோடு ஒரு வேலையும் இல்லாமல் சும்மா உட்கார்ந்திருப்பதும் ஹென்றியால் முடியாத காரியம் என்று அவளுக்குத் தெரியும். அவருடைய உடம்பும் கைகளும் சும்மாவே இருக்காது. அவருக்கு எல்லாரையும் போல அரட்டை அடிப்பதோ, கேளிக்கைகளில் காலத்தைக் கழிப்பதோ பிடிக்காது. அவருக்கு வேலைதான் பொழுது போக்கு!

"உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? ஒரு காலத்தில் நீங்கள் பெரிய மனிதனாவீர்கள் என்று என் தாயாரிடம் சொன்னேன். ஆனால் அப்பொழுது, அதாவது 1915-ல், உங்கள் குதிரையில்லாத வண்டிகள் பத்து லட்சம் எங்கு பார்த்தாலும் சக், சக்கென்று ஓடிக் கொண்டிருக்கும் என்று நினைக்கவே யில்லை."

"மாடல் 'டி'யைப் பற்றி ஜாக்கிரதையாகவே

பேசு, கிளாரா! இப்பொழுதெல்லாம் அதை ஓட்டு வதற்கு கைப்பிடியைச் செருகி சுற்ற வேண்டிய அவசியம் கூட இல்லை. இப்பொழுது அதில் என்ன வெல்லாம் சௌகரியங்கள் இருக்கிறது என்று நினைத்தாய்? ஒரு ஜெனரேட்டர், ஒரு செல்ப் ஸ்டார்ட்டர், ஒரு ஸ்பீடாமீட்டர், ஒரு பாட்டரி, ஒரு மூடின கூடு, கண்ணாடி ஜன்னல்கள் இத்தனை வசதிகளும் இருக்கின்றன வாக்கும்! நாங்கள் அதை அபிவிருத்தி செய்து கொண்டே வருகிறோம். போர்ட் வண்டிகள் உனக்கு எவ்வளவோ கடமைப் பட்டிருக்கின்றன. முதல் போர்டை நீயும், நானும் தானே சேர்ந்து உருவாக்கினோம்?''

''புருஷனுக்கு உதவாத மனைவியும் ஒரு மனைவியா? தனக்கு நம்பிக்கையில்லாத யுவனை எந்த யுவதியும் கலியாணம் செய்து கொள்ளுவதில்லை. ஆனால் ஒரு சந்தோஷம். இனி என்னுடைய தொப்பி களை நானே தயாரிக்க வேண்டியதில்லை. அவை புது மோஸ்தராகவே இல்லையே?''

''முன்பெல்லாம் நீயே தயார் செய்து, திரும் பத் திரும்பப் பழுது பார்ப்பாயே, பெரிய தொப்பி கள், அவை நீ இப்பொழுது வாங்கும் குட்டித் தொப்பிகளைவிட எவ்வளவோ அழகாக இருந்த தாகத் தான் எனக்கு ஞாபகம்'' என்றார் ஹென்றி சிரித்துக் கொண்டே.

''அது இருக்கட்டும், இன்று உங்கள் பிறந்த நாளாச்சே, என்ன சமைக்கலாம், சொல்லுங் கள்!''

முன்பெல்லாம் உடம்புக்கு நல்லது என்று ஒரு பணியாரம் பண்ணுவாயே, அதற்கு என்ன பேர்? அதை எப்படி பண்ணுகிறது, சொல்லு!''

''ஓ! ஆப்பிள் பணியாரமா! ஒரு தட்டில் ஆப்பிளை நறுக்கிப் போட்டு, அதில் கொஞ்சம் ஜாதிக்காயோ, ஜாதிப் பத்திரியோ போட்டு, அதன்மேல் கொஞ்சம் புளிச்ச ஆடையை விட்டு, அடுப்பில் வைத்து வேக வைக்கவேண்டியது. பிறகு அதை ஒரு தட்டில் போட்டால் ஆடை கீழாகவும், ஆப்பிள் மேலாகவும் இருக்கும்.''

''அது தான். அதை இன்று பண்ணச் சொல்'' என்று சொல்லிவிட்டு ஹென்றி எழுந்து நின்ருர். அவர் தொழிற்சாலைக்குப் போகத் தயாராக இருந்தார்.

''இப்பொழுது தான் எல்லாம் சரியாக நடந்து கொண்டிருக்கிறதே! எட்ஸெலும் தொழிலில் அக்கறை காட்ட ஆரம்பித்துவிட்டானே! நாம் இருவரும் கொஞ்ச நாளைக்கு எங்கேயாவது போனல் என்ன?'' என்று கேட்டாள்.

1912ல் தன் ஹைஸ்கூல் படிப்பு முடிந்ததும் எட்ஸெல் போர்ட் கம்பெனியில் சேர்ந்து, வேலை செய்ய ஆரம்பித்து விட்டான். அவனை எல்லாத் தொழிலாளர்களுக்கும் பிடித்திருந்தது. நல்ல நிர்வாகியாக விளங்குவான் என்று எல்லாரும் நினைத்தார்கள்.

''எங்கே போகலாம் சொல்?'' என்று கேட்டார் ஹென்றி.

"ஊருக்குத் திரும்பிப் போய் பழைய நண்பர்களைச் சந்தித்து, அவர்களுடன் முன்போல் நாட்டியம் ஆடினால் என்ன?" பழைய நினைவுகள் மனத்தில் தோன்றியதும் கிளாராவின் கண்கள் மின்னின.

"சரி, எனக்கும் உன் யோசனை பிடித்திருக்கிறது. அதோடு நம் பண்ணைக்குப் பக்கத்தில் ஆயிரம் ஏக்கர் நிலம் வாங்கி அதில் ஒரு தொழிற்சாலை கட்ட ஏற்பாடு செய்திருக்கிறேனே, அதையும் கொஞ்சம் கவனித்தாக வேண்டும். ரூஜ் நதி தொழிற்சாலை என்று அதற்குப் பெயர் வைக்கப் போகிறோம். உலகத்திலேயே மிகப் பெரிய தொழிற்சாலையாக அது விளங்கப் போகிறது. இன்னும் என்னுடைய பழைய யந்திர ஷாப் இருக்கிறதே, அதிலும் கொஞ்சம் எனக்கு வேலை இருக்கிறது."

"நீங்கள் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அல்லவா, அங்கு போகலாம் என்றேன்" என்றாள் கிளாரா.

"ஓய்வா, சட்! எத்தனையோ வருஷங்களுக்கு முன்னர் நான் ஒரு பண்ணை என்ஜின் கட்ட முயற்சித்தேனே, ஞாபகம் இருக்கிறதா? அது நாற்பது அடி தான் ஓடிற்று. இப்பொழுது உலகம் முழுவதும் ஓடக்கூடிய டிராக்டர் கட்டப் போகிறேன். அதற்கு, 'போர்ட்ஸன்' என்று பெயர் வைக்கப் போகிறேன்."

# நான்காவது பாகம்

## 1915-1941.

# அத்தியாயம் 19.

ஹென்றியும், கிளாராவும் டியர்பார்னில் குதூகலமாகக் காலங் கழித்தார்கள். பழைய நண்பர்களைச் சந்தித்து அவர்களுடன் நாட்டியம் ஆடினர்கள். அங்கு இருக்கையில் ரூஜ் நதிக்கரையில் ஒரு பெரிய கல் வீடு கட்டுவது என்று தீர்மானித்தார்கள். டியர்பார்னுக்குத் திரும்பி வந்து வசிக்க வேண்டும் என்ற ஆசை கிளாராவுக்கு என்றும் உண்டாதலால் இந்த வீடு கட்டும் யோசனை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதோடு ஹென்றி நிம்மதியாகவும், தொந்தரவு இன்றியும் வசிக்கக் கிராமத்தில் ஒரு வீடு அவசியம் தான் என்று அவள் கருதினள். இப்பொழுது அவர் தேசீய வீரராக அல்லவோ விளங்கினர்? வேறு யாரும் சாதிக்காத, தொழில் சாதனைகளை அவர் சாதித்துவிட்டதால், அவர் யோசனையைக் கேட்கவும், அல்லது அவரைப் பணம் கேட்கவும், யாராவது வந்து கொண்டே இருந்தார்கள்.

ரூஜ் நதி பாய்ந்த அந்த ஆயிரம் ஏக்கர் சதுப்பு நிலத்தை வாங்கி, ஹைலண்ட் பார்க்கில் இருந்த மோட்டார் தொழிற்சாலையை விட மிகப் பெரிய

தொழிற்சாலை இங்கு கட்ட வேண்டும் என்று ஹென்றி தீர்மானித்தார். இந்த இடத்தை அவர் பொறுக்கி எடுத்ததற்குக் காரணம், இங்கு நதிப் போக்குவரத்து இருந்தது தான். மேற் கொண்டு விஸ்தரிக்க இடம் இருந்தது. தொழிற்சாலையில் வேலை செய்தவர்கள் சொந்த வீடு கட்டிக் கொள்ளவும் நிறைய இடம் இருந்தது. தொழிற்சாலைக்கு வேண்டிய சாமான்கள் கிடைப்பதற்கும் இது சரியான இடமாக இருந்தது. வடக்கே இருந்த இரும்பு சுரங்கங்களுக்கும், தென் மத்தியில் இருந்த நிலக்கரி சுரங்கங்களுக்கும் இது நடு மத்தியில் இருந்தது. இரும்புக் கனியை போர்ட் படகுகள் மூலம் டியர்பார்னுக்குக் கொண்டு வர முடியும்.

இந்த இடத்திற்கு வந்த சமயத்தில் தான் ஹென்றி தம்முடைய பண்ணை யந்திரம் விஷயமாக வேலை செய்து, குடியானவனுக்குப் பல வழிகளிலும் உபயோகமாகக் கூடிய கனமில்லாத 'டிராக்டர்' ஒன்று தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

இதற்கிடையில், ஐரோப்பிய யுத்தம் அமெரிக்க மக்களுக்குப் பெரிய வேதனையாகப் போய் விட்டது. 1914 ல் ஆஸ்திரியாவின் ஆர்ச் ட்யூக்கான பெர்டினண்டும், அவருடைய மனைவியும் கொல்லப் பட்டார்கள். ஒரு மாதத்திற்குப் பிறகு ஜெர்மனி பெல்ஜியத்தைப் படை யெடுக்க, ரஷ்ய சேனைகள் ஜெர்மனியை நோக்கிச் சென்றன. இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் எல்லாம் யுத்தத்தில் மூழ்கின. நான்கு வருஷ அகழ் யுத்தம் நடந்தது.

பிரிட்டிஷ் மக்களுக்கு உதவி தேவையாக இருந்தது. ஜெர்மன் நீர் மூழ்கிகள் மூழ்கடித்த உணவுப் பொருள்களை ஈடு செய்வதற்காக, நிலத்தை உழ இங்கிலாந்தில் போதுமான குதிரைகள் இல்லை. அவர்களிடம் நீராவி டிராக்டர்கள் சில தான் இருந்தன. எல்லாப் பட்டறைகளும் யுத்த தளவாடங்கள் தயாரித்துக் கொண்டிருந்தன. ஆகவே இங்கிலாந்து ஹென்றியின் உதவியை நாடிற்று. ஹென்றி அவர்களுக்கு தம்முடைய டிராக்டரின் குறிப்புப் படங்களையும், தம் டிராக்டர் நிபுணரையும், இன்னும் மற்றவர்களையும் அனுப்பி வைத்து, அவர்களுக்கு வேண்டிய டிராக்டர்கள் உற்பத்தி செய்து கொள்ளும்படி சொன்னார். ஹென்றியின் "போர்ட்ஸன்" என்ற டிராக்டர் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படுவதற்கு முன்னர், இங்கிலாந்தில் நிறைய உற்பத்தி செய்யப் பட்டது.

யுத்தத்தைப் பற்றி ஹென்றி மிகவும் கவலை கொண்டார். யந்திரத்தின் பாகங்களைப் போல மக்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் இணைந்தவர்கள் என்றும், ஒரு பகுதிக்கோ அல்லது ஒரு இனத்துக்கோ கெடுதல் நேர்ந்தால் அது எல்லாரையும் பாதிக்குமென்று ஜனங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் ஹென்றி பத்திரிகை நிருபர்களிடம் சொன்னார். யுத்தம் எல்லா வகையிலும் ஒரு பெரும் நஷ்டம் என்று அவர் கருதினார்.

நடு நிலைமை நாடுகளிலிருந்து சமாதான ஊழியர்கள் அவரைப் பார்க்க வந்தார்கள். நம் சர்க்

காரின் உதவி அவர்களுக்குக் கிடைக்காததால், ஹென்றி தலைமை வகித்து, யுத்தத்தை நிறுத்து வதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவரைக் கேட்டுக் கொண்டார்கள்.

சமாதானத்தின் மீது ஹென்றிக்கு இருந்த ஆசையும், உலக மக்கள் எல்லாருக்கும் உதவி புரிய வேண்டும் என்று அவருக்கு இருந்த ஆர்வமும், அவரை ஒரு பணச் செலவு கொண்ட அனுபவத் தில் மாட்டி வைத்தது. அவர் ஜனதிபதி வில்ஸனை சந்தித்து, சமாதானம் பேசுவதற்காக ஒரு நடு நிலைமைக் கமிஷன் ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னர். மற்றவர்களைப் போல் இதில் இவருக் கும் தோல்வி தான் கிடைத்தது. பிறகு இன்னெரு யோசனை செய்தார். ஒரு கப்பல் ஏற்பாடு செய்து, அதில் சில அமெரிக்கர்களுடன் ஐரோப்பாவுக்குச் சென்று யுத்தத்தை நிறுத்துவது என்று தீர்மானித் தார்.

ஹென்றி வாஷிங்டனிலிருந்து கிளாராவுக்கு போன் பண்ணினர். ''நாம் ஐரோப்பாவுக்குப் போகப் போகிருேம்'' என்ருர்.

''நான் வர முடியாது. நமக்கு ஒரு பிள்ளை யிருக்கிறது. உங்களுக்கு நான் கடமைப் பட்டது போல் என் பிள்ளைக்கும் கடமைப் பட்டிருக்கிறேன். நமக்கு ஏதாவது நிகழ்ந்தால் எட்ஸெலை யார் கவனிப்பது ?'' என்று கிளாரா பதில் சொல்லி விட்டாள்.

ஹென்றியை ஐரோப்பாவுக்குப் போகாமல்

தடுக்கும்படி நண்பர்கள் கிளாராவைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் கிளாரா குறுக்கிட மறுத்தாள். தனக்கு எது சரி என்று படுகிறதோ அதை ஹென்றி செய்து தான் தீருவார் என்று அவளுக்குத் தெரியும். அவர் ஐரோப்பாவுக்குப் போவது அவளுக்குத் துளிகூடப் பிடிக்கவில்லை. இருந்தாலும் அவர் புறப்படுவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டிருந்தாள்.

1915 டிசம்பர் ஆரம்பத்தில், ஒரு நாள் ராத்திரி, இருட்டிக் கிடந்த நியூயார்க் துறைமுகத்தில் ஒரு ஸைரன் கத்த, ஆஸ்கார் 2, என்ற டேனிஷ் கப்பல் ஐரோப்பாவை நோக்கிப் புறப்பட்டது. அதில் ஹென்றியும், இன்னும் சில அமெரிக்கர்களும் இருந்தார்கள்.

ஹென்றியின் அபிப்பிராயங்கள் அவருக்கே சொந்தமாக இருந்த காலம் போய் விட்டது. அவரைச் சுற்றி வந்து கொண்டிருந்த பத்திரிகைக்காரர்கள் அவருடைய நல்லெண்ணத் திட்டத்தைத் துப்பர்த்தம் செய்து கொண்டார்கள். யுத்தத்தை நிறுத்துவதற்காக நீர் மூழ்கிகள் மல்கிக் கிடக்கும் சமுத்திரத்தைக் கடக்கும் இந்த யாத்திரிகர்களைப் பத்திரிகைகள் பழித்தன. ருசிகரமான செய்தி ஏதாவது கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருந்த பத்திரிகாசிரியர்களுக்கும், நிருபர்களுக்கும் இந்த சமாதான கப்பல் நிறைய செய்திக்கும், நாடகத்திற்கும், விமரிசனங்களுக்கும் காரணமாக அமைந்தது.

''நோவாவின் பேழையைப் போல் ஒரு பேழைக்கு போர்ட் ஏற்பாடு செய்கிறார்'' ''அகழ்களைப் படை எடுக்கத் திட்டம்'' ''மோட்டார் மன்னன் தலைமையில் செல்லும் சமாதானப் படை'' என்றெல்லாம் கிண்டலாகத் தலைப்புகள் கொடுத்து எழுதினார்கள்.

எதிரிகள் தங்களுக்குள் பேசிக் கொள்ள ஒரு வழி செய்வது தான் ஹென்றியின் நோக்கம். யுத்தம் இப்படியும் போகாமல், அப்படியும் போகாமல் இருந்ததால் எதிரிகள் ஒரு நடு நிலைமைக் கோஷ்டி மூலம் பேசிக் கொள்ளட்டுமே என்று அவர் நினைத்தார். உலகில் சமாதானத்தை நிலை நிறுத்த வேண்டுமானால், தேசத்துக்குத் தேசம் சமாதானம் பண்ணும் ஒரு மகாநாடு தொடர்ந்து நடக்க வேண்டும் என்று ஹென்றி கருதினார். ஆனால் இவர்களைப் பழிப்பதிலேயே பத்திரிகைகள் மும்மரமாக இருந்ததால் இவர் சொன்ன முக்கியமான கருத்தான, ''தொடர்ந்து நடத்தும் மகாநாட்டை'' யாரும் கவனிக்க வில்லை.

கப்பல் நார்வே போய்ச் சேர்வதற்கு முன்னரே, தான் வந்த காரியம் நடக்காது என்று ஹென்றி தெரிந்து கொண்டார். சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு ஐரோப்பா தயாராக இல்லை. ஹென்றி வந்த காரியம் தோல்வியுற்றது. இருந்தாலும் சமாதானத்தில் எல்லாரும் நாட்டமாக இருக்கிறார்கள் என்கிற கருத்தை அவர் வலியுறுத்தி விட்டார். அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்காக லட்சக் கணக்கான சமாதானப் பிரியர்கள் அவரை வாழ்த்தினார்கள்.

1947 பிப்ரவரியில் வரம்பற்ற நீர்மூழ்கி யுத்தத்தை ஜெர்மனி ஆரம்பித்தது. இரண்டு நாள் கழித்து ஜெர்மனியுடன் இருந்த இராஜ தந்திர உறவை அமெரிக்கா முறித்துக் கொண்டது. எல்லா சமஸ்தானங்களிலும் படைகள் வெகு மும்மரமாகத் திரட்டப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டன. ஏப்ரல் 6-ம் தேதி ஜெர்மனி மீது அமெரிக்கா யுத்தப் பிரகடனம் செய்ய, ஆயிரக் கணக்கான அமெரிக்க போர் வீரர்கள் ஐரோப்பாவிற்குப் பயணமானுர்கள்.

லாபத்தைக் கருதாமல் ஹென்றி தம் ஸ்தாபனத்தின் முழு உதவியையும் சர்க்காருக்கு அளித்தார். எந்த தேசத்துக்கு யந்திரங்களையும், கருவிகளையும் நன்கு உபயோகிக்கத் தெரிந்திருக்கிறதோ, அந்த தேசத்தினுல் தான் யுத்தத்தில் வெற்றி அடைய முடியும் என்று ஹென்றி சொன்னுர். ஹென்றியின் தொழிற்சாலைகளில் ஆம்புலன்ஸ் வண்டிகள், டிரக்குகள், துப்பாக்கி மருந்து வண்டிகள், டெலிபோன் சாதனங்கள், எஃகுத் தொப்பிகள், விமான மோட்டார்கள், நீர்மூழ்கிக் கப்பல்களை எதிர்க்கக் கழுகுப் படகுகள் முதலிய பல சாதனங்கள் தயாரிக்கப் பட்டன.

# அத்தியாயம் 20.

1918ல் யுத்த நிறுத்த உடன்படிக்கை கையெழுத்தானதும், ஹென்றி, பழையபடி நிறைய கார்களும், டிரக்குகளும், டிராக்டர்களும் உற்பத்தி செய்ய ஆரம்பித்தார். குடியானவர்கள் டிராக்டர்களை வெகு ஆசையாக வரவேற்றார்கள். குதிரைகள் செய்த எல்லாக் காரியங்களையும் இந்த டிராக்டர்கள் செய்தன. உழுவது, நடுவது முதலிய எல்லாக் காரியங்களையும் இவற்றைக் கொண்டு மூன்றில் ஒரு பங்கு காலத்தில், முதுகு வலியோ, கைக் கொப்புளமோ இல்லாமல் செய்ய முடிந்தது. வேலையின் சிரமத்தைக் குறைக்க வேண்டும் என்பது தானே எப்பொழுதும் ஹென்றியின் குறிக்கோள்?

இப்பொழுது பண்ணைகளில் டிராக்டர் அத்தியாவசிய மாகிவிட்டது. சக்தி யென்றால் என்ன வென்று குடியானவன் புரிந்து கொண்டு விட்டதால், புதுக் கருவிகள் வேண்டுமென்று கூட அவன் கேட்கவில்லை, இருக்கிற கருவிகளை ஓட்டுவதற்கு சக்தி வேண்டும் என்று தான் ஆசைப் பட்டான்.

மோட்டார் வண்டியை எந்த அடிப்படையில் கட்டினாரோ, அதே அடிப்படையில் தான் ஹென்றி

தம்முடைய டிராக்டரையும் கட்டினர். டிராக்டரின் ஒவ்வொரு பாகத்தையும் எவ்வளவு உறுதியாகச் செய்ய முடியுமோ, அவ்வளவு உறுதியாகச் செய்தார். பாகங்களின் எண்ணிக்கைகளையும் குறைத்தார். கார் என்ருல் மனிதர்களை ஏற்றிச் செல்வதற்காகக் கட்டப்பட்டது. ஆனல் டிராக்டரோ என்ருல் இழுப்பதற்கும், மேடு ஏறுவதற்கும் ஏற்றபடி கட்டியாக வேண்டும். இதனல் டிராக்டரில் எத்தனையோ மாறுதல்கள் செய்ய வேண்டியிருந்தது. எத்தனை பளுவானலும் சமாளிக்கும் பேரிங்குகள் கண்டு பிடிப்பது தான் ஹென்றிக்குப் பெரிய பிரசினையாக இருந்தது. அவர் கட்டி முடித்த டிராக்டரில் நாலு சிலிண்டர் என்ஜின் இருந்தது. இது பெட்ரோலினல் இயக்கப்பட்டு, பிறகு மண்ணெண்ணெயினல் ஓடிற்று. இதை அவர் 2,425 ராத்தலுக்குக் குறைந்த எடையில் செய்ய முடியவில்லை. இதின் பலமெல்லாம் சக்கரங்களின் முள்ளுகளில் இருந்தன.

இழுபறி வேலையோடு கூட, இதை ஸ்திர என்ஜினகவும் வேலை வாங்க முடிந்தது. வயல்களில் இது வேலை செய்த போது, இதில் ஒரு கச்சையை மாட்டி யந்திரங்களை ஓட்ட முடியும். உழுவது, பரம்படிப்பது, களை எடுப்பது, அறுப்பது முதலிய காரியங்களைத் தவிர, இதனல் கதிர் அடித்தல், அநேகவித மில்கள் ஓட்டுதல், முளை பிடுங்குதல், பனியை உழுதல் முதலிய பல காரியங்களையும் செய்ய முடிந்தது.

முதல் யுத்தத்தின் போது, போர்ட்ஸன்னினல்

எவ்வளவு செலவாகிறது, குதிரையினுல் எவ்வளவு செலவாகிறது என்று சர்க்கார் கணக் கெடுத் தார்கள்.

போர்ட்ஸன்னின் விலை 880 டாலர். அது உழைக்கக் கூடிய காலம் 4800 மணி. அது மணிக்கு ஐந்தில் நான்கு பங்கு ஏக்கர் உழும் என்று வைத் துக் கொண்டால் மொத்தம் 3840 ஏக்கர் உழ லாம்.

| | |
|---|---|
| 3840 ஏக்கருக்கு 880 டாலர், அதாவது ஏக்க ருக்கு | ·221 |
| ரிப்பேர் செலவு 3840 ஏக்கருக்கு 100 டாலர், அதாவது ஏக்கருக்கு | ·026 |
| மண் எண்ணெய், ஏக்கருக்கு 2 காலன், கால்ன் 19 சென்ட் வீதம் | ·38 |
| டிரைவர், நாளைக்கு 8 ஏக்கர் உழ 2 டாலர், அதாவது ஏக்கருக்கு | ·25 |
| 8 ஏக்கருக்கு 4ல் 3 பாகம் காலன் எண்ணெய், ஏக்கருக்கு | ·075 |
| ஆக போர்ட்ஸன்னினுல் ஒரு ஏக்கர் உழ | ·95 |

எட்டு குதிரைகள் விலை 1200 டாலர். 5000 மணி வேலை செய்யும். மணிக்கு ஒரு ஏக்கரில் ஐந்தில் நான்கு பாகம் உழும் என்று வைத்துக் கொண் டால் 4000 ஏக்கர் வருகிறது.

| | |
|---|---|
| 4000 ஏக்கருக்கு 1200 டாலர் செலவு, அதாவது ஏக்கருக்கு | ·30 |
| குதிரைத் தீனி, 100 வேலை செய்யும் நாட்களுக்கு குதிரைக்கு 40 செண்ட் வீதம், ஏக்கருக்கு | ·40 |
| குதிரைத் தீனி, வேலை செய்யாத 265 நாட்களுக்கு, குதிரைக்கு நாளைக்கு 10 செண்ட் வீதம், ஏக்கருக்கு | ·265 |
| இரண்டு ட்ரைவர்கள், உழவு ஆட்கள், ஆளுக்கு இரண்டு டாலர் வீதம் ஏக்கருக்கு | ·50 |
| ஆக குதிரையினால் உழ, ஒரு ஏக்கருக்கு | 1·46 |

ஆகவே, சக்தியைக் கொண்டு உழுவது தான் சிறந்ததும், மலிவானதுமான வழி என்று எல்லாரும் உணர்ந்தார்கள். டிராக்டர் விஷயமாக பத்திரிகை நிருபர்கள் ஹென்றியைப் பேட்டி கண்ட போது, ஹென்றி, "வாழ்க்கையில் பலன் தரும் எந்தத் துறையிலும் வேலையின்றி இருக்காது. ஆனால் யந்திர சக்தி இருந்தால் பண்ணையில் முதுகு ஒடிய வேலை செய்ய வேண்டியதில்லை. தசையும், இரத்தமும் செய்ய வேண்டிய வேலையை இரும்பு செய்யும்" என்று சொன்னார்.

ஹென்றியின் புது வீடு கட்டி முடிக்கப்பட்டு, அதற்கு 'பேர்லேன்' என்று பெயர் கொடுக்கப்பட்டது. பெரிய வீட்டிற்குத் தகுந்த பெரிய நாற்காலிகளும், மேஜைகளும் போடப்பட்டன. வாசலில் ஒரு

வாயில் காப்போன் நிறுத்தி வைக்கப்பட, யாரும், முன் கூட்டி உத்தரவு வாங்கி யிருந்தாலொழிய, உள்ளே நுழைய அனுமதிக்கப் படவில்லை. டெட்ராயிட்டில் போர்டு தம்பதியை, பண உதவிக் காகவோ, அல்லது வேறு தயவுக்காகவோ பார்க்க யாராவது வந்து கொண்டே யிருப்பார்கள். தர்மம் கேட்பதற்காகவும், வேலை கேட்பதற்காகவும், பண உதவி கேட்பதற்காகவும், தாங்கள் கண்டு பிடித்த யந்திரங்கள் சரிதானு என்று அபிப்பிராயம் கேட்பதற்காகவும், யாராவது வந்து கொண்டே யிருப்பார்கள். கிளாராவும், ஹென்றியும் தங்கள் வீட்டு வாழ்க்கையை பிறர் தொந்தரவின்றி இப்பொழுது நிம்மதியாக நடத்த முடிந்தது.

இந்த சமயம் வீட்டில் உள்ளது போலவே, தம்முடைய காரியாலயங்களிலும், தொழிற்சாலை களிலும் தம்மை யாரும் தொந்தரவு படுத்தாதபடி ஹென்றி ஏற்பாடுகள் செய்தார். ''அமெரிக்க ஜனதிபதியைக் கூடச் சந்தித்து விடலாம், ஹென்றி போர்டை சந்திப்பது கஷ்டம்'' என்று ஆகி விட்டது. அவரைப் பார்க்க வேண்டும் என்று போடும் விண்ணப்பங்கள் பலருடைய கைக்கு மாறும். இவர்கள் பார்த்து தகுதியெனக் கருதும் விண்ணப்பங்கள் மட்டும் ஹென்றியின் பார்வைக் குச் செல்லும்.

ஊதாரித்தனமாக செலவழிக்கவோ, அல்லது ஆடம்பரமாக வாழவோ கிளாராவுக்கும் பிடிக் காது, ஹென்றிக்கும் பிடிக்காது. பழைய நண்பர் கள் சிலரை மாத்திரம் அடிக்கடி விருந்தளித்து

உபசரித்தனர். தங்கள் பரந்த தோட்டத்தைக் கண்டு இருவரும் மகிழ்வார்கள். வயல் புறங்களில் நடந்து செல்வதிலும், வேலிகளைத் தாண்டி குதிப்பதிலும் ஹென்றிக்கு வெகு ஆனந்தம். அந்தப் பெரிய் இடத்தில் ஐந்நூறு இடங்களில் ஹென்றி பறவைகள் தங்குவதற்கு வேண்டிய கூடுகள் கட்டி, அதற்கு ''பறவை ஹோட்டல்கள்'' என்று பெயர் வைத்தார். இவற்றில் ஒன்ருன பான்ட்கார் ட்ரெயின் ஹோட்டல் 76 கூடுகள் உள்ள ஒரு பெரிய வீடாகும். ரென் என்ற பறவைக்கு ஆடும் கூடுகள் தான் பிடிக்கும் என்று ஹென்றிக்குத் தெரியுமாதலால், அவற்றின் கூடுகளை அவர் சுருள் கம்பிகளின் மேல் பொறுத்தி வைக்க அவை ஆடிக் கொண்டே யிருந்தன.

பனிக் காலம் முழுவதும் பறவைகளுக்கு வேண்டிய உணவை மரங்களில் மாட்டி வைத்தார். அங்காங்கே அவை குடிக்கத் தண்ணீர் வைத்து அவை உறைந்து போகாமலிருக்க அவற்றை மின்சார அடுப்புகள் கொண்டு சூடாக்கினர். கோடை நாட்களில், மரங்களிலும், பாத்திகளிலும் உள்ள பழங்களைப் பறிக்காமல் அப்படியே பறவை களுக் கென்று விட்டு வைத்தார்.

ஒரு நாள் மாலை, ஹென்றி வீட்டுக்குத் திரும்பியதும், கிளாராவிடம் ஒரு பத்திரிகையைக் கொடுத்து, உதடுகளில் புன்னகை தவழ, ''இந்தக் கட்டுரையை நீ படித்துப் பார்க்க வேண்டும்'' என்று ஒரு கட்டுரையைக் காண்பித்தார்.

''இயற்கையின் அழகுகளைப் பற்றி எழுதும்

ஜான் பர்ரோஸ் எழுதிய கட்டுரையல்லவா இது?'' என்ருள் கிளாரா.

''தற்கால நாகரீக முன்னேற்றத்தைக் கண்டாலே ஜான் பர்ரோசுக்குப் பிடிப்பதில்லை. தொழிற்சாலைகள், ரயில்வேக்கள் இவற்றின் சப்தத்தையே அவர் வெறுக்கிருர். தொழில் அபிவிருத்தியையே அவர் கண்டிக்கிருர். இதனுல் ஜனங்களுக்கு இயற்கை வளங்களை அழிக்கப் பணமும், சக்தியும் கிடைத்து விடுகிறதாம். இயற்கையை அனுபவிக்கும் சக்தியை இந்த மோட்டார் காரினுல் நாம் இழந்து விடப் போகிருேம் என்று அவர் சொல்லுகிருர்'' என்ருர் ஹென்றி.

''மோட்டார் காரினுல் இயற்கையை அனுபவிப்பது அதிகரிக்கத்தான் செய்யும் என்று யாராவது அவருக்கு எடுத்துச் சொன்னுல் நல்லது'' என்ருள் கிளாரா.

''அதை நான் செய்தாகி விட்டது'' என்று சொல்லிக் கொண்டே ஹென்றி அவளிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். ''இந்தக் கட்டுரை வெளிவந்து அநேக மாதங்களாகி விட்டன. அதைப் படித்த உடனேயே, அவருக்கு நான் ஒரு போர்ட் கார் அனுப்பி வைத்து, அதனுல் இயற்கையை அனுபவிக்கும் சக்தி அவருக்கு அதிகரித்திருக்கிறதா, குறைந்திருக்கிறதா என்று பார்க்கச் சொன்னேன். அவரிடமிருந்து இன்றுதான் பதில் வந்தது. வண்டியைத் தாமே ஓட்டக் கற்றுக் கொள்ள கொஞ்ச காலம் பிடித்தது என்றும், ஆனுல் அது அவருடைய அபிப்பிராயத்தை முற்றி

லும் மாற்றி விட்டது என்றும் எழுதியிருக்கிறார். இயற்கையை அதிகம் பார்க்க இது உதவுகிற தென்றும், இனி பட்சிகளைப் பிடிப்பதற்காகச் செல்லுகையில், காரில் தான் செல்லப் போவதாக வும் எழுதியிருக்கிறார்'' என்றார்.

"அந்த முதிர்ந்த பெரியாருக்கு இது பெரிய சாதனையாகவே இருக்கும். அவரை நம் வீட்டுக்கு அழைத்தால் என்ன?'' என்று கேட்டாள் கிளாரா. மிஸ்டர் பர்ரோஸ் எழுதிய புத்தகங்களை ஹென்றி எவ்வாறு ரஸித்துப் படித்திருக்கிறார் என்று கிளாராவுக்குத் தெரியும்.

''நல்ல யோசனை. அவரை இங்கு அழைக்க வேண்டியது தான்'' என்றார் ஹென்றி.

ஜான் பர்ரோஸ் ஹென்றியைப் பார்க்க வந்து சேர்ந்தார். இரண்டு பேருக்கு மிடையே நல்ல சிநேகம் ஏற்பட்டது. வடக்கத்திய சமஸ்தானங் களுக்குள்ளே ஹென்றியைப் போல் அத்தனை அதிக எண்ணிக்கையுள்ள பறவைகளும், அத்தனை வித விதமான பறவைகளும் வேறு யாரும் வைத்திருக்க வில்லை யென்று பர்ரோஸ் கருதினார்.

தொழில் அபிவிருத்தி விஷயமாகத் தம் அபிப் பிராயத்தை மாற்றிக் கொண்டு விட்டதாக மிஸ்டர் பர்ரோஸ் சொன்ன போது, ஹென்றிக்குப் பரம சந்தோஷம். ஏனெனில் அதற்குப் பொறுப்பாளி தாம் தான் அல்லவா? ''பறவைகளைப் பிடித்து வளர்ப்பது ஒன்றால் மட்டும் உலகம் வாழ முடியாது

என்று தெரிந்து கொண்டு விட்டேன்" என்ருர் மிஸ்டர் பர்ரோஸ்.

ஒரு நாள் இருவரும் பேசிக் கொண்டிருக்கையில் ஹென்றி, "உங்களுக்குத் தெரியுமா, ஜான்! இந்தப் பறவைகள் சட்டத்தைத் தவிர, வேறு ஒரு சட்டத்தையும் மாற்றுவதற்காக நான் என்னுடைய போர்ட் ஸ்தாபனத்தின் சக்தியை உபயோகப் படுத்தியதில்லை. இது விஷயத்தில் என் லட்சியம் தான் நான் கையாண்ட வழிக்குச் சமாதானம்" என்ருர்.

சிறு சாண்டா கிளாஸ் போல் வெள்ளைத் தாடி யுடன் விளங்கிய மிஸ்டர் பர்ரோஸ் புன்முறுவல் பூத்தார். ஹென்றி இது விஷயத்தை விளக்க ஆரம்பித்தார்.

"நாடு விட்டு நாடு பறந்து செல்லும் பறவைக் கூட்டங்கள் தங்குவதற்காகப் புகலிடங்கள் கட்ட வேண்டுமென்று கொண்டு வரப்பட்ட வீக்ஸ்-மக்லீன் பறவை மசோதா, ஆதரிப்பாரற்று சாகும் தறுவாயில் இருந்தது. அதைக் கொண்டு வந்தவர்களால், இந்த மசோதா மீது சட்ட சபை அங்கத்தினர்களை சிரத்தை கொள்ளச் செய்ய முடியவில்லை. இதில் காங்கிரஸ்காரர்கள் சிரத்தை காட்ட வில்லை" என்று கோபத்துடன் கூறி மேஜை மீது குத்தினர். "பறவைகளுக்கு வோட்டுரிமை கிடையாது பாருங்கள்?" என்று குத்தலாகக் கூறினர்.

ஹென்றிக்கு ஏற்பட்ட கோபத்தைக் கண்டு,

பர்ரோஸ் நடுங்கினர். அரசியல் தகராறுகள் என்றால் அவருக்குப் பிடிப்பதில்லை. ஹென்றி தொடர்ந்து சொன்னர்.

“ஆகவே எங்கள் ஆறாயிரம் ஏஜெண்டுகளையும் அவரவர்கள் சட்டசபை பிரதிநிதிகளுக்கு தந்தி அடிக்கும்படி உத்தரவிட்டோம். ‘அடே! பறவைகளுக்கும் வோட்டு இருக்கிறது போல் தோன்றுகிறதே!’ என்று அவர்கள் உணர்ந்தார்கள். மசோதாவும் நிறைவேறிற்று.”

1921ல் மிஸ்டர் பர்ரோஸ் காலமானர். அதற்கு முன் ஹென்றியும், அவரும், தாமஸ் எடிஸனுடனும், டயர் தயாரிப்பாளரான ஹார்வி பயர்ஸ்டோனுடனும் அடிக்கடி உல்லாசப் பயணம் சென்றார்கள். இத்தகைய சமயங்களில் தங்கள் உணவைத் தாங்களே சமைத்துக் கொள்ளுவார்கள். மோட்டார் வண்டிகளில் செல்லுவார்களாதலால், தங்கும் இடங்களில் கூடாரம் அமைத்துக் கொண்டு அதில் தங்குவார்கள். ஒரு சமயம் அவர்கள் அடிரான்டாக்ஸைக் கடந்து சென்றார்கள். இன்னொரு சமயம் அல்லெக்கெனீஸைக் கடந்து சென்றார்கள்.

இத்தகையை பயணங்களின் போது பர்ரோஸ், எடிஸன், பயர்ஸ்டோன் மூவரும் ஒய்வு எடுத்துக் கொள்ளுவார்கள். ஆனல் ஹென்றி சும்மா இருக்க மாட்டார். சல சலவென்று ஓடும் நதியைக் கண்டால் போதும், நதிக்கரையில் மேலும் கீழும் ஓடுவார். அந்த ஜலத்தைத் தடுத்து அணை கட்டினல் அதைக் கொண்டு எவ்வளவு சக்தி கிடைக்கும் என்று கணக்குப் போடுவார். இந்தத் தண்ணீர்

சக்தியைத் தேக்கி ஒரு நல்ல பிரயோசனகரமான தொழிலில் உபயோகித்தால் அக்கம் பக்கங்களில் வசிக்கும் குடியானவர்களுக்கும், மற்றவர்களுக்கும் பனிக் காலத்தில் வேலை கிடைக்கும் என்று எண்ணு வார். அதிகப்படியானவர்களுக்குக் கிடைக்கக் கூடிய அதிகப்படியான நன்மையைப் பற்றித் தான் ஹென்றிக்கு எப்பொழுதும் எண்ணம்.

''ஹென்றியின் திறமை அவருடைய கார் மூல மும், டிராக்டர் மூலமும் வெளியானதைப் போல, ஒரு கவியின் திறமை அவருடைய கவிகள் மூலம் வெளியானதில்லை'' என்று மிஸ்டர் பர்ரோஸ் சொன்னார். ''ஹென்றி ஒரு தேசீய வீரர். அவர் தெருவில் போகும் போது, அவர் வண்டியைச் சுற்றிக் கொள்ளும் ஜனங்கள், ஒரு வெற்றி கண்ட வியாபாரிக்கோ, அல்லது நல்ல கார் தயாரிப் பாளருக்கோ மட்டும் வணக்கம் செலுத்தவில்லை. ஒரு நல்ல சக்திக்கே வணக்கம் செலுத்தினார்கள்'' என்று அவர் சொன்னார்.

நதியைக் கவனிக்காத சமயங்களில் ஹென்றி நெருப்புக்காக விறகு சேர்த்துக் கொண்டிருப்பார். அவருடைய உள்ளத்திற்கும், உடம்பிற்கும் வேலை செய்வதே ஒரு உல்லாசமாக இருந்தது.

# அத்தியாயம் 21.

ரூஜ் நதிக் கரையில் மேலும் மேலும் கட்டடங்கள் கட்டப்பட்டன. தொழிலின் அதிகப்படி லாபமெல்லாம் கட்டடங்களாக மாறுவது பங்குதாரர்களுக்குப் பிடிக்கவில்லை. தங்களுக்கு அது லாபமாக வந்து சேர வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஹென்றி அவர்கள் சொன்னதைக் கேட்காமல் தம் திட்டப்படியே கட்டடங்கள் கட்ட ஆரம்பித்தார். உடனே பங்குதாரர்கள் ஹென்றி தங்களுக்கு அதிக லாபம் கொடுக்க வேண்டுமென்று கோர்ட்டின் மூலம் உத்தரவு பெற்றார்கள்.

தொழில் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று பங்குதாரர்கள் தமக்குச் சொல்லுவதும், தம் திட்டங்களில் அவர்கள் குறுக்கிடுவதும் ஹென்றிக்குப் பிடிக்கவில்லை. மால்கம்சனை எப்படி நடத்தினரோ, அதே விதத்தில் தான் இந்த பங்குதாரர்களையும் நடத்த வேண்டும் என்று தீர்மானித்தார்.

ஹென்றியின் பிள்ளை எட்ஸெலுக்கு இப்பொழுது வயது இருபத்தாறு ஆகிக் கொண்டிருந்தது. அவர் கம்பெனியில் முக்கிய உத்தியோகம்

வகித்துக் கொண்டிருந்தார். கடை வைத்துக் கோடீசுவரரான ஹட்ஸனின் உறவினளான எலியனுர் கிளேயை அவர் 1916ல் கலியாணம் பண்ணிக் கொண்டிருந்தார். தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்த பங்குதாரர்களிடமிருந்து பங்குகளை வாங்கி, எட்ஸெல் கம்பெனியின் தலைவர் ஆக வேண்டியது என்று ஹென்றி தீர்மானித்தார்.

நினைத்த காரியத்தை ஹென்றி சாதித்துத் தான் தீருவார் என்று பங்குதாரர்களுக்குத் தெரியும். அவர்கள் விற்க மறுத்தால் அவர் வேருெரு தொழிற்சாலை ஆரம்பித்து, இதைவிட நல்லதாகவும், மலிவாகவும் உள்ள வண்டிகள் செய்ய ஆரம்பித்து விடுவார் என்றும் அவர்களுக்குத் தெரியும்.

பதினறு வருஷங்களுக்கு முன்னர் ஜேம்ஸின் சகோதரியான மிஸ் கூஸன்ஸ் ஒரு பங்கு நூறு டாலருக்கு வாங்கி யிருந்தாள். இந்த ஒரு பங்குக்கு அவளுக்கு 2,60,000 டாலர் கொடுக்கப்பட்டது. ஜேம்ஸ் கூஸன்ஸ் தம்முடைய பங்கை 30 லட்சம் டாலருக்கு விற்ருர். டாஜ் சகோதர்கள் தங்களுடைய பத்தாயிரம் டாலர் ஷேரை இரண்டரைக் கோடி டாலருக்கு விற்ருர்கள். மற்ற பங்குதாரர்கள் தங்கள் பங்கை ஆறேகால் கோடி டாலருக்கு விற்ருர்கள்.

இப்பொழுது முழு அதிகாரமும் ஹென்றி கையிலும், எட்ஸெல் கையிலும் இருந்ததால் ஹென்றி தம்முடைய கம்பெனியின் மூலதனத்தை பத்து கோடி டாலராக உயர்த்தினுர். தொழில் உலகத்திலேயே இதுவரை எவரும் நினைத்துப் பாராத காரியங்களை அவர் செய்யத் தயாரானுர். ரூஜ்

தொழிற்சாலையில் ஒரு பக்கம் மூலப் பொருள்கள் வந்து இறங்கிக் கொண்டிருக்கும், இன்னொரு பக்கம் கட்டி முடிக்கப்பட்ட கார்களும், டிரக்குகளும், டிராக்டர்களுமாக வெளி வந்து கொண்டிருக்கும்.

இவற்றைத் தயாரிப்பதற்கு வேண்டிய எல்லா சாதனங்களும் ஹென்றியின் ஆதிக்கத்தில் இருக்கும். அவருக்கு வேண்டிய கப்பல்களும், ரயில்களும் அவருக்குச் சொந்தமாக இருக்கும். மூலப் பொருள்களான நிலக்கரி, மரம், இரும்பு எல்லாம் அவருக்குச் சொந்தமாக இருக்கும்.

இப்படிச் செய்தால் பொருள் வீணுகாது, கால விரயமும் இருக்காது, அதனுல் உற்பத்திச் செலவு குறையும் என்று இவர் கருதினுர். உதாரணமாக, வெஸ்டர்ன் ஆட்டோமாடிக் ஸ்குரூ மெஷீன் கம்பெனியிடம் ஆயிரம் போல்ட்டுகளை ஐம்பது டாலருக்கு வாங்குவதை விட, தாமே அதை 8.70 டாலருக்குச் செய்ய முடியும் என்று கண்டு பிடித்தார். அதை அவரே தம் தொழிற்சாலையில் செய்ய ஆரம்பித்த முதல் வருஷத்தில் ஹென்றி 5,82,635 டாலர் மிச்சம் பிடித்தார். இந்த மிச்சத்தின் அனுகூலமெல்லாம் கார் வாங்குகிறவர்களுக்கு, காரைக் குறைந்த விலையில் வாங்குவதன் மூலம் போய்ச் சேர வேண்டும் என்று ஹென்றி கருதினுர். 1915ல் அந்தச் சதுப்பு நிலத்தை வாங்கின போது இத்தனை எண்ணங்களும் ஹென்றியின் மனத்தில் இருந்தன.

ரூஜ் நதிக்கரையில் நடந்த வேலையை ஹென்றி கூர்ந்து கவனித்து வந்தார். நதியை சில யந்திரங்கள் அகலமும், ஆழமும் செய்து கொண்டிருந்தன.

ஒரு நாள் நல்ல வெய்யல் அடித்துக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு யந்திரம் ஹென்றி நின்று கொண்டிருந்த இடத்திற்குப் பக்கத்தில் மண்ணைக் கொட்டிற்று. "அந்த யந்திரத்தை நிறுத்து" என்று ஹென்றி கத்தினர். ஒரு மூஞ்சுறு அந்த மண்ணில் அகப்பட்டு வெளியே வரத் தவித்துக் கொண்டிருந்தது. அதை வெளியில் எடுத்து விடுவதற்காக சில தொழிலாளிகள் ஓடி வந்தார்கள். "அதை விட்டு விடுங்கள். அது தானே வெளி வந்துவிடும்" என்றார் ஹென்றி.

மண் எடுக்கும் யந்திரம் வேலை செய்யாமல் ஒரு மணி நேரம் நின்றது. சூரிய வெளிச்சம் பட்டு அந்த மூஞ்சுறுக்குத் தெம்பு வந்து, அது தானக நகர்ந்து போகும்வரை எல்லாரும் காத்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில் அது மெள்ள எழுந்து, நதிக் கரையில் மறைந்தது.

ஹென்றி தம் கையைக் காட்டி தொழிலாளிகள் மீண்டும் வேலையை ஆரம்பிக்கலாம் என்று சமிக்ஞை செய்தார்.

ரூஜ் தொழிற்சாலையில், சக்தி கொடுப்பதற்காக இருந்த தொழிற்சாலை ஹென்றியின் கவனத்தை மிகவும் கவர்ந்தது. நீராவி என்ஜின்கள் என்றால் ஹென்றிக்கு பிடிக்குமாதலால் முடிந்த போதெல்லாம் அவற்றைத் தான் உபயோகிக்க ஆசைப்பட்டார். ஆனாலும் சக்திகளின் முன்னேற்றத்தைப் பற்றிக் கருத்தாகவே இருந்தார். ஸர் சார்ல்ஸ் ஆல்கர்னன் பார்ஸன்ஸ் என்கிற பிரிட்டிஷ் என்ஜினீயர் கண்டு பிடித்ததும், கப்பல் பிரயாணத்தி

லேயே புரட்சியை உண்டு பண்ணியிருந்ததுமாகிய டர்பைனைப்பற்றி அவர் நிறைய படித்துத் தெரிந்து கொண்டிருந்தார். டர்பைன்களால் இயக்கப்பட்ட முதல் கப்பலான 'டர்பியானு' 1897ல் கட்டப் பட்டது. அதன் ஆச்சரியப்படத்தக்க வேகம் உல கத்தின் கவனத்தைக் கவர்ந்தது.

பிஸ்டன் மேலும் கீழும் வேலை செய்யும் நீராவி என்ஜினில் ஒரு குதிரை பலம் சக்தி உண்டாக நாற் பது ராத்தல் நீராவி வேண்டும். ஆனல் டர்பைன் என்ஜினிலோ ஒரு குதிரை பலத்திற்கு எட்டு ராத் தல் நீராவி போதும் என்றும், டர்பைன் உபயோ கப் படுத்துவது தான் சிக்கனமென்றும் ஹென் றிக்குத் தெரியும்.

நீராவியும், மின்சார சக்தியும் தொழிற்சாலைக் குக் கிடைப்பதற்காக நான்கு பாய்லர்களும், இரண்டு ராட்சஸ டர்பைன் மின்சார ஜனனிகளும் நிறுவப் பட்டன. கொஞ்ச காலத்திற்குப் பிறகு இன்னெரு ராட்சச, டர்பைன்-மின்சார ஜனனி நிறுவப்பட்டது. பாய்லர்கள் ஒவ்வொன்றிலும் 625 பாரன்ஹீட் டிகிரி உஷ்ணம் உண்டானதுடன், மணிக்கு இரண்டு லட்சம் ராத்தல் நீராவி உற்பத்தி யாகும். இந்த சமயம் வேண்டியிருந்த அத்தனை மின் சார சக்தியையும் ஒரு ஜனனியே உற்பத்தி செய் தது மின்சார ஜனனிகள் ஒரு இரட்டை மாடி வீடு உயரம் உயர்ந்திருந்தன. எப்படிக் காற்று—மில் லின் விசிறித் தகடுகளை காற்று சுற்றுமோ, அதே முறையில் நீராவி இதில் உள்ள தகடுகளைச் சுற்றின. இந்த பாய்லர்கள் வேலை செய்ததை எல்லாரும்

வெகு ஆச்சரியத்தோடு கவனித்தார்கள். ஏனெனில் நிலக்கரியை பொடி உருவத்தில், அதாவது முகப் பவுடரைவிட மிருதுவாக உள்ள உருவத்தில், முதல் முதலாக உபயோகப் படுத்தியது இங்குதான்.

தொழிற்சாலையில் குளிர்ச்சிக்கும், தயாரிப்பு வேலைக்கும் வேண்டிய தண்ணீர் எல்லாம் முதலில் ரூஜ் நதியிலிருந்து எடுக்கப்பட்டது. ஆனால் சீக்கிரமே ரூஜ் நதி பிரயோசன மில்லையென்று கைவிடப் பட்டது. வருஷத்தில் சில காலம் நதியில் ஜலமே இருக்காது. அதோடு வெளியில் சராசரி உஷ்ணம் 65 டிகிரியாக இருக்கையில் தண்ணீரின் உஷ்ணம் 87 டிகிரியாக இருக்கும்.

தொழிற்சாலை விஸ்தரிக்க, விஸ்தரிக்க, சுத்தமான குளிர்ந்த தண்ணீர் கிடைக்கவில்லை யாதலால் ஹென்றியின் என்ஜினீயர்கள், டெட்ராய்ட் நதிக்கும், ரூஜ் தொழிற்சாலைக்கும், பூமிக்கு அடியில், ஒரு குழாய் அமைத்தார்கள். 12,000 அடி நீளமுள்ள இந்தக் குழாய் வழியாக தினம் 91 கோடியே 30 லட்சம் காலன் ஜலம் கிடைத்தது.

வெளியில் வாங்கினதை விட மலிவாகத் தம் தொழிற்சாலையில் ஹென்றி கண்ணுடி உற்பத்தி செய்தார். தேவையான மரத்துக்காக நிறையக் காடுகள் வாங்கினர். தமக்குச் சொந்தமான கென்டக்கி நிலக்கரி சுரங்கத்திலிருந்து நிலக்கரியைத் தோண்டி எடுக்கச் சொன்னர். இரும்பு அவருடைய சொந்த நிலத்திலிருந்து சொந்தக் கப்பல்களில் வந்து சேர்ந்தது.

105 மைல் நீளமுள்ள ஒரு ரயில் பாதையை விலைக்கு வாங்கினுர். ரயில் வண்டிகள் ஹென்றிக்கு என்றும் ஆச்சரியக் காட்சியாகவே இருந்தது. ரயில் வண்டிகளை ஓட்டிய நீராவியின் சக்தியைக் கண்டு அவர் வியப்பார். தம்முடைய தேவைகளுக்காக டி. டி. அண்டு ஐ. ரயில் பாதையை விலைக்கு வாங்கினுர். முப்பது வருஷங்களுக்கு மேலாக எத்தனையோ கம்பெனிகள் இந்த ரயில் பாதையை லாபமில்லாமல் நடத்தியுள்ளன. ஆனுல் ஹென்றி இதை லாபத்துக்காக வாங்கவில்லை. ரூஜ் நதிக்கரையில் உள்ள தம் தொழிற்சாலையை நடத்த ஏற்படும் செலவை மீதப்படுத்த இது உதவியாக இருக்கும் என்பதற்காகத் தான் வாங்கினுர்.

ஹென்றியிடம் இருந்த மற்ற பொருள்களைப் போலவே இந்த ரயில்வேயின் 18 வண்டிகளும் பளபளவென்று மின்னும்படி தேய்த்து சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன.

ஹென்றியின் ரயில்வே பாதையின் சந்திப்புகளில் உள்ள காவலாளிகள் கூட தங்கள் தங்கள் இடங்களைச் சுத்தமாக வைத்துக் கொண்டார்கள். பழுது பார்க்க வேண்டிய அவசியமில்லாதபடி வைத்துக் கொண்டார்கள். முன்பு மாதம் 58 டாலர் வாங்கிக் கொண்டிருந்த இவர்களுக்கு இப்பொழுது மாதம் 156 டாலர் கொடுக்கப்பட்டது. இந்த வேலைகளுக்கு எல்லாரும் போட்டி போட்டார்கள். வேலை கிடைத்தவர்கள் அதை வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றினுர்கள். மற்ற ரயில்வே சிப்பந்திகளின் சம்பளங்களும் அதே விதம் உயர்த்தப்பட்டன.

ரயில் பாதை முன்னைவிட உறுதியாக அமைக் கப் பட்டு, தண்டவாளம் முதலிய எல்லாம் மிக கனமாகப் போடப்பட்டன. வண்டிகளைப் புதி தாகக் கட்டி, ரயில் பாதையை அகலப்படுத்தி, வழி யில் விகாரமாக இருந்த கட்டடங்களை இடித்துத் தள்ளி, பலவகைகளில் ரயில் பாதையைச் சீர்திருத் தினர். ஒருவருக்கும் லாபம் அளிக்காத ரயில் பாதை இப்பொழுது ஹென்றிக்கு வெகு நன்கு உழைத் தது. ''உலகத்தின் யந்திர ஷாப்'' புக்கு அது மணி தவருமல் உழைத்தது.

புதுத் தொழிற்சாலையில் இரண்டு ராட்சச அடுப்புகளில் முதல் அடுப்பு கட்டி முடித்தானதும் அதற்கு நாமகரணம் வைக்க ஹென்றி தீர்மானித் தார். அதற்குத் தம்முடைய பேரனுடைய பெய ராகிய இரண்டாவது ஹென்றி என்று வைக்க வேண்டுமென்றும், அந்த விழாவுக்கு குழந்தை இரண்டாவது ஹென்றியும் இருக்க வேண்டுமென் றும் தீர்மானித்தார்.

''இதோ பாருங்கள், ஹென்றி! நீங்கள் அந்தக் குழந்தையை தொழிற்சாலைக்கு எடுத்துக் கொண்டு போகக்கூடாது. இரண்டு வயதுக் குழந்தையை யாராவது அத்தனை பெரிய காற்று அடுப்புக்குப் பக்கத்தில் கொண்டு போவார்களா?'' என்று கிளாரா கடிந்து கொண்டாள்.

''இதோ பார் கிளாரா! இதனுல் குழந்தைக்கு ஒரு கெடுதலும் ஏற்படாது. அதோடு இதைப் பற்றி யெல்லாம் அவன் தெரிந்து கொள்ள வேண் டாமா? அவன் தானே போர்ட் மோட்டார் கம்

பெனியின் அடுத்த தலைவனாக விளங்கப் போகிறான்!'' என்றார் ஹென்றி.

''ரொம்ப அழகாக இருக்கிறது! குழந்தையை விடமாட்டேன் என்று எலியனார் சொன்னாலும் நான் அவளைக் கோபித்துக் கொள்ள மாட்டேன்'' என்றாள் கிளாரா.

சுருட்டைத் தலைமயிருடன், கஷுக்கு முஷுக்கு என்று வளர்ந்திருந்த குழந்தையான இரண்டாவது ஹென்றி, நாமகரண விழாவுக்கு வந்து, நடந்த காரியங்களைக் கண் கொட்டாமல் பார்த்தான். இந்தத் தொழிற்சாலையில் இரும்பு உற்பத்தி செய்ய ஆரம்பிக்கப் படுவதைத் தான் பார்ப்பதாகவோ, அல்லது இந்தப் பிரம்மாண்ட தொழிற்சாலைக்கு தான் ஒரு தலைவனாக இருப்போம் என்றோ, இந்தக் குழந்தைக்கு அப்பொழுது எப்படித் தெரியும்?

தாத்தா கையில் இருந்த குழந்தையை கிளாரா ஜாக்கிரதையாகப் பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டே இருந்தாள். கிராஸ்பாயின்ட் எஸ்டேட்டில் இருந்த எட்ஸெல், எலியனார் இவர்களிடம் குழந்தை திரும்பவும் ஒப்படைக்கப்பட்ட போது தான் அவள் மனத்துக்கு நிம்மதி ஏற்பட்டது.

# அத்தியாயம் 22.

உலகம் வெகு வேகமாக மாறிக் கொண்டிருந்தது. மாடல் 'டி' உற்பத்தியான சமயத்தில் கிராமாந்தரங்களில் ஐந்து மைலுக்குக் கூட கான்க்ரீட் ரஸ்தா கிடையாது. இப்பொழுதோ 31,000 மைல் கான்க்ரீட் ரஸ்தாக்கள் ஏற்பட்டு விட்டன. ரேடியோவில் உலகச் செய்திகள் ஒலிபரப்பப்பட, ஜனங்கள் தலையில் போன்களை மாட்டிக் கொண்டு செய்திகள் கேட்க ஆரம்பித்தனர்.

1923 ல் ஹென்றிக்கு அறுபது வயது ஆகிக் கொண்டிருந்தது. இருந்தும் அவர் இன்னும் பெரிய வேலைகளைச் சமாளிக்கத் தயாராக இருந்தார். 1922ல் அவர் லிங்கன் மோட்டார் கம்பெனியை வாங்கிவிட்டார். லிங்கன் கார்கள் அதிக விலையில் விற்கப்பட்டும் அதற்குத் தனி கௌரவம் இருந்தது. "பொதுஜன வண்டி"யின் மீது தான் ஹென்றியின் முழு வியாபார கவனமும் இருந்தாலும், மாடல் 'டி'யைப் பழித்தவர்களுக் கென்று அவர் லிங்கன் கார் வைத்திருந்தார்.

லண்டனில், 306 ஏக்கர் பரப்பில் டேகன்ஹாம் தொழிற்சாலையை அவர் கட்டி முடித்தாகி விட்டது.

உலகத்திலேயே இரண்டாவது பெரிய தொழிற் சாலேயாகவும், ரூஜ் நதிக்கரை தொழிற்சாலேக்கு அடுத்த படியாகவும் அது இருந்தது. தேம்ஸ் நதிக் கரையை அடுத்துக் கட்டப்பட்டிருந்த இந்தத் தொழிற்சாலேயில், தண்ணீர், ரயில், மோட்டார் போன்ற எல்லா செளகரியங்களும் இருந்தன. கிரேட் பிரிட்டன், அயர்லாந்து இன்னும் சில பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகள் இவற்றுக்கு வேண்டிய கார்கள் இங்கு தயார் செய்து, விற்பனேக்கு அனுப்பப்பட்டன.

தென் அமெரிக்கக் கிளேக் காரியாலயங்கள் டியர்பார்ன் தொழிற்சாலேயுடனும், ரூஜ் தொழிற் சாலேயுடனும் இணேக்கப் பட்டன. ஆனல் ஜெர்மனி, பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், இந்த நாடுகளில் கிரேட் பிரிட்டனில் கையாளப் பட்ட கொள்கையே கையாளப் பட்டது. இங்குள்ள கம்பெனிகளின் பங்குகளில் ஒரு பகுதி அந்தந்த நாட்டுவாசிகளிடம் இருந்தன.

ஹென்றி ரப்பர் அபிவிருத்தியைப் பற்றி சிந்திக்கத். தொடங்கினர். பிரேஸிலில் 40 லட்சம் ஏக்கர் காடு ஒன்றை குத்தகைக்கு எடுத்தார். எந்தக் காரியமும் அவருடைய சக்திக்குப் பெரிதாகவே தோன்ற வில்லே. ''எவ்வளவுக் கெவ்வளவு பெரிய தொழிலாக உள்ளதோ அவ்வளவுக் கவ்வளவு அதை நடத்துவது எளிது'' என்பார் ஹென்றி.

இதற்குள் மோட்டாரின் சம்பந்தமே இல்லாத எத்தனேயோ காரியங்களில் அவர் கவனம்

சென்றது. இவற்றை அவர் மக்கள் முன்னேற்றத்துக்கு அவசியம் என்று கருதினர்.

டெட்ராயிட்டில் போர்ட் ஆஸ்பத்திரி என்று ஒரு வைத்தியசாலை கட்டி, அதில் யார் வேண்டுமானாலும் வைத்தியம் பெற்றுக் கொள்ளலாம் என்றார். அதில் வேலையாக இருந்த வைத்தியர்கள் வெளி வைத்தியத்திற்குப் போகமாட்டார்கள். வியாதி இன்னது என்று சரியாகக் கண்டு பிடிப்பதற்காக ஒவ்வொரு நோயாளியையும் பல வைத்தியர்கள் பரிசோதித்துப் பார்ப்பார்கள். லாபத்தைக் கருதாமல் நடத்தப்பட்ட இந்த ஆஸ்பத்திரிக்குக் கோடிக் கணக்கான டாலர்கள் செலவழிக்கப் பட்டன.

கல்விக்காகவும் கோடிக்கணக்கான டாலர்களைச் செலவழித்தார். ஹென்றிக்கு என்றுமே, இளைஞர்களிடமும், குழந்தைகளிடமும் அக்கறை உண்டு. அவர்களுடைய கல்வி அபிவிருத்திக்காகவும், உலகத்தில் அவர்கள் முன்னுக்கு வருவதற்காகவும் எத்தனையோ காரியங்கள் செய்தார். ஒரு தொழிற் பள்ளிக்கூடம் ஆரம்பித்தார். தொழில் வேலைகளுக்குப் பையன்கள் தங்களைத் தயார் செய்து கொள்வதற்காக இந்தப் பள்ளிக்கூடம் உதவியது. பையன்கள் பள்ளிக்கூட வகுப்புகளில் பாடம் கற்றுக் கொண்டதோடு, பள்ளிக்கூடப் பட்டறைகளிலும் வேலை செய்தார்கள்.

1923 இலை யுதிர் காலத்தன்று ஹென்றியும், 'காற்றை விட இலேசான' விமான நிபுணரான டாக்டர் ஹ்யூகோ எக்னர் என்ற ஜெர்மானியரும்,

பாதி கட்டி முடித்திருந்த ஹென்றியின் விமான நிலையத்தில் நின்றனர். டாக்டர் எக்னர் அப்பொழுது தான் அமெரிக்க சர்காருக்காக இஜட் ஆர்-3 என்னும் ஆகாயக் கப்பலைக் கட்டி முடித்திருந்தார். பெரியதும், துரிதமாகச் செல்லக் கூடியதுமான ஆகாயக் கப்பல்களைப் பற்றி இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"அடுத்த தடவை நீங்கள் டெட்ராய்ட்டுக்கு வரும்போது உங்கள் ஆகாயக் கப்பலைக் கொண்டு வ்ர வேண்டும்" என்றார் ஹென்றி.

டாக்டர் எக்னர் தலையை ஆட்டினார்.

"எனக்கும் கொண்டுவர ஆசை தான். ஆனால் அதைக் கட்டிவைக்க இங்கு பெரிய கம்பம் இல்லையே" என்றார்.

ஹென்றி சிரித்தார். "அவ்வளவு தானே? ஒன்று கட்டச் சொல்லுகிறேன்" என்றார். ஹென்றிக்கு முடியாதது ஒன்றும் இல்லை.

அடுத்த வசந்த காலத்திலேயே, ஐந்து லட்சம் டாலர் செலவில் ஒருகோடி கன அடிக்கு உட்பட்ட எந்த ஆகாயக் கப்பலையும் தாங்கக் கூடியதான ஒரு விமானக் கம்பம் கட்டினார். ஷெனன்டோ என்கிற அமெரிக்க விமானக் கப்பல் தான் முதல் முதலாக இங்கு வருவதாக இருந்தது. ஆனால் வழியில் ஒஹியோவில் புயலில் சிக்கிக்கொண்டு, அது நொறுங்கி, அநேக உயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டது.

1926ல், போர்ட் நிலையத்தில், இஜட் ஆர்-3 என்ற ஆகாயக் கப்பல், அது அட்லாண்டிக்கைக் கடந்த இரண்டாவது வருஷக் கொண்டாட்டத் தன்று வந்தது. அமெரிக்கக் கடற் படையினர் அதற்கு லாஸ் ஏஞ்ஜல்ஸ் என்று புதுப்பெயர் வைத்தனர்.

அக்ரான், மக்கான் என்று இரண்டு ஆகாயக் கப்பல்களை கடற்படை கட்டியது. ஆனால் கட்டடக் கோளாரினால் அவை சேதமாயின. ஆகவே நடு மேற்குப் பிராந்தியத்தில், ஆகாயக் கப்பல்கள் தங்க உபயோகப் படக்கூடிய போர்ட் கம்பம் உபயோகம் இல்லாமலே இருந்தது. இருந்தாலும் ஹென்றி, விமான அபிவிருத்திக்கு எல்லா வழி களிலும் உதவச் சித்தமாக இருந்தார்.

1924 ஆரம்பத்தில், வில்லியம் பி. ஸ்டௌட் என்ற விமான என்ஜினீயர், பிரயாணிகளையும், சாமான்களையும் ஏற்றிச் செல்லக்கூடிய ஒரு உலோக விமானம் கட்டுவதற்கு ஒரு கம்பெனி நிறுவ ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அதில் ஹென்றியும், எட்ஸெலும் அக்கறை எடுத்துக் கொள்ள, நிலையம் உருவாகிக் கொண்டிருந்தது. அதில் விமான ஷெட்டும், பட்டறையும் இருக்கும். இஷ்டப் பட்டால் நீங்கள் அதை உபயோகப் படுத்திக் கொள்ளலாம்" என்றார் ஹென்றி.

இங்குள்ள பட்டறை கட்டி முடித்தானதும், ஸ்டௌட்டின் உலோக விமானக் கம்பெனி இந்த இடத்திற்கு மாற, அதற்கு போர்ட் மோட்டார் கம்பெனியின் ஸ்டௌட் விமானப் பகுதி என்று

பெயரிடப்பட்டது. இந்த வருஷம் தான் முதல் போர்ட் மும்மோட்டார் விமானம் கட்டி முடிக்கப் பட்டது. இந்த விமானத்தை விமானிகள் பெரிதும் பாராட்டினுர்கள்.

இது மற்ற விமானங்களை விட எத்தனையோ வகைகளில் சிறந்து விளங்கிற்று. இதுவரை செய்யப்பட்ட பிரயாணி விமானங்கள் எல்லாம், மரத்தினுலும், துணியினுலும் செய்யப்பட்ட ராணுவ விமானங்களை மாற்றி அமைக்கப் பட்டவை. இவற்றை ஓட்டுவதற்கும் செலவு அதிகம். வேகமும் குறைவு. ஆனுல் போர்ட் மும்மோட்டார் விமானங்களோ முழுவதும் உலோகத்தால் கட்டப்பட்டு, வெகு உறுதியாக விளங்கின. இதில் எட்டு பேர் உட்காரலாம், அல்லது ஒரு டன் சாமான்கள் ஏற்றலாம். இதற்கு அதிக பட்ச வேகம் 116 மைல், சாதாரண வேகம் 100 மைல், இறங்கும் வேகம் 55 மைல்.

மும்மோட்டார் போர்ட் விமானம் இந்த சமயத்தில் வெளி வந்தது நல்லதாகப் போயிற்று. ஏனெனில் இந்த சமயம் விமானம் மூலம் செல்லும் பழக்கம் அதிகரிக்க, நல்லதும், நம்பிக்கை யானதும், அதே சமயத்தில் சிக்கனமானதும், நிறைய பளு ஏற்றிச் செல்லக் கூடியதுமான விமானம் தேவை என்று எல்லாரும் எண்ண ஆரம்பித்து விட்டார்கள்.

முழுவதும் உலோகத்தால் முதல் முதல் கட்டப் பட்ட பெரிய விமானம் போர்ட் மும் மோட்டார் விமானம் அல்ல. ஏனெனில் அதே

சமயத்தில் ஜெர்மனியில் டாக்டர் ஜுங்கர்ஸ் இத் தகைய விமானம் ஒன்று கட்ட ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். ஆனால் அதிக அளவில் கட்டப் படும் நிலைக்கு வந்த உலோக விமானம் இது தான்,

முதல் முதலில் கட்டப்பட்ட இந்த வெற்றி ஆகாயக் கப்பலை 'தகர வாத்து' என்று விமானி கள் வேடிக்கையாக அழைத்தனர். கமாண்டர் ரிச்சர்ட் ஈ பேர்ட், அட்லாண்டிக்கின் முடிவில் இருந்த சின்ன அமெரிக்காவிலிருந்து, தென் துருவத்திற்குப் போய் விட்டுத் திரும்பியது போர்ட் மும்மோட்டாரில் தான்.

போர்ட் விமானத்தை அவர் தென் துருவத்தி லேயே விட்டு விட்டு வந்து விட்டார். ஒரு வருஷம் கழித்துத் திரும்பிச் சென்ற போது விமானம் முழுவதும் பனியில் புதைந்து கிடந்தது. பனியி லிருந்து, அதை வெட்டி யெடுத்து, கார்பரெட் டரை சுத்தம் பண்ணி பாட்டரி போட்டதும் விமானம் எவ்வித கஷ்டமுமின்றி திரும்பவும் பறக்க ஆரம்பித்தது.

போக்கு வரத்தின் எல்லாத் துறைகளிலும் அக்கறை கொண்டிருந்த ஹென்றிக்கு செலவு அதிக மில்லாமலும், ஆபத்தில்லாததும், சாதாரண மக்கள் உபயோகிக்கக் கூடியதுமான ஒரு விமானம் செய்ய வேண்டும் என்று தோன்றிற்று. உடனேயே தம் என்ஜினீயர்களில் இருவரைக் கூப்பிட்டு, ஒரே ஒரு ஆள் உட்கார்ந்து செல்லக் கூடிய ஒரு விமானம் தயாரிக்கும்படி சொன்னார்.

"ஆபத்தில்லாமல், செலவு அதிகம் இல்லாமல் நம்பகமாக இருக்க வேண்டும்" என்று கட்டளையிட்டார்.

1926ல் ஹென்றியின் பிறந்த நாள். அன்று போர்ட் சின்ன விமானம், போர்ட் நிலையத்திலிருந்து புறப்பட்டுப் பறந்தது. இந்தக் குட்டி விமானத்திற்கு 25 அடி அகலமுள்ள ஒரே ஒரு இறக்கை தான் உண்டு. விமானத்தின் நீளம் பதினாறரை அடி, உயரம் ஐந்து அடி, எடை 550 ராத்தல்.

முதல் மாதிரி விமானத்தில் 45 குதிரை பலம் வாய்ந்த பிரஞ்சுத் தயாரிப்பான அன்ஸானி, மூன்று சிலிண்டர் ரேடியல் என்ஜின் பொருத்தப் பட்டிருந்தது. அதன் விமானியான புரூக்ஸ் அதை பர்மிங்ஹாமிலுள்ள தம்முடைய வீட்டிலிருந்து தினம் போர்ட் விமான நிலையத்திற்கு ஓட்டிக் கொண்டு வருவார். சின்ன வயல், ரஸ்தா, நடை பாதை இவற்றில் விமானத்தை இறக்கி, பிறகு அங்கிருந்தே மேலே கிளம்புவார். இதைப் பார்க்க எல்லாருக்கும் வேடிக்கையாக இருக்கும். இந்த விமானத்தைச் செலுத்துவது மிகச் சுலபமாக இருந்தது. அது மணிக்கு 85 மைல் வேகத்தில் பறந்தது.

இந்த விமானத்தின் இரண்டாவது மாதிரியில் அன்ஸானி என்ஜினுக்குப் பதில் இரண்டு சிலிண்டர் என்ஜின் ஒன்று வைக்கப் பட்டது. பன்னிரண்டு காலன் பெட்ரோலுக்குப் பதில் இந்தப் புதிய மாடல் 50 காலன் பெட்ரோல் கொண்டது.

ஒரு நாள் நல்ல காற்று அடித்துக் கொண்டிருந்த சமயத்தில் தன்னுடைய மும்மோட்டார் ஒன்று விமான நிலையத்தில் வந்து இறங்குவதை போர்ட் கவனித்தார். விமானம் கீழே இறங்கும் போது மூன்று என்ஜின்களும் மூடப்பட்டு விட்டன. காற்றில் இப்படியும், அப்படியும் உந்தப் பட்டுத் தான் விமானம் கீழே இறங்கியது. உடனே ஹென்றி பக்கத்திலிருந்தவரிடம், "விமானம் தன் என்ஜின் பலத்தைக் கொண்டு கீழே இறங்கு வதற்கு ஒரு வழி கண்டு பிடித்தாக வேண்டும். அது இல்லாததால் தான் அநேக விபத்துக்கள் நிகழ்கின்றன. இப்பொழுது, விமானம் இறங்க ஆரம்பித்ததும், அதன் என்ஜின் நிறுத்தப்படு கிறது. அது நிற்கும்வரை சக்தியற்றுப் போய், காற்று ஆட்டி வைத்தபடி ஆட வேண்டி யிருக் கிறது" என்றார்.

அநேக வருஷங்களுக்குப் பிறகு டக்ளஸ் டிஸி-3 விமானங்கள் தங்கள் என்ஜின் சக்தியைக் கொண்டே இறங்குவதையும், என்ஜின் வேகத் தைத் தடுக்க, தடுக்குகள் நிமிர்த்தப் படுவதையும் ஹென்றி கண்டார்.

1920ம் ஆண்டின் மத்தியில் விமான என்ஜின் விஷயமாக ஹென்றி கொண்டிருந்த முற்போக்கான கருத்து, "அதன் ஒவ்வொரு ஒன்றரை ராத்தல் எடைக்கும் அது ஒரு குதிரை பல சக்தி உண்டாக்க வேண்டும். அப்படி இருந்தால் ஆயிரம் குதிரை பலம் போதும், விமானம் மேலே கிளம்புவதற்கு" என்பதாகும். ஒன்றரை ராத்தல் எடைக்கு ஒரு குதிரை

பலம் சக்தி உண்டாக்குவது மிகக் கடினம் என்று ஒரு நிபுணர் சொன்னார். ஹென்றி தம் வாழ்க்கையிலிருந்து எதுவும் அசாத்திய மல்ல வென்று தெரிந்து கொண்டிருந்தார்.

எட்டு வருஷங்களுக்குப் பிறகு, டியர்பார்ன் விமான நிலையத்திலிருந்து கிளம்பின விமான என்ஜின்கள் ஆயிரம் குதிரை பலம் சக்தி கொண்டவை. அவை 1·07 ராத்தல் எடைக்கு ஒரு குதிரை பலம் சக்தி எழுப்பின. ஹென்றி எப்பொழுதுமே பல வருஷங்களுக்குப் பிறகு நடக்கப் போவதை முன் கூட்டியே அறிந்து விடுவார்.

# அத்தியாயம் 23.

*1925ல், ஒரே நாளில் 10,000 'டி' மாடல் கார்கள் உற்பத்தியாகும் நிலையை ஹென்றியின் கம்பெனி அடைந்தது. இவற்றில் 41 சத விகிதம் அமெரிக்காவிலேயே விற்றன. 1927க்குள் அவர் ஒன்றரைக் கோடி கார்கள் உற்பத்தி செய்து விட்டார்.*

*தொழிலாளிகளின் சம்பளத்தை உயர்த்தி, சாமான்களின் விலையையும் குறைத்து, ஏராளமான உற்பத்தியும் செய்து, அதே சமயத்தில் கோடிக் கணக்கான லாபமும் அடைய முடியும் என்று ஹென்றி நிரூபித்து விட்டார். குறைந்த மனித சக்தியிலும், கஷ்டத்திலும் நிறையப் பொருள்கள் உற்பத்தி செய்வது எப்படி என்று அவர் உலகுக்கு வழி காட்டி விட்டார். தொழிலாளர்களுக்கு உற்பத்திப் பொருள்களை அதிகம் வாங்கும் திறனை அளிப்பதோடு, அவர்கள் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தக் கூடியது தொழில் உற்பத்தி என்பதை தாம் தொழிலாளர்களுக்குக் கொடுத்த, குறைந்த பட்ச தினசரி ஐந்து டாலர் சம்பளத்தின் மூலம் செய்து காட்டினார். ஆனால் தொழிலாளியும் தன்*

சம்பளத்துக்கு ஏற்றபடி உழைத்தால் தான் இது சாத்தியம் என்பது ஹென்றியின் கொள்கை. இந்த மாதிரி வேலை செய்யாதவர்கள் போர்ட் மோட்டார் கம்பெனியில் வெகு நாள் இருக்க முடியாது.

வாரத்துக்கு ஐந்து நாள் வேலை என்று ஒரு வருஷம் பரீட்சை செய்து பார்த்ததில், குறைந்த நேர வேலையால் அதிக உற்பத்தி ஆகிறது என்று ஹென்றி கண்டார். குறைந்த நேரத்தில் நல்ல முறையில் நல்ல கருவிகளை வைத்துக் கொண்டு அதிகப்படி வேலை செய்ய வேண்டும் என்பது தான் ஹென்றியின் கொள்கை.

பத்தொன்பது வருஷ காலத்திற்கு மாடல் ‘டி’ சாதாரண எளிய அமெரிக்கனுக்கு, அவனுக்கு என்று தனிப்பட்ட போக்கு வரத்து சாதனமாக அமைந்தது. ஒவ்வொரு வருஷமும், மாடல்கள் ஒன்றைப்போல் ஒன்று மாருமலே இருந்தன. கார் வாங்குகிறவன் எந்த நிறம் வேண்டுமானுலும் வாங்கலாம். ஆனுல் கறுப்பு நிறம் ஒன்று தான் கிடைக்கும்.

ஆனுல் காரிலும் சொகுசுகள் அவசியம் என்று ஜனங்கள் கருத ஆரம்பித்து விட்டார்கள். வாழ்க்கைத் தரம் உயர உயர, போக்கு வரத்து சாதனங்களில் உள்ள சௌகரியங்களும் உயர வேண்டியது அவசியம் தானே? மலிவான கார் என்ருல் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அமெரிக்க மக்கள் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளத் தொடங்கினுர்கள்.

தங்கள் வண்டிகள் இன்னும் பகட்டாகவும், புது மாதிரியாகவும் இருக்க வேண்டு மென்று விரும்பினார்கள். இதே விலையில் விற்ற செவர்லே வண்டியில் அவர்கள் விரும்பியது கிட்டிற்று. அது பார்ப்பதற்கு அழகாக இருந்தது. நன்றாக ஓடிற்று. உள்ளே உட்கார செளகரியமாகவும் இருந்தது. எல்லாரும் இந்தக் காரை வாங்க ஆரம்பித்தார்கள். ஹென்றியின் மாடல் 'டி' கார் இதுவரை எல்லாக் கார்களையும் விட அதிகப் படியாக விற்றது போல் செவர்லே கார் விற்க ஆரம்பித்தது.

உபயோகத்துக்கென்று செய்யப்பட்ட வண்டியில் புது மோஸ்தரும் வேண்டியதில்லை, சொகுசும் வேண்டியதில்லை யென்பது ஹென்றியின் தீர்மான மான கருத்து. ஆனால் எட்ஸெல் தம் தகப்பனார் கருத்தை ஒப்புக் கொள்ளவில்லை. அவர் அடிக்கடி தகப்பனாரோடு வாதாடுவார். எட்ஸெல் சொல்லு வதை எல்லாம் ஹென்றி நிதானமாகக் கேட்பார். ஆனால் முன்பே முடிவு செய்திருந்தால் அதை மாற்றிக் கொள்ள மாட்டார்.

''அப்பா! நாம் மோட்டார் காரை அழகு படுத்தியாக வேண்டும். செவர்லே போட்டியை சமாளிக்க வேண்டு மென்றால் நாம் மாடல் 'டி'யை ஒழித்துக் கட்ட வேண்டும்'' என்று எட்ஸெல் வற்புறுத்திச் சொல்வார்.

''இது எல்லாம் பைத்தியக்காரத்தனம். எல்லாரும் நம் காருக்கே திரும்பி வருவார்கள், பார்'' என்பார் ஹென்றி.

ஹென்றி தயாரித்த ஒன்றரைக்கோடி 'டி' மாடல் கார்கள் அவரை மோட்டார் தொழிலிலேயே மிகுந்த பணக்காரராகவும், புகழ் படைத்தவராகவும் செய்தது. மோட்டர் அவசியம் என்று அவர் ஜனங்களை நம்பும்படி செய்து விட்டார். ஆனால் 'மோட்டார் அவசியம்' என்று நம்ப ஆரம்பித்த ஜனங்கள், அது அழகாகவும் இருக்க வேண்டும், சொகுசாகவும் இருக்க வேண்டுமென்று கருதினர். குண்டுசிகளைப் போலவோ, நெருப்புக் குச்சிகளைப் போலவோ, ஒன்றைப் போல் ஒன்று இருந்த கார்களை வாங்க அவர்கள் இஷ்டப்படவில்லை. ஒரு காலத்தில் எல்லாரும் விரும்பி வரவேற்பளித்த மாடல் 'டி' கார் இப்பொழுது யாருக்கும் பிடிக்கவில்லை.

விற்பனையும், லாபமும் குறையக் குறைய எட்ஸெல் சொன்னபடி ஹென்றி கேட்க வேண்டியதாயிற்று.

1927ல் செவர்லேயுடன் போட்டி போடுவதற்காக ஹென்றி, எட்ஸெல், என்ஜினீயர்கள் எல்லாரும் ராப்பகலாக உழைத்தார்கள். ஹென்றி இதற்காகப் பத்து கோடி டாலர் செலவழித்தார். பழைய முப்பதாயிரம் கருவிகளைத் தூக்கி எறிந்தார். ஜெனரல் மோட்டார் காரைப் போல் குறைந்த விலையில் சொகுசும், சௌகரியமும் உள்ள கார் தயாரிக்க ஆரம்பித்தார். ஆனால் இந்தக் காரியங்களைச் சாதிப்பது சுலபமாக இல்லை. ஏனெனில் மலிவான காருக்கு, அழகு அவசியமில்லை என்பது அவர் கருத்து.

புதுக் காருக்காகத் தொழிற்சாலையை மாற்றி அமைக்க வேண்டி வந்தது. ஹென்றி புதுக் கார் விஷயமாக உள்ள திட்டங்களை ரகசியமாக வைத்துக் கொண்டார். அதைப் பற்றிய ஒரு விவரமும் பொது ஜனங்களுக்குத் தெரிவிக்க வில்லை.

1927ல், நாடு முழுவதும் உள்ள போர்டு கடைகளில் மாடல் 'ஏ' என்ற புது மாடல் காட்சி அளித்தது. செவர்லேயுடன் போட்டி போடத் தங்களிடமும் ஒரு பகட்டான கார் இருக்கிறதே என்று போர்ட் வியாபாரிகள் சந்தோஷப் பட்டார்கள். புது மாடல், பழைய மாடலிலிருந்து எத்தனையோ விதங்களில் வேறு பட்டிருந்தது. 'தகர டப்பா' காலம் போய் விட்டது. தகர டப்பா செத்துப் போய் விட்டதாக, பத்திரிகைகள் வேடிக்கை, வேடிக்கையாகக் கேலிச் சித்திரங்கள் எழுதின. அதன் காலத்துக்கு அது நல்ல காராகத் தான் இருந்தது.

மாடல் 'ஏ'யில் ஏக சொகுசுகள் இருந்தன. கருப்பு வர்ணத்தோடு கூட, பல வர்ண வண்டிகள் இருந்தன. இதில் வேகம் அதிகமாக இருந்ததோடு, நான்கு சக்கர பிரேக்குகளும், மற்ற வண்டிகளில் உள்ளது போன்ற கியரும், உடையாத கண்ணாடியும், அதிர்ச்சி வாங்கிகளும் இருந்தன. முன் சக்கரத்துக்கும், பின் சக்கரத்துக்கும் இடைவெளி நிறைய இருந்ததுடன், வண்டி இன்னும் கீழே தாழ்ந்து இருந்தது. ஆனால் ஜனங்களுக்கு அதிகமாகப் பிடித்த விஷயம் என்ன வென்றால் கிட்டத்

தட்ட மாடல் 'டி'யின் விலை தான் இதற்கும் இருந்ததாகும்.

ரேடியேட்டர் மூடியிலிருந்து பின் அச்சு வரையில் இது ஒரு புத்தப் புது கார் என்று ஹென்றி விளம்பரம் செய்தார். அதனுடைய நாற்பது குதிரை பல என்ஜின் மணிக்கு 55 அல்லது 60 மைல் வேகம் கொடுக்கு மென்றும், அதனுடைய நாலு சக்கர பிரேக் பிரமாதமாக வேலை செய்யு மென்றும் விளம்பரம் செய்தார்.

எண்ணெய் எல்லாப் பாகங்களுக்கும் செல்வதற்கு ஹென்றியின் என்ஜினீயர்கள் ஒரு தனி வழி கையாண்டிருந்தார்கள். எண்ணெயை ஒரு பம்பு வால்வ் சேம்பருக்குத் தள்ளும். அங்கிருந்து அது ஆகர்ஷண சக்தியால், கிராங்க் ஷாப்டிற்குப் போகும். பிறகு வண்டி ஓடும் போது, எண்ணெய் சிதறி எல்லாப் பாகங்களுக்கும் போகும்.

நிறைய லாபத்திற்குக் குறைந்த எண்ணிக்கைக் கார்கள் விற்பதை விட, கொஞ்ச லாபத்திற்கு நிறைய கார்கள் விற்பது தான் நல்லது என்று ஹென்றி நம்பினர். ஆனல் மாடலை மாற்றுமல் பல வருஷங்களுக்கு வைத்துக் கொண்டால் தான் மக்களுக்குக் காரை மலிவாகக் கொடுக்க முடியும். புது வண்டியின் பின் அச்சில் இரண்டு கியர்கள் வைப்பதற்காக 43,000 யந்திரக் கருவிகளை மாற்றி அமைக்க வேண்டியிருந்தது. 45,000 புதுக் கருவிகள் செய்ய வேண்டியிருந்தது. புது அச்சுகளுக்காகவே 50 லட்சம் டாலர் செலவாயிற்று என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

மாடல் 'டி'யைப் போலவே மாடல் 'ஏ'யும் வெகு காலம் புழக்கத்தில் இருக்கும் என்று ஹென்றி நம்பினர். ஆனல் அது அப்படி இருக்க வில்லே. இது செவர்லேயின் கால் தூசி பெருது என்று ஜனங்கள் நினைத்தார்கள். செவர்லே வெகு வேகமாக அபிவிருத்தி யடைந்து, கன ஷோக்காக வெளிவந்து கொண்டிருந்தது. மாடல் 'ஏ' ஐந்து வருஷங்கள் தான் புழக்கத்தில் இருந்தது.

# அத்தியாயம் 24.

*1927* மே மாதத்தில் ஒரு நாள், பூக்களாலும், அழகிய படங்களாலும், பள பளவென்று மின்னின சோபா, நாற்காலிகளாலும் அலங்கரிக்கப் பட்டிருந்த தம் வீட்டு முன் ஹாலில், ஹென்றி, ''கிளாரா'' என்று கூப்பிட்டுக் கொண்டே நுழைந்தார். கிளாராவைத் தேடிக் கொண்டு, சுவரெல்லாம் கண்ணுடியால் கட்டப்பட்ட சூரிய வெளிச்ச அறைக்கு வந்தார்.

ரேடியோ கேட்டுக் கொண்டே கிளாரா ஏதோ தையல் வேலை செய்து கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் ஹென்றியின் முகத்தில் புன் முறுவல் பூத்தது. அவள் வீட்டில் இருந்தாளே என்று ஹென்றிக்குச் சந்தோஷம். கிளாரா இல்லாமல் ஹென்றிக்கு வீடே பிடிப்பதில்லை. தான் வீட்டுக்குத் திரும்பும் சமயத்தில் கிளாரா வெளியில் போயிருந்தால், அவள் திரும்பி வரும் வரை இருப்புக் கொள்ளாமல் தவிப்பார்.

எத்தனையோ செல்வம் வந்தும் கிளாரா ஹென்றியைப் போலவே எளிய வாழ்க்கை நடத்தினாள். அவளுடைய வயதிற்கு அவள் வெகு இளமை

யாகக் காணப்பட்டாள். கருநீல உடை யணிந்து, கருப்பு மேஜோடுகள் அணிந்திருந்தாள். அவளுடைய மூக்குக் கண்ணுடி ஒரு கறுப்பு நாடாவில் தொங்கிற்று. தங்க சங்கிலியோ, வைர நகைகளோ ஒன்றும் கிடையாது. அவளுடைய கருவிழிகளில், ஒரு குறு குறுப்பு காணப்பட்டது; ஹென்றியின் கண்களைப் போலவே அவற்றில் ஒரு நிதானம் இருந்தது.

"நீங்கள் வீட்டிற்குள் நுழைந்தது எனக்குக் காதே கேட்க வில்லை" என்று சொல்லிக் கொண்டே கிளாரா எழுந்து ஹென்றியின் நாற்காலியில் இருந்த திண்டைச் சரிப்படுத்தினுள். "ரேடியோவில் நடந்து கொண்டிருக்கும் இந்த நிகழ்ச்சியைக் கேட்க உங்களுக்குப் பிடிக்கும். அந்த லின்ட்பர்க் பையன், 'ஸ்பிரிட் ஆப் ஸென்ட் லூயி' என்னும் தன்னுடைய விமானத்தில் பாரிஸ் சேர்ந்து விட்டான். ஒரே நாளில் இந்தத் தலை முறையின் வீரனுகி விட்டான்" என்ருள்.

"பெரிய சாதனை தான். இருபத்தைந்து வயதே ஆகும் ஒரு இளைஞன் 3610 மைல்களை எங்கும் நடுவில் தங்காமல் முப்பத்து மூன்றரை மணி நேரத்தில், அதுவும் மானே பிளேனில் கடப்பதென்ருல்!" என்ருர் ஹென்றி. "வைத்தியர் எப்படி நாடியைப் புரிந்து கொள்ளுகிருரோ அதே மாதிரி என்ஜின்களைப் புரிந்து கொள்ளும் லாகவம் அவனுக்கு இருக்கிறது. அவன் விஞ்ஞானத்திற்கு இன்னும் எவ்வளவோ சேவை செய்யப் போகிருன்!"

"அவன் ஜனங்களின் இதயங்களைக் கவர்ந்து விட்டான். பிரான்ஸில் அவனை எத்தனை குதூகல மாக வரவேற்கிறார்கள், கேளுங்கள்!" என்றாள் கிளாரா. இன்னும் மற்ற ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களைப் போலவே லின்ட்பர்க்கின் சாதனை யில் இவர்களும் பெருமை கொண்டார்கள்.

ரேடியோ நிகழ்ச்சி முடிந்ததும் ஹென்றி தம் ஜேபியிலிருந்து சில கடிதத் துண்டுகளை எடுத்து ஏதோ குறித்துக் கொண்டிருந்தார். அதைக் கிளாரா கவனித்து, "ஏதாவது கணக்கா, அல்லது பிளானு?" என்று கேட்டாள்.

"இல்லை. நமக்குக் கலியாணமான புதிதில் யந்திர சாதனங்களுக்காக நாம் எவ்வளவு செல வழித்தோம் என்று கணக்குப் போட்டுக் கொண் டிருக்கிறேன்."

"முப்பது வருஷங்களுக்கு முன்னர் நடந்த காரியத்தைப் பற்றி இப்பொழுது என்ன கவலை?"

"இல்லை, அப்பொழுது நமக்கு இருந்த யந்திர சாதனங்களின் ஜாபிதாவையும், இப்பொழுது கலியாணம் பண்ணிக் கொள்ளும் தம்பதிகளுக்குக் கிடைக்கும் யந்திர சாதனங்களின் ஜாபிதாவையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று தோன் றிற்று."

"ஏது, நம் ஜாபிதாவைப் பார்த்தால் நாம் தான் இது விஷயமாக வழி காட்டினவர்கள் போல் தோன்றுகிறதே?"

"அப்பொழுது நம்மிடமிருந்த சாமான்கள் கூட மற்றவர்களிடம் இல்லை. நம்மிடம் என்னென்ன இருந்தது தெரியுமா?

| | |
|---|---|
| இரண்டு சைக்கிள் | 70 டாலர் |
| துணி பிழிகிற யந்திரம்<br>துவைக்கும் பலகை | 5 டாலர் |
| தையல் யந்திரம் | 25 டாலர் |
| புருஷ்கள், விளக்குமாறுகள் முதலியன | 5 டாலர் |
| மொத்தம் | 105 டாலர்கள் |

"ஆனால் இப்பொழுதுள்ள மணமக்கள், கிடைக்கும் எல்லா யந்திர சாதனங்களையும் வாங்க வேண்டுமானால் ஏகப் பணம் வேண்டும்.

| | | |
|---|---|---|
| கார் (போர்ட் கார் தான், வேறு ஏது!) | 700 | டாலர் |
| ரேடியோ | 75 | ,, |
| கிராமபோன் | 50 | ,, |
| துவைக்கும் யந்திரம் | 150 | ,, |
| மின்சார குளிர் சாதனம் | 250 | ,, |
| வாக்குவம் க்ளீனர் | 50 | ,, |
| மின்சார தையல் யந்திரம் | 60 | ,, |
| எண்ணெய் அடுப்பு | 500 | ,, |

| | | |
|---|---|---|
| இஸ்திரி பெட்டி முதலியன | 25 | டாலர் |
| டெலிபோன், வருஷத்திற்கு | 35 | ,, |
| மொத்தம் | 1895 | ,, |

"நமக்குக் கலியாணமான குதிரை வண்டி நாட்களிலிருந்து காலம் எவ்வளவோ மாறி விட்டது" என்று ஹென்றி வெகு திருப்தியுடன் சொன்னார்.

"இந்த சாதனங்கள் எல்லாம் இருந்தால் நன்றாகத் தான் இருக்கும். சிரமத்தைக் குறைத்து இவை சந்தோஷத்தை அளிக்கின்றன. ஆனால் எத்தனை இளம் தம்பதிகளிடம் இவற்றை வாங்கப் பணம் இருக்கிறது? நம் காலத்தில் இவை கிடைத்திருந்தால் கூட நம்மால் வாங்கி யிருக்க முடியாது" என்றாள் கிளாரா.

"கலியாணமான முதல் வருஷத்தில் வேண்டுமானால் வாங்கிக் கொடுத்திருக்க முடியாது. ஆனால் கொஞ்ச நாளில் வாங்கிக் கொடுத்திருப்பேன். யோக்கியமான உழைப்பினால் தான் சுபிட்சமும், சந்தோஷமும் ஏற்படும் என்று ஜனங்கள் உணர்ந்தால் நல்லது."

"ஹென்றி! நீங்கள் ஒரு நாள் உங்கள் நண்பர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தீர்கள், 'நாம் நம் வேலையில் எத்தனை சிரத்தையாக உழைக்கிறோமோ. அத்தனை உலகத்திற்குத் தொண்டு செய்கிறோம்'

என்று. இதற்கு என்ன அர்த்தம்?'' என்று கிளாரா கேட்டாள்.

''இதில் புரிந்து கொள்ள என்ன கஷ்டம் இருக்கிறது? தான் தன் வேலையை எப்படிச் செய்கிறோம் என்று கவலைப்படாமல், பணத்துக்காக மட்டும் வேலை செய்கிறவனைக் கண்டால் எனக்குப் பிடிப்பதில்லை. தான் உலகத்துக்கு வேலை செய்ய வேண்டும் என்று நினைக்காமல், உலகம் தனக்குச் சாப்பாடு போட வேண்டும் என்று மட்டும் நினைக்கிறவர்களை நாம் அடிக்கடி பார்க்கிறோம். இவர்கள் தங்கள் வேலையைத் தாங்கள் எப்படிச் செய்கிறோம் என்று கவலைப் படுவதில்லை. இவர்கள் கவலை எல்லாம் வேலை செய்கிற நேரத்தில் வேலை செய்வது போல் பாவனை பண்ணி பணம் சம்பாதிப்பது தான்.''

ஹென்றி கால் மேல் கால் போட்டுக் கொண்டு கைகளை முழங்காலின் மீது கட்டிக் கொண்டார். யோசனை பண்ணிப் பேசும் போது அவர் வழக்கமாகக் கொள்ளும் நிலை இது. ஹென்றி மேலும் சொன்னார்: ''தொண்டு செய்வதன் காரணமாகப் பணம் தன்னைப் போல் வந்து சேரும். பணம் வேண்டியது மிகவும் அவசியம் தான். ஆனால், 'குஷாலாக இருப்பதற்காக நாம் பணம் சம்பாதிக்கவில்லை; இன்னும் தொடர்ந்து தொண்டு செய்வதற்கு ஒரு சாதனமாகத் தான் சம்பாதிக்கிறோம்' என்று நினைவில் கொள்ள வேண்டும். படகில் நாமும் சேர்ந்து துடுப்பு வலிப்பது போன்றது வாழ்க்கை. அநேகர் படகில் உல்லாசப் பிரயாணம்

செய்ய விரும்புகிறார்களே யொழிய, படகு வலிக்க விரும்புவதில்லை.''

தான் பாலே நடனம் ஆடுவது எத்தனை நடக்காத காரியமோ, அத்தனை நடக்காத காரியம் தான் ஹென்றி வீட்டில் உட்கார்ந்து கொண்டு ஒரு காரியமும் செய்யாமல் இருப்பது என்று கிளாரா உணர்ந்தாள். ஹென்றி ஒவ்வொரு காரியத்திலும் எத்தனை அந்தரங்க சுத்தியுடன் அக்கறை எடுத்துக் கொண்டார் என்று எல்லாரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் நினைத்தாள். ஹென்றி தன் முதல் என்ஜின் விஷயமாக வேலை செய்த போது, பணம் சம்பாதிப்பதற்காகவோ, அல்லது பணக்காரன் ஆவற்காகவோ செய்ய வில்லை. பெட்ரோல் என்ஜின் தத்துவத்தை முழுக்க முழுக்கத் தெரிந்து கொள்வதற்காகத் தான் செய்தார் என்பது அவளுக்குத் தெரியும். இப்பொழுது அவர் எண்ணமெல்லாம் நிறையத் தொழிற்சாலைகள் ஆரம்பித்து நிறைய கார்கள் உற்பத்தி செய்து, நிறையப் பேர்களுக்கு வேலை கொடுப்பது தான். அதிகப் பேருக்கு நன்மை கிட்ட வேண்டும் என்று தான் ஹென்றி எப்பொழுதும் கவலையாக இருந்தார்.

''ஆமாம், உங்கள் கல்வித் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது?'' என்று கேட்டாள் கிளாரா.

ஹென்றி டியர்பார்னில் 200 ஏக்கர்கள் ஒதுக்கி வைத்து. அதில் அமெரிக்க வாழ்க்கை ஆரம்பத்திலிருந்து எப்படி யெல்லாம் மாறி யிருக்கிறது என்று காட்ட வேண்டும் என்று திட்டம் போட்டிருந்தார்.

இதற்கு எடிஸன் இன்ஸ்டிடியூட் என்றும், க்ரீன் பீல்ட் கிராமம் என்றும் பெயர். இப்பொழுது நாம் உபயோகப் படுத்தும் கருவிகளையும், முன்னர் நாம் எப்படி வாழ்ந்தோம் என்பதையும் பார்த்தால், ஜனங்கள் நம் சரித்திரத்தைப் பற்றியும், முன்னேற் றத்தைப் பற்றியும் நன்கு அறிந்து கொள்ளுவார்கள் என்று ஹென்றி கருதினர். யந்திர சம்பந்தமாகவும், இன்னும் மற்ற தொழில்கள் சம்பந்தமாகவும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் குறிக்கும் இந்தக் கண்காட்சி பல தலை முறைகள் இருக்க வேண்டும் என்று கட்டப்பட்டது. உலகத்தின் புகழ் பெற்ற இடங்களில் ஒன்ருக இந்தக் கண் காட்சியையும், கிராமத்தையும் பண்ண வேண்டு மென்பது ஹென்றியின் எண்ணம்.

கிளாரா கேட்ட கேள்விக்கு ஹென்றி, ''வெகு நன்ருக நடந்து கொண்டிருக்கிறது. அங்கங்கே ஆட்கள் வைத்திருக்கிறேன். அவர்கள் பழைய காலச் சாமான்களையும், கருவிகளையும் நூற்றுக் கணக்கில் அனுப்பி வருகிருர்கள். ஒவ்வொரு சாமானையும் பழுது பார்த்து உபயோகிக்கக்கூடிய ஸ்திதியில் வைக்கிருேம். பழைய என்ஜின்களும், யந்திரங்களும் ஓடுவதைப் பார்க்கும் போது, புது ஊது குழல் கிடைத்த பையன் எத்தனை ஆனந்தப் படுவானே, அத்தனை ஆனந்தம் அடைகிறேன்'' என்ருர்.

''யந்திர சாமான்கள் பகுதியில் தான் நீங்கள் அதிக காலம் செலவழிக்கிறீர்கள் என்று சொல்லு வேன்'' என்ருள் கிளாரா சிரித்துக் கொண்டு.

"சில சமயங்களில் பழைய என்ஜின்கள் ஓடு வதை முப்பது நாற்பது நிமிஷங்கள் பார்த்துக் கொண்டே யிருக்கிறேன். அப்பொழுது போர்ட் காரில் நம் என்ஜினீயர்கள் சேர்க்கக்கூடிய புதிய புதிய கருத்துக்கள் தோன்றுகின்றன" என்றார் ஹென்றி.

ஹென்றியின் வயதுடைய முக்கால் வாசிப் பேர் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டோ, அல்லது வேலையைக் குறைத்துக் கொண்டோ இருக்கையில் ஹென்றி நூற்றெட்டுக் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். உலகில் எல்லாரும் சௌக்கியமாக வாழவேண்டு மென்பதற்காக அதி காலையிலிருந்து இரவு வெகு நேரம் வரை உழைத் தார்.

# அத்தியாயம் 25.

உலகத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் ஜனங்கள் எடிஸன் இன்ஸ்டிடியூட்டையும், க்ரீன்பீல்ட் கிராமத்தையும் பார்க்க வந்தார்கள். தங்கள் நாட்டின் பழங்காலத்தை நினைவுறுத்தும் இந்தச் சின்னம், ஹென்றி கண்டு பிடித்த மலிவுக் காரைப் போலவே, தேசத்திற்குச் செய்த பெரிய சேவையாகும். அறிவைத் தேடி வந்த ஜனங்களுக்கு இங்கு பொழுது போக்கு கிடைத்தது. வேடிக்கை பார்க்க வந்த ஜனங்கள் தங்களுக்குத் தெரியாமலேயே கல்வி அறிவு பெற்ருர்கள்.

*1760*ல் கண்டு பிடிக்கப்பட்ட என்ஜின் எப்படியெல்லாம் அபிவிருத்தி அடைந்து இன்றைய நிலைக்கு வந்திருக்கிறது என்று கண்காட்சியிலிருந்து தெரிந்து கொள்ளலாம். சக்தியை மனிதன் கண்டு பிடித்ததிலிருந்து அவனுடைய வாழ்க்கை முறையும், சாமான்களின் உற்பத்தி முறையும் மாறி விட்டது என்றும்; இந்தக் கண்காட்சியிலிருந்து தெரிந்து கொள்ளலாம். நீராவி என்ஜின் கதையை எடுத்துக் கொண்டால், முதலில் ஆங்கில வியாபார என்ஜின்களில் அது ஆரம்பித்தது தெரியும். இதற்

குப் பிறகு நியூகாமன் ஆகாய அமுக்க என்ஜின் வந்தது. பிறகு 1795ல் கண்டு பிடிக்கப்பட்ட வாட்ஸ் அவர்களின் பம்பிங் என்ஜினில் சிலிண்டரின் ஒரு முனை மூடப்பட்டு, நீராவி குளிரும் அறை தனியாக வைக்கப்பட்டது. இதனால் சிலிண்டர் குளிர்வது தடுக்கப்பட, நீராவி முன்னை விட குறைவாக உபயோகப்பட்டது.

1780 லிருந்து முன் பின் சலனத்தை, கிராங்கைக் கொண்டு சுற்றும் சலனமாக மாற்றின விதங்களும் கண்காட்சியில் காணப்பட்டன. இந்த என்ஜின்களை, இங்கிலாந்தில், சுரங்கத்திலிருந்து கரி கொண்டு வருவதற்கு உபயோகப்படுத்தினார்கள். இதற்கு 19 குதிரை பலம் இருந்தது.

1812ல் வாட் கண்டு பிடித்த நேர் இணைப்பு முறையில், சிலிண்டரின் இரு முனைகளிலும் நீராவி விடப்பட, ஒரு குறித்த அளவுள்ள யந்திரத்தில், குறித்த இடத்தில் எழுப்பிய சக்தியின் அளவு அதிகரித்தது.

அமெரிக்க நீராவி என்ஜின்கள் தொகுதியில், தெற்கு பாகங்களில் நூறு வருஷ காலமாக படகுகளில் உபயோகப்பட்டு வந்த இரண்டு சிலிண்டர் என்ஜினில் ஆரம்பித்து இப்பொழுது எவ்வளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என்பதைக் கண்காட்சிக்கு வந்தவர்கள் பார்த்தார்கள். இந்த இரண்டு சிலிண்டர் என்ஜினில் இணைப்புக் காம்புகள், சில சமயங்களில் மரத்திலும், சில சமயம் இரும்புத் தகடு போர்த்திய மரத்திலும் இருந்தன.

இன்னொரு பகுதியில், அமெரிக்காவில், ஸ்லேட் வால்வ் பாகங்கள், வால்வ் கியர்கள், அதிக வேகமுடைய யந்திரங்கள் முதலியவை எப்படி அபி விருத்தி யடைந்துள்ளன என்று காட்டப் பட்டிருந்தது.

ஆங்கில என்ஜின்களுக்கும், அமெரிக்க என்ஜின்களுக்கும் உள்ள வித்தியாசங்களையும் இந்தக் கண்காட்சியிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. ஆங்கில என்ஜின்கள் பொதுவாக முடிக்கப்படும் தறுவாயில் அலங்காரமாயிருக்க, பள பளவென்று மெருகு கொடுக்கப் பட்டு, சில பாகங்கள் சிறந்த வேலைப் பாடுகளுடன் அமைக்கப்பட்டு கவர்ச்சியாக இருந்தன. ஆனால் அமெரிக்க என்ஜின்கள், அழகு, பள பளப்பு, முதலியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல், உபயோகம் ஒன்றையே பிரதானமாகக் கருதி, சிறிது அலங்காரத்துடன் செய்யப்பட்டன.

என்ஜின்களைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பிய பையன்களுக்கு உலகத்தில் உள்ள பல வகையான என்ஜின்களின் மிகப் பெரிய திரட்சியை டியர்பார்னில் பார்ப்பதற்கு தாம் வாய்ப்புச் செய்து கொடுத்ததைப் பற்றி ஹென்றிக்கு மிகவும் திருப்தி.

பொருட்காட்சி ஐந்து பெரும் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அவையாவன—கலை, விவசாயம், வீட்டுச் சாமான்கள், சக்தியும், உற்பத்தியும், போக்கு வரத்து. நீராவி என்ஜின் பகுதி எத்தனை விஸ்தாரமோ, அத்தனை விஸ்தாரமாய் இந்தப் பகுதிகளும் இருந்தன.

க்ரீன்பீல்ட் கிராமம் என்பது உண்மையிலேயே இன்னொரு பொருட்காட்சி யாகும். ஒரு புல் தரையைச் சுற்றிச் சின்னச் சின்ன கட்டடங்கள் கட்டப் பட்டிருந்தன. இந்தக் கிராமத்திற்குள் மோட்டார் கார்கள் அனுமதிக்கப் படவில்லை. கண்காட்சி பார்க்க வந்தவர்கள், ஒரு கட்டடத்திலிருந்து இன்னொரு கட்டடத்திற்கு குதிரை வண்டியில் செல்ல வேண்டும். எழுபத்தைந்து வருஷத்திற்கு முந்தைய ஒரு நிலை அந்த கிராமத்தில் காணப்பட்டது.

1876 லிருந்து 1886 வரை எந்தக் கட்டடத்தில் தாமஸ் ஏ. எடிஸன் வேலை செய்தாரோ, அதைக் காட்டுவதற்கு தனியாக ஒரு இடத்தில் மென்லோ பார்க் என்று சில கட்டடங்கள் கட்டப்பட்டு, அதைச் சுற்றி வெள்ளை வேலி போடப் பட்டிருந்தது. இங்கு மின்சார விளக்கின் ஆரம்பத் தோற்றங்கள், முதல் கிராமபோன், முதல் டெலிபோன், முதல் ஸ்டென்ஸில் யந்திரம் எல்லாம் வைக்கப்பட்டன.

இதைத் தவிர தம் வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட எத்தனையோ இடங்களை ஹென்றி புதுப்பித்திருந்தார். ஹென்றி பிறந்த போர்ட் பண்ணை; பாக்ளி அவன்யூவில், முதல் பெட்ரோல் என்ஜினை அவர் தயாரித்த பட்டறை; அவர் சிறு பையனாக இருந்த போது தம் ஜேபியிலிருந்து கண்ட சாமான்களை எடுத்து உபாத்தியாயர் மேஜை மீது வைத்ததும், டெஸ்குகளில் தம் பெயரின் முதல் எழுத்துக்களைச் செதுக்கியதுமான ஸ்காட்டிஷ் செட்டில்மெண்ட் பள்ளிக்கூடம் இவற்றை யெல்லாம் புதுப்பித்தார்.

அமெரிக்காவில் கல்வியைப் பரப்பியவர்களில்

ஒருவராகிய வில்லியம் ஹோம்ஸ் மாக்கப்பி என்பவர் பிறந்த சிறு மர வீட்டைப் போல் ஹென்றி புதிதாக ஒன்று கட்டினுர். இவர் எழுதிய பாடப் புத்தகங்களைத் தான் ஹென்றியும், இன்னும் ஆயிரக்கணக்கான சிறுவர்களும், சிறுமிகளும் உபயோகித்தது.

ஹென்றிக்குப் பிடித்த கவிகளில் ஒருவராகிய ஸ்டீபன் காலின்ஸ் பாஸ்டர் பிறந்த வீடு பென்சில்வேனியாவிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டது. லிங்கன் கோர்ட்டு நடத்திய இரண்டு அடுக்கு மெத்தை வீடும், இல்லினுைசைச் சேர்ந்த லோகன் கௌன்டியிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டது. இது மாதிரி எத்தனையோ முக்கியமான சரித்திரப் புகழ்பெற்ற கட்டடங்கள் டியர்பார்னுக்குக் கொண்டு வரப்பட்டன.

ஆனுல் ஹென்றி எல்லாச் சரித்திர சம்பந்தமான கட்டடங்களையும் டியர்பார்னுக்குக் கொண்டு வந்து விட வில்லை. சில இடங்களில் கட்டடங்களை விலைக்கு வாங்கி, புதுப்பித்து, அவற்றை அங்கேயே விட்டு வைத்தார். மஸ்ஸாசூஸட்ஸைச் சேர்ந்த தென் சட்பரியில் உள்ள வேசைட் இன் இத்தகைய கட்டடங்களில் ஒன்று.

எதையும் செய்து பார்த்துக் கற்றுக் கொள்வதில் ஹென்றிக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. சிறு வயதில் தம் பண்ணையில் இருந்த பட்டறையில் வேலை செய்த போது இதை அனுபவ பூர்வமாகத் தெரிந்து கொண்டிருந்தார். இதை மனத்தில் வைத்துக் கொண்டு தான் அவர் முப்பது குழந்தைகளை வைத்துக் கொண்டு முதல் க்ரீன்பீல்ட் கிராமப்

பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார். இத்தகைய பள்ளிக்கூடங்கள் ஆரம்ப வகுப்பிலிருந்து வளர்ந்து சீக்கிரமே ஹைஸ்கூல்கள் ஆகின.

ஒவ்வொரு மாணவனும் உலகில் தனக்கென்று ஒரு இடம் தேடிக் கொள்ளும்படி சொல்லிக் கொடுப்பது தான் இப் பள்ளிக்கூடத்து மற்றொரு நோக்கம். வாரத்தில் ஒரு நாள் மாணவர்கள் தாங்கள் அறிய விரும்புவதை தாங்களே செய்து பார்த்துக் கற்றுக் கொண்டார்கள். தங்கள் வாழ்க்கையில் உதவக் கூடியவை என்று எதை எல்லாம் நினைத்தார்களோ, அத்தகைய காரியங்களை மாணவர்கள் தெரிந்து கொண்டார்கள். பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்கு உதவி செய்வதிலிருந்து, ரேடியோ வேலை செய்வது வரை மாணவர்கள் பயிற்சி பெற்றார்கள். பெரிய காரியாலயத்தில் செய்யப்படும் தினசரி வேலைகளைச் சில பெண்கள் செய்து பார்த்தார்கள். சில பையன்கள் யந்திர வேலை கற்றுக் கொண்டார்கள். எல்லா வேலைகளிலும், வழக்கமாக வேலை செய்தவர்களுடன் கூடவே மாணவர்களும் வேலை செய்தார்கள்.

மார்த்தா மேரி தொழுகை மண்டபத்தில் ஹென்றி தினம் மாணவர்களோடு தொழச் செல்வார். அடிக்கடி மாணவர்களுக்குத் தம் கருத்துக்களை எடுத்துச் சொல்லுவார். ஒரு நாள் நம்பிக்கையைப் பற்றிப் பேசினார். எப்படி பையன்களும், பெண்களும் நம்பிக்கையை வளர்க்க முடியும் என்று விவரித்தார்.

''எதில் உங்களுக்கு நம்பிக்கை விழுகிறதோ

அதில் நம்பிக்கை வையுங்கள். அது எவ்வளவு தூரம் உங்களை இழுத்துச் செல்லுகிறது என்பது உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும்'' என்ருர் ஹென்றி. ''தன்னம்பிக்கை இருந்தால் உங்களுக்குப் பிறர் மீது நம்பிக்கை பிறக்கும். இதிலிருந்து உங்கள் நாட்டின் மீது நம்பிக்கை பிறக்கும். கடைசியில் எல்லாவற்றையும் நன்மையாகவே முடிக்கும் ஏதோ ஒரு பெரிய நியதி இருக்கிறது என்ற நம்பிக்கை பிறக்கும். அந்த நம்பிக்கை பிறந்தால் நமக்குச் சாத்தியமாகாதது ஒன்றுமில்லை.''

நம்பிக்கையினுல் எத்தனையோ காரியங்கள் சாத்தியம் என்று நான் நம்புகிறேன். தான் நம்புகிற ஒரு காரியத்தை, உலகோர் மதிக்கக்கூடிய ஒரு நோக்கத்துக்காக, அதாவது தனக்கும் சரி, மற்றவர் களுக்கும் சரி, வாழ்க்கையை இன்பகரமாக்குவதற் காகச் செய்தால், அவனுக்கு அந்த வேலையில் உள்ள நம்பிக்கை, அதைச் செய்வதற்கு வேண்டிய உபகரணங்களை அவனுக்குக் கொடுக்கும்''

''அப்பொழுது மனிதன் ஒரு பெரிய ஆச்சரிய கரமான உண்மையைக் கண்டு பிடிக்கிருன். தன்னுல் செய்ய முடியாது என்று அவன் பயந்த காரியத்தைச் செய்ய முடியும் என்று கண்டு பிடிக்கிருன்''

ஒரு நாள் நல்ல பனி பெய்து கொண்டிருந்த ஒரு குளிர் காலத்தில் எட்கார் கெஸ்ட் என்ற கவியை குழந்தைகளிடம் பேசச் சொல்லுவதற்காக ஹென்றியும், எட்ஸெலும் அவரைத் தொழுகை

மண்டபத்துக்கு அழைத்து வந்தார்கள். மிஸ்டர் கெஸ்ட் தாம் இயற்றிய அநேக கவிகளைப் பாடிக் காண்பித்தார். "அப்பா அடுப்பை ஆட்டிய சமயம்" என்ற பாட்டை குழந்தைகள் வெகுவாக ரஸித்தனர். ஹென்றியும் எட்ஸெலும் பின்னால் உட்கார்ந்து கொண்டு, கெஸ்ட்டைக் குறித்து சந்தோஷப்பட்ட அளவு குழந்தைகளின் மலர்ந்த முகங்களையும் கண்டு சந்தோஷப் பட்டார்கள். ஹென்றி அடிக்கடி புகழ் பெற்ற சிறந்த பேச்சாளர்களை அழைத்துக் கொண்டு வந்தார். பேஸ் பால் விளையாட்டுக்காரர்களிலிருந்து, பிரபல விஞ்ஞானிகள் வரை எத்தனையோ பேர் வந்தனர்.

லவ்வட் ஹால் என்ற அழகிய நடன கூடத்தில் பையன்களும், பெண்களும் சேர்ந்து பழைய மோஸ்தர் நடனங்கள் ஆடுவார்கள். இத்தகைய அழகிய நடன கூடம் வேறு எதுவும் அமெரிக்காவிலேயே கிடையாது. இதன் தரையில் பரப்பப் பட்ட தேக்கு மரம் கிழக்கு இந்தியாவிலிருந்து வந்தது. பள, பள வென்று கண்ணைப் பறித்த லஸ்தர் விளக்கைக் கண்டு எல்லாரும் ஆச்சரியப் பட்டார்கள். இதற்கு வேண்டிய கண்ணாடி செக்கோஸ்லோவாக்கியாவி லிருந்து வரவழைக்கப் பட்டது. நாற்காலிகள் முதலியன பதினெட்டாவது நூற்றாண்டு வேலை பாட்டைச் சேர்ந்தவை. அங்கங்கே ஹால் நெடுக இருந்த ஷெல்புகளில் வைக்கப்பட்டிருந்த பீங்கான் சாமான்கள் கண்காட்சி சாலைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவை.

ஹைஸ்கூலில் மாணவர்களுக்குப் பழைய அமெரிக்க நடனங்கள் கற்றுக் கொடுப்பதற்காக, இந்த நடன கூடம் ஒவ்வொரு வாரமும் உபயோகப் பட்டது. ஏதாவது நடன பார்ட்டி நடந்தால் அதில் கிளாராவும், ஹென்றியும் கலந்து கொள்ளுவார்கள். ஹென்றி, கிளாராவுடனும், உபாத்தியாயர்களுடனும், வயது வந்த பெண்களுடனும் ஆடுவார். இந்தக் கூட்டங்களிலிருந்து மாணவர்கள், பழைய கால நடனங்களை மட்டும் கற்றுக் கொள்ள வில்லை, மரியாதையுடன் பழகவும், அழகாக நடந்து கொள்ளவும் கற்றுக் கொண்டார்கள்.

கண்காட்சியையும், க்ரீன்பீல்ட் கிராமத்தையும் அமைத்ததில் தம் நோக்கம் என்ன வென்று ஹென்றி சொன்னார். "இதன் மூலம் அமெரிக்க வாழ்க்கை எப்படி இருந்தது என்று நாம் பிறருக்குத் தெரியப் படுத்த முடியும். நமது சரித்திரத்தையும், ஐதீகத்தையும் காப்பாற்றுவதற்கு இது தான் சிறந்த வழி என்று நான் நினைக்கிறேன்" என்றார்.

# அத்தியாயம் 26.

ஒரு நாள் காலை ஆர்மிங்டன் அண்டு சிம்ஸ் யந்திர ஷாப்பண்டை ஹென்றி வந்தார். கிழக்குப் பிராந்தியத்திலிருந்து க்ரீன்பீல்ட் கிராமத்துக்கு மாற்றப்பட்ட பழைய யந்திர ஷாப்புகளில் இது ஒன்று. இந்த ஷாப்பில் மற்ற யந்திர சாமான் களுடன் ஷாப்ட் கவர்னரும், மத்திய கிராங்க்கும் கொண்ட ஒரு யந்திரம் இருந்தது. தாமஸ் எடிஸ னுக்கு மிகவும் பிடித்தமான இத்தகைய யந்திரங் கள் தான் ஆரம்பத்தில் மின்சார உற்பத்திக்கு உபயோகப்பட்டன.

இந்த நீராவி யந்திரத்தை வெகு அக்கறையோடு ஒரு பையன் கவனித்துக் கொண்டு நின்முன். உச்சி யில் தட்டையாயும், சுற்றி மேல் பக்கமாக வளைக்கப் பட்டும் உள்ள ஒரு தொப்பியை அவன் போட்டுக் கொண்டிருந்தான். அதில் ஒரு இறகு செருகப் பட்டிருந்தது.

“அந்த இறகைப் பெறுவதற்காக ஏதாவது ஒரு பறவையைச் சுட்டாயா?” என்று ஹென்றி கேட்டார். பறவைகளைச் சுடாமல் காப்பாற்று வதில் ஹென்றிக்கு அத்தனை கவலை.

தன் பக்கத்தில் நிற்பது யார் என்று தெரிந்ததும், பையன் சற்று நடுங்கினுன். "இல்லை ஐயா! நான் ரோலோ சிற்ருேடையில் உள்ள தவளைகளைத் தவிர வேறு எதையும் சுடுவதில்லை."

ஹென்றி கல கல வென்று சிரித்தார். "சிறு பையனுக இருந்த போது நானும் அப்படித் தான் செய்வது வழக்கம். ஆமாம், உன் பெயர் என்ன?"

"ஆல்பர்ட் ஸான்டர்ஸன், ஐயா!"

"உன் சொந்தக்காரர்கள் யாரையும் எனக்குத் தெரியாது என்று தோன்றுகிறது. உனக்கு நீராவி யந்திரங்களில் ஆசை உண்டா ஆல்பர்ட்?"

"அவை ஓடுவதைப் பார்க்க எனக்கு எப்பொழுதுமே ஆசை" என்ருன் ஆல்பர்ட்.

"என்னேடு வா, சோயாபீன் பரிசோதனை சாலையில் ஒரு நல்ல யந்திரம் காண்பிக்கிறேன். நான் போட்டுக்கொண்டிருக்கிறேனே இந்த ஸூட், இது சோயாபீன் நூலைக் கொண்டு செய்யப்பட்டதாகும். சோயாபீன் இன்னும் எப்படியெல்லாம் அபிவிருத்தி அடையப் போகிறது தெரியுமா? ஆல்பர்ட், வா ஓடிச் செல்லலாம். யார் செலிக்கிருர்கள் என்று பார்க்கலாம்!" என்ருர்.

இந்த ஓட்டப் பந்தயம் முடிந்த போது ஆல்பர்ட் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான். தனக்கு முன்ஞல் ஓடிச் சென்ற ஹென்றியைப் பார்த்து, "அப்பாடா! இத்தனை வேகமாக ஓடுகிறீர்களே?" என்ருன்.

"அறுபத்தைந்து வயதானவருக்கு இந்த

ஓட்டம் பரவாயில்லை யல்லவா? ஓட்டமும், சைக்கிள் சவாரியும் தான் என்னை இப்படி ஆரோக்கிய மாகவும், சுறுசுறுப்பாகவும் வைத்திருக்கின்றன. உடம்பு நன்ருக இருக்க வேண்டுமானுல், நிறைய தேகப் பயிற்சியும், நல்ல காற்றும் வேண்டும்.''

ஸ்ரீ போர்டைப் போன்ற அத்தனை பெரிய மனிதர், தன்னைப் பரிசோதனை சாலையைச் சுற்றிக் காண்பித்து, யந்திரங்களை விளக்கினது ஆல்பர்ட்டுக்கு வெகு உற்சாகமாக இருந்தது. இந்த நாளை அவனுல் மறக்கவே முடியாது.

''பெரியவன் ஆனதும் நீ என்ன செய்ய ஆசைப் படுகிருய், அப்பா?'' என்று கேட்டார் ஹென்றி.

தான் என்னவாக இருக்க விரும்புகிருன் என்று ஆல்பர்ட்டுக்குச் சொல்லத் தெரியவில்லை. ஆனுல் எந்தப் பையனைக் கண்டாலும் அவனுக்குப் புத்தி மதி சொல்ல ஹென்றி தவறுவதில்லை. ''நீ என்ன வேலை செய்தாலும் சரி, பணத்துக்காகச் செய் யாதே, வேலை முக்கியத்தைக் கருதி செய். ஆமாம், வாழ்க்கையில் முன்னுக்கு வர வேண்டு மென்று உனக்கு ஆசையாக இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''இருக்கிறது'' என்ருன் ஆல்பர்ட் தீர்மான மாக.

''அப்படியானுல் இந்த ஐந்து காரியங்களை ஞாபகம் வைத்துக் கொள். சுத்தமாக இருக்க வேண்டும். எதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும், உன்னிடம் உள்ள பொருளையும், ஆற்றலையும்

உபயோகப் படுத்தவேண்டும். நீ செய்ய ஆரம்பித்த காரியத்தைச் செய்து முடிக்க முடியும் என்ற நம்பிக்கை வேண்டும். பணத்தை எப்படிச் செலவழிக்க வேண்டும் என்றும் தெரிய வேண்டும்.''

ஹென்றி சொன்னதை எல்லாம் ஆல்பர்ட் கூர்ந்து கேட்டான்.

"எதையும் படித்தும், பரிசோதனை செய்தும் தெரிந்து கொண்ட பிறகு, தன் அறிவைக் கொண்டு, புதுப் புது சாமான்கள், பழையதை விட அபி விருத்தி யடைந்துள்ள சாமான்கள், கண்டு பிடிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் புது சாமான்கள் என்று சொல்லுவதெல்லாம், பழைய சாமான் களின் புதிய இணைப்புத் தான். ஆறு சாதாரண சாமான்களாகிய சக்கரம், கப்பி, நெம்புகோல், சாய்வு மட்டம், திருகு ஆணி, முளை இவற்றைப் பல இணைப்புகளில் சேர்த்துத் தான் என்ஜின்கள், மோட்டார் வண்டிகள், கடியாரங்கள், இன்னும் பல சிக்கல் வாய்ந்த யந்திரங்கள் செய்யப் படுகின்றன'' என்று ஹென்றி தொடர்ந்து சொன்னார்.

ஹென்றியின் அறிவை வியந்து கொண்டே, ஆல்பர்ட், அவர் சொன்னதைக் கூர்ந்து கேட்டான்.

"அதோடு பணத்தைச் செலவழிக்க மறந்து விடாதே அப்பா'' என்றார் ஹென்றி.

"என்ன, பணத்தைச் செலவழிப்பதா!'' என்று திகைத்தான் ஆல்பர்ட். வீட்டில் யாரும் அவனுக்கு இப்படிச் சொன்னதில்லை. பணத்தைப் பாங்கியில்

போட வேண்டும் என்று தான் அவனுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தார்கள்.

"ஆமாம், உன்னுடைய பணத்தைச் செலவழி" என்றார் ஹென்றி. "உன்னை முன்னுக்குக் கொண்டு வரும் காரியங்களுக்காகப் பணத்தைச் செலவழி. ஒரு பழைய யந்திரத்தை வாங்கி, அதைப் பிரித்துப் பார். ஒவ்வொரு சக்கரமும் ஒன்றோடொன்று எப்படி இணைந்து நிற்கின்றன என்று தெரிந்து கொள். ஒரு டாலர் கொடுத்து புத்தகம் வாங்கி, அதைக் கற்றால் அது உன் வாழ்க்கையையே மாற்றி அமைக்கலாம். அந்த டாலரை பாங்கியில் போட்டால் சில பென்னிகள் தான் வட்டியாகக் கிடைக்கும். எது சிறந்தது, சொல்!"

சில விநாடிகளுக்கு ஆல்பர்ட் குழப்பமடைந்து நின்றான். ஏனெனில், முன்னுக்கு வர வேண்டுமானால் பணத்தை மீத்த வேண்டும் என்று தான் அவனுடைய பெற்றோர்கள் சொல்லி யிருந்தார்கள். "இது விஷயத்தைப் பற்றி நீங்கள் சொல்லுவது சரியாகத் தான் இருக்க வேண்டும். ஏனெனில் நீங்கள் முன்னுக்கு வந்தவராச்சே" என்றான் பையன்.

ஹென்றி இதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே, தம் கைக்கடியாரத்தைப் பார்த்தார், "அடே! டாலர் கடியாரங்கள் பண்ணுகிற மிஸ்டர் இங்கர் ஸாலை சந்திப்பதாகச் சொல்லி யிருக்கிறேனே! அவர் வெகு நல்ல கடியாரங்கள் பண்ணுகிறார்! நாட்டுக்குப் பெரிய தொண்டு செய்துள்ளார். இது மாதிரி எனக்கும் ஒரு காலத்தில் எண்ணம் இருந்

தது. நானாக இருந்தால் அரை டாலருக்கு விற்றிருப்பேன்'' என்று சொல்லி விட்டு, ஹென்றி அவனிடம் விடை பெற்றுக் கொண்டு வேகமாக நடந்து சென்றார்.

எல்லாத் தாத்தாக்களையும் போலவே ஹென்றி தம்முடைய பேரப் பிள்ளைகள் மீது வெகு அன்பாக இருந்தார். எட்ஸெலுக்கு இப்பொழுது இரண்டாவது ஹென்றி, பென்ஸன், ஜோஸபீன், வில்லியம் என்று நான்கு குழந்தைகள் இருந்தன. குழந்தைகள் தம்மைப் பார்க்க வரும்போதெல்லாம் அவர்களுக்குப் புது விளையாட்டுப் பொம்மை ஏதாவது செய்து கொடுப்பார். குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தவைகளில் ஒன்று பொம்மைப் பண்ணையாகும். ஒரு குட்டி நீராவி என்ஜினால் இயக்கப் பெற்ற ஒரு குட்டிப் பண்ணை யந்திரம் கட்டினார். நீராவி என்ஜினுக்கு 'ஹை-பென்-ஜோ-பில் என்று பெயர். ஒரு குட்டிப் பண்ணை வீடு கட்டப்பட்டு, அதில் எல்லாச் சாமான்களும் இருந்தன. சமையல் அறையில் ஒரு அடுப்பும், தொட்டியுடன் குழாயும் இருந்ததால், இதில் குழந்தைகள் சமைக்கவும், தட்டுகளைக் கழுவவும் முடிந்தது. ஒரு சின்ன தொழுவத்தில் இரண்டு மட்டக் குதிரைகள் நின்றன. ஷெட்டில் பல வகைக் கருவிகள் இருந்தன. குழந்தைகளுடன் கூடவே ஹென்றியும் பண்ணை விளையாட்டு விளையாடினார்.

அவர் குழந்தைகளை ரூஜ் தொழிற்சாலைக்கு அழைத்துச் செல்வார். பள பள வென்று மின்னின ஒரு என்ஜினில் குழந்தைகள் சவாரி செய்வார்கள்.

அவர்களே என்ஜினை ஓட்டவும், என்ஜின் விசிலை இயக்கவும் ஓட்டுபவர் விட்டு விடுவார்.

நீராவி என்ஜினில் உள்ள ப்ளை வீலுக்குப் பதிலாகத் தான் ஓடுகிற என்ஜினில் தனிச் சக்கரங்கள் இருக்கின்றன என்றும், என்ஜினில் புகும் நீராவியின் அழுத்தம், அளவு இவற்றைக் கொண்டு சக்தி அதிகரிக்கிறது என்றும் ஹென்றி அவர்களுக்கு விளக்கிச் சொல்லுவார். நீராவி பிஸ்டனை மேலும் கீழும் தள்ளுவதைப் பார்க்க குழந்தைகளுக்கு வேடிக்கையாக இருக்கும்.

ஒரு நாள் ஹென்றி அவர்களைத் தம்முடைய புத்தக அறைக்கு அழைத்துச் சென்று, தாம் படித்துக் கொண்டிருந்த ஒரு புதிய என்ஜினைப் பற்றி ஒரு கதை சொன்னார். இந்த என்ஜின் ருடால்ப் டீஸலால், 1893ல் கண்டு பிடிக்கப்பட்டது. இதற்கு எண்ணெயும், காற்றும் போதும். இதற்கு மின்சாரப் பொறியும் தேவை யில்லை, கார்ப்பரட்டரும் தேவை யில்லை. பெரிய பையன்களான இரண்டாவது ஹென்றிக்கும், பென்ஸனுக்கும் இதைக் கேட்க ஆச்சரியமாக இருந்தது.

"பெட்ரோல் என்ஜினைப் போலவே டீஸல் என்ஜினும் உள்ளே எரியும் என்ஜின் என்று சொல்லி விட்டு, ஹென்றி தம்முடைய மூத்த பேரப் பையனைப் பார்த்து, "ஹென்றி! நீராவி என்ஜின் ஏன் வெளியே எரியும் என்ஜின்? சொல் பார்க்கலாம்!" என்றார்.

சின்னப் பையனான ஹென்றி ஒரு கணம்

யோசித்தான். "எனக்குத் தெரியுமே! இதன் எரி பொருளை சக்தி ஜனனமாகும் சிலிண்டரில் எரிக்காமல் தனியாக வேறு ஒரு அறையில் எரிக்கிருர்கள்" என்ருன்.

இந்த பதிலைக் கேட்டு ஹென்றி திருப்தியடைந்தார். இந்தப் பையனுக்கும் யந்திரங்கள் மீது ஆசை விழலாம் என்று நினைத்துக் கொண்டார். "உங்கப்பா உன்னைப் போல் சிறு பையனுக இருந்த போது என்னேடு சேர்ந்து என்ஜின்கள் கட்டுவான்" என்ருர். தானும் என்ஜின் கட்ட விரும்புவதாகப் பேரன் சொல்லுவான் என்று ஹென்றி வெகு ஆவலாக எதிர்பார்த்தார்.

ஆனுல் பேரன் ஹென்றியோ, "எனக்குப் படகுகள் விடவும், டென்னிஸ் விளையாடவும் தான் ஆசையாக இருக்கிறது" என்ருன்.

# அத்தியாயம் 27

1930 அக்டோபர் வரை மாடல் 'ஏ' நன்ருக விற்றது. ஆனுல் அதற்குப் பிறகு அதன் அழகோ, நிறமோ, சக்தியோ, சொகுசுகளோ இதை விட அழகாக வந்த செவர்லே வண்டியின் முன்ஞல் ஒன்றும் செய்ய முடியவில்லே. ஹென்றி கொண்டு வந்த மாடல் 'ஏ'க்குப் போட்டியாக ஜெனரல் மோட்டார்ஸ் ஒரு அழகான ஆறு சிலிண்டர் செவர்லே வண்டி கொண்டு வந்தார்கள். குறைந்த விலே வண்டிகளில் கூட ஹென்றியோடு க்ரிஸ்லர் கார்ப்பரேஷன், அதன் ப்ளிமத் வண்டியைக் கொண்டு போட்டி போட்டது.

விற்பனேக் குறைவும், புது மோஸ்தரில் தான் கார்கள் உற்பத்தி செய்தாக வேண்டும் என்று எட்ஸெல் அடிக்கடி சொல்லி வந்ததும் ஹென்றியை 1931ல் வேலே செய்யத் தூண்டிற்று. செவர்லே வண்டிக்கு மேலே ஒரு படி போய், எட்டு சிலிண்டர் வண்டி யொன்று தயாரிப்பது என்று தீர்மானித் தார். "நாங்கள் தொடர்ந்து நாலு சிலிண்டர் மாடல் தான் செய்யப் போகிருேம். எட்டு சிலிண் டர் என்பது இரண்டு நாலு சிலிண்டர் தானே?"

என்று ஹென்றி பத்திரிகைக்காரர்களிடம் சொன்னார்.

ஹென்றி எட்ஸெல், என்ஜினீயர்கள் எல்லோரும் புது மாடல் விஷயமாக மாதக் கணக்காக வேலை செய்தார்கள். புது மாடலில் ஹைட்ராலிக் பிரேக் வைக்க வேண்டுமென்று எட்ஸெலுக்கு அபிப்பிராயம். பொது ஜனங்களும் இதைத் தான் கேட்டார்கள். ஆனால் சாதாரண யந்திர பிரேக் தான் ஆபத்தில்லாதது என்று ஹென்றி கருதினார். தம் கருத்தை எப்பொழுதும் ஹென்றி நிறைவேற்றித் தான் தீர்வார். ஜிப்ரால்டர் மலையைப் போல் அவருடைய கருத்துக்களும், அபிப்பிராயங்களும் உறுதியானவை.

"அப்பா! பொதுவாக கார் வைத்துக் கொண்டிருப்பவர்கள் கார் முன்பக்க மூடிக்கு அடியில் உள்ளதைப் பற்றியோ, காருக்கு அடியில் என்ன இருக்கிறது என்பதைப் பற்றியோ கவலைப் படுவதில்லை. அவர்கள் கேட்பதெல்லாம், காரின் வர்ணமும், அழகும் நன்றாக இருக்க வேண்டும்; ஓட்டுவதற்கு எளிதாகவும், சொகுசாகவும் இருக்க வேண்டும், நிறைய மைல்கள் கொடுக்கவேண்டும், பிரேக் நன்றாக பிடிக்க வேண்டும் என்பது தான்" என்று எட்ஸெல் கூறுவார்.

"பிரேக் நன்றாகப் பிடிக்க வேண்டுமென்பதற்காகத் தான் ஹைட்ராலிக் பிரேக் வேண்டாம் என்கிறேன். அவற்றை நம்ப முடியாது" என்று ஹென்றி வாதிப்பார்.

புது மாடலுக்கு வி-8 என்று பெயர்; அதைச் செய்ய ஹென்றிக்கு இரண்டு வருஷ காலமும், 12,84,47,664 டாலர் செலவும் பிடித்தது.

1927 லிருந்து 1932 வரை உள்ள போர்ட் மோட்டார் கம்பெனியின் லாப நஷ்டக் கணக்கும், எட்ஸெலின் பிடிவாதமும், அமெரிக்க ஜனங்கள் கார்களை விலை குறைவாக எதிர்பார்ப்பதுடன், அது அழகாகவும், நம்பிக்கையாகவும் இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள் என்பதை ஹென்றியை உணரச் செய்தது. இந்த ஆறு வருஷங்களில் போர்ட் கம்பெனிக்கு 11,71,97,186 டாலர் நஷ்டம். இந்த வருஷங்களில்தான் மாடல் 'டி' நிராகரிக்கப் பட்டு, மாடல் 'ஏ' ஆரம்பிக்கப்பட்டு, அதுவும் நிராகரிக்கப்பட்டு, வி-8. மாடல் முன்னுக்கு வர ஆரம்பித்தது.

2000 டாலருக்கும் குறைவாக விற்ற காரில் வி-8. என்ஜின் பொருத்தப் பட்டிருந்தது ஒரு புதுமையாகும். 1914 ல் எட்டு சிலிண்டர் கொண்ட காடிலாக் வண்டி நிறைய உற்பத்தியாயிற்று.

65 குதிரை பலம் கொண்ட வி-8 என்ஜின் பார்வையிலும், கட்டட அமைப்பிலும் வெகு எளிமையாக இருந்தது. இரண்டு நான்கு—சிலிண்டர் என்ஜின்கள், கிராங்க் கேஸ் எல்லாம் ஒரே பாகமாகச் செய்யப்பட்டன. இதனால் க்ராங்க் ஷாப்டின் நீளம் குறைய நாலு சிலிண்டர் என்ஜினுக்கு வேண்டிய இடம்தான் எட்டு சிலிண்டர் என்ஜினுக்கும் பிடித்தது. சிலிண்டர்களில் அலுமீனியம் பிஸ்டன்கள் பொருத்தப்பட்டு, கனெக்டிங் ராடு

களும் பிஸ்டன்களும் ஒன்றுக்கு ஒன்று சரியாக, ஒழுங்காக பொருத்தப் பட்டதால், வி-8 என்ஜின் சப்தமில்லாமலும், அதிர்ச்சியில்லாமலும் ஓடிற்று.

இதில் ஸ்பார்க் லீவர் கிடையாது. அதை ஹென்றி தனக்குத்தானே இயங்கும்படி செய்து விட்டார். இரண்டாவது கியருக்கும், மேல் கியருக்கும் எத்தனை வேகத்தில் வேண்டுமானாலும் தகராறு இல்லாமல் மாற்றலாம். மேல் கியரில் எப்படி வண்டி அதிர்ச்சி இல்லாமல் ஓடிற்றோ, அதே மாதிரி, இரண்டாவது கியரிலும் ஓடும்படி செய்திருந்தார். ஸ்டியரிங் பாகங்கள் புது முறையில் செய்யப்பட்டிருந்ததால் காரை ஓட்டுவது வெகு எளிதாக இருந்தது.

பதினைன்கு வித பாடிகள் பலவித வர்ணங்களில் இருந்தன. இந்தப் புதிய போர்டு கார், மாடலுக்கு ஏற்றாற்போல், 460 டாலரிலிருந்து 650 டாலர்வரை விற்றது, இந்தப் புதிய அழகிய மாடலில் ஹைட்ராலிக் பிரேக்குகளைத் தவிர, மற்ற எல்லா அம்சங்களும் இருந்தன. செவர்லேயையும், பிளிமத்தையும் போல் ஜனங்களுக்கு இதுவும் பிடிக்குமா என்று இனி தான் தெரிய வேண்டும்.

தம்முடைய அழகில்லாத, கறுப்பு போர்டிலிருந்து ஹென்றி எவ்வளவோ மாறுதலுக்கு இணங்கி விட்டார். ஆனால் நல்ல மோட்டாரின் முக்கியமான லட்சணங்கள் அப்படியேதான் இருந்தன. அதாவது கட்டட அமைப்பின எளிமை, அதிகப்படியான உறுதி, குறைந்த எடை, நல்ல சாமான்களைக் கொண்டு தயாரிப்பு, உற்பத்தியில்

பிழையின்மை. இந்த அடிப்படை அம்சங்களை ஹென்றி ஒரு நாளும் கைவிட வில்லை.

விற்பனை விஷயத்தில் திரும்பவும் முதல் ஸ்தானத்திற்கு வர முடியும், செவர்லேயையும், ப்ளிமத்தையும் இரண்டாம், மூன்ரும் ஸ்தானங்களுக்கு ஒதுக்கமுடியும் என்று ஹென்றி நம்பினர். ஆனல் 1932ல் வி-8 என்ஜின் வெளிவந்த சமயத்தில் தேசத்தில் பொருளாதாரக் கஷ்டங்களும், அரசியல் குழப்பங்களும் இருந்தன.

நாடு முழுவதும் பெரிய மந்த நிலையிலிருந்தது. இன்னெரு ஜனதிபதி தேர்தலுக்கும் அது சமயமாக இருந்தது. மந்தத்திற்குக் காரணம் ஜனதிபதி ஹூவர் தான் என்று மக்கள் அவரைக் குறை கூறினர்கள். பிராங்கிளின் டி. ரூஸ்வெல்ட்டைத் தலைவராகக் கொண்ட டெமோக்ராடிக் கட்சி, வேலையில்லாமல் தவித்த ஏழைத் தொழிலாளிகளைக் காப்பதாக வாக்குறுதி கொடுத்து, தேர்தலில் வென்றது. நாட்டை நெருக்கடியிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, தீவிர ரிபப்ளிகன் வாதிகள் கூட டெமோக்ராடிக் டிக்கட்டில் தேர்தலுக்கு நின்று வென்ருர்கள்.

தொழில்களைக் கட்டுப் படுத்துவதற்காக என். ஆர். ஏ என்று சொல்லப்படும் தேசிய தொழில் மீட்சிச் சட்டம் அமலுக்கு வந்து, ஜெனரல் ஹ்யூ எஸ். ஜான்ஸன் தொழில் நிர்வாகஸ்தராக நியமிக்கப்பட்டார். ஒவ்வொரு தொழிலும் எப்படி இயங்க வேண்டும் என்று சட்டங்கள் இயற்றப் பட்டன.

இதன் மூலம் சம்பளங்களையும், விலைகளையும் சர்க்கார் கட்டுப்படுத்த விரும்பினர்.

மோட்டார், எஃகு, பெட்ரோல், ஜவுளி, ரயில்வே, மரம் முதலிய பெரிய தொழில்களின் உற்பத்தியில் ஆரம்பித்து, சின்ன சாமான்கள் செய்வது வரை சட்டங்கள் இயற்றப்பட்டன.

மோட்டார் தொழிலதிபர்கள் இந்தச் சட்டக் கட்டுப்பாட்டுக்கு ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்கள். ஆனால் ஹென்றி கையெழுத்திடவில்லை. ஹென்றி எப்பொழுதுமே தனக்குச் சரி என்று தோன்றினதைச் செய்வாரே யொழிய, பெருவாரியான ஜனங்கள் சொல்லுகிறார்கள் என்று கேட்பதில்லை. ''நான் ஒரு பொது அறிக்கையும் விட மாட்டேன்'' என்றார் ஹென்றி, பத்திரிகைக்காரர்களிடம். ஜனாதிபதிக்குச் சரியென்று பட்டதை ஹென்றி மறுக்க விரும்பவில்லை. ஆனால் தனக்குச் சரி என்று பட்டதைத் தான் ஹென்றி செய்ய விரும்பினர் என்று இதிலிருந்து பட்டது.

''தொழிலாளிகளுக்கு அதிக சம்பளமும், குறைந்த நேர வேலையும் கொடுக்க வேண்டும் என்று முப்பது வருஷ காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கும் நான், எப்படி ஜனாதிபதியின் காரியத்தை எதிர்க்க முடியும்?'' என்றார் ஹென்றி, கிளாராவிடம்.

''நீங்கள் எது சரியென்று நினைக்கிறீர்களோ, அதன்படி தைரியமாக நடப்பதைப் பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம். ஆனால் உங்களைப் பற்றி முட்

டாள்தனமான கதைகள் கட்டப்படுவதைக் கேட்கும் போது தான் ஆத்திரமாக இருக்கிறது. உங்கள் எதிரிகளுக்கு இது ஒரு சந்தர்ப்பமாகப் போய் விடுமோ என்றுதான் கவலையாக யிருக்கிறது.''

''பேத்தல்! இதைப் பற்றி யெல்லாம் நான் கவலைப் படப் போவதில்லை. இவர்களுடைய கூற்றைப் பற்றி நீ எதற்காகக் கவலைப் படவேண்டும்?'' என்றார் ஹென்றி.

பொதுஜன அபிப்பிராயத்தைப் பற்றியும் ஹென்றி கவலைப் படவில்லை. கொஞ்ச காலத்திற்குப் பிறகு, என். ஆர். ஏ. தேசத்தின் சட்டத்திற்கு முரணானது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கூறி விடவே ஹென்றியின் எதிராளிகள் எல்லாம், ஹென்றி எப்படியோ சரியான வழியை முன் கூட்டியே கடைப் பிடித்து விடுகிறாரே என்று ஆச்சரியப் பட்டார்கள்.

# அத்தியாயம் 28.

ஒரு நாள் காலை கிளாரா ஹென்றியைப் பார்த்து, ''எப்படி காலம் விரைந்து செல்லுகிறது. இப்பொழுது 1936ம் வருஷம் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் நான் ரூஜ் தொழிற்சாலைக்குப் போய் பல வருஷங்களாய் விட்டன. அங்குள்ள அபிவிருத்திகளைப் பார்க்க ஆசைப் படுகிறேன். இன்று எனக்கு வேறு ஒரு காரியமும் இல்லை. என்னை அழைத்துக் கொண்டு போக உங்களுக்கு நேரம் இருக்குமா?'' என்று கேட்டாள்.

கிளாராவுக்கு இப்பொழுது தினம் அவளுடைய தர்ம காரியங்களும், தோட்ட கிளப்புகள் சம்பந்தமான போர்ட் மீட்டிங்குகளும் தான் இருந்தன.

''உன்னை அழைத்துக் கொண்டு போவதை விட எனக்கு வேறு என்ன வேலை? உன் தொப்பியை எடுத்துக் கொள். புறப்படுவோம். ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே! ஆங்கில மன்னரையும், ராணியையும் சந்திப்பதற்காக, அடுத்த வியாழக்கிழமை ரூஸ்வெல்ட் தம்பதிகள் நம்மை வெள்ளை மாளிகைக்கு வரும்படி அழைத்திருக்கிறார்கள். ஆனால் அன்று வீட்டில் உனக்கு தோட்ட

ிளப் கூட்டம் இருப்பதால், 'வரமுடியாது' என்று சொல்லி விட்டேன்.''

''தோட்டக் கிளப் கூட்டத்திற்கு வரும் ஸ்திரீ களுக்கு ஏமாற்றம் அளிக்க நான் விரும்ப வில்லை'' என்ருள் கிளாரா. ஜனதிபதியிடமிருந்து வந்த அழைப்பைப் பற்றி இருவருமே பிரமாதமாக நினைக்கவில்லை. டியர்பார்ன் மேயர் அவர்களைச் சாப்பிடக் கூப்பிட்டால் என்ன நினைப்பார்களோ, அதைப் போலத் தான் இதையும் நினைத்தார்கள்.

ஒரு ட்ரைவர் அவர்களை ரூஜ் தொழிற்சாலைக்கு ஓட்டிச் சென்ருன். முன்வெளியைத் தாண்டி கார்கள் இணைக்கப்படும் இடத்திற்குச் சென்ற போது, ''வழக்கம் போலவே வெகு சுத்தமாக வைத்திருக்கிறீர்களே! ஒரு அழுக்கு ஜன்னலோ, வழியில் குப்பையோ ஒன்றைக் காணேமே!'' என்ருள் கிளாரா.

''எதையும் சுத்தமாகவும், ஒழுங்காகவும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று எங்கம்மா சொல்லிக் கொடுத்தாள். அதற்குப் பிறகு வெகு துப்புரவாக இருக்கும் கிளாரா பிரயன்ட் என்னும் பெண்ணை மணந்து கொண்டேன். அதன் பலன் தான் இது'' என்று ஹென்றி வேடிக்கையாகச் சொன்னர்.

''ஆனல் ஒரு காரியத்தை எங்கள் இரண்டு பேராலும் சொல்லித் தர முடியவில்லை. அது தான் குறித்த நேரத்திற்குச் சாப்பிட வருவது'' என்று கிளாரா சொன்னள். பிறகு தொழிற்சாலையைச்

சுற்றிப் பார்க்க ஆரம்பித்ததும், ''நல்ல வேளை, காலுக்கு இதமாக இருக்கும் இந்த பழைய ஜோடு களை போட்டுக் கொண்டு வந்தேன். நீங்கள் நூற்று முப்பத்திரண்டு மைல் நீளமுள்ள 'கன்வேயர்' இருக் கிறது என்று சொன்னதும் என்னால் கற்பனை செய்தே பார்க்க முடியவில்லை'' என்றாள்.

''இங்கு தான் க்ராங்க் ஷாப்டும், வால்வும் கட் டப் படுகின்றன. கார் பாகம் நகர்ந்து இங்கு வரும் போது இவை பொருத்தப் படுகின்றன.''

''எல்லாமே நகர்ந்து கொண்டிருப்பதைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது. மேலே தொங் கிக் கொண்டிருக்கும் வால்வுகள் கூட நகர்ந்து கொண்டிருக்கின்றனவே?''

ஹென்றியின் முதல் பெட்ரோல் என்ஜினைக் கட்ட உதவியதிலிருந்து கிளாராவுக்கு எல்லாப் பாகங்களும் தெரியும். அவர் யந்திர பாகங்களைப் பற்றிப் பேசும் போதெல்லாம் அவள் கவனித்துக் கேட்டிருக்கிறாள்.

பிஸ்டன் இணைக்கப்படும் இடத்திற்குச் சென்று பிஸ்டன் இணைக்கப் படுவதைப் பார்த்தார் கள். ஒவ்வொரு இணைப்பிற்கும் கார் வளர்ந்து கொண்டே சென்றது.

''1913 ல் முதல் முதலில் நகரும் இணைப்பு முறை ஆரம்பித்தோமே அதற்குப் பிறகு எவ் வளவோ அபிவிருத்தி செய்து விட்டோம். முன் னெல்லாம் ஒரு கட்டடத்தைச் சுற்றி டிரக்குகள் சென்று அங்கங்கே இணைக்கப்பட்டுக் கொண்டி

ருக்கும் கார்களுக்கு வேண்டிய பாகங்களை வைத்து விட்டுச் செல்லும்'' என்றார் ஹென்றி.

''முன்பு வண்டியை யந்திரம் கொண்டு இழுத்துக் கொண்டே போவார்கள். தொழிலாளிகளும் பாகங்களை பொருத்திக் கொண்டே இருப்பார்கள். அது எத்தனை நன்ருக ஞாபகம் இருக்கிறது! முன்பு ஒரு நாள் ராத்திரி நீங்கள் சிக்காகோவிலிருந்து திரும்பி வந்தீர்களே, அன்று தான் நகரும் இணைப்பு முறையைப் பற்றி யோசனை செய்தீர்கள். அன்றைக்கு எவ்வளவு உற்சாகமாக இருந்தீர்கள், ஞாபகம் இருக்கிறதா?''

''சிக்காகோவில் பன்றிகளைப் பெட்டிகளில் அடைத்து அனுப்புவதற்காக தலைக்கு மேலே அவர்கள் டிராலிகள் கட்டி இழுத்ததைப் பார்த்த பிறகு தான் எனக்கு இந்த யோசனை தோன்றிற்று. நான் செய்ய வேண்டும் என்று நினைத்துப் பார்த்த காரியத்தை சிந்திக்கச் செய்த சுலபமான வழி யிது. அதிகப்படியான கார்களை எவ்வளவு சீக்கிரம் இணைக்க முடியுமோ, அத்தனை சீக்கிரம் இணைத்தாக வேண்டும். இதையும் ஆயிரக் கணக்கான தொழிலாளிகளைக் கொண்டு ஒழுங்காகவும், வேகமாகவும் செய்ய வேண்டும். ஆனால் இதை எப்படிச் செய்வது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கையில், அவர்கள் பன்றிகளை, டக்கென்று தூக்கி ட்ராலிகள் வழியாகக் கொண்டு சென்றபோது, எனக்கு என்னுடைய நகரும் இணைப்பு முறை உதயமாயிற்று.''

''இதனால் நீங்கள் மோட்டார் உற்பத்தியாளர்

களுக்கு மட்டும் புது வழி காட்டிக் கொடுக்கவில்லை. எல்லா உற்பத்தியாளர்களுக்குமே புது வழி காட்டிக் கொடுத்தீர்கள்'' என்றாள் கிளாரா பெருமையாக.

''என் மீது நம்பிக்கை உள்ள நீ, என் பக்கத்தில் இருந்ததால் தான் இது முடிந்தது'' என்று ஹென்றி கிளாராவைத் தோளில் தட்டிக் கொடுத்தார்.

மோட்டார் கட்டி முடித்ததைப் பார்த்த பிறகு காரின் மேல் பாகம் கட்டப் படுவதைப் பார்த்தார்கள். ஒரு ஸ்டியரிங் சக்கரத்தைத் தூக்கிக்கொண்டு 'கன்வேயர்' மேலே சென்றது.

''மின்சார யந்திரக் கருவிகளும் இம்மாதிரித் தான் நகர்ந்து வருகின்றனவா?'' என்று கிளாரா கேட்டாள்.

''ஆமாம், ஒரு பின் பக்க அச்சை இணைப்பதற்கு இருபது நிமிஷம் ஆகிறது'' என்றார் போர்ட்.

''இதோ பாருங்கள், மேலேயுள்ள கன்வேயரிலிருந்து மோட்டார் வெகு நாசூக்காகக் கீழே இறக்கப் படுகிறது'' என்றாள் கிளாரா,

''இந்த முன்பக்கம் பம்பர் சேர்க்கப் பட்டதும் கார் உருவம் பெற்று விடுகிறது'' என்றார் ஹென்றி.

காரின் மேல் பாகம் மேலேயுள்ள கன்வேயரிலிருந்து கீழே இறக்கப்படுவதைக் கிளாரா வெகு ஆச்சரியத்தோடு பார்த்தாள். பிறகு காருக்கு சக்

கரங்களும், டயர்களும் மாட்டப்பட்டன. பிறகு பெட்ரோலும், தண்ணீரும் போடப்பட, அது பிரத்தியேக நிபுணர்களால் பரிசோதனை செய்யப்படத் தயாராக இருந்தது.

கார் ஜலப் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்ட போது, பெரிய மழை கொட்டு, கொட்டு என்று கொட்டுவது போல் பட்டது. நிமிஷத்துக்கு 400 காலன் ஜலம் கொட்டியது போல் இருந்தது.

"இதை விடக் கொடிய மழை ஒரு நாளும் பெய்யாது" என்றாள் கிளாரா.

"இங்கிருந்து அது ரஸ்தா பரிசோதனைக்குப் போகிறது. இந்தப் பரிசோதனைகளிலும் அது வெற்றி கண்டுவிட்டால், அதைப் பெரிய வண்டிகளில் ஏற்றுவார்கள்"

"என்னையும் என் வண்டியில் ஏற்றினால் நல்லது. நான் களைத்து போய் விட்டேன். நீங்கள் என்னடா வென்றால், இப்பொழுதுதான் மலர்ந்த மலரைப் போல், மலர்ந்து விளங்குகிறீர்கள்" என்றாள் கிளாரா.

ஹென்றியின் சாதனைகளை யெல்லாம் நினைத்துப் பார்த்த போது கிளாராவுக்கு வெகு பெருமிதமாக இருந்தது. ஏனெனில், அதற்காக அவர் எவ்வாறு கஷ்டப்பட்டு உழைத்தார் என்பது அவளுக்கல்லவா மற்ற எல்லாரையும் விட நன்கு தெரியும்?

ரூஜ் தொழிற்சாலைக்குப் பக்கத்தில் ஹென்றி சூரியகாந்தியிலிருந்து சோயாபீன் வரை எல்லாம் பயிரிட்டார். இன்டர்னேஷனல் ஹார்வெஸ்டர்

கம்பெனி தயாரித்த புது வகை யந்திரத்தை முதலாவதாக உபயோகித்தவர்களில் ஹென்றியும் ஒருவர். அறுவடை யந்திரமும் கதிர் அடிக்கும் யந்திரமும் கலந்த ஒரு புதிய யந்திரம் இது. ஒரே சமயத்தில் ஓட்ஸ், கோதுமை, பார்லி முதலியவற்றை அறுவடை செய்ததோடு, கதிர் அடித்து, கதிரையும் வைக்கோலையும் தனியே பிரித்து வைக்கும். இதனால் எத்தனையோ கஷ்டமான காரியங்கள் மீதமாயின.

ஹென்றி சோயாபீன்ஸ் விஷயமாக ஏக சிரத்தை எடுத்துக் கொண்டார். அவற்றைத் தன் பரிசோதனை சாலையில் பரிசோதித்து, அவற்றை மோட்டார்த் தொழிலுக்கு எப்படி உபயோகிக்கலாம் என்று தெரிந்து கொள்ள விரும்பினார். அப்பொழுது குடியானவர்கள் தங்கள் சோயாபீன் அவரையைத் தொழில் மார்க்கெட்டில் விற்கலாம் அல்லவா?

சோயாபீன் எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு வித இனாமல் தான் போர்ட் கார்கள் மீது பூசப்பட்டன. இந்த வர்ணம் பனியிலும் சரி, வெயிலிலும் சரி அழியவே இல்லை. இந்த வர்ணத்தைத் தண்ணீர் கொண்டு கழுவினால் போதும், பளபளப்பு வந்து விடும். "இந்த வர்ணம் இன்னும் பளபள வென்று இருக்க வேண்டும். இன்னும் வெகு காலம் அழியாமல் இருக்க வேண்டும். அதற்குத் தொடர்ந்து பரிசோதனை நடத்துங்கள்" என்றார் ஹென்றி தம் வர்ண நிபுணர்களிடம். எதையும் பரிபூரணமாகச் செய்ய வேண்டும் என்பது ஹென்றியின் ஆவல்.

இந்த அவரைகளை எல்லா வகை நிலங்களிலும் பயிரிட முடிந்தது. இவற்ருல் நிலத்திற்கு நன்மை ஏற்பட்டதே யொழிய கெடுதல் ஏற்படவில்லை. பரி சோதனை சாலையில் இதை ஒரு தனிவகை பெட்ரோலில் கரைத்து எண்ணெய் எடுத்தார்கள். எண்ணெயும் சரி, சக்கையும் சரி, கிளஸரின், வெடி மருந்துகள், தண்ணீர் புகாத சாமான்கள், சோப்புகள், அச்சடிக்கும் மை, கியர் கைப்பிடிகள், பித்தான்கள், பெடல்கள், கதவுப் பலகைகள், துணிகள் முதலிய பலவிதப் பொருள்கள் செய்ய உதவின.

ஹென்றி விருந்துகள் வைத்து அதில் சோயாபீன் அவரை கலந்த பதினுறு வகைத் தின்பண்டங்கள் பரிமாறினுர். சோயாபீன் கலந்த டொமாட்டோ ரஸம், சோயாபீன் வற்றல், சோயாபீன் பாலேட்டுக் கட்டி, சோயாபீன் காப்பி, சோயாபீன் மிட்டாய் என்று எல்லாம் சோயாபீன் மயமாக விருந்து அளித்தார்.

சோயாபீன்களைப் பற்றி அவர் ஏக ஜோசியம் சொன்னுர். "காரின் பெரும் பாகத்தை நாம் பூமியில் விளைவித்தே பெற முடியும்" என்ருர். இதைக் குறித்து ஒரு டெட்ராய்ட் பத்திரிகை ஒரு கதை பிரசுரித்தது—"போர்ட் தரையிலிருந்து கார் முளைக்கும் என்கிருர்" என்று.

இந்தக் கதை பிரசுரமான சமயத்தில் டியர்பார்னில் தேசிய பண்ணைக் கௌன்சில் கூடிக்கொண்டிருந்தது. இந்தக் கூட்டத்திற்கு ஹென்றி வெகு ஆசையோடு சென்ருர். பண்ணை விளைச்சல் பொருள்களை எப்படியெல்லாம் உபயோகிக்கலாம்

என்று தெரிந்து கொள்ள அவர் ஆசையாக இருந்தார். அதோடு, தாம் மிகவும் கேள்விப்பட்டிருந்த ஒருவரைச் சந்திப்பதற்காகவும் அங்கு சென்ருர்.

ஹென்றியின் கண்கள் அறையைத் துழாவின. உயரமாயும், முதுகு சற்று வளைந்தும் இருந்த ஒரு நீக்ரோ மீது அவர் கண்கள் நிலை பெற்றன. அவர் கசங்கியிருந்த ஒரு கறுப்பு சூட் போட்டுக் கொண்டிருந்தார். அவருடைய ஆழமான கண்கள் ஒரு பெரிய காரியத்தைக் கனவு காண்கிறவர் போல மின்னின.

ஹென்றி அவர் கையைப் பிடித்துக் குலுக்கிஞர். "ஜியார்ஜ் வாஷிங்டன் கார்வர்! வெகு நாளாகத் தங்களைச் சந்திக்க வேண்டுமென்று எனக்கு இருந்த ஆசை இன்று தான் நிறைவேறிற்று" என்ருர்.

தாமும் அதிகம் கேள்விப் பட்டிருந்த தொழில் மேதையான ஹென்றியைச் சந்தித்ததில் ஜியார்ஜ் வாஷிங்டன் கார்வருக்கும் சந்தோஷம்.

இந்த இருவருடைய கண்களிலிருந்தும் இருவரும் ஒருவரை யொருவர் எவ்வளவு தூரம் மதித்துப் பாராட்டினர் என்பது தெரிந்தது. இரண்டு பேருக்கும் ஒரே வயது. எத்தனையோ குணங்களும், வழக்கங்களும் இருவருக்கும் பொதுவாக இருந்தன. வேலை, அதிக வேலை, அதைவிட அதிக வேலை, இதஞல் விளையக் கூடிய நன்மையில் இருவருக்கும் நம்பிக்கை உண்டு. இருவரும் மணியைப் பாராமல் வேலை செய்பவர்கள். இரண்டு பேருக்கும் விடா முயற்சியில் நம்பிக்கை உண்டு. ஒரு காரியத்தில்

முதலில் வெற்றி காணுவிட்டால், வெற்றி பெறு மட்டும் திரும்பத் திரும்ப முயற்சி செய்கிறவர்கள் இருவரும். இருவரும் காலத்தை விரயம் செய்வதில்லை. இரண்டு பேரும் கையில் காசில்லாமல் பண்ணையை விட்டவர்கள். தங்களுக்குப் பிடித்த ஒரு காரியத்தைச் சாதிப்பதற்காக இருவருமே நிந்தனைக்கும், பழிப்புக்கும் ஆளானவர்கள்.

அந்த முதல் கைக்குலுக்கலிலிருந்து இருவரிடையுமே ஒரு ஆழ்ந்த, நெருங்கிய சிநேகிதம் ஏற்பட்டது. "கடவுள் நமக்கு மூன்று இனங்கள் கொடுத்தார்—மிருக, தாவர, உலோக என்று. இப்பொழுது செயற்கை என்னும் நான்காவது இனத்தையும் சேர்த்து விட்டார். சோயாபீன்களைக் கொண்டு என்னென்ன செய்திருக்கிறீர்கள், சொல்லுங்கள்? உங்கள் பரிசோதனைகளைப்பற்றி நான் படித்திருக்கிறேன்" என்றார்.

எண்ணெய்க்கும், பிண்ணாக்குக்கும் தாம் கண்டுபிடித்துள்ள உபயோகங்கள் என்னென்ன என்று ஹென்றி சொன்னதை அந்த நீக்ரோ கூர்ந்து கவனித்தார்.

"நான் தெற்கே போகப் போகிறேன். அங்கே பட்டாணிக்குப் பதில் சோயாபீன்களை உபயோகிக்கப் போகிறேன்" என்றார் கார்வர் உற்சாகமாக.

அந்த சந்திப்பின் காரணமாக ஹென்றிக்கு தென் பிராந்தியங்களில் அக்கறை பிறந்தது. ஜியார்ஜியாவைச் சேர்ந்த சவன்னுவுக்கு அருகில் நிறைய நிலம் வாங்கி, ஏழை வெள்ளையர்களும்,

நீக்ரோக்களும் குடிசைப் போட்டுக் கொண்டிருந்த இடங்களை வளம் மிகுந்த வயல்களாகவும், பரிசோதனை ஸ்தலமாகவும் மாற்றினர். இரண்டு பள்ளிக் கூடங்கள் கட்டி, நீக்ரோக்களுக்கு என்று ஒதுக்கிய பள்ளிக்கூடத்திற்கு, "கார்வர் பள்ளிக்கூடம்" என்று பெயர் வைத்தார். புது வீடுகள் கட்டி, குடியானவர்களுக்கு வேண்டிய உபகரணங்கள் கொடுத்தார். கார்வர் ஹென்றியுடனும், ஜனங்களுடனும் சேர்ந்து வேலை செய்து, நிலத்தில் உள்ள ஒவ்வொரு பொருளையும் எப்படி உபயோகிப்பது என்று ஏழை மக்களுக்கு விளக்கினர்.

டஸ்கிகீயில் சர்வகலாசாலையில் பாடம் சொல்லிக் கொண்டிருந்த ஜியார்ஜ் வாஷிங்டன் கார்வரைப் பார்ப்பதற்காக ஹென்றி அடிக்கடி அங்கு போவார். தம்முடைய ரயில்வே காரில் சென்று, கார்வரின் அறையில் மணிக்கணக்காக பேசிக் கொண்டிருப்பார். சில சமயங்களில் இரண்டு பேரும் பேச்சில் மூழ்கி யிருக்கும்போது சாப்பிடுவதற் கென்று சாப்பாடு அறைக்குப் போகமாட்டார்கள். அவர்களுடைய் சாப்பாடு அவர்களுக்கு தட்டுகளில் அனுப்பப்படும். இரண்டு பேருக்கும் எளிய உணவு தான் பிடிக்கும். மழை பெய்யாத நாட்களில் இருவரும் காட்டின் வழியாக பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும், விஞ்ஞானத்தினல் ஏற்பட்டுள்ள நன்மைகளைக் குறித்து விவாதித்துக் கொண்டும் நடந்து செல்வார்கள்.

தம்முடைய நீக்ரோ நண்பருக்கு ஒரு பெரிய வீடு கட்டிக் கொடுக்க ஹென்றி விரும்பினர். ஆனல்

கார்வர் தலையை அசைத்து, "எனக்கு இருக்கும் மர வீடே போதும்" என்று சொல்லி விட்டார்.

க்ரீன்பீல்ட் கிராமத்தில், 'கார்வர் வீடு' கட்டப்பட்டது. கார்வர் இந்தச் சின்ன மர வீட்டைக் கண்டு சந்தோஷப் பட்டார். அங்கு சில காலம் தங்கி, பண்ணைப் பொருள்களுக்குப் புதிய உபயோகங்கள் கண்டு பிடிக்க உழைத்தார்.

# ஐந்தாவது பாகம்

## 1941-1948.

# அத்தியாயம் 29.

அநேக வருஷங்கள் சென்றன. 1941 டிஸம்பரில் ஒரு குளிர் நடுக்கும் ஞாயிற்றுக்கிழமை மாலை. ஹென்றியும், கிளாராவும் ரேடியோவில் பாட்டு கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஹென்றிக்கு எழுபத்தெட்டு வயது ஆகிக் கொண்டிருந்தது. நடையில் வேகம் சற்று தளர்ந்திருந்தது. தலைமயிர் வெள்ளையாகி விட்டது. கிளாராவின் தலைமயிர் பழுப்பு நிறமாயிருந்தது. இங்கும் அங்கும் நரை தெரிந்தது. அவள் கறுப்புப் பட்டு உடை ஒன்று அணிந்து கொண்டு கழுத்தில் முத்து மாலையும் அதற்கேற்ற காதணியும் அணிந்திருந்தாள். இரண்டு பேரும் பார்ப்பதற்குக் கம்பீரமான தோற்றம் அளித்தார்கள்.

திடீரென்று ரேடியோ சங்கீதம் நின்றது. நிகழ்ச்சி அறிவிப்பாளர் சொன்னார்: "ஜப்பானியர்கள் பேர்ல் ஹார்பரைக் கொடூரமாகத் தாக்கிய சம்பவத்தைப் பற்றி தெரிவிப்பதற்காக இந்த நிகழ்ச்சி நிறுத்தப் படுகிறது" என்று.

கிளாராவும், ஹென்றியும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு தங்கள் நாற்காலிகளை இழுத்து

ரேடியோ பக்கத்தில் போட்டுக் கொண்டார்கள். அமெரிக்காவை இரண்டாவது உலக யுத்தத்தில் மாட்டி வைக்கும் நிகழ்ச்சி இது என்று அவர்களுக்குத் தெரியும்.

"இந்தச் சின்ன உலகில் தேசங்கள் பேராசையை நீக்கி, ஒருவரோடொருவர் வாழக் கற்றுக் கற்றுக் கொள்ளா விட்டால் இதைவிட ஒரு கொடிய யுத்தத்திற்கு ஒத்திகை ஆகி விடும்" என்றார் ஹென்றி, கிளாராவிடம்.

யுத்தம் என்றால் ஹென்றிக்குப் பிடிக்காது என்றாலும் சீக்கிரம் சமாதானம் ஏற்பட வேண்டுமானால், உற்பத்தி அதிகரிக்க வேண்டியது அவசியமென்று ஹென்றி தீர்மானிக்க, போர்ட் மோட்டார் கம்பெனி யுத்தத்தின் போது நிறைய யுத்த தளவாடங்கள் தயாரித்தது.

ஹென்றி தம் யுத்த முயற்சியின் முதற்படியாக வில்லோ ரன் வெடி குண்டு விமானத் தொழிற்சாலையையும், அதற்குப் பக்கத்தில் ஒரு விமான நிலையமும் கட்டினார். பெருவாரியாகக் கட்டுவதற்காக அவர் கொண்டிருந்த கொள்கைகளை இதில் கடைப் பிடித்தார். உலகத்திலேயே அதிகப்படி ஆயுதங்கள் கொண்ட விமானத் தொழிற்சாலையாக இது விளங்கிற்று. புகழ் பெற்ற பி-24 வெடி விமானத்திற்கு, ஒன்றைப்போல் ஒன்று இல்லாத 30,000 பாகங்கள் வேண்டியிருந்தன. இவற்றை ஒரே கட்டடத்தில் இணைப்பதற்கு 5,450 அடி நீளமுள்ள இணைப்பு லைன்கள் தேவையாக இருந்தது.

வில்லோ ரன் விமான நிலையத்தின் விஸ்தீர்ணம் 1434 ஏக்கர். வில்லோ ரன்னில் செய்யப்பட்ட விமானங்களைப் பரிசோதிக்கவும், ராணுவ வெடி விமானிகளுக்கு பயிற்சி அளிக்கவும் இந்த விமான நிலையம் உபயோகப் பட்டது. வெடி விமானங்கள் தினம் இந்த விமான நிலையத்திலிருந்து எல்லா திசைகளுக்கும் பறந்து சென்றன.

சமாதானத்தை விரும்பிய ஹென்றி இத்தனை பிரம்மாண்டமான யுத்த முயற்சியில் ஈடுபட்டதைக் குறித்து சிலர் அவரைக் கடுமையாகக் கண்டித்தார்கள். ஆனால் யுத்தத்தை வெல்வதற்காக, அவர் தம்முடைய பிரம்மாண்ட சாதனங்களைச் சர்க்காருக்குக் கொடுத்து உதவியிரா விட்டால் ஜனங்கள் என்ன சொல்லியிருப்பார்கள்? ஹென்றியின் செல்வமும், ஆதிக்கமும் வெகு பெரிய அளவுக்குப் பெருகி விட்டதால், அவர் என்ன செய்தாலும் சரி, ஜனங்கள் புகழவும் செய்தார்கள், இகழவும் செய்தார்கள். ஆனால் ஜனங்கள் தம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள், என்ன சொல்லுகிறார்கள் என்பதைப் பற்றி ஹென்றி கவலைப் படவில்லை.

யுத்த முயற்சிக்காக ஹென்றி பாடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் பெரிய தொழில் பிரசினைகள் போர்ட் தொழிற்சாலைகளிலும் தலை காட்ட ஆரம்பித்தன.

தொழிலாளர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதால் அவர்களைத் திருப்தி செய்வதாக ஹென்றி எண்ணி யிருந்தார். ஆனால் தொழிலாளிகளின் தேவைகள் வெகுவாக அதிகரித்திருந்தன. இடை

இடையே வேலை இல்லாமல் இருப்பதும், உத்தி யோகம் ஸ்திரமற்று இருப்பதும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. 1938க்குள் போர்ட் தொழிற்சாலையைத் தவிர, மற்ற மோட்டார்த் தொழிற்சாலைகளில் சங்கம் அமைத்துக் கொண்டு விட்டார்கள். ஆனால் சம்பளத்தைக் குறைக்கவோ, அல்லது ஆட்களை தம் இஷ்டப்படி வேலையை விட்டு அனுப்பவோ ஹென்றிக்கு அவர் தொழிற்சாலையில் அதிகார மிருந்தது.

1941ல் ஹென்றியின் தொழிலாளிகள் ஸி. ஐ. ஓ. வில் அதாவது தொழிற்சங்கக் காங்கிரஸில் சேர்வது என்று தீர்மானித்தார்கள். "எந்த யூனியனும் கேட்கக் கூடிய சம்பளத்தை விட அதிக சம்பளம் கொடுத்தோம், வேலை நேரத்தையும் குறைத்தோம்" என்று எண்ணியிருந்த ஹென்றிக்கு இது ஒரு பெரிய இடியாகப் பட்டது. ஆனால் தங்கள் சர்க்காரை நடத்துவதில், தங்களுக்கு அதிகாரம் இருந்ததுபோல், தொழில் பிரசினைகளைத் தீர்க்கவும் தங்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டுமென்று ஜனங்கள் கோர ஆரம்பித்தது தான் இதற்குக் காரணம். தொழிலிலும் ஜனநாயகம் வேண்டும் என்று அவர்கள் கோரினார்கள். தங்கள் சங்கங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று விரும்பினார்கள்.

"பெரும்பான்மையான தொழிற்சங்க அங்கத்தினர்களைப் போலவே அவர்களுடைய தலைவர்களும், மற்ற அதிகாரிகளும், நியாயமாகவும், கண்யமாகவும், கெட்டிக்காரத்தனமாகவும் நடந்து கொண்டால் தொழிற் சங்கங்களால் தவறு இல்லை.

ஆனுல் இவர்களில் சிலர் சண்டைக்குத் தான் அடி கோலுகிருர்கள். நாளொன்றுக்குப் பன்னிரண்டு டாலர் சம்பளம் கிடைத்தால், அத்தோடு நிற்காதே, பதினுன்கு டாலர் கேளு! எட்டு மணி நேர வேலை இருந்தால், அத்தோடு நிற்காதே, ஆறு மணி நேர வேலை கேளு! எப்பொழுதும் ஏதாவது கேட்டுக் கொண்டேயிரு, சும்மா இருக்காதே! இது தான் அவர்களுடைய கொள்கை" என்ருர் ஹென்றி.

ஆனுல் பலவந்தப்படுத்தினுலன்றி தங்கள் தொழிலாளிகளுக்கு ஒரு நன்மையும் செய்யாத சில அசட்டு முதலாளிகள் சம்பந்தப்பட்ட மட்டில் தொழிற்சங்கங்கள் நல்லது தான் என்று ஹென்றி கருதினுர். ஏனெனில், "தொழிலாளிகளைத் தொலைக்க இது தான் சமயம்" என்று நினைத்த முதலாளிகளும் இருக்கத்தானே செய்தார்கள்?

1935ல் வாக்னர் தொழில் உறவுச் சட்டம் நிறைவேறியது தொழிற் சங்கங்களுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும். தொழிலாளிகளுக்கு சங்கங்கள் அமைத்துக் கொள்ள உரிமை உண்டு என்று இந்தச் சட்டத்திலிருந்து தெளிவாயிற்று. கூட்டு பேரத்தை முதலாளிகள் ஒப்புக்கொள்ள வேண்டும், அதாவது முதலாளிகளும், தொழிலாளிகளும் சேர்ந்து பேசி தங்கள் சச்சரவுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று சட்டம் கோரிற்று. இதற்கு முன்னர் அநேக முதலாளிகளும், சில தொழிலாளிகளும் இதற்கு உடன்படவில்லை. இந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவதற்காக,

தேசீய தொழில் உறவு போர்ட் ஸ்தாபிக்கப் பட்டது.

ஹென்றி கடைசியாக 1941ல் யூ. ஏ. டபிள்யூ. ஸி. ஐ. ஓ. வுடன் அதாவது தொழிற்சங்கக் காங்கிர ஸின் ஐக்கிய மோட்டார்த் தொழிலாளிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டபோது, மற்ற எந்த மோட்டார்க் கம்பெனியும் ஒப்புக் கொள்ளாத அநேக சலுகைகள் சங்கத்திற்குக் கிடைத்தன. சங்கத்தைச் சேர்ந்த ஆட்கள் தான் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் படுவார்கள் என்றும், சங்கக் கட்டணத்தைத் தொழிலாளிகளின் சம்பளத்தி லிருந்து பிடித்து சங்கத்திற்குக் கொடுக்கும் என்றும் போர்ட் மோட்டார் கம்பெனி ஒப்புக் கொண்டது.

ஆனல் இத்தனை சலுகைகள் கொடுத்தும் ஹென்றி எதிர் பார்த்த தொழில் சமாதானம் கிட்ட வில்லை. 1941லிருந்து 1945க்குள் போர்ட் மோட்டார் கம்பெனியில் சட்டத்தை மீறிய (அதாவது ஒப்பந் தத்தையும், சர்க்கார் சட்டத்தையும் மீறிய) 773 வேலை நிறுத்தங்கள் நடந்தன. கிடைத்த சலுகை களினல் சங்கத்தின் அங்கத்தினர் பலமும், பொரு ளாதார பலமும் அதிகரித்தது. இந்த பலத்தின் காரணமாக பெரிய சங்கப் பதவிகளுக்கு ஏகப் போட்டி ஏற்பட்டதோடு, அப்படி போட்டி போட்ட வர்களும் பொதுவாக நல்லவர்கள் அல்லாமல் இருக்க, சங்கத்திற்குள்ளேயே சச்சரவு ஏற்பட ஆரம்பித்தது.

மற்ற எல்லா ஏழை பணக்காரர்கள் வாழ்க்கை

யில் போலவே ஹென்றியின் வாழ்க்கையிலும் ஒரு பெரிய துக்ககரமான சம்பவம் நிகழ்ந்தது. 1943 மே 26ம் தேதி யன்று எட்ஸெல் காலமானர். அப்பொழுது அவருக்கு வயது நாற்பத்தொன்பது. பதினறு மாதங்களுக்கு முன்னர் ஒரு வயிற்றுக் கோளாறுக்காக அவர் ஆப்பரேஷன் செய்யப்பட்டார். ஆனல் அதிலிருந்து பூரண குணமாக வில்லை.

வில்லோ ரன்னை நடத்துவதில் தான் எட்ஸெல் பெரும்பாலும் ஈடுபட்டிருந்தார். போர்ட் கம்பெனியில் நான்கு என்ஜின் வெடி விமானங்களைப் பெரிய அளவில் தயாரிக்க முடியுமா என்று கண்டு பிடிப்பதற்காக 1941 ஜனவரியில் சர்க்கார் கோரிக்கைக்கு இணங்க, அவரைத் தலைமையாகக் கொண்ட ஒரு கோஷ்டி கலிபோர்னியா சான்டீகோவில் உள்ள ஐக்கிய விமான கார்ப்பரேஷன் தொழிற்சாலையைப் பார்வை யிட்டது.

டெட்ராய்ட் முழுவதும் எட்ஸெல் மறைவுக்காக வருந்தியது. அவர் 1925லிருந்து கலைச் சங்கத்தின் ஒரு அங்கத்தினராக இருந்து, 1930ல் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவரும் அவரது மனைவி எலியனுரும் எத்தனையோ காரியங்களுக்கு தாராளமாக நன்கொடை கொடுத்தார்கள். அவர் நன்கொடை கொண்டு, கண்காட்சியின் எத்தனையோ பாகங்கள் விருத்தி யடைந்திருந்தன.

எட்ஸெல், பொழுது போக்குக்கு, ஒன்று குடும்பத்தினரோடு உல்லாசமாகக் காலத்தைக் கழிப்பார், அல்லது கால்பும், டென்னிஸும் விளை

யாடுவார். டென்னிஸ் விளையாட்டுகளை அடிக்கடி போய்ப் பார்ப்பார். டெட்ராய்ட் டைகர்ஸ் பேஸ் பால் கோஷ்டியின் விளையாட்டை அவர் தொடர்ந்து கவனித்து வந்தார்.

மாடல் 'டி'க்குப் பிறகு செய்யப் பட்ட எல்லாப் புது போர்டு கார்களிலும் எட்ஸெலுக்கு பெரும் பங்கு உண்டு. லிங்கன் கார்கள் பெரும்பாலும் அவருடைய மேற்பார்வையில் தான் தயார் செய்யப் பட்டன. மோட்டார் தொழிலில் ஏற்பட்டுள்ள மகத்தான மாறுதல்களை அவர் கவனித்துள்ளார். அவர் மறைவு தொழிலாளிகளுக்குப் பெருத்த நஷ்டம் தான்.

கம்பெனியின் தலைமைப் பதவியை ஹென்றி மீண்டும் மேற்கொண்டார். எண்பது வயதான அவருக்கு அவர் செய்த வேலை அதிகம். அவர் செய்த வேலையை ஒரு நாற்பது வயதுக்காரரால் செய்திருக்க முடியாது. காலை ஐந்தரை மணிக்கு எழுந்து விடுவார். தம்முடைய பண்ணையைச் சுற்றி வேகமாகக் கொஞ்ச தூரம் நடந்து விட்டு, பிறகு காலை ஆகாரம் அருந்துவார். பிறகு லிப ரேட்டர் வெடி குண்டு விமானங்கள் தயாராகிக் கொண்டிருந்த வில்லோ ரன்னுக்குப் போவார். விவாதக் கூட்டங்களில் கலந்து கொண்டு, மாறுதல் களை ஒப்புக்கொள்ளவோ, தள்ளவோ செய்வார். எல்லா இலாகாக்களிலும் நடக்கும் வேலையை மேற்பார்வை பார்ப்பதற்காக மணிக்கணக்காக நடப்பார். பிறகு ரூஜ் சக்தி தொழிற்சாலைக்குச் சென்று, நாளின் எஞ்சிய பகுதியை மற்ற இலாகாக்

களைக் கவனிப்பதில் செலவழிப்பார். தம்முடைய காரியாலய மேஜையில் ஒரு சில நிமிஷங்களுக்கு மேல் உட்கார்ந்து அவருக்கு வழக்கம் இடையாது. அவர் வாழ்க்கையே கடின உழைப்பு, அசையாத தைரியம், சுத்தமான வாழ்விற்கு உதாரணமாக விளங்கிற்று.

யுத்தம் முடிந்து, அவருடைய யுத்த கான்ட்ராக்டுகள் தீர்ந்து, அவருடைய கம்பெனி சமாதான கால வேலையைச் செய்ய ஆரம்பித்ததும், அவருக்கு ஒரு நிம்மதி ஏற்பட்டது. யுத்தத்துக்காக அவர் தயாரித்த அத்தனை பொருள்களும் வீண் என்பது தான் அவருடைய அபிப்பிராயம். நாசவேலைக்குத் தானே அவை உபயோகப் பட்டன?

கம்பெனி திரும்பவும் கார்களும், டிரக்குகளும், டிராக்டர்களும் செய்ய ஆரம்பித்தபோது ஹென்றி ஒரு பெரிய தீர்மானத்திற்கு வந்தார். தாம் இன்னும் வெகு காலம் வாழ மாட்டோம் என்பது அவருக்குத் தெரியும். தாம் உயிரோடு இருக்கும் போதே புதிய தலைமையில் கம்பெனி வேலை செய்வதைப் பார்க்க விரும்பினார். இருபத்தெட்டு வயதான தம்முடைய மூத்த பேரனை இரண்டாவது ஹென்றியை கம்பெனியின் தலைவர் ஆக்கினார்.

இளம் ஹென்றிக்கு அவர் தலைமைப் பதவியை ஒப்புவித்த போது, தொழில் விஷயமாகத் தீர்க்க வேண்டிய பிரசினைகள் ஒவ்வொரு தலை முறைக்கும் உண்டு என்று உணர்ந்தே, ஹென்றி ஒப்புவித்தார்.

புது வழிகள் அநேகம் வகுக்க வேண்டி யிருக்கு மென்றும், நாட்டைக் கஷ்டப்படுத்திக் கொண் டிருந்த அநேக தொழில் பிரசினைகளுக்கு விடை கள் கண்டு பிடிக்க வேண்டியிருக்கும் என்றும் ஹென்றிக்குத் தெரியும்.

# அத்தியாயம் 30.

தன் பதவியை ஒப்புக்கொண்டு இளம் ஹென்றி வேலை செய்ததை ஹென்றி போர்ட் வெகு அக்கறையாகக் கவனித்தார். சிறு பையனாக இருந்தபோது என்ஜின் கட்ட ஆசைப்படா விட்டாலும், தம்முடைய பேரனின் ஆற்றலில் ஹென்றிக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. யேல் சர்வ கலாசாலையில் இருந்தபோது சர்வகலாசாலை கோஷ்டிக்குத் தலைமை வகித்ததோடு, தாத்தாவைப் போல், ஓட்டப் பந்தயம் என்றால் இளம் ஹென்றிக்குப் பிடிக்கும். செவர்லேயுடன் நடந்து கொண்டிருந்த போட்டியை பேரன் சாமர்த்தியமாகச் சமாளிப்பான் என்று ஹென்றி கருதினார். மோட்டார் உற்பத்தியில் போர்ட் தான் முதல் ஸ்தானம் வகிக்கவேண்டும் என்ற எண்ணம் ஹென்றிக்கு உண்டு.

1926ல் அமெரிக்காவில் தயாரான கார்களில் 41 சத விகிதம் போர்ட் விற்றுக் கொண்டிருந்தார். 1941ல் இது 16 சத விகிதமாகக் குறைந்து விட்டது. 1946ல் இதை இளம் ஹென்றி 22 சத விகிதமாகப் பண்ணினதை ஹென்றி பார்த்தார். ஹென்றிக்கு

வெகு சந்தோஷம். "பேரன் கெட்டிக்காரன்" என்று கிளாராவிடம் பெருமையாகச் சொன்னார்.

ஆனால் கிளாரா கண்களைச் சிமிட்டிக்கொண்டு "நீங்கள் போன வழியில் நம் பேரன் போகவில்லையே?" என்றாள்.

"இது ஒரு புது தொழில் யுகம் கிளாரா. இருந்தாலும் என்னுடைய கொள்கைகள் இரண்டை அவன் கடைப்பிடிப்பதால் அவன் தவறாகப் போக மாட்டான். நல்ல கார்கள், டிரக்குகள், டிராக்டர்கள் முதலியவற்றை எதிராளிகளை விடக் குறைந்த விலையில் விற்று, அது அதிகப்படியானவர்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கும் இருக்கிறது. இன்னும் பொது ஜனங்களுக்குத் தொண்டு புரிய வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இருக்கிறது. அவன் கொண்டு வரப்போகும் புது மாடலைப் பொது ஜனங்கள் பார்க்கும் வரை காத்திரு. அதுவரை நானும் உயிரோடு இருப்பேன் என்று நினைக்கிறேன்" என்றார் ஹென்றி.

ஆனால் போர்ட் என்ஜினீயர்கள் தயாரித்துக் கொண்டிருந்த புது மாடலைப் பார்க்க ஹென்றி உயிரோடு இல்லை.

யுத்தம் முடிந்த அடுத்த வருஷம், அதாவது ஜூன் 1946ல் மோட்டார்த் தொழிலின் பொன் விழாவை, அதாவது மோட்டார்த் தொழில் ஆரம்பித்து ஐம்பது வருஷம் ஆனதை, டெட்ராய்ட்

நகரம் கொண்டாட ஏற்பாடு செய்து கொண்டிருந்தது.

தங்கள் உழைப்பின் காரணமாக ஐம்பது வருஷங்களுக்கு முன்னர் மோட்டார் கார் கொண்டு வந்தவர்களை பத்து நாள் நடந்த கொண்டாட்டம் பாராட்டியது. இந்தப் புதிய வாகனம் அமெரிக்க வாழ்க்கை முறையையே மாற்றி விட்டதோடு, உலகம் பூராவும் பரவி விட்டது.

ஒரு பெரிய ஞாபகச் சின்னம் கட்டுதல், ஊர் வலம், கேளிக்கைகள் முதலிய நடத்துதல், பழைய மாடல் கார்களும், புது மாடல் கார்களும் கொண்ட கண்காட்சி அமைத்தல், தெருக் கொண்டாட்டம் நடத்துதல், தொழில் ஜாம்பவான்கள் பன்னிரண்டு பேரைப் பாராட்டுவதற்காக ஒரு விருந்து நடத்து தல் முதலியன ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன.

டெட்ராய்ட்டில் கடைகள், தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டன. வெடிகள் விடப்பட்டன. தங்களைக் கடந்து செல்வதற்கு நான்கு மணி நேரம் ஆன ஒரு ஊர்வலத்தை பத்து லட்சம் ஜனங்கள் பார்த்தார்கள். மோட்டார் கார் எப்படி கண்டு பிடித்துக் கட்டப்பட்டது என்ற கதை இந்த ஊர் வலத்தில் விளக்கப் பட்டது. எத்தனையோ விதம் விதமான கார்களில், அந்தக் கார் உண்டான காலத்திற்கேற்ப ட்ரைவர்களும், மற்றவர்களும் உடை உடுத்துக்கொண்டு சென்றார்கள். சில பழைய மாடல்கள் வழியில் நின்று போக, தள்ள வேண்டி வந்தது.

ஜாம்பவான்களுக்கு அளிக்கப்பட்ட விருந்தில் ஹென்றிக்கு முக்கிய ஸ்தானம் கொடுக்கப்பட்டது. "மோட்டார் அசெம்பிளி லைனின் பிதா" என்று தம்மை அவர்கள் அழைத்தது அவருக்குப் பிடித்திருந்தது. ஹென்றிக்குப் பக்கத்தில் ஓல்ட்ஸ் மோபைல் புகழ் ஆர். ஈ. ஓல்ட்ஸும், பந்தய ட்ரைவரான பார்னி ஓல்ட்பீல்டும், நாஷ் கெல்விநேட்டர் கார்ப்பரேஷனைச் சேர்ந்த சார்லஸ் ஈ நாஷும், முதல் பெட்ரோல் வண்டியை 1893ல் தமது சகோதரர் சார்லஸ் கட்டுவதற்கு உதவிய ஜே. பிராங்க் துரியாவும், அச்சு, பிரேக் முதலியவை தயாரித்த எட்கார். எல். அப்பர்ஸனும் இருந்தார்கள். இந்த ஜாம்பவான்கள் எல்லாரும் உலகத்தின் பெரிய தொழில்களில் ஒன்றாக மோட்டார்த் தொழில் மாறினதைத் தங்கள் வாழ்க்கையிலேயே பார்த்து விட்டார்கள்.

1947 ஏப்ரல் முதல் வாரத்தில் ஹென்றியும், கிளாராவும் ஜியார்ஜியாவுக்குப் போய் விட்டுத் திரும்பிய போது, ரூஜ் நதியில் ஏக வெள்ளம் கரை புரண்டு ஓடுவதைப் பார்த்தார்கள். ஹென்றியின் நிலத்தைச் சுற்றி கட்டியிருந்த வேலிகளைத் தாண்டிக் கொண்டு வெள்ளம் உள்ளே புகுந்து விட்டது. உயரமான மின்சார விளக்குக் கம்பங்கள் இடிந்து விழ, மின்சார கம்பிகள் ஜலத்தில் மூழ்க, மின்சாரம் நின்று விட்டது. ஹென்றியின் கல் மாளிகையில் இருந்த வேலைக்காரர்கள் கணப்பு அடுப்புகளில் பெரிய விறகுக் கட்டைகளை வைத்து எரிக்க வேண்டியதாயிற்று. விளக்கு வெளிச்சத்திற்கு

மண் எண்ணெய் விளக்குகளையும், மெழுகுவத்தி களையும் அவர்கள் உபயோகப் படுத்தினார்கள். இயற்கை தன் ராட்சஸ பலத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

ஏழாம் தேதி காலை ரூஜ் தொழிற்சாலையில் எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று பார்ப்ப தற்காக ஹென்றி ட்ரைவரை விட்டு காரை ஓட்டச் சொன்னார். ரூஜ் நதியின் இந்த ராட்சஸ பலத்தை எப்படியாவது கட்டுப் படுத்தியாக வேண்டும் என்று நினைத்தபோது, மங்கியிருந்த அவர் கண் களில் தீப்பொறி பறந்தது. அவருக்கு வயது எண்பத்து மூன்றாக இருந்தும், அவர் உடம்பு தெம்பாக இருந்தார். அடுத்த நாள் காலை தொடர்ந்து பரிசீலனை செய்ய வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்.

வழக்கம் போல் ஒன்பது மணிக்குத் தூங்கப் போனார். இரண்டு மணி நேரம் கழித்து விழித்துக் கொண்டார். "கிளாரா" என்று கூப்பிட்டதும் எப்படி என்றும் உடனேயே ஓடி வந்தாளோ அது போல் அன்றும் கிளாரா ஓடி வந்தாள்.

"எனக்கு உடம்பு சரியாக இல்லை. தலை வலிக் கிறது. கொஞ்சம் குடிக்க ஜலம் கொடு" என்றார்.

கிளாரா ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்கக் கொடுத் தாள். பிரவாகத்தின் காரணமாக வீட்டில் உள்ள போன்கள் வேலை செய்ய வில்லை. ஆகவே அரை மைலுக்கு அப்பால் இருந்த போர்ட் என்ஜினீரிங் பரிசோதனை சாலைக்கு டிரைவரை அனுப்பி

அங்கிருந்து டெட்ராய்ட்டில் இருந்த வைத்தியருக்குப் போன் பண்ணும்படி சொன்னாள்.

வைத்தியர் வருவதற்குள் ஹென்றி காலமாகி விட்டார். கிளாரா கையைப் பிடித்துக் கொண்டிருக்க வெகு நிம்மதியாக உயிரை விட்டு விட்டார்.

அவர்களுடைய நீண்ட மண வாழ்க்கையில் கிளாரா ஹென்றியை விட்டு ஒரு நாளும் பிரிந்ததில்லை. அவள் தன்னை விட்டுப் பிரிய ஹென்றிக்கு ஒரு நாளும் பிடிக்காது. ஒருவருக்கு ஒருவர் பக்கத்தில் இருப்பதிலேயே மகிழ்ச்சியும், ஆனந்தமும் கொண்டு, இருவரும் இளம் தம்பதிகளைப் போல ஒருவர் மீது ஒருவர் ஆசையாக தங்கள் நீண்ட மண வாழ்க்கையை நடத்தினர்.

# அத்தியாயம் 31.

இளம் ஹென்றி ரூஜ் தொழிற்சாலையில் சேர்ந்த போது, அழகான மஹாகனி மேஜையாகப் பார்த்து, அதில் போய் உட்கார்ந்து விடவில்லை. யேல் சர்வகலாசாலைப் படிப்பு முடிந்தானதும், கம்பெனியில் கார்களைச் சுத்தம் பண்ணும் வேலையில் அமர்ந்தார். அழுக்குப் படிந்த வேலையை செய்யவேண்டுமென்று ஆசைப் பட்டார். மற்றத் தொழிலாளிகளைப் போல் தம்மையும் நடத்த வேண்டும் என்று சொன்னார்.

தம் தாத்தாவுக்கு இருந்தது போல அவருக்கு என்ஜின்கள் மீது அத்தனை ஆசை இல்லாத போனாலும் டைனமோமீட்டர் அறைகளிலும், பரிசோதனை அறைகளிலும் வேலை செய்ய அவருக்கு ஆசையாக இருந்தது. அவர் ஏதாவது கேள்விகள் கேட்டுக்கொண்டே யிருக்கிறார் என்றும், விஷயங்களைத் தெரிந்து கொள்ள ஏக ஆசையாக இருக்கிறார் என்றும் பெரிய என்ஜினீர் அவரைப் பற்றிச் சொன்னார்.

1941ல் இளம் ஹென்றி கடற்படையில் சேர்ந்தார். அவருக்கு என்சைன் பதவி கொடுக்கப்

பட்டு, பெரிய ஏரி கடற்படை பயிற்சித் தளத்திற்கு அனுப்பப் பட்டார். அவர் கடலுக்குப் போக வேண்டுமென்று ஆசைப் பட்டார். ஆனால் அவருடைய தகப்பனார் இறந்து விடவே, ரூஜ் தொழிற் சாலைக்குத் திரும்பினார். கடற் படையில் கற்றுக் கொண்ட கட்டுப்பாடு அவருக்கு உதவியாக இருந்தது. எதை எப்பொழுது செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்களோ அப்பொழுது செய்யக் கற்றுக் கொண்டிருந்தார்.

பக்கத்தில் தாத்தா இருந்து கவனித்துக் கொள்ள இருந்த வரையில், இளம் ஹென்றி கம்பெனியின் தலைவராக வந்ததைப் பற்றி யாரும் பிரமாதமாக ஒன்றும் நினைக்க வில்லை. ஆனால் ஹென்றி இறந்ததும், இளம் ஹென்றி 'இத்தனை பெரிய தொழிலை எப்படி நடத்தப் போகிறார்' என்று உலகமே ஆச்சரியத்தோடு கவனித்தது.

ஒரு பெரிய தலைவரின் உற்சாகத்துடன் இளம் ஹென்றி தம் காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தார். சில வருஷங்களுக்கு முன்னர் அவர் நீலக் கண்களும், ரோஜா இதழ் கன்னங்களும் கொண்ட ஒரு சாதுவான பையனாக இருந்தார். எந்தக் காரியத்தையும். அது ஏற்படுவதற்கு முன்னர், முன் கூட்டி அதைப் பற்றிச் சிந்திக்கமாட்டார். இப்பொழுதும் அவர் கல்லூரியில் வைத்துக் கொண்டிருந்த மாதிரியே தலைக் கிராப்பை வைத்துக் கொண்டு, சிறு பையனைப் போல் முக மலர்ச்சியுடன் விளங்கினார். அவர் பெரிய ஆகிருதியுடன் விளங்கினார். ஆறு அடிக்கு மேல் உயரமும், 200 ராத்த

லுக்கு மேல் எடையும் இருந்தார். சுற்றி வளைத்துப் பேசாமல், கபடமில்லாமல் பேசுவது அவருக்குப் பிடிக்கும்.

போர்ட் மோட்டார் கம்பெனி விஷயமாக அவருடைய திட்டங்கள் என்ன என்று தெரிந்து வரும்படி தினசரி பத்திரிகைக்காரர்களும், மற்ற பத்திரிகைக்காரர்களும் நிருபர்களை அனுப்பி வைத்தார்கள். ஹென்றி போர்ட் மீதும், அவருடைய பொதுஜன கார் மீதும் என்றுமே அமெரிக்க மக்களுக்கு அக்கறை உண்டு. அந்தப் பொது ஜனக்கார் என்னவாகப் போகிறது என்று தெரிந்து கொள்ள எல்லாரும் கவலையாக இருந்தார்கள்.

இளம் ஹென்றிக்கு அநேக பெரிய பிரசினைகள் காத்துக் கிடந்தன. முதல் யுத்தத்திற்குப் பிறகு அவருடைய தாத்தாவிற்கு இருந்த பிரசினைகளுக்கும் இவற்றுக்கும் எவ்வளவோ மாறுதல்! தொழில் அபிவிருத்தி, யுத்தத்திற்குப் பிந்தைய சீர்திருத்தம், தொழிலாளிகளுடன் உறவு முதலிய பிரசினைகள் இவர் தீர்க்கவேண்டி இருந்தன. காரியாலயத்திலும் சரி, தன் மனைவி ஆன்னும், இரண்டு பெண்களான சார்லெட்டும், பேபி ஆன்னும் இருந்த வீட்டுக்குத் திரும்பியபோதும் சரி, இந்தப் பிரசினைகளைப் பற்றியே இளம் ஹென்றி சிந்தித்துக் கொண்டிருந்தார்.

இதுவரை தாத்தாவின் ஒரே கை அதிகாரத்தில் மட்டும் கம்பெனி இருந்து வந்திருக்கிறது என்று இளம் ஹென்றி உணர்ந்தார். தம்முடைய தாத்தாவைப் போல் தான் ஒரு தொழில் மேதையும் அல்ல,

தொழிலையும் ஒருவரின் அதிகாரத்திலேயே நடத்தவும் கூடாது என்று அவர் உணர்ந்தார். ஒருவரை விட அநேகர் இந்தப் பிரசினைகளைப் பற்றி யோசித்தால் பதில் கிடைக்கும் என்று நினைத்தார். ஒன்று சேர்ந்து வேலை செய்யும் ஒரு கோஷ்டி இருந்தால் இருக்கிற பிரசினைகளைத் தீர்ப்பதோடு கம்பெனியின் எதிர் காலத்திற்கும் திட்டம் போட முடியும் என்று நம்பினார்.

ஆகவே தமக்குப் புத்திமதி சொல்லக் கூடியவர்கள் என்று தோன்றின பத்து பேரை, கம்பெனியிலிருந்து சிலரையும், வெளியிலிருந்து சிலரையுமாக எடுத்துக் கொண்டார். இவர்களுக்குக் கொள்கைக் கமிட்டி என்று பெயர் கொடுத்தார். இதில் இருந்தவர்கள் உற்பத்தி, யந்திர நுட்பம், விற்பனை, விளம்பரம், தொழில் உறவு, கொள்வினை, கணக்கு வழக்கு, சட்டம் முதலிய பல விஷயங்களில் நிபுணர்கள். இளம் ஹென்றியின் சகோதரரான பென்ஸன் போர்டும் 1946ல் கம்பெனியில் சேர்ந்திருந்தார். இவரும் கொள்கைக் கமிட்டியில் இருந்தார். 1948ல் பென்ஸன் கம்பெனியின் உதவித் தலைவராகவும், லிங்கன், மெர்குரி பகுதியின் டைரக்டராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார். சுமாரான விலையில் உள்ள வண்டி வேண்டும் என்பதற்காக மெர்குரி வண்டி 1938ல் செய்யப் பட்டது. அதற்கு இந்தப் பெயரை எட்ஸெல் தான் கொடுத்தார்.

நிருபர்கள் இளம் ஹென்றியைப் பார்க்க வந்த போது, தம்முடைய நோக்கங்களைப் பற்றி அவர்களிடம் மகிழ்ச்சியோடு பேசினார். நோக்கங்களைத்

தெரிவிப்பது எளிது, ஆனால் நிறை வேற்றுவது கடினம் என்று தாம் உணர்வதாகவும் சொன்னார்.

முதலில் அவர் குறைந்த விலைக் காரை செவர் லேக்கு மேல் விற்க விரும்பினார். இரண்டாவதாக, மோட்டார் விற்பனையில் போர்டுக்குக் கிடைக்க வேண்டிய பங்கைப் பெற விரும்பினார். தாத்தாவும், தகப்பனாரும் கொண்டு வந்து, பிறகு இழந்து விட்ட 45-50 சத விகித விற்பனையை மீண்டும் பெற விரும்பினார்.

இளம் ஹென்றி நிருபர்களிடம் சொன்னார்: "இந்த இரண்டு காரியங்களையும் செய்து, லாபம் அடைந்து, எங்கள் தொழிற்சாலையைப் புதுப் பித்து, எதிர் காலத்திற்கு ஏற்பாடு செய்து, போட்டியைச் சமாளித்தாலொழிய போர்ட் மோட்டார் கம்பெனிக்கு எதிர்காலம் கிடையாது. எங்கள் வேலையை நாங்கள் சரியாகச் செய்து, சிறந்த கார்களை முன்னை விட அதிக அளவிலும், குறைந்த விலையிலும் விற்றால், தொழில் சமூகத் திற்கு நாங்கள் செய்ய வேண்டிய தொண்டைச் செய்தவர்களாவோம்."

உலக விஷயங்களைப் பற்றி அவருடைய அபிப் பிராயங்களையும், கருத்துக்களையும் தெரிவிக்கும்படி நிருபர்கள் கேட்ட போது, இளம் ஹென்றி தம் தாத்தாவைப் போல் எல்லாம் தெரிந்தவர் போல் காட்டிக் கொள்ள வில்லை.

"இந்தக் கேள்விகளுக்குப் பதில் தெரிந்து

கொள்ள எனக்கும் தான் ஆசையாக இருக்கிறது" என்று சொன்னார்.

பெரிய கோஷ்டி சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற இளம் ஹென்றியின் எண்ணம் கொள்கைக் கமிட்டியோடு நிற்க வில்லை. 1,40,000 போர்ட் ஊழியர்கள், அத்தனை பேரும் ஒரே கோஷ்டி போல் வேலை செய்ய வேண்டு மென்று நினைத்தார். தொழிற் சாலையில் வேலை செய்த ஒவ்வொருவரும் தன்னை எப்படி பிறர் நடத்த வேண்டும் என்று விரும்புகிறார்களோ அதே மாதிரி தனக்குக் கீழ் உள்ள ஆட்களை நடத்தினால் இது சாத்தியமாகும் என்று கருதினார். தம் கூட வேலை செய்யும் ஆட்களோடு ஒற்றுமையாகப் போவதை ஒவ்வொரு நபரும் தம் வேலையின் ஒரு அம்சமாகக் கருத வேண்டும் என்று சொன்னார். அங்கங்கே மானேஜராக இருக்கும் ஒவ்வொருவரும் தம் கீழ் இருப்பவர்களிடம், அவர்கள் சம்பந்தப் பட்ட காரியங்கள் என்னென்ன செய்யப்படுகின்றன, அதன் காரணம் என்ன என்று விளக்க வேண்டும் என்று சொன்னார். முடிந்த சமயங்களில் இந்தக் காரியங்களைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பம் அவர்களுக்கும் அளிக்கப் படவேண்டும் என்றார். இதன் மூலம் தொழிலில் ஜனநாயகத்தைப் புகுத்த முடியும் என்று அவர் நம்பினார். "இது வெகு முக்கியம். ஏனெனில் யந்திரங்களைக் கொண்டு மாத்திரம் பெரிய அளவில் உற்பத்தி செய்ய முடியாது. இதற்கு யந்திரங்களும் அவசியம், மனிதர்களும் அவசியம்" என்றார்.

இணைப்பு லைனில் ஒவ்வொரு தொழிலாளியும்

ஏதாவது ஒரு காரியம் மட்டும் தான் செய்து கொண்டிருப்பார். கோஷ்டியின் முக்கிய அம்சத்தில் தானும் ஒருவன் என்று இவரால் நினைத்துப் பார்க்க முடியாது. கம்பெனியின் நோக்கங்கள் என்ன, அதை அவர்கள் எப்படி நிறைவேற்றப் போகிறார்கள் என்ற தகவல் இல்லாவிட்டால் தானும் கம்பெனியின் ஒரு பகுதி தான் என்ற நினைப்பே ஏற்பட முடியாது. அவரும் தன்னுடைய வேலையிலோ, அல்லது கம்பெனியின் நலனிலோ உற்சாகம் காண்பிக்க முடியாது.

தம்முடைய பெரிய பிரசினையைத் தீர்ப்பதற்கு இளம் ஹென்றி தயாரானார். போர்ட் மோட்டார் கம்பெனியின் ஒவ்வொரு ஊழியருக்கும் அவர் ஒரு கடிதம் எழுதினார். இந்தக் கடிதத்தில் அவர் ஊழியர்களுக்குச் சொன்னார் :—

''நாம் எல்லாரும் திட்டமாக ஒரு பாதையில் சென்று கொண்டிருக்கிறோம். சிறந்த கார்களையும், டிரக்குகளையும், டிராக்டர்களையும், நம் போட்டிக் கம்பெனிகளைவிடக் குறைந்த விலையில் கட்டுவது என்று தீர்மானித்திருக்கிறோம். ஏனெனில் அப்பொழுது தான் இந்த நாட்டிலும் சரி, உலகத்தின் வேறு பாகங்களிலும் சரி, அதிகப்படியான மக்களுக்குக் குறைந்த விலையில் இவை கிடைக்கும்படி நாம் செய்ய முடியும்.

இது தான் நம்முடைய வேலை. அமெரிக்க மக்களுக்கு நாம் செய்யக் கூடிய தொண்டு இது தான். நாம் சாமான் உற்பத்தி செய்யும் கம்பெனி. சிறந்த பொருள்களைக் குறைந்த விலையில் அவர்

களுக்குக் கொடுப்பது நம்முடைய வேலே. இங்கு நிர்வாகிகளுக்கும் சரி, தொழிலாளிகளுக்கும் சரி, அதிகாரம் கிடையாது. நாம் அமெரிக்க மக்களுக்காக உழைக்கிறோம்.

"நாம் தேர்ந்தெடுத்துள்ள பாதையில் முன்னேற வேண்டுமானுல், அது கோஷ்டியாகச் சேர்ந்து வேலே செய்வதனுல் தான் முடியும். நம் போட்டிக் கம்பெனிகளே விட அதிகப்படியாக ஒன்று சேர்ந்து வேலே செய்தால் தான் முடியும்.

"போர்டில் உள்ள நாம் காரைக் குறைந்த விலேயில் விற்ருலும், ஊழியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க முடியும் என்ற கொள்கையை ஒப்புக் கொண்டிருக்கிறோம். விலேயைக் குறைக்கும் அதே சமயத்தில் சம்பளத்தை நம்மால் அதிகரிக்க முடியுமானுல், அதற்குக் காரணம், மற்ற எந்தத் தொழில் கோஷ்டியையும் விட, இங்குள்ள நாம் தனிப்பட்ட முறையிலும், கோஷ்டி முறையிலும், வேலேயில் அதிகக் கெட்டிக்காரர்களாக இருப்பது தான் என்பதும் நமக்குத் தெரியும்."

இந்தக் கடிதத்தினுல் நல்ல பலன் கிடைத்தது. அநேக ஊழியர்கள் இளம் ஹென்றிக்கு பதில் எழுதி அனுப்பினுர்கள். அவர்கள் கடிதத்தில் கண்ட அபிப்பிராயங்களும், கருத்துக்களும் மேலேயுள்ள அதிகாரிகளுக்கு வெகு உபயோகமாக இருந்தன.

தம் வேலேயைப் பற்றி ஒவ்வொரு ஊழியரும் என்ன நினைக்கிருர் என்று தெரிந்து கொள்ளு

வதற்காக ஒரு கேள்வித்தாள் அனுப்புவது என்று இளம் ஹென்றி தீர்மானித்தார்.

இதற்கு வந்த பதில்களில் நூற்றுக்கு எழுபது பேர், கம்பெனியின் நோக்கங்கள் என்ன என்று தங்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லையென்று சொன்னார்கள். போர்ட் கோஷ்டியில் தாங்களும் ஒருவர் என்று நினைக்கும்படி எதுவும் செய்யப் பட வில்லையென்று நூற்றுக்கு எழுபது பேர் சொன்னார்கள். கம்பெனியின் காரியங்களைப் பற்றியோ, அதிகாரிகளைப் பற்றியோ, யோசனைகளோ, குற்றங்களோ கூறுவதற்குத் தங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட வில்லை யென்று நூற்றுக்கு எழுபது பேர் சொன்னார்கள். தங்களுக்கு அடுத்தபடியாக மேலே யுள்ள அதிகாரிகளுடன் தங்கள் வேலையைப் பற்றி பேசவோ, அல்லது தங்கள் யோசனைகளை விவாதிக்கவோ முடிவதில்லை என்று நூற்றுக்கு நாற்பத்து நான்கு பேர் அபிப்பிராயப் பட்டார்கள். இந்த மாதிரி கேள்வித் தாள்கள் அனுப்புவது மிகவும் உபயோகம் என்று நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கருதினார்கள்.

கம்பெனி செய்ய வேண்டிய வேலை ஒன்று இருக்கிறது என்று இளம் ஹென்றி உணர்ந்தார். சுகாதார, பாதுகாப்பு விதிகள், தொழிலாளிகளுக்கு உள்ள அனுகூலங்கள், கம்பெனியின் சரித்திரம், கம்பெனியின் கொள்கைகள், சட்ட திட்டங்கள் முதலிய பல விவரங்கள் கொண்ட குறிப்புப் புத்தகம் தயாரிக்கப்பட்டு, ஊழியர்களுக்குக் கொடுக்கப் பட்டன. கம்பெனியின்

கொள்கைகள், திட்டங்கள் முதலியவற்றைப் பற்றி எல்லாருக்கும் தெரிந்திருக்க வேண்டு மென்பதற்காக பதினெட்டுப் பத்திரிகைகள் ஊழியர்களுக்கு விநியோகிக்கப் பட்டன

ஊழியர்களின் யோசனைகளைத் தெரிந்து கொள்ளுவதற்கு, ஒரு திட்டம் வகுக்கப் பட்டது. உல்லாச விளையாட்டுக்கள் அதிகரிக்கப்பட, 25,000 ஊழியர்கள், ஒவ்வொரு மாதமும்; நாற்பது வித பொழுது போக்குகளில் ஈடுபட்டனர். தொழிற் சாலைகளிலும், காரியாலயங்களிலும் புகை பிடிக்கக் கூடாது என்ற விதி நீக்கப்பட்டது. தொழிலாளி களின் கல்வி அறிவை அபிவிருத்தி செய்யவும் இளம் ஹென்றி ஒரு பெரிய திட்டம் கையாண்டார். ஒவ்வொரு வாரமும் சராசரி 6,500 ஊழியர்களுக்கு மேற் பார்வை பார்ப்பது, மானேஜர் வேலை செய்வது முதலிய பல பயிற்சிகள் அளிக்கப் பட்டன. முன்னுக்கு வர வேண்டும் என்ற ஆசையும், ஊக்கமும் உள்ள தொழிலாளிக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களும் அளிக்கப்பட்டன.

சீக்கிரமே இளம் ஹென்றியின் இந்தக் காரியங்கள் பலன் அளிக்க ஆரம்பித்தன.

# அத்தியாயம் 32.

இளம் ஹென்றியின் இந்தக் காரியங்களைப் பற்றி உலகம் முழுவதும் உள்ள மக்கள் படித்துத் தெரிந்து கொண்டார்கள். ஆனால் அவர்கள் தெரிந்துகொள்ள விரும்பினது என்ன வென்றால் பொது ஜன வண்டியில் என்னென்ன மாறுதல்கள் செய்யப்படப் போகின்றன என்பது தான். ஆனால் இந்த விஷயத்தைத் தான் அவர் பரம ரகசியமாக வைத்துக் கொண்டார்.

1948 ஜூன் முதல் தேதி புது போர்ட் விற்பனைக்குத் தயாரானதும், ஊழியர்கள் தான் வண்டியை முதலில் பார்க்க வேண்டும் என்று இளம் ஹென்றி தீர்மானித்தார். ஆண் பெண் ஒவ்வொரு ஊழியருக்கும் இளம் ஹென்றியிட மிருந்து ஒரு அழைப்புக் கிடைத்தது. அது வருமாறு:—

டியர்பார்னிலுள்ள நமது என்ஜினீரிங் பரிசோதனை இடத்தில் ஜூன் 18ம் தேதி ஞாயிற்றுக் கிழமை யன்று நடக்கப் போகும் போர்ட் குடும்ப தின விழாவிற்கு தங்களையும் தங்கள் குடும்பத்தாரையும் மகிழ்ச்சியுடன் அழைக்கிறேன்.

நம்முடைய 1949 புது மாடல் கார்களை பொது ஜனங்கள் பார்க்கும் முன் நீங்களும், உங்கள் குடும்பத்தாரும் பார்க்க வேண்டும் என்பதற்காக இந்த விழா ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. நம்முடைய புது லிங்கன், மெர்க்குரி, டிரக், டிராக் டர்கள், மோட்டார் கோச் எல்லாம் கண்காட்சி யில் வைக்கப் பட்டிருக்கும்.

டியர்பார்ன் ஹோட்டலுக்குப் பக்கத்தில் ஓக்வுட் ரஸ்தாவில் உள்ள நமது பரிசோதனை ஸ்தலம், ஜூன் 13ம் தேதியன்று காலை 9 மணியி லிருந்து மாலை 9 மணிவரையில் திறந்திருக்கும். ஏகக்கூட்டம் எதிர்பார்க்கப் படுகிறபடியால் இரவு எட்டு மணிக்குள் புதுக் கார்களைப் பார்த்து விடும்படி யோசனை கூற விரும்புகிறேன். உங்கள் காரை நிறுத்தி வைக்க நிறைய இடம் இருக்கிறது.

பரிசோதனை ஸ்தலத்தில் பொது ஜனங்களுக்கு இடமில்லை யாகையால் தங்களை அடையாளம் கண்டு கொள்வதற்காக தயவு செய்து இக் கடிதத்தையும் கொண்டு வரவும்.

நீங்களும், உங்கள் குடும்பத்தாரும் வருவீர்கள் என்று நம்பும்.

உங்கள் நம்பிக்கை யுள்ள,

இரண்டாவது ஹென்றி போர்ட்.

அன்று சூரிய வெளிச்சம் நன்கு அடித்துக் கொண்டிருந்தது. வருகிறவர்களின் சௌகரியத் தையும், ஆனந்தத்தையும் உத்தேசித்து ஏக ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. அங்கங்கே

வந்தவர்களுக்கு ஐஸ்க்ரீமும், பானங்களும், தின்பண்டங்களும் இலவசமாகக் கொடுக்கப் பட்டன. தின்பண்டங்களைச் சாப்பிட மேஜைகள் போடப்பட்டிருந்தன. முன் கூட்டியே கையில் தின்பண்டங்கள் தயாரித்துக் கொண்டு வந்திருந்த வர்கள் டென்ட் கொட்டகையில் உட்கார்ந்து சாப்பிட்டனர். ஒரு பக்கத்தில் வாத்ய கோஷ்டி பாடிக் கொண்டிருந்தது. விபத்துகளுக் கென்று ஒரு தனி செஞ்சிலுவைக் கூடாரம் இருந்தது. ஆனால் இதன் சேவையை அதிகமாக யாரும் நாடவில்லை.

ஒவ்வொரு, இலாகாவின் போர்ட் ஊழியர்களும் தங்கள் குடும்பத்துடன், தாங்கள் செய்த கார்களைப் பார்ப்பதற்காக இடை விடாமல் வந்து கொண்டே யிருந்தார்கள். போர்ட்டர்கள், அதிக சம்பளம் வாங்கும் என்ஜினீயர்கள், அழகிய சுறுக்கெழுத்து டைப்பிஸ்ட்டுகள், தங்களிடம் உள்ள சிறந்த ஆடையை அணிந்து வந்த வார்ப்பட ஊழியர்கள் எல்லாரும் கார்களைப் பார்த்து 'ஆ, ஊ' என்று சொன்னார்கள். இணைப்பு லைனில் வேலை செய்கிற தொழிலாளிகளைத் தவிர, மற்ற எல்லாரும் தங்கள் உழைப்பினால் ஏற்பட்ட பள, பளக்கும் கார்களை அப்பொழுது தான் முதல் தடவையாகப் பார்த் தார்கள்.

போர்டு கம்பெனியின் நாற்பத்தைந்து வருஷ சரித்திரத்திலேயே பெரிய அளவில் நான்காவது தடவையாக மாற்றப்பட்ட இந்தப் புது மாடல் 'பி-ஏ'யைக் கொண்டு, செவர்லேயும், பிளிமத்தும் போர்டிடமிருந்து பிடித்துக் கொண்டு விட்ட முதல்

ஸ்தானத்தை இளம் ஹென்றி திரும்பப் பறிக்கப் பார்த்தார். ஒரு பெரும் மாறுதலால் செவர்லே யுடனும், பிளிமத்துடனும் போர்ட் கம்பெனி சரி சமானமாக ஆனது மட்டுமல்ல, அவர்களைத் தோற் கடிக்கவும் செய்தது. இனி அவர்கள் போர்டைத் தோற்கடிக்க வேண்டுமானால், இன்னும் புதிய மாடல்கள் கொண்டு வந்தால் தான் முடியும்.

'பி-ஏ' மாடலைக் கண்டு எல்லாருக்கும் ஒரே ஆச்சரியம்! அதில் கடைசியாகக் கண்டு பிடிக்கப் பட்ட எல்லா சொகுசுகளும், யந்திர சாதனங்களும் இருந்தன. அதனுடைய மூதாதையர்களுக்கும், அதற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டு என்று யாராலும் சொல்ல முடியாது. எட்டு சிலிண்டர் மாடலைச் சேர்ந்த வி-டைப் என்ஜின் தான் பழைய வி-8 என்ஜின் போல் ஓரளவு இருந்தது.

விலை குறைந்த காரில் பொது ஜனங்கள் என்னென்ன எதிர் பார்க்கிறார்கள் என்று இளம் ஹென்றியின் கோஷ்டியினர் தெரிந்து வைத்திருந் திருந்தார்கள். ஜனங்கள் தாராளமாக உட்கார இடம் கேட்டார்கள். ஆகவே 'பி-ஏ' மாடலில் சோபாவைப் போன்ற அகலமான ஆசனங்கள் பொருத்தப்பட்டு, தாராளமாக உட்கார வசதி இருந்ததுடன், சாமான்கள் வைக்க 57 சத விகிதம் அதிக இடம் இருந்தது. உட்கார்ந்தபடியே வேடிக்கை பார்க்க வசதியான கண்ணாடி ஜன்னல் கள் பொருத்தப் பட்டிருந்தன.

வண்டி ஆபத்தில்லாமல் இருக்க வேண்டு மென்று ஜனங்கள் விரும்பினார்கள். ஆகவே 59

சத விகிதம் அதிக உறுதியாக இருந்த தகடுகளை யும், அடிப் பாகங்களையும் கொண்டு வண்டி கட்டப் பட்டது. புதிய யந்திர சக்தி கொண்ட பெரிய பிரேக்குகள் கார் ஓடும் பலத்தைக் கொண்டே இயங்கி, கார் நிற்பதை 35 சத விகிதம் சுலப மாக்கின.

வண்டியில் செல்வது சுகமாக இருக்க வேண்டும் என்று ஜனங்கள் விரும்பினார்கள். ஆகவே 'பி-ஏ' மாடலில், நடுக் கப்பலில் இருந்தால் எப்படி அசை வில்லாமல் செல்ல முடியுமோ, அந்த மாதிரி செய்யப் பட்டது. என்ஜினை ஐந்து அங்குலம் முன்னால் தள்ளியதால், பின் பக்கத்து ஆசனத்தை, பின் அச்சிலிருந்து முன்னால் தள்ள முடிந்தது. இதனால் ரஸ்தா அதிர்ச்சிகள் பின்னால் உட்கார்ந்த வர்களுக்குக் குறைந்தது. 1908ல் ஹென்றி 'டி' மாடல் பண்ணின காலத்திலிருந்து உபயோகத்தி லிருந்த குறுக்கு ஸ்பிரிங்கை என்ஜினீயர்கள் நிரா கரித்தார்கள். பின் பக்க ஸ்பிரிங்குகள் எல்லாரும் வழக்கமாக உபயோகித்த, நீள வாட்டத்தில் இருந் தன. முன் பக்க ஸ்பிரிங்குகள் சுருள் வாட்டத்தில் இருக்க, வண்டியின் நான்கு மூலைகளிலும், விமானங் களில் இருந்தது போன்ற அதிர்ச்சி வாங்கிகள் இருந்தன.

கார் சிக்கனமாக ஓட வேண்டும் என்று ஜனங் கள் விரும்பினார்கள். ஆகவே 'பி-ஏ' மாடலில் எல்லாப் பாகங்களுக்கும் எண்ணெய் போய்ச் சேர்வது ஒரு புது வகையில் வைக்கப்பட, பெட் ரோல் செலவு பத்தில் ஒரு பங்கு குறைந்தது. மேற்

கொண்டு விலை கொடுத்து 'ஓவர் ட்ரைவ்' வாங்கினுல் இன்னும் பெட்ரோலைச் சிக்கனப் படுத்த முடியும்.

ஜனங்கள் அழகு கேட்டார்கள். 'பி-ஏ' மாடல் கண்ணுக்கு அழகாக இருந்தது. வண்டி பார்ப்பதற்கு அகலமாகவும், குட்டையாகவும் இருந்தது. பின் பக்கம் பம்பர் கிடையாது. நீளமும், அகலமும் கிட்டத்தட்ட 1948 மாடலைப் போல் தான் இருந்தது. ஆனுல் உயரம் கிட்டத்தட்ட மூன்றரை அங்குலம் குறைக்கப் பட்டது. முன் பக்கம் ஒரு எளிய வலைத் தகடு வைக்கப் பட்டு, மேலே ஒரு பெரிய 'மெடல்' வைக்கப்பட்டிருந்தது. வண்டியைச் சுற்றி யிருந்த கிரோமியத் தகடுகள் வண்டிக்கு ஒரு தனி அழகு கொடுத்தன.

யந்திர நுட்பங்கள் தெரிந்தவர்கள், இந்த விஷயங்களை விளக்கிக் கொண்டிருந்த ஒரு என்ஜினீயரைச் சூழ்ந்து கொண்டார்கள். கேட்ட கேள்விகளுக் கெல்லாம் அவர் ஆசையாகப் பதில் சொல்லி வந்தார். வி-8. என்ஜினைத் தெரிந்தவர்கள் புதிய 49 மாடலின் இயந்திர சௌகரியங்களை உணர்ந்தார்கள். எண்ணெய் செலுத்துவதற்காக உள்ள "ஈக்வா-ப்ளோ" என்னும் புதிய முறை பெரிய அபிவிருத்தியாகும். என்ஜினைக் குளிரச் செய்த தண்ணீர் எல்லா பாகங்களுக்கும் சென்று எங்கும் சம உஷ்ணமாக இருக்கும்படி செய்தது. இரண்டு தண்ணீர் பம்புகள் இருந்தன. இவை அதிக வேகத்தில் தண்ணீரை எல்லா பாகங்களுக்கும் செலுத்தி உஷ்ணத்தைக் குறைத்தன.

என்ஜினின் வாயுக்கள் வெளியே வந்த குழாய் முன்னல் கொண்டு வரப்பட்டது. பழைய மாடலில் இவை காரின் அடியில் அதன் முழு நீளமும் சென்ற தால் இவற்றைக் கழற்ருமல் எண்ணெய்த் தட்டைக் கழற்ற முடியாது.

"புது ஸ்பிரிங்குகளுக்காகவே கார் பிரமாத மாகவிற்கும்" என்ருர்கள் அநேகர். கார் வாங்குகிற வர்கள், இனி, "போர்ட் காரில் பழைய கெட்டி ஸ்பிரிங்குகள் தான் இருக்கின்றன" என்று சொல்ல முடியாது. வி-8ல் இருந்த இரண்டு ஸ்பிரிங்கு களுக்குப் பதில் இப்பொழுது முன்னல் இரண்டு சுருள் ஸ்பிரிங்குகள், பின்னல் இரண்டு நீள ஸ்பிரிங்குகள் இருந்தன.

மோட்டாரின் முன் பாகத்தில் எண்ணெய்க் குழாய் இருந்ததைப் பார்த்து, மெக்கானிக்குகள் சந்தோஷப் பட்டார்கள். பழைய மாடல்களில் மோட்டாரின் பின்னல் இருந்த எண்ணெய்க் குழா யில் எண்ணெய் ஊற்றுவதற்கு மேலே அழுக்குப் படாமல் இருப்பதற்காக ஒரு துணியைச் சுற்றிக் கொண்டு ஒரு ஏணி மீது ஏறி ஊற்ற வேண்டும். இந்தப் புதிய முறையில் எண்ணெய் ஊற்றுவது மிகச் சுலபமாக இருந்தது.

பின் சீட்டுக்குப் பக்கத்தில் உள்ள தரையில் ஒரு முண்டு இருப்பது எல்லா போர்ட் கார் சொந்தக் காரர்களுக்கும் தெரியும். டிரைவ் ஷாப்டைக் கீழே தள்ளி வைத்ததால் இந்த முண்டு போயிற்று. இத ஞல் பின் பக்கத்தில் உட்கார்ந்தவர்களுக்கு நிறைய்

இடம் கிடைத்தது. ஆனால் இதன் காரணமாக எழுந்த வேடிக்கைத் தமாஷ்கள் மறைந்தன.

இந்தக் கார் எப்படி இயங்கிற்று என்றும் கண் காட்சி சாலையில் காட்டப் பட்டது. ஒவ்வொரு அம்சத்தையும் நன்கு பார்க்க முடிந்தது. ஸ்டார்ட் டரை அமுக்கியதும் வண்டி நியூட்ரலில் இருந்தது, இக்னிஷன் திருப்பப் பட்டிருந்தது, கிளச் பிடிக் காமல் நின்றது. இதைக் காரை இயக்கினவர் விளக்கினார். மோட்டார் ஓட ஆரம்பித்ததும் பிஸ்டன் சிலிண்டரில் இடம் பண்ணிக் கொண்டு நகர்ந்தது. இந்த இடத்தில் பெட்ரோல் புகையும், காற்றும் புக, பிஸ்டன் இந்தப் பெட்ரோல் வாயுவை அமுக்கிக் கொண்டு மேலே சென்றது. இந்த சமயத்தில் ஸ்பார்க் ப்ளக்கிலிருந்து பொறி கிளம்ப, பிஸ்டன் கீழே இறங்கிற்று. அப்பொழுது எரிந்து போன வாயு 'எக்ஸாஸ்ட்' பைப் மூலம் வெளி வந்தது.

"ஸ்திர பெட்ரோல் என்ஜினில் உள்ளது போல மோட்டார் என்ஜினிலும் 'ப்ளைவீல்' என்னும் சக்கரம் இருக்கிறது. என்ஜின் இயங்கும் போது, இது சுற்றுகிறது. இந்தச் சக்கரத்துக்குப் பின்னால் உள்ள கிளச், என்ஜினிலிருந்து பின் பக்கச் சக்கரங் களைப் பிரிப்பதால், என்ஜின் ஓடினாலும் கார் ஓடுவதில்லை" என்று இதை விளக்கிக் கொண்டிருந் தவர் விவரித்தார்.

என்ஜின் இப்பொழுது வெகு வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் சக்கரங்கள் நகரவில்லை. இதைக் காண்பித்துக் கொண்டிருந்தவர் சொன்

ஞர்: "என்ஜின் வேகத்தைப் பின் சக்கரங்களுக்குக் கொடுக்கும் வேலை கியர்களைச் சேர்ந்தது" என்று. கிளச்சுக்குப் பின்னால் இருந்த டிரான்ஸ்மிஷன் கியர்களும், பின் அச்சின் நடுவில் இருந்த டிபரன்ஷியல் கியர்களும் இந்தக் காரியத்தைச் செய்தன. பின் சக்கரங்களில் ஒரு சக்கரம் இன்னொரு சக்கரத்தைவிட வேகமாகச் செல்வதற்கும், டிபரன்ஷியல் உதவி பண்ணிற்று. கார் வளைவுகளில் திரும்பும் போது இது அவசியம்.

மோட்டாரைக் காண்பித்துக் கொண்டிருந்தவர், கிளச்சை அமுக்கி லீவரை முதல் கியருக்குக் கொண்டு வந்தார். கார் மெள்ள ஓட ஆரம்பித்தது. பிறகு திரும்பவும் கிளச்சை அமுக்கி லீவரை இரண்டாவது கியருக்குக் கொண்டு வந்தார். வண்டி இன்னும் சற்று வேகமாக ஓட ஆரம்பித்ததும் மூன்றாவது கியருக்கு வந்தார். வண்டியைச் சுற்றி ஓட்டிக்கொண்டு பழைய இடத்துக்கு வந்து புதிதாக கூடியிருந்தவர்களுக்கு விளக்க ஆரம்பித்தார்.

புது அபிவிருத்திகளின் பெயர்களைத் தெரிந்து கொள்வதை விட அவை செய்த வேலையைத் தெரிந்து கொள்வதில் தான் ஜனங்கள் அக்கறையாக இருந்தார்கள். என்ஜினீரிங் அபிவிருத்தியினால் ஓட்டுவதற்குப் பத்திரமாகவும், நிறுத்துவதற்குச் சுலபமாகவும் உள்ள கார் கிடைத்ததைப் பற்றி அவர்களுக்கு மிகவும் சந்தோஷம். புதுக் கார் உட்கார வெகு சௌகரியமாக இருந்ததுடன், நன்றாகவும், அசைவில்லாமலும் ஓடியதுடன், பெட்ரோலும் அதிகம் செலவாகவில்லை.

'பி-ஏ' மாடல் எல்லா வகைகளிலும் புதிதாக விளங்கிற்று. அழகு, சௌகரியம், ஓட்டம், பத்திரம் முதலிய பல அம்சங்களில், விலை குறைந்த கார்களுக்குள் சிறந்து விளங்கிற்று. மிகவும் நாசூக்குக்காரனுக்குக் கூட, அவனுக்குப் பிடித்த நிறத்திலும், மோஸ்தரிலும் கார் கிடைத்தது. கடல் பச்சை, சாம்பல் நிறம், நீலம், பழுப்பு, செஞ்சிவப்பு, மஞ்சள் முதலிய பலவித நிறங்களில் கார்கள் கிடைத்தன.

இதை யெல்லாம் சாதிப்பதற்காக, என்ஜினீரிங் பகுதியில் உள்ள ஆட்கள் மும்மடங்காக்கப் பட்டனர். புது வித கார்கள் செய்வதற்கும், மூன்றிலிருந்து ஐந்து வருஷங்களுக்குப் பின்னர் தான் பொது ஜனங்கள் பார்க்கப் போகும் மாறுதல்களை இப்பொழுது முதற் கொண்டே ஏற்பாடு செய்வதற்கும் 12,600 ஆட்கள் தேவையாக இருந்தது.

"உங்கள் எதிர்கால வாழ்க்கையில் ஒரு போர்ட் கார் இருக்கிறது" என்னும் சுலோகம் அமெரிக்கா முழுவதும், வேடிக்கைத் துணுக்குகள், சினிமாப் படங்கள், ரேடியோ நிகழ்ச்சிகள், பத்திரிகைகள், தினசரிகள், நோட்டீசுகள், ஆகாயக் கப்பல்கள் மூலம் பரவிற்று.

விலை மலிவான காரின் தலைமைக்காக நடந்த போட்டியை உலகம் முழுவதும் கவனித்தது. ஆனால் எந்தக் காராவது கிடைத்தால் போதும் என்ற நிலைமை போய், கார்கள் நிறைய உற்பத்தியாகி, வாங்குகிறவர் எதை வாங்கலாம் என்று யோசிக்கும் நிலைமை ஏற்படும் போது தான் இந்த

பலப் பரீட்சை நடக்க முடியும். ஆனால் ஒன்று நிச்சயம். கார் வாங்குகிறவர்கள் எதைக் கேட்டார்களோ, அதைக் கொடுக்க இளம் ஹென்றி தயாராக இருந்தாரே யொழிய, ஒரு தனி மனிதர் பிறருக்கு நல்லது என்று தோன்றியதை அல்ல.

நிர்வாகஸ்தர்களும், தொழிலாளிகளும் ஒத்து சமாதானமாகப் போகச் செய்வதற்கு ரகசிய முறை ஒன்றும் இல்லை என்று இதற்குள் இளம் ஹென்றி தெரிந்து கொண்டு விட்டார். ஓரளவு சமாதானம் நிலவ வேண்டுமானால் இரண்டு கட்சியினரும் பின் கண்ட கொள்கைகளின்படி நடக்க வேண்டும் என்று அவர் கருதினர்.

1. ஒருவர் மற்றவர் நோக்கத்தைப் புரிந்து கொள்ள உண்மையான ஆசையும், திறமையும் வேண்டும்.

2. இரகசியமான விவரங்களைத் தவிர, மற்ற எல்லா விவரங்களையும் எதிர்க் கட்சி தெரிந்து கொள்வதற்காக எடுத்துச் சொல்லத் தயாராக இருக்க வேண்டும்.

3. தினசரி காரியங்களிலும், சேர்ந்து விவாதிக்கும் போதும் எல்லையற்ற பொறுமை வேண்டும்.

தமக்கு என்று வகுத்துக் கொண்ட லட்சியத்தை எட்டுவதற்கு இளம் ஹென்றிக்கு எத்தனையோ வருஷங்கள் பிடிக்கப் போகின்றன. ஆனால் காரியத்தைச் சரியாக ஆரம்பித்து வைத்து விட்டார்.

D5133 W:M63
N56


''தொழிலாளிகள் வெறும் நம்பர்த் தகடுகள் அல்ல, ஆனால் தனிப்பட்ட மனிதர்கள், அவர்கள் வேலையைத் தொழிற்சாலை மதித்தது, அவர்கள் யூனியன் அவர்களுக்குச் சம்பாதித்துக் கொடுக்கும் நன்மையை விட, அவர்கள் கம்பெனி அவர்களுக்கு அதிக நன்மையைச் செய்ய முடியும் என்று அவர் நிரூபிக்க முயன்றார். அப்பொழுது சம்பளம் போதவில்லை என்றோ, சௌகரியங்கள் போதவில்லை என்றோ தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டியதில்லை. இளம் ஹென்றியின் தாத்தா, பெருவாரியான உற்பத்தி ஆரம்பித்த காலத்திலிருந்து, தொழிலுக்குத் தேவைப் பட்ட ஒரு சூழ்நிலை அப்பொழுது தான் ஏற்படும்.

இளம் ஹென்றியின் மேஜையின் மேல் அவருடைய தாத்தாவின் படம் இருந்தது. அமெரிக்கர்களுக்குக் கார் கொடுத்தவர் அவர் தானே! ஒரு சிறு ஷெட்டில் பிறந்த தொழில், வளர்ந்து, வளர்ந்து, இன்றைய நிலைக்கு வந்து, இன்னும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. தம் தாத்தா சாதித்த அநேக காரியங்களைப் பற்றியும், அவர் கொள்கைகளைப் பற்றியும் இளம் ஹென்றி அடிக்கடி சிந்தித்துப் பார்ப்பார். தொண்டு செய்யும் முறையில் தான் தொழில் இருக்க வேண்டும் என்ற அவர் கொள்கையை மனத்தில் இறுத்திக் கொள்வார். புது யுகத்தில், புது முறைகளைக் கொண்டு இளம் ஹென்றி தம் தொண்டை அமெரிக்கர்களுக்குச் செய்யத் தயாரானார்.

ARCHIVES LIBRARY
100495

சுபம்.

"பணத்தைச் செலவழி. உன்னை முன்னுக்குக் கொண்டுவரும் காரியங்களுக்காகப் பணத்தைச் செலவழி"

என்ற தம் புத்திமதியைக் கடைப்பிடித்து முன்னுக்கு வந்த ஹென்றி போர்டின் வாழ்க்கைச் சரித்திரம்

எங்கள்

# மோட்டார் மன்னன் ஹென்றி போர்ட்

**
**

முயற்சி யுடையார்

இகழ்சி யடையார்

என்ற மூதுரையை நிரூபித்தவர்

மோட்டார் மன்னன் ஹென்றி போர்ட்